
பாலகுமாரன்
இனிய
யட்சிணி

# இனிய யட்சினி

பாலகுமாரன்

முதற் பதிப்பு அக்டோபர், 2000
இரண்டாம் பதிப்பு ஜூன், 2007
மூன்றாம் பதிப்பு நவம்பர், 2012

உரிமை ஆசிரியருக்கு ©

**விசா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

| | |
|---|---|
| TITLLE | ENIYA YATCHINI |
| BY | BALAKUMARAN |
| THIRD EDITION | NOVEMBER, 2012 |
| PAPER | 11.6 N.S. BOOK PRINT |
| TOTAL PAGES | 312 |

Available at :
**THIRUMAGAL NILAYAM**
Sucons Appartments, First Floor,
No.13, Sivaprakasam Street,
T.Nagar, Chennai - 600 017.
Phone : 044 - 24342899, 24327696
E-mail : enquiry@thirumagalnilayam.com
website : www.thirumagalnilayam.com

**விலை ரூ.140.00**

*திருமகள் நிலையம்*
"சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்"
முதல் மாடி எண்.13, சிவப்பிரகாசம் தெரு,
தி.நகர், சென்னை–600 017.
தொலைபேசி எண் : 2434 2899, 24327696
பேக்ஸ் எண் : 91–44–24341559

Typesetting : AMARAVATHI GRAPHICS, Chennai - 83
Cell : 9444169725
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

இனிய பாலகுமாரன்,

உங்கள் பூந்தோட்டம் நாவல் படித்தேன். நான் மாத நாவல்கள் அதிகம் படிப்பவனில்லை. உங்கள் நாவல்கள் இதற்கு விதிவிலக்கு. படிக்காது தவற விட்டவைகளை, பழைய புத்தகக் கடையில் தேடி படித்து வருகிறேன்.

பூந்தோட்டம் எப்படி மாதநாவல் வரிசையில் வந்தது என்று எனக்கு பிரம்மிப்பாய் இருக்கிறது. எவ்வளவு கனமான வாழ்க்கையை, வளர்ச்சியை சர்வசாதாரணமாகச் சொல்கிறீர்கள்.

சேற்றில் உதித்த செந்தாமரை போல சாதாரண இடத்தில் பிறந்து, பிறகு சீரழிந்து, பிறகு திருமணம் செய்யப்பட்டு மறுபடி விலகி, அப்பாடா என்று மத்திம வயதுக்குப் பிறகு அமைதியாகும் வனிதாதேவியின் வாழ்க்கையை இன்னும் விரிவாகவும் எழுதியிருக்கலாமோ என்று தோன்றுகிறது.

உனக்கு எதனால் இது கிடைத்தது, எனக்குக் கிடைக்கவில்லையே என்று அவள் வயது ஒத்த ஒரு மனிதன் கேக்க, அதற்கு அவள் தரும் பதில் விவேகம், ஒழுங்கு, நிதானம் என்கிற படிகள் எல்லாம் புதிய கோணங்கள். நிறைய யோசிக்க வைக்கும் விஷயங்கள்.

ஆனால், தெளிவானவர்கள்கூட திரும்பத் திரும்ப படித்தால்தான் அவ்விளக்கங்களைப் புரிந்து கொள்ள முடியும். விஷயம் அத்தனை கடினமானது.

ஒரு மாதநாவலில் இவைகளைச் சொல்லும் தைரியம், தெளிவு உங்களைத் தவிர வேறு எவருக்கும் வராது.

மகாகவி பாரதியை, அவர் வாழ்ந்த தலைமுறை புரிந்து கொள்ளவில்லை. உங்களையும் இத்தலைமுறை அவ்விதமே.

உண்மையைத் தேடும் ஒரு தலைமுறை வளர நீங்கள் வெகுவாய் கொண்டாடப்படுவீர்கள். இதுவும் விரைவில் கிடைக்கும்.

பாலகுமாரன், உங்களை மனதுள் வணங்குகிறேன். நீர் பெரிய ஆள் ஓய்.

என்றும் அன்புடன்
**ரா. சுந்தரேசன்.**

ரா. சுந்தரேசன்
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை.

★ ★ ★

**பே**ரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய ஸ்ரீபாலகுமாரன் அவர்களுக்கு,

மிகப் பணிவான நமஸ்காரங்களுடன் க்ருஷ்ணவேணி எழுதுவது. இறைவனது திருவருளால் தாங்களும், தங்கள் குடும்பத்தாரும் நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

சமீபத்தில் தாங்கள் எழுதிய சில அருமையான புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பு, இறையருளால் கிடைத்தது. எப்பேர்ப்பட்ட எழுத்தாளர் வாழ்கின்ற காலத்தில், நாம் வாழ்கிறோம் என்று நினைத்துப் பார்க்கவே சந்தோஷமாக இருக்கிறது!

பத்தாம் வகுப்பிலிருந்தே உங்கள் நாவல்களைப் படித்துக் கொண்டிருக்கிறேன்; இப்பொழுது MSc. இரண்டாம் வருடம். உங்கள் எழுத்துக்களின் மெருகும், என் புரிந்துகொள்தலில் முதிர்ச்சியும் அதிகமாகி வருவதை உணர்கிறேன்.

'ஆனந்த யோகம்' என்ற பெயரில் தாயுமானவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியிருந்தீர்கள். நான் ஒவ்வொரு வாரமும், ஞாயிற்றுக்கிழமைகளில், தாயுமானவர் பாடல் வகுப்புக்குச் சென்றுவருகிறேன். எங்கள் கல்லூரியான ஸ்ரீசாரதா கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் சி.ர. சகுந்தலா

அவர்கள், தாயுமானவரின் பாடல்களில் ஆராய்ச்சி செய்தவர்; 'தாயுமானவரின் தனிச் சிறப்பு' என்ற பெயரில் புத்தகம் எழுதியிருக்கிறார். மிக ஆழமாக தாயுமானவரின் பாடல்களுக்குப் பொருள் கூறுகிறார். தாயுமானவரைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமானால், 'தாயுமானவரின் பாடல்கள்' - புத்தகத்தின் முன் இரண்டு பக்கங்களில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால், தங்கள் புத்தகத்தைப் படித்த பிறகு, தாயுமானவரின் மீது எனக்கிருக்கும் பக்தி பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. திருச்சியைத் தாண்டி. என் ஊருக்குப் போகும்பொழுதெல்லாம், மனம் தாயுமானவரை நோக்கி கை கூப்புகிறது.

'முதிர்கன்னி' - ஔவை படித்து முடித்த ஒரு வாரத்திற்குப் பிள்ளையாரும், ஔவையும் மனதில் நிழலாடிக் கொண் டிருந்தார்கள். எந்த வேலை செய்தாலும் ஔவையின் நினைவு வந்து கொண்டிருந்தது.

'என் அன்பு மந்திரம்' - துருபதனுக்கும், துரோணருக்கும் இடையே இருந்த நட்பை விளக்கிய அருமையான நாவல். கதையைப் படித்து விட்டு மிகப் பெரிய பிரமிப்பு என்னைச் சூழ்ந்து கொண்டது. கதையைப் படித்து விட்டு, எனக்கு இரண்டு சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கிறது.

1. 'கலிகாலம் தொடங்கிவிட்டது' - என ஓர் இடத்தில் வருகிறது. மகாபாரத யுத்தம் துவாபர யுகத்தில் தானே நடந்தது, அப்பொழுதே கலி ஆரம்பித்து விட்டதா?

2. பரத்வாஜ முனிவரின் ஆச்ரமத்தில் அவருடைய பத்னி சிஷ்யர்களுக்கு மாமிசம் சமைத்து வைத்ததாக எழுதியிருந்தீர்கள். அப்படியானால் அந்தக் காலத்தில் அந்தணர்கள் மாமிசம் உண்பார்களா?

தயவு செய்து இந்தக் கேள்விகளுக்குப் பதில் விளக்கம் தாருங்கள் பாலா, தெரிந்து கொள்ளவேண்டும் என்றுதான் கேட்கிறேன்.

'அன்பரசு' - வாதவூரார் பற்றி ஆழமான, அழகான நாவல். மிகவும் ரசித்துப் படித்தேன். ஒவ்வொரு நாவல் படித்து முடித்த பின்பு, உங்களுக்குக் கடிதம் எழுதவேண்டும் என்று நினைத்து, பின்பு ஏதோ காரணங்களால் எழுத முடியாமல் போய், இன்று எப்படியாவது எழுதிவிடவேண்டும் என்று நேரம் கண்டுபிடித்து எழுதுகிறேன்.

எங்கள் Hostel மாணவிகள் விடுமுறை நாட்களில் நாவல்கள் படிப்பதுண்டு. என் அறைக்கு வந்து புத்தகம் கேட்டால், 'பாலகுமாரன் நாவல் இருக்கிறது' என்று நான் சொன்னால், 'வேண்டாம், புரியாது. வேற ஏதாவது இருந்தால் கொடு' என்று கேட்பார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம், 'பாலகுமாரன் புத்தகம் இருந்தால் கொடு' என்று அரித்தெடுக்கிறார்கள். என் தோழிகள் பலர் உங்களுடைய விசிறிகள் ஆகிவிட்டனர் என்பது மிக மகிழ்ச்சியான செய்தி.

எனது சொந்த ஊர் மன்னார்குடி. ஒவ்வொரு முறையும் ஊருக்குப் போகும்போது ஆறு மணி நேர பயணம். சேலத்திலிருந்து திருச்சி, திருச்சியிலிருந்து தஞ்சாவூர், தஞ்சாவூரிலிருந்து மன்னார்குடி என்று வழி நெடுக காவிரியும், பச்சை பசேலென்ற வயல்களும் நிறைந்த வழி. நான் உங்கள் நாவல் வாங்காமல் பஸ்ஸில் ஏறுவதில்லை. சிறிது நேரம் படிப்பு, சிறிது நேரம் வேடிக்கை பார்த்தல் என்று நேரம் ஓடிவிடும். நான் உங்களுக்கு சிலமுறை கடிதம் எழுதியிருக்கிறேன். சிலமுறை உங்களுடன் தொலைபேசியில் பேசியிருக்கிறேன். ஆனால், உங்களை இன்னும் நேரில் சந்திக்கும் வாய்ப்பு மட்டும் கிடைக்கவில்லை. விரைவில் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

'வெற்றிலைக் கொடி' என்ற ஒரு நாவல் எழுதி யிருந்தீர்கள். முசிறி, தொட்டியம் பகுதிகளைக் கடக்கும் பொழுதெல்லாம் வெற்றிலைக் கொடிகளை கண்கள் தேடிக் கண்டுபிடிக்கின்றன. ஒரு மிகத் தெளிவான, ஆரோக்கியமான வாசக வட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். நல்ல

புத்தகங்களின் பக்கம் தமிழ் கூறும் நல்லுலகம் திரும்பும் என்று நம்பிக்கை விதை விதைத்திருக்கிறீர்கள். 'இரும்புக் குதிரை'களின் முன்னுரையில் திரு. மாலன் அவர்கள் குறிப்பிட்டிருந்ததுபோல், ஒரு தலைமுறையே உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறது!

பெண்கள் மீது நீங்கள் கொண்டுள்ள Soft corner அபரிதமான நம்பிக்கை, காதல் பற்றி நீங்கள் எழுதும் J.K. தத்துவம், ஒரு சூழ்நிலையை, ஒரு மனிதரை அக்கு வேறு ஆணிவேறாக ஆராய்ந்து எழுதும் பாணி, 'பாலகுமாரனின் சுதந்திர பூமி' - போன்ற பக்கங்களின் நீங்கள் எழுதும் "வேறென்ன, மழை நன்றாகப் பெய்து வருகிறது..." போன்ற வாசகங்கள்...

இப்படி உங்களிடம் எனக்குப் பிடித்த விஷயங்கள் அநேகம்.

வாதவூரார் பற்றிய கதையில் பின்னால், அவருடைய பாடல்கள் சிலவற்றைப் படித்துவிட்டு, இப்பொழுதெல்லாம் தமிழ், தமிழ் என்கிறார்களே, L.K.G.யிலிருந்து +2 வரை தமிழை ஒரு மொழியாகப் படித்தும், அர்த்தம் புரியவில்லையே என்று வருத்தமாக இருந்தது.

நல்ல சமுதாயம் என்பது நல்வழியில் யோசிக்கத் தெரிந்த, சிந்திக்கத் தெரிந்த சிலரையாவது கொண்டிருக்க வேண்டும், 'என் கண்மணித் தாமரை' படித்துவிட்டு உடம்பு முழுவதும் நடுக்கம் பரவுவதுபோல் உணர்ந்தேன். இரண்டு நாட்கள் முன்பு, தை அமாவாசை அன்று உங்களை நினைத்துக் கொண்டிருந்தேன். அன்றுதான் அபிராமி பட்டர், அபிராமி அந்தாதியைப் பாடிய நாள். உங்களை நினைக்கும்போது, மிகப்பெரிய வியப்பு என் மனதை நிறைக்கிறது. நான் சந்திக்கும் மனிதர்களிடமெல்லாம், உங்களைப் பற்றிப் பேசுகிறேன். எவ்வளவு பெரிய ஆன்மிகப் பணியை நீங்கள் செய்து வருகிறீர்கள். உங்கள் பணி போற்றுதலுக்குரியது. இறைவனின்

அடியார்கள், இறைவனுக்குச் சமம். கீதையில் பகவான், 18ஆவது அத்தியாயத்தின் கடைசியில், ''இந்த தர்மத்தை யார் உலகுக்கெல்லாம் எடுத்துச் சொல்கிறானோ அவனே, எனக்கு மிகவும் ப்ரியமானவன்'' என்று கூறியிருக்கிறார். இறைவனுக்கு ப்ரியமானவரே, உங்களுக்கு வணக்கங்கள். இத்தகைய நல்ல விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தமைக்கு நன்றிகள் பலப் பல.

தங்களது பணிப்பளுவை என்னால் ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. இருப்பினும், நேரமிருப்பின் தயவுசெய்து, எனக்குப் பதில் கடிதம் எழுதுங்கள்.

என்றென்றும் அன்புடன்,
வணக்கங்களுடன்,
**கி. க்ருஷ்ணவேணி.**

K. KRISHNAVENI
IIMsc. Chemistry
SALEM 636016.

# இனிய யட்சினி

## 1

பட்டு வாத்தியாருக்கு அன்று மனம் மிக சந்தோஷமாக இருந்தது. உடல் நலம் அற்புதமான நிலையில் விளங்கிற்று. அவர் வீடு எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சுமுகமாய், குதூகலமாய் இருந்தது.

இந்தச் சூழலில் யார் தன்னைப் பார்க்க வந்தாலும், அவரை கருத்தோடு வரவேற்று, அவருக்கு ஏதாவது வழங்கி நன்கு உபசரிக்க வேண்டும் என்ற ஆசை பட்டு வாத்தியாருக்கு இருந்தது. ஆனால் அப்படி எதிர்பார்க்கின்ற நேரங்களில், அநேகமாய் எவரும் வருவதில்லை. அதையும் மீறி எவரேனும் வந்தால், அவர்கள் கருத்து பரிமாறிக் கொள்ளும் மனோ நிலையில் வருவதில்லை. கருத்து பரிமாறிக் கொள்ளும் மனோநிலையில் எவரும் வந்தால், அவர்கள் அப்படி பரிமாறிக் கொள்ளும் தகுதியைக் கொண்டிருப்பதில்லை.

எப்பொழுதாவது தான் மனம் சந்தோஷமாக இருப்பதும் நல்லவர்கள் எதிர்ப்படுவதும் ஒன்றாக நிகழ்கிறது. பல நேரங்களில் வெறுமே தன்னுடைய நிம்மதியைத் தான் மட்டுமே அனுபவித்துக் கொண்டு இருக்கும்படி நேரிடுகிறது.

வாத்தியார் என்றால், அவர் பள்ளிக்கூட ஆசிரியர் அல்ல. மற்ற பிராமணர்கள் போல் வைதீகம் பார்ப்பவரும் அல்ல. ஆனாலும், அவரை வாத்தியார் என்று அழைத்தார்கள். அவருக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் இருந்தார்கள். பட்டு வாத்தியார் மந்திர ஜபங்கள் கற்றுக் கொண்டவர். மந்திர ஜபங்கள் கற்றுக்கொடுப்பவர். அவர் மந்திரஜபம் கற்றுக் கொண்டதே இம்மாதிரி ஒரு நல்ல சந்தோஷமான நேரத்தில்தான்.

அவருடைய வாத்தியார், ஒருநாள் மிகச் சந்தோஷமாக இருக்கும்போது, பட்டு எதிர்பட்டார். 'அடேய் வா' என்று கூப்பிட்டு மந்திரங்களின் மகிமை பற்றி விளக்கமாகப் பேசி, தலை தடவி வாஞ்சையோடு அணைத்துக் கொண்டு, எதிரே உட்கார வைத்து அடிப்படையான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்து, பிறகு காதோரம் மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார்.

கற்றுக் கொடுப்பது போன்ற நிறைவான விஷயம் எதுவுமில்லை. கற்றுக் கொடுக்கும் போது ஆசிரியர், மாணவர் இரண்டு பேருக்குமே சந்தோஷம் கரைபுரளும். மிகப் பெரிய நிம்மதியும், வாழ்க்கை நம்பிக்கையும் அதிகரிக்கும். பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் காதலாகி கசிந்து நிற்கின்ற ஒரு அற்புத சுகம் அங்கு ஏற்படும்.

அதுவும் அற்புதமான விஷயங்களை, ரகசியமான விஷயங்களை, மக்களுக்கு நிச்சயம் தேவை என்கிற விஷயங்களை, இந்தப் பூமி செழித்தோங்கி வளர உதவும் விஷயங்களை கவனத்தோடு கற்றுக் கொடுக்கிறபோது, அதை யாரோ ஒருவர் கவனத்தோடு கற்றுக் கொள்கிற போது, பிரபஞ்சம் முழுவதுமே ஒரு ஆனந்தம் பரவி விடுவதாக பட்டு வாத்தியாருக்குத் தோன்றும்.

எல்லா நேரமும் மந்திர ஜபங்கள் கற்றுவிடமுடியாது. எல்லோருக்கும் மந்திர ஜபங்கள் கற்றுக் கொடுத்துவிட முடியாது. எதிலுமே கற்றுக் கொள்பவர் ஆர்வமாக இருந்தாலொழிய கற்றுக் கொடுப்பவருக்கு உற்சாகம் ஏற்படாது.

கற்றுக் கொள்பவர் ஆர்வமாக இருந்து, இதனால் பெரும்பயன் ஏற்படும் என்ற நம்பிக்கை கற்றுக் கொடுப்பவருக்கு வந்து விட்டால், ஊன், உறக்கம் சகலமும் மறந்து தன்னையே அர்ப்பணித்துக் கொள்ள கற்றுக் கொடுப்பவருக்குத் தோன்றிவிடும்.

ஆனால், இதில் அடிப்படையாக ஒரே ஒரு விஷயம். கற்றுக் கொடுப்பவருக்கு தான் கற்றதில், கற்பிப்பதில் நம்பிக்கை இருக்கவேண்டும். கடனே என்று வாழ்பவருக்கும், காசுதான் முக்கியம் என்று வாழ்பவர்க்கும் தான் கற்றதில் கற்றுக் கொடுப்பதில் நம்பிக்கை வருவதில்லை. நிறை'ப ஆசிரியர்கள் கடனுக்காகவும், காசுக்காகவும்தான் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பதினோரு வயதில் பட்டு வாத்தியாருக்கு பூணூல் போட்டார்கள்.

''இவனுக்கு ஏதாவது கத்துக் கொடுறா'' பட்டு வாத்தியாரின் அப்பா, பட்டு வாத்தியாரின் ஆசிரியரின் வீடு தேடிப் போய் வாசலில் நின்று கேட்டார்.

''அடடா நீங்க சொன்னேள்னா மாட்டேன்னு சொல்ல முடியுமா.''

''நான் சொல்றதுக்காக கத்துத் தரவேண்டாம். இவனுக்குள்ள ஒரு சின்ன சுடர் இருக்கறதா நான் நினைக்கறேன். நிறைய கத்துக்கணும்கற ஆவல் இவனுக்கு இருக்கறதா எனக்குத் தோன்றது. உனக்கு அப்படி தோணித்துன்னா, இவனுக்கு என்ன கத்துக் கொடுக்கணுமோ அதைக் கத்துக் கொடு. அடிப்படையா இரண்டு விஷயம். மஹா கணபதி மந்திரமும், பாலா திரிபுரசுந்தரியும் யார் வேணும்னாலும் சொல்லலாம். ஆர்வம் இல்லாதவாளுக்குக் கூட கத்துக்கொடுக்கலாம். முதல்ல இது ரெண்டையும் கத்துக் கொடு. பையனுக்கு நல்ல விஷயம் கத்துக் கொடுக்கணுங்கிற ஆவல் எல்லா அப்பாகிட்டேயும் இருக்கணும். என்கிட்ட இருக்கு. ஆனா, என் பையன் கிட்ட என்ன ஆர்வம்

இருக்குன்னு எனக்குத் தெரியலை. அதனாலதான் உன்கிட்ட வந்து விண்ணப்பிக்கறேன்'' என்றார்.

பட்டு வாத்தியாரின் ஆசிரியர் அப்பாவை விட வயதில் இளையவர். ஆனால் அப்பா விண்ணப்பித்துக் கொள்கிறேன் என்று சொன்ன போது, விண்ணப்பம் என்ற வார்த்தையைப் பிரயோகித்த போது, அந்த ஆசிரியர் ஆடிப் போனார். கை கூப்பினார். நிச்சயம் மனமார கற்றுக் கொடுக்கிறேன் என்று வாக்குக் கொடுத்தார்.

பட்டு வாத்தியாரை அழைத்துக் கொண்டு காவிரிக் கரைக்குப் போனார். வானம் அப்போது மந்தாரமாக இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றும் மிக லேசாய் குற்றாலச் சாரல்கள் போல தூறல்கள் விழுந்து கொண்டிருந்தன.

ஒரு குளிர்காற்று சதா நகர்ந்து கொண்டே இருந்தது. மேற்கே குடகு மலையில் கனத்த மழை பொழிவதாய் பத்திரிகைகள் செய்தி சொல்லின. காவிரியில் வேகமான நீர்ப்பெருக்கு இருந்தது. மேட்டூர் அணையின் கொள்ளளவு அதிகரித்துக் கொண்டே இருக்க, தஞ்சை மக்கள் சந்தோஷமாக இரவும் பகலும் காவிரியை எட்டிப் பார்த்துவிட்டுப் போனார்கள்.

'நேத்தை விட இன்னைக்கு முழங்கை உசரம் ஜாஸ்தியா தண்ணி போறது' என்று சொல்லி சந்தோஷப் பட்டார்கள்.

கருங்கல் மேடை போல், படித்துறைக்கு அருகே ஒரு கட்டிடம் இருக்கிறது. அதில் பட்டு வாத்தியாரின் ஆசிரியர் குப்புசாமி வாத்தியாரும், பட்டுவும் உட்கார்ந்து கொண்டார்கள். குப்புசாமி வாத்தியார் சிறிது நேரம் கண்மூடிப் பிரார்த்தனை செய்தார். கண் திறந்தார். பட்டுவைப் பார்த்து புன்னகை செய்தார்.

''இப்ப நான் சொல்ற விஷயத்தைக் கெட்டியா பிடிச்சிக்கோ. ரெண்டாந் தடவை அதை நான் சொல்ல மாட்டேன். எந்த நல்ல விஷயங்களும் உனக்கு உன் வாழ்க்கையில் ஒரு முறைதான் சொல்லித் தரப்படும். கெட்டியா பிடிச்சிண்டா உண்டு. விட்டுட்டா அடுத்த ஜென்மாவுலதான்

அந்த வாய்ப்பு கிடைக்கும். வாய்ப்பு கிடைக்கற போதே, கெட்டியா பிடிச்சுக்கறதுதான் கெட்டிக்காரத்தனம். உன்னை இங்க ஏன் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன்னு தெரியுமா, மந்திர ஜபம் கற்றுக் கொடுக்கறதுக்கு.

மந்திர ஜபம் என்றால் என்ன? நம்முடைய உலகத்தைச் சுற்றி இடையறாது ஒலிகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. காற்று எப்படி நகர்கிறதோ, அதேபோல ஒலிகளும் நம் உலகம் சுற்றி நகர்ந்து கொண்டிருக்கின்றன. உலகம் சுற்றி மட்டும்தான் ஒலி நகர்கிறதா?

இல்லை. காற்று உலகத்தில் மட்டும் இருக்கிறது. ஒலி பிரபஞ்சம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. இப்படி பிரபஞ்சம் முழுவதும் பரவிக் கிடக்கிற ஒலி உலகத்தின் பக்கமும் சுழன்று சுழன்று வருகிறது. இந்த ஒலிகளை உற்றுக் கவனித்து, இந்த ஒலிகளை தங்களுடைய சூட்சும சக்தியால் கிரகித்து, வார்த்தைகளாக்கி அதை ஒரு வரிசைப்படுத்தி 'மந்திரம்' என்று அழைக்கிறார்கள்.

ஒரு கத்தியால் வெட்டலாம். ஒரு கட்டையால் அடிக்கலாம். ஆனால் ஒலியால் என்ன செய்ய முடியும் என்று தோன்றுகிறதல்லவா. கத்தி, கட்டை போன்றவற்றைப் போலவே ஒலியையும் ஆயுதமாக உபயோகிக்க முடியும் என்பதை, தற்போதைய விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவு வேகத்தில் ஒரு குறிப்பிட்ட ஒலியைச் செலுத்தினால் அந்த ஒலி எதிரே இருக்கிற கண்ணாடியைச் சுக்குநூறாக உடைத்து விடும். கண்ணாடியை மட்டுமல்ல, இரும்புக் கோட்டைகளையும் கூட ஒலி உடைத்து விடும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒலி குவிக்கப்பட்டு வேகமாய்ச் செலுத்தப்பட்டால் ஒலியினுடைய விஷயம் ஆயுதப் பிரயோகமாக மாறி விடுகிறது.

வெறுமே தளர்வாக, அகலமாகப் பரந்து கிடந்திருந்த ஒலி மாற்றப்பட்டு ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகிறது. இதுதான் மந்திரத்தின் தாத்பர்யம்.

ஒரு குறிப்பிட்ட ஒலியை, ஒரு குறிப்பிட்ட அளவுகளில், குறிப்பிட்ட வேகத்தில் சொல்ல அது மந்திரமாக மாறி விடுகிறது. நம் உடம்பிலுள்ள சில முடிச்சுகளை அது அவிழ்க்கிறது. நம்முடைய புத்தியைத் தூண்டுகிறது. நம் உடம்பிலுள்ள குண்டலினி சக்தியை அதிகரிக்கிறது. மேல் எழுப்புகிறது. நம் உடம்பின் திண்மையை அதிகரிக்கிறது. நம்முடைய புத்திக் கூர்மையை, கண் பார்வைக் கூர்மையை, சொல்லின் வன்மையை, காது கேட்கும் தன்மையை அதிகரிக்க வைக்கிறது. நான் சொல்வது உனக்குப் புரிகிறதா? நான் சொல்வதின் மீது நம்பிக்கை வருகிறதா?'' குப்புசாமி வாத்தியார் பட்டுவின் தலையைத் தடவி கேட்டார்.

பதினோரு வயது பட்டு திரும்பி, ''புரிகிறது'' என்று சொன்னார்.

''அப்படிச் சேர்க்கப்பட்ட மந்திரங்களை பரம்பரை பரம்பரையாக நாம் மற்றவருக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு விஷயத்தை நாம் நம் நன்மைக்காக பிரயோகப்படுத்துகிறோம், கலப்பையை உழவன் உழுவதற்காக மண்ணில் பிரயோகப்பபடுத்துகிறான். கைவிரல்களைச் சுழலும் களிமண்ணில் குயவனார் பிரயோகப்படுத்துகிறார். உளியை மரத்தச்சர் மரத்தின் மீது பிரயோகப்படுத்துகிறார். காய்ச்சிய இரும்பின் மீது சம்மட்டியை கொல்லர் பயன்படுத்துகிறார். அதாவது பிரயோகப்படுத்துகிறார்.

அதேபோன்று, நாம் ஒரு சொல் மீது நமது சக்தியைப் பிரயோகப்படுத்த வேண்டும். ஒரு சொல்லை சக்தியாக மாற்ற பிரயோகப்படுத்த வேண்டும்.

ஒரு கொல்லருக்கு அடுப்பு, கரித்துண்டு, நெருப்பு என்று சில விஷயங்கள் வேண்டியிருக்கிறது. ஒரு மரத்தச்சருக்கு உளி,

சுத்தி என்று தேவை இருக்கிறது. ஒரு உழவருக்கு காளை மாடுகள், ஏர்கலப்பை, கைப்பிடி என்று தேவைப்படுகிறது. அதே போல நமக்கும் ஒரு விஷயத்தைப் பிரயோகப்படுத்த சில அடிப்படையான சௌகரியங்கள் தேவைப்படுகின்றன. ஒரு சுத்தமான இடம், மனதை சலனப்படுத்தாத ஒரு அமைதியான இடம். ஆரவாரங்களற்ற இடம் தேவைப்படுகிறது. இடம் கிடைத்து விட்டால் போதுமா?

போதாது. நமக்குத் திறமை வேண்டும். ஒரு சொல்லைச் சுவீகரிக்கவும், பிரயோகப்படுத்தவும் நம்மை நாம் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு என்ன செய்வது?

தனியே ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்க பழகிக் கொள்வது தான் முதல் பாடம். நாம் எப்போதுமே கூட்டத்தோடு இருந்து இருந்து தனியே இருக்கப் பிடிக்காதவர்களாய்ப் போய் விட்டோம். தனிமையாக இருப்பதற்குப் பயப்படுவதோடு மட்டுமல்லாமல், தனிமை மீது சற்று எரிச்சலுமடைகிறோம். ஆனால் ஒருவருக்கு தனிமை பழகிவிட்டால், அது மிக அற்புதமான அனுபவமாகத் தோன்றும். தனியாக இருப்பதற்குக் கற்றுக் கொண்ட பிறகு உடம்பை வலுப்படுத்திக் கொள்கிற ஒரு பயிற்சி அவசியம். பிராணாயாமம் என்கிற மூச்சுப் பயிற்சியை நான் உனக்கு சொல்லித் தருகிறேன். இது நுரையீரல்களை விரிவுப்படுத்தும், காற்றை உள்ளிழுத்து விடுவதால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இரத்த ஓட்டம் அதிகரிப்பதால் மூளையின் மெல்லிய நரம்புகளுக்கும் ரத்தம் பரவ, அந்த மூளை முழுவதுமாய் வேலை செய்யும்.

நம் மூளையின் முழு சக்தியையும் நாம் எப்போதுமே பயன்படுத்திக் கொண்டதில்லை. வெகு சிலரே மூளையைச் சற்று அதிகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் அவர்களுடைய ஞாபக சக்தியும், நிதானமும் நல்ல அளவில் இருக்கின்றன. மூளையை அதிக அளவில் பயன்படுத்தாதவர்கள் ஆத்திரக்காரர்களாக, அவசரக்காரர்களாக, ஆராய்ந்து பார்க்க முடியாத மக்குகளாக, ஞாபக சக்தி குறைந்து போனவர்களாக

இருக்கிறார்கள். ஞாபக சக்தி தெளிவாக இருப்பின் ஒரு அனுபவத்தினுடைய மகிமை முழுவதுமாய் அவனுக்குள் இருக்கும்.

ஆனால், பல பேருக்கு ஞாபக சக்தி அழுத்தமாக இல்லாததால், ஒரு முறை நடந்த சம்பவத்தின் விளைவு அவர்களுக்குள் முழுமையாகப் போய் சேருவதில்லை. அதனால் ஒரு முறை சண்டை போட்டதை மறந்து, அதையே புதிதாய் துவக்கி விடுகிறார்கள். சண்டையில் ஏற்பட்ட அவமானங் களையும், வலியையும் மறந்துபோய் மறுபடியும் யுத்தம் துவங்கி விடுகிறார்கள்.

இது ஞாபக சக்தி குறைவால் ஏற்படுவது. போன முறை சண்டை போட்ட போது என்னென்ன நடந்தது, எப்படியெப்படி அனுபவித்தோம் என்பது முழுமையாக ஞாபகம் இருப்பின், அடுத்த முறை சண்டை போடும் போது ஒரு பயம் வரும். ஒன்று சண்டையைச் சரியாகப் போடுகின்ற வழி தெரியும் அல்லது சண்டையை முற்றிலும் தவிர்த்து விட்டு நகரக்கூடிய புத்தி எழும். இரண்டுமற்று குருட்டாம் போக்கில் முரட்டுத்தனமாய், மூர்க்கமாய் சண்டைக்கு இறங்குகிறவன் ஞாபக சக்தி இல்லாதவன். புத்தியில் அதாவது மூளையில் வலுவில்லாதவன். இன்னொரு வார்த்தையில் சொல்லப் போனால் அவன் மூளையின் எல்லாப் பகுதிகளுக்கும் ரத்தம் போவதில்லை. காரணம், அவன் சுவாசிப்பதில் தவறு இருக்கிறது.

ஏன் சுவாசிப்பதில் அவனுக்குத் தவறு நேர்ந்தது. ஆழ இழுத்து நீண்ட மூச்சு ஏன் அவனால் விடமுடியவில்லை. நுரையீரல் முழுவதும் ஏன் வேலை செய்யத் தூண்டப்பட வில்லை. நுரையீரல் முழுவதும் வேலை செய்யத் தூண்டி ரத்தத்தை உடம்பெங்கும் பரப்பி மூளைக்கும், மூளையின் மெல்லிய நரம்புகளுக்கும் ஏன் அவன் தன்னுடைய ரத்த சக்தியை அனுப்பவில்லை என்றால், அவனுடைய ஆவேசமான

புத்தி, அவனுடைய ஆரவாரமான புத்தி, அவனுடைய பேராசையான புத்தி அவனை சரியாக சுவாசிக்க விடுவதில்லை.

உனக்கு ஒன்று புரிகிறதா பட்டு. சரியாக சுவாசிக்காததால் ஆத்திரமான புத்தி, ஆத்திரமான புத்தி இருப்பதால் தவறான சுவாசம். எனவே ஒருவர் ஆரம்பத்திலேயே இளம் வயதிலேயே ஆத்திரப்படாமல் நன்றாக சுவாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

பட்டு, இது மிக மிக முக்கியமான விஷயம். திரும்பச் சொல்கிறேன். இது ஒரு முறைதான் உனக்கு கேட்கக் கிடைக்கும். பலமுறைகள் சொல்லித் தரமாட்டாது. இதை இந்த ஜென்மத்திலேயே பிடித்துக் கொண்டால் போயிற்று. அல்லது 'ச்சீ சாதாரண விஷயம்' என்று தூக்கியெறிந்துவிட்டால், மறுபடியும் அடுத்த ஜென்மத்தில்தான் இதைப் பற்றி நீ சிந்திப்பாய்.

இதை வேறு யாராவது செய்தாலும் அவரைப் பார்த்து, அப்போது 'மூக்கைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான் பார்' என்று முட்டாள்தனமாக கேலி செய்யவே உனக்குத் தோன்றும்.

அப்படி நீ கேலி செய்ததாலேயே, உன்னால் கேலி செய்யப்பட்டதாலேயே உன்னிடமிருந்து அது இன்னும் அந்நியமாய் போய்த் தொலைந்து விடும்.

ஒரு நல்ல விஷயத்தை விட்டு விலகி, அதை அசிங்கப்படுத்தி மற்றவருக்கும் பயன்படாது, அதைப் பற்றி அவதூறுகளைப் பரப்பி ஒரு சமூகத்திற்குக் கேடு மிக்கவனாய் நீ விளங்கி விடுகிறாய். இதைச் செய்தால் உன்னை விட மகாபாவி உலகத்தில் வேறு யாருமில்லை. தானும் தின்னாமல், பிறருக்கும் கொடுக்காது வெறுமே ஒரு விஷயத்தைத் தரையில் போட்டுப் போகிறவன் மிகப் பெரிய சமூக விரோதி.

எனவே, இளம் வயதிலேயே நுரையீரலை முழுவதுமாய் வேலை வாங்கக் கற்றுக் கொள். உன் நுரையீரலின் அடிப்பகுதி வரை பிராணவாயு போகட்டும். நுரையீரலின் அத்தனை குமிழ்களும் காற்றை உள்ளிழுத்து வெளியே தள்ளட்டும். நுரையீரல் அகலமாக, மார்புப் படம் அகலமாகும். மார்புப் படம் அகலமானால் நல்ல பசி ஏற்படும். நன்கு பசித்து உண்டால் நல்ல செரிமானம் ஏற்படும். நல்ல செரிமானம் ஏற்பட்டால் உடம்பு முழுவதும் சக்தி புகுந்து ததும்பும். நல்லபடியாய் சக்தி ததும்பி, உடம்பு முழுவதும் பரவியிருக்க, புத்தியை பிராணவாயுவின் மூலமாய் குளிரச் செய்தால், அடேயப்பா அமைதியும், சக்தியும் அருகருகே உன்னுடன் இருந்து மிகப் பெரிய ஒரு வலிவை உனக்குத் தரும்.

விநாயகர் சித்தியோடும் புத்தியோடும் இருப்பது என்பது இதுதான். புத்தி என்பது மனவலிமை. சித்தி என்பது காரியம் செய்யத் தகுந்த வலிமை. வெறும் புத்தி வலிமை இருந்தால் மட்டும் போதாது. காரியம் செய்யக் கூடிய அளவிற்கு உடம்பிலும் வலிமை இருக்க வேண்டும். காரியம் செய்யக்கூடிய அளவிற்கு உடம்பிலே இருக்கின்ற வலிமையை, புத்தியினால் நெறிப் படுத்தி அனுப்ப, வினை தீர்க்கும் விநாயகனாய் நீ மாறுகிறாய். நீயே கடவுளாகிறாய்.

பட்டு நான் சொல்வது உனக்குப் புரிகிறதா? இதை மறுபடியும் உனக்கு வேறு எவரும் சொல்லித் தரமாட்டார்கள், எவருக்கும் நேரமில்லை. எவருக்கும் எவர் பற்றியும் அக்கறையில்லை. ஏதோ ஒரு க்ஷணத்தில் ஒரு அக்கறை மிகுந்த நான், உனக்கு இதைச் சொல்லித் தருகிறேன் உன் தகப்பனார் பவ்யமாகக் கேட்ட அந்த விண்ணப்பத்தினால், உனக்குச் சொல்லித் தருகிறேன். மற்றபடிக்கு இதனால் எனக்கு எந்த லாபமும் இல்லை.

எனவே, மிக மிகக் கூர்மையாய் இதைக் கேட்டுக் கொள். இப்பொழுது பிராணாயாமம் என்கிற விஷயத்தைச் செய்து,

அதனால் நுரையீரலை, நுரையீரலால் ரத்த ஓட்டத்தை, ரத்த ஓட்டத்தால் புத்தியின் வலிவை அதிகரித்து விட்டாய். புத்தியின் வலிமை அதிகரிக்கும் பொழுதே இடுப்புக்குக் கீழே இருக்கும் குண்டலினி சக்தியை, புத்தி உணரத் துவங்கிவிடும். இதுவரை புத்தியால் உணரப்படாத அந்தச் சக்தி, யாரோ உணருகிறார்கள் என்றதும் எழும்பத் துவங்கிவிடும். நீ ஒருவன் என்று உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறாய். இல்லை. உனக்குள் பல பகுதிகள் தனித்தனியே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒன்றை ஒன்று உணருகிற போது, உணர்ந்ததால் உணரப்பட்டது விழித்துக் கொள்கிறது.

நுரையீரலின் ரத்த ஓட்டத்தால் புத்தி விழித்துக் கொள்வது போல, புத்தி விழித்துக் கொள்வதால் குண்டலினி தலை தூக்கி நிற்கிறது.

அதாவது, புத்தி தன் இடுப்புக்குக் கீழே உள்ள சக்தியை முதன்முதலில் உணரத் தலைப் படுகிறது. 'உடம்பின் ஏதோ ஒரு விஷயம் அற்புதமாக இருக்கிறதே. இடுப்புக்குக் கீழ் முதுகுக்கு அடியே ஏதோ ஒரு அழுத்தம் பரவுகிறதே. ஏதோ ஒரு சூடு இருக்கிறதே' என்று அதை உன்னித்து நோக்குகிறபோது, சுருண்டு கிடந்த அந்தச் சக்தி தலை தூக்கிப் பார்க்கிறது. அதைப் பாம்பாக உருவகப்படுத்தியிருக்கிறார்கள்.

ஏன் பாம்பாக உருவகப்படுத்தியிருக்கிறார்கள் என்றால், அந்தச் சக்தி ஒரு சுழல் வடிவத்தில் இருக்கிறது. அது நீண்டு உச்சந்தலைவரை முதுகெலும்பின் வழியே போவதற்குத் தயாராக இருக்கிறது. அது பாம்பு அல்ல. பாம்பின் அமைப்பை யொத்த ஒரு சக்தி. சுருண்டு கிடக்கிற சக்தி. அந்த இடத்திற்கு மூலாதாரம் என்று பெயர். அந்த மூலாதார சக்தியை புத்தி உணரத் துவங்கியதும் மெல்ல படபடத்து தலைதூக்கி அடுத்த இடத்திற்கு நகர்வதற்கு ஆயத்தமாகிறது.

இது ஒரு இளைஞனின் அற்புதமான நேரம். இப்படி மூலதார சக்தி படபடத்து எவருக்கெல்லாம் எழுந்திருக்கிறதோ அவர்கள் நல்ல படிப்பாளியாக, நல்ல எழுத்தாளராக, நல்ல நடிகர்களாக, நல்ல பேச்சாளர்களாக, நல்ல ஓவியர்களாக, நன்கு பாடம் நடத்தும் ஆசிரியர்களாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நல்ல பாடகர்களாக மாறியிருக்கிறார்கள். யாரெல்லாம் நல்ல கலைஞர்களோ அவர்களுக்கு மூலாதார சக்தி நல்ல நிலையில் இருக்கிறதென்றே அர்த்தம்.

இந்த மூலாதார சக்தியை பிராணவாயுவால் மட்டுமே எழுப்ப முடியும் என்றில்லை. போன ஜென்மத்து கொடுப்பினையாகவும் இருக்கலாம். ஒரு நல்ல வலிவுள்ள குருவின் மூலமும் எழுப்பப்படலாம். இறையருளால் இந்தச் சக்தி எழும்புதல் நிகழ்ந்து விடலாம். அல்லது தாயின் கருப்பையிலே இருக்கிற பொழுது தாயினுடைய மனம் ஒருமுகப்பட்டு அவள் மூலாதார சக்தி எழுந்து, அதன் மூலம் அந்த வயிற்றிலுள்ள சிசுவின் மூலாதார சக்தியும் விழித்துக் கொண்டிருக்கலாம்.

இந்த பிராணாயாமத்தால் மூலாதார சக்தியையும் மெல்லத் தூண்டி விட்டு, பிறகு நான் சொல்லித் தருகின்ற இந்த மந்திர ஜபத்தை இடையறாது நாக்கசைக்காது, உதடசைக்காது மனத்திற்குள்ளே திரும்பத் திரும்பச் சொல்லி வர, இது மிகப் பெரிய நல்ல பலன்களை உனக்குக் கொண்டு வந்து கொடுக்கும்.

வாய் திறந்து சொல்லாமல் மனதிற்குள்ளேயே சொல்ல வேண்டிய அவசியமென்ன?

வாய் திறந்து சொல்லுகிற போது அயர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. அதே சக்தியை வெளியே தெரியாது, அதே சமயத்தில் சக்தி குறையாது, அதே வேகத்தில் மனசிலிருந்து வெளியே அந்த அசைவுகளை அனுப்ப அது இன்னும் கூர்மை பெறுகிறது.

ஒலி மிக வேகமாகப் போய்விட்டால் மனிதரின் காதுகளுக்கு எட்டாது. அதே போல மனதிற்குள்ளேயே சொல்கின்ற ஒலி வேகமானது. மிகக்கூர்மையானது. நான்

சொன்ன இந்த விஷயத்தை வீட்டில் போய் அமர்ந்து ஒழுங்காய் யோசனை செய்து பார்.

இப்படிப்பட்ட பிராணாயாமம் செய்த பிறகு தலையில் லேசாய் குட்டிக் கொள்வது நல்லது. அப்படி குட்டிக் கொள்கிற போது விநாயகரை நினைத்து மந்திரம் சொல்வது ஒரு சடங்காக இருக்கிறது. ஆனால், இது சடங்கு அல்ல. மெல்ல தலையின் உச்சியில் தட்டிக் கொள்வதன் மூலம் அங்கு அதிர்வலைகளை ஏற்படுத்தி, அங்குள்ள ஒரு நாடியை நீ விழிப்படையச் செய்கிறாய். குண்டலினியை மனம் எப்படி விழிப்படையச் செய்கிறதோ, அதே போல உன் கையானது தலையிலே இருக்கின்ற ஒரு நாடியைத் தட்டி எழுப்புகிறது.

நீ ஏதாவது மறந்து விட்டால் என்ன செய்வாய்?

அட, மறந்து விட்டேனே என்று நெற்றியில் அடித்துக் கொள்வாய் அல்லவா? எப்படி அதை உனக்கு யார் கற்றுக் கொடுத்தார்கள்.

இது இயல்பாக நடக்கிறது. எல்லா மனிதர்களும் இதைச் செய்கிறார்கள். ஒருவருக்கு ஒரு விஷயம் புரியவில்லை யென்றால், லேசாய் மண்டையில் ஒரு தட்டு தட்டுவது வழக்கமல்லவா. அதுபோல தலையில் குட்டிக் கொள்ளுதல் நடைபெற வேண்டும். மெல்லிய அளவில், நிதானமாய், சீராய் ஒரு மந்திரம் சொல்லி குட்டிக் கொள்ள, உச்சந்தலை நாடி விழிப்படைகிறது. உச்சந்தலை நாடி விழிப்படைந்து, நுரையீரல் விழிப்படைந்து, குண்டலினி விழிப்படைந்து நிற்க, உன் வாழ்க்கை மொத்தமும் வேறு விதமாய் மாறிவிடும். கோபம் வரும் போதே கோபத்தைக் கவனிக்கின்ற நிதானம் ஏற்பட்டு விடும். சந்தோஷம் ஏற்படுகிற போதே அது தலைகால் புரியாமல் ஆடாமல் இருப்பதற்குண்டான ஒரு அமைதி உள்ளுக்குள் ஏற்பட்டு விடும். ஏனெனில் புத்தி இந்த ஆட்டத்தையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு பக்குவத்தைக் கொண்டு வந்து விடுகிறது. இதற்குக் காரணம் பிராணாயாமம், மந்திர ஜபம்.''

குப்புசாமி வாத்தியார் பட்டுவை ஆற்றுக்குக் கூட்டிக் கொண்டு போய் கைப்பிடித்துக் கொள்ளச் சொல்லி முங்கிக் குளிக்கச் சொன்னார். உடம்பு சூடு குளிர்ந்த நீரால் குறைந்து, முகத்தில் மாறுதல்கள் ஏற்பட்டவுடன் கவனித்து, ''போதும் வா. அதிகம் நீரில் ஆடி அயர்ந்து போகாதே, மேலேறு'' என்று கட்டளையிட்டார்.

பட்டு உடனே கரையேறினான். குப்புசாமி வாத்தி துண்டெடுத்து தலையை சீராய் துவட்டினார். திரும்பி முதுகெல்லாம் துடைத்தார். துண்டை இடுப்பில் சுற்றி கோவணம் மாற்றிக் கொள்ளச் சொன்னார். கோவணம் மாற்றியதும் இடுப்புத் துண்டை அலசி உதறி, பிழிந்து. சிறிது நேரம் கருங்கல் பாறையில் போட்டு உலர்த்தி, அது லேசாய் உலர்ந்ததும் இடுப்பில் கட்டிக் கொள்ளச் சொன்னார். அதற்குள் அவர் முங்கிக் குளித்து விட்டு கரையேறினார். ஜபம் செய்தார். திரும்பி பட்டுவைப் பார்த்துச் சிரித்தார்.

வரும் போது சாதாரணமாக இருந்த குப்புசாமி வாத்தியாரின் முகம், இப்போது மாறிப் போய் சற்று கூர்மையுடன் மும்முரமடைந்திருப்பதைப் பட்டு கவனித்தான். அவனுக்கு எதிரே குப்புசாமி வாத்தியார் அமர்ந்து கொண்டு பிராணாயாமம் எப்படிச் செய்வது என்று கற்றுக் கொடுத்தார். அவன் செய்யும் போது சரி செய்தார். பத்து முறைகள் செய்து விட்டு பட்டு, குப்புசாமி வாத்தியாரைப் பார்த்த போது அவர் முகம் மறுபடியும் வித்தியாசமாக இருந்தது. தன்னுடைய உடம்பிலும், ஏதோ மாறுதல்கள் ஏற்பட்டதை உணர முடிந்தது. தனக்குள் என்ன நடக்கிறது என்று கண்டுபிடிப்பதை விட குப்புசாமி வாத்தியார் என்ன சொல்கிறார் என்பதைக் கவனமாகக் கேட்டுக் கொள்வோம் என்பதாய் பட்டு காத்திருந்தான்.

அவன் காதோரம் குனிந்து ஒரு மந்திரத்தை மூன்று முறை நிதானமாக குப்புசாமி வாத்தியார் உச்சரித்தார். அதை உள்வாங்கிக் கொள்ளச் சொன்னார். தலையில் கை வைத்து

ஆசீர்வதித்தார். அடுத்தபடி ஒவ்வொரு அட்சரமாகச் சொல்லி, அவனைத் தொடர்ந்து சொல்லச் சொல்லி, சரியாக உச்சரிக்க வைத்து, அவன் பலமுறைகள் சரியாகச் சொல்லும் வரை திரும்பத் திரும்ப சொல்லிக் கொடுத்தார்.

''இப்பொழுது கிழக்கு பார்த்தபடி எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் செய்து கொண்டிரு. இதன் பலன் எண்ணிக்கையில் அல்ல. நேரத்தில் அல்ல. இதில் லயித்து கரைந்து போக வேண்டும். அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது பட்டு. அந்த மந்திரத்தையே பற்றிக் கொண்டு, மனம் அந்த மந்திரத்தை தவிர வேறு எங்கும் அலையாமல் அதிலேயே சுருண்டு கிடக்கின்ற ஒரு தன்மை ஏற்பட வேண்டும்.

ஆரம்பத்தில் மனம் அலையும். காக்கையையும், குருவியையும் நதியையும் மனம் வேடிக்கை பார்க்கும். ஒன்றின் தொடர்பால் பல செய்திகள் தோன்றி மனது கற்பனையில் பறக்கும். மனதை இழுத்துக் கொண்டு வந்து மறுபடியும் மந்திரத்தின் மீது வை. மறுபடியும் மனம் பிய்த்துக் கொண்டு வேறு திசைக்கு ஓடும். அப்படிச் செய்யாதே என்று அதட்டி மறுபடியும் மனதை மந்திரத்துக்குள் கொண்டு வா. இப்படி பல முறைகள்உள்ளே நிகழக்கூடும்.

இப்படி மனம் அலையத் தொடங்கும் போதுதான் அயற்சி அதிகமாகும். போதும் செய்தது என்று தோன்றும். இது மந்திர ஜபம் செய்தது ஆகாது. வெறும் மன அலையல்தான் ஏற்பட்டிருக்கும்.

மந்திர ஜபம் ஒரே ஒரு வாக்கியத்தின் மீது மனம் இடையறாது சுழன்று கொண்டிருப்பதே. வேறு எங்கேயும் போகாது ஒரு புள்ளியில் நிற்பதே. அப்படி நிற்கிற மனம்தான் வலுவாகும்.

ஆரம்பத்தில் மனம் அலைவதைப் பார்த்துப் பயந்து போதுமென்று சொன்னால் நீ வெறும் நாடகம் போடுபவனாய் மாறி விடுவாய். மந்திர ஜபம் செய்வது போல நடிப்பவனாய்

மாறிவிடுவாய். தயவு செய்து அப்படி மாறாதே. அதற்கு நீ மந்திர ஜபம் செய்யாமல் கூட இருக்கலாம். மந்திர ஜபத்தைக் கேலி செய்பவனாகக் கூட மாறலாம். கேலி செய்பவனை விட மந்திர ஜபம் செய்பவனாக நடிப்பவன் மிக ஆபத்தானவன். மிக மிசக் கேவலமானவன். எனவே, ஒரு பொழுதும் மந்திர ஜபம் செய்வது போல் நடிக்காமல் உண்மையிலேயே மிகச் சத்தியமாய் மந்திர ஜபம் செய்வதற்கு முயற்சி செய்.

பழக்கப்படாத மனம், இப்படி உட்காருவதற்குப் பயிற்சி இல்லாத மனம், அலையத்தான் துவங்கும். உனக்கு ஏகப்பட்ட விஷயங்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். நீயும் பார்த்திருக்கிறாய். எனவே உட்கார்ந்து மந்திர ஜபம் செய்வதற் கென்று முயலும்போது, மற்ற எல்லா விஷயங்களும் உன் ஞாபகத்திற்கு வரும். இது இயற்கை. இது பற்றி நீ சற்றும் கவலைப்பட வேண்டாம். அதைரியப்பட வேண்டாம். மறுபடி மறுபடி மனதோடு போரிட்டு அதை மந்திர ஜபத்திற்கு இழுத்து வா. இரண்டு மூன்று நாட்களில் எப்படி மந்திர ஜபத்தோடு இருப்பது என்பது புரிந்துவிடும். புரிய வேண்டும் என்று உள்ளுக்குள் ஒரு பிரார்த்தனை ஏற்படுத்திக் கொள்.

அப்படி மந்திர ஜபத்தோடு இருக்கின்ற சுகம் மிக அலாதியானது. கண்களை மூடி, அந்த வாக்கியத்தின் மீதே அந்த மந்திரத்தின் மீதே மனம் கிடப்பது மிக ஆனந்தமானது. கண்களைத் திறந்த போதும் எதிரே இருக்கின்ற பொருள்கள் எதுவும் கண்ணில் ட ாமல், மனம் சலனமற்று அப்போதும் மந்திர ஜபத்தின் மீது இருக்கின்ற ஒரு நிலைமையும் ஏற்படும். இது இன்னும் சுகமானது. இந்த உலகத்தில் இருந்து கொண்டே இல்லாதிருக்கின்ற ஒரு தன்மையை எளிதில் அடைவாய். எப்போது இந்த விலகிய நிலை ஏற்படுகிறதோ, அப்போது இந்த உலகத்தினுடைய செயல்கள் யாவும் எப்படிப்பட்டவை என்று தெள்ளத் தெளிவாகப் புரியும். இப்படி இருந்தும் இல்லா திருக்கின்ற விலகிய நிலைக்கு மந்திர ஜபம் முதலில் உதவி செய்கிறது.

பட்டு, மறுபடி சொல்கிறேன். இதை ஒருமுறை தான் சொல்ல முடியும். இன்றைக்கு இந்தக் காலை வேளையில் உனக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று என்னுடைய எல்லா சக்தியையும் பிரயோகம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். எல்லா விதமாகவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். திரும்பவும் இன்னொரு முயற்சி இப்படி உன்மீது நான் செய்வேன் என்று எனக்குத் தோன்றவில்லை. செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. எனவே இப்போதே அமர்ந்து கொள். நான் அருகில் இருக்கும்போதே, உள்ளுக்குள் அந்த மந்திரத்தின் மீது இருப்பதற்குத் தெரிந்து கொள். கொஞ்சமும் ஏமாற்றாமல் உண்மையாய் சத்திய சந்தனாய் நான் உனக்கு நல்லது செய்கிறேன் என்பதைப் புரிந்து கொண்டு, என் வார்த்தைகளை வேதவாக்காக எடுத்துக்கொண்டு செயல்படு.

நம்மில் பலபேர் யாரேனும் சொல்லிக் கொடுத்தால், அவரை ஏளனப்படுத்துவது என்ற சுபாவத்திற்கு அடிமையாக இருக்கிறோம். யார் கற்றுக் கொடுத்தாலும் எனக்குத் தெரியும் என்று எகிறி திமிராய்ப் பேசுகிறோம். இதுவும் இயல்பு, நமக்கு சொல்லிக் கொடுக்கப்பட்ட விஷயம். எனவே இந்த ஏளனத்தில் மாட்டாமல் நான் உனக்கு நல்லது செய்கிறேன் என்பதைப் புரிந்துகொண்டு இதில் ஈடுபடு. உட்கார். ''இப்போது, எந்த எண்ணிக்கையும் இல்லாமல் உன்னால் எவ்வளவு மந்திரம் சொல்ல முடியுமோ, அத்தனையும் சொல்லிக் கொண்டிரு'' என்று சொல்லிவிட்டு விலகிப்போய் வேறொரு பக்கம் உட்கார்ந்து மேல் துண்டை விரித்துப் போர்த்திக் கொண்டு அவரும் மந்திர ஜபம் சொல்ல ஆரம்பித்தார்.

பட்டு மஹா கணபதி மந்திரத்தைத் திரும்பத் திரும்ப, திரும்பத் திரும்ப பலமுறை சொல்லத் துவங்கினான். மனம் அலை பாய்ந்தது. ஏதேதோ நினைத்தது. யார் யார் முகமோ வந்து போயிற்று. மனதில் என்னென்ன சம்பவங்களோ ஞாபகம் வந்தன. பசிப்பது போலிருந்தது. வாயில் எச்சில் ஊறியது. முதுகு சொறிந்து கொள்ள வேண்டும், படுத்து கால் நீட்டி சோம்பல்

முறித்துத் தூங்க வேண்டும் என்றெல்லாம் எண்ணங்கள் ஏற்பட்டன. அவன் எது பற்றியும் கவலைப்படாமல் மந்திரத்தின் மீது மனதை தைப்பதற்கு முயற்சி செய்தான்.

அரை மணி நேரம் கழித்து, மனதிலுள்ள ஆரவாரங்கள் குறைந்தன. மனம் மெல்ல கோபமில்லாமல் அமர்ந்தது. பரபரப்பில்லாமல் அடங்கியது. வேறெந்த வேலையும் செய்யாமல் மந்திரம் ஜபிப்பிதையே வேலையாக எடுத்துக் கொண்டது.

இன்னும் அரை மணி நேரம் மெல்ல நகர்ந்தது. அந்த அரை மணி நேரத்தில் சில விநாடிகளைத் தவிர மந்திர ஜபத்திலேயே பட்டுவால் இருக்க முடிந்தது. மெல்ல கண் திறந்து பார்க்க, எதிரே உள்ள காவிரிக் கரையும் தென்னந்தோப்பும் மனிதர் நடமாட்டமும் வெறுமே கண்ணில் பட்டன. அவைகளுக்கு எந்த அர்த்தமும் கற்பிக்காமல், என்ன நடக்கிறது என்று மனம் விசாரிக்காமல் வெறுமே பார்த்துக் கொண்டிருந்தது. அந்தப் பார்வை புதிதாக இருந்தது.

இன்னும் அரை மணி நேரம் தொடர்ந்து செய்ய, அவனுக்கு தூக்கம் வரும் ஒரு உணர்வு ஏற்பட்டது. அவன் கண்களை மூடிக் கொண்டான். பிறகு மெல்லத் திறந்தான். இப்போது கண் திறந்தும் திறக்காமலும் ஒரு அரைகுறை நிலையிலிருந்தது. சற்று சாய்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. ஆனால் சாய்ந்து கொள்ளுதலையும் மறந்துவிட்டு, மறுபடியும் மந்திரத்தின் மீதே இருந்தான். அவன் உடம்பு முழுவதும் மந்திரம் சுற்றிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

மனதுக்குள் ஏதோ ஒரு இடத்தில் அமர்ந்து பொங்கிப் பொங்கி வருவது போல் ஒரு நிலை ஏற்பட்டது. தன்னைச் சுற்றி எல்லா இடங்களிலும் இந்த மந்திர ஜபமே இருப்பது போல் ஒரு அனுபவம் கிடைத்தது.

இன்னும் தொடர்ந்து செய்ய, ஒரு கிறுகிறுப்பான சற்று அவஸ்தைமிக்க ஒரு நிலையை பட்டு அடைந்தான். எழுந்து

உதறி ஓட வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அப்படி ஓட வேண்டும் என்றால், அந்த மந்திரமே தன்னை விரட்டட்டும் என்று அந்த மந்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மந்திர ஜபம் செய்வது நின்று போயிருந்தது. ஆனால் மந்திர ஜபம் அருகே இருந்தது. வாய் முணுமுணுக்கவில்லை. மனம் திரும்பத் திரும்ப சொல்லவில்லை. ஆனால் மந்திர ஜபம் மிக நெருக்கமாய் அவனுக்கு அருகே அவனோடு கை கோர்த்து, ஒரு சிநேகிதன் போல காவிரியை எந்தக் காரணமுமின்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அவன் தலை இடது பக்கம் சாய்ந்திருந்தது. விநோதமான சிரிப்பு அவனிடமிருந்து வெளிப்பட்டது. கண்கள் கனத்துக் கிடந்தன. கன்னத்தில் ஒரு பரபரப்பு பரவிக் கிடந்தது. உடம்பு முழுக்க ஒரு இளம் சூடு விரவியிருந்தது. கால்களும் வலுவில்லாமல் இருந்தது. மனதில் ஒரு நிம்மதி படர்ந்திருந்தது.

மெல்ல அவனை யாரோ தொட்டார்கள். நிமிர்ந்து பார்த்தான். குப்புசாமி வாத்தியார் அவனையே பார்த்தார்.

''சுகமா, சுகம்தானா'' என்று இரண்டு முறை பேசினார்.

பட்டு தலையசைத்து, ''ஆமாம்'' என்று சொன்னான்.

''கடவுள் கிருபை. இறைவனுடைய அனுக்கிரகம், முன்பு செய்த மந்திர ஜபங்களின் பலன். நீ ஆரம்பத்திலிருந்து கற்றுக் கொள்ளவில்லை. பாதியிலிருந்து ஆரம்பித்திருக்கிறாய். இப்படி எல்லோராலும் முடியாது. இது விட்ட குறை, தொட்ட குறை. உனக்குக் கற்றுக் கொடுக்கும் போதே ஒரு நல்ல மாணவனுக்குக் கற்றுக் கொடுக்கிறோம் என்று எனக்குத் தோன்றி விட்டது.

இன்று காலையிலிருந்தே ஒரு நல்ல வேலை செய்யப் போகிறோம் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருந்தது. அது உண்மையாகி விட்டது. மிகவும் சந்தோஷம், போதும் எழுந்திரு. இதை மறுபடியும் சிறிது நேரம் கழித்துச் செய். ஒரே இருப்பாக

இருந்து விட வேண்டாம். மரத்துப் போய் விடும். எழுந்து சற்று உலவி விட்டு வேறு காரியங்களில் மனதை ஈடுபடுத்தி விட்டு சிறிது உணவெடுத்துக் கொண்டு ஓய்வெடுத்துக் கொள். உணவு செரிமானமானவுடன், வயிறு காலியானவுடன் மறுபடியும் உட்கார்ந்து விடு. அதாவது மாலை நான்கு மணிக்கு மறுபடியும் காவிரிக் கரைக்கு வா. யாரும் இல்லாத இடமாய்ப் பார்த்து உட்கார்ந்து கொள். நான், நீ உட்கார்ந்த பிறகு உன்னைத் தேடிகொண்டு வருகிறேன்'' என்று சொன்னார்.

அவன் தலையசைத்தான்.

''ஏதேனும் சொல்ல வேண்டுமா?'' என்று அவனைப் பார்த்து மறுபடியும் குப்புசாமி வாத்தியார் அன்போடு கேட்டார்.

''இல்லை'' என்று சொன்னான்.

''எப்படியிருந்தது?'' குப்புசாமி வாத்தியார் தலையைத் தடவி கொஞ்சினார்.

''நீங்க சொன்னது சரி, இந்த மாதிரி மந்திர ஜபம் இதுக்கு முன்னாடி நான் எங்கேயோ பண்ணியிருக்கேன். எப்பவோ பண்ணியிருக்கேன். நீங்க கத்துக் கொடுத்த போது புரியாத மாதிரி இருந்தது. செய்ய ஆரம்பிச்சதும் புரிஞ்சிடுத்து. நான் இன்னிக்கு மறுபடியும் நிறைய மந்திர ஜபம் செய்வேன். செய்யணும்.''

குப்புசாமி வாத்தியார் அவனை அணைத்துக் கொண்டார். ''மந்திரம் உள்ளே இருந்தால் வார்த்தைகள் சத்தியமாய் வெளி வரும். உன்னைமீறி உன் வார்த்தைகள் வெளி வருகின்றன. வா'' என்று அணைத்தவாறே அழைத்துக்கொண்டு அப்பாவிடம் போனார். ''அப்பாவை நமஸ்காரம் செய்'' என்றார். பட்டு அப்பாவை நமஸ்காரம் செய்தான்.

''அற்புதம். மிக நல்ல ஒரு மாணவனை எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இது ஈஸ்வர சங்கல்பம். மிக சந்தோஷமாக கற்றுக் கொடுத்தேன். முழுமையாய் குழந்தை கற்றுக் கொண்டான். உங்களுடைய பூஜாபலன் உங்கள்

குழந்தை மீது இறங்கியிருக்கிறது. மாலையிலும் அவனை ஜபம் செய்யச் சொல்லியிருக்கிறேன். அவனை மனம் குளிர ஆசீர்வதித்து அனுப்பி வையுங்கள்'' என்று சொன்னார்.

அப்பாவும், அம்மாவும் மனம் குளிர்ந்து கனிவாக அவனைப் பார்த்தார்கள். அம்மா அவனை அணைத்துக் கொண்டு நெற்றியில் முத்தமிட்டாள். வீட்டுக்கு உள்ளே கூட்டிக் கொண்டு போய் அவன் கையில் பெரிய குஞ்சா லாடுவை வைத்தாள். ''சாப்பிடு'' என்று சொன்னாள்.

அந்த நேரம் இவனுக்கு ஒரு இனிப்பு தேவைப்பட்டது. அவன் ஆசையோடு அதை விழுங்கினான்.

அன்றைக்கு விழுந்த நெருப்பு இது. நல்ல நேரத்தில் நல்ல ஆசிரியரால் சொல்லிக் கொடுக்கப்பட்ட மந்திரம். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்று பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பாகத் தாண்டுவது போல மந்திர ஜபங்களும் ஒவ்வொன்றாக இடையறாது கற்றுக் கொண்டு வந்தான். அடுத்தது பாலாதிரிபுர சுந்தரி கற்றான். பிறகு துர்க்கை மந்திரம் செய்தான், பிறகு நாராயண மந்திரம் கற்றான். பிறகு பலா, அதிபலா கற்றான். பஞ்சதசி கற்றுக் கொண்டான். நடுவே சில உக்கிரமான தேவதைகளின் மந்திரங்களையும் அறிந்து கொண்டான். அவைகளையும் பல லட்சங்கள் உருப்போட்டான். பள்ளிக்கூடம் போவது, படிப்பது, சிறிது நேரம் விளையாடுவது, மற்ற நேரங்களில் மந்திர ஜபம் செய்வது என்று வாழ்க்கை மாறிப் போயிற்று.

அப்பொழுதெல்லாம் படிப்பு இத்தனை சுமையில்லை. ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகவியல் என்று மொத்தம் ஐந்து பாடங்கள் தான். அதனால் ஒரு முறை படித்தாலே நன்கு பதிந்து போக, எழுபதும், எண்பதும் எளிதாக வாங்க முடிந்தது. எண்பது வாங்கினாலே எல்லோரும் கொண்டாடி னார்கள். இப்பொழுது போல் தொண்ணூற்றெட்டு தொண்ணூற் றொன்பது என்று அலைய வேண்டியது இல்லாமல் இருந்தது.

எனவே படிப்பு சுமையில்லாத காலத்தில் அவன் மந்திர ஜபம் என்ற சுமையை வலிய தோளில் ஏற்றிக் கொண்டு, அதில் ஒரு பெரிய வட்டம் ஏற்படுத்தினான்.

அவனுடைய திருமணத்தின் போது ஊர் முழுவதும் அவனது கட்டுக் குடுமியையும், பரந்த மார்பையும் உயரத்தையும் விரல்களின் நீளத்தையும் பார்த்து வியந்தது. மன்மதன் போல இருக்கிறான் என்று கொண்டாடியது. மனைவியும் நல்ல குடும்பத்திலிருந்து வந்தவள் என்பதால், மந்திர ஜபம் செய்து மனம் அடங்கிய மாப்பிள்ளை நமக்குக் கிடைத்திருக்கிறான் என்று மாமனார் நினைத்ததால், இல்லற வாழ்க்கையும் பல்வேறு சௌகரியங்களோடு நிதானமாய் நகர்ந்தது. பெரிய வசதிகளை மனம் நாடவில்லை. இருந்த வசதிகளை நன்கு அனுபவிக்க மந்திரஜபம் சொல்லிக்கொடுத்தது. அனுபவிக்கும் போது முழுமையாய் இருக்கவும், அனுபவித்த பிறகு முற்றிலும் மறக்கவும் கூடிய குணம் மந்திர ஜபம் செய்வதால் ஏற்பட்டது.

"இனிமே நீ கற்றுக் கொடுக்க ஆரம்பிக்கலாம்டா. நிறைய பேருக்குச் சொல்லிக் கொடு. தகுதி பார்த்து சொல்லிக் கொடு. தேவைப்பட்டவாளுக்கு சொல்லிக் கொடு. ஜாக்கிரதையா பார்த்துப் பார்த்துச் சொல்லிக் கொடு" குப்புசாமி வாத்தியார் அவனை குருவாக உயர்த்தினார். பல சபைகளுக்கு அவனை அழைத்துப் போனார். மந்திர ஜபம் கற்றதால் சிறிய வேத பாடங்களும் வழக்கமாய் எல்லோரும் சொல்கின்ற பூஜா மந்திரங்களும் எளிதில் மனப்பாடம் செய்ய முடிந்தது. மந்திர ஜபம் செய்பவர்களுக்கு சபையில் தனிமரியாதை தரப்பட்டது.

"அந்த நாலு பேரும் இங்கே ஹோமம் நடக்கும் போது தனியே ஒரு ஓரமா உட்கார்ந்து பஞ்சதசி மந்திரம் சொல்வா. ஹோமம் ஆரம்பிக்கிற நேரமும் அவா மந்திர ஜபம் ஆரம்பிக்கிற நேரமும் ஒண்ணா இருக்கும். ஹோமம் பூர்ணாஹூதி ஆரம்பிக்கிற வரையில் அவா மந்திர ஜபம் செய்வா.

பூரணாஹுதியின் போது அவாளும் விழுந்து நமஸ்காரம் பண்ணுவா. அவர்களுக்கு தனியா தட்சிணை தந்துடணும்'' என்று சொன்னார்கள்.

ஒருமுறை இப்படி ஏற்பாடு செய்பவருக்கு இதுபற்றி சந்தேகமும் வந்தது.

''ஒண்ணுந்தெரியாத நாலு ஐயரை ஓரமா உட்கார வைத்து அவங்களுக்கும் துட்டு தரணும்னு சொல்றீங்களா'' என்று கேட்க, குப்புசாமி வாத்தியார் தன் சீடர்களோடு வெளியேறினார்.

''அப்படி ஒண்ணும் காசு சம்பாதிக்கணும்னு அவசியமில்லே, ஓய். நான் எங்க போய் உட்கார்ந்தாலும் தானா தட்சிணை கிடைக்கும். உமக்குத் தெரியலை. கொடுப்பினை இல்ல'' என்று வெளியேற, வைதீகர்கள் கூட்டம் பின்னால் ஓடி வந்தது. சுற்றி வளைத்துக் கொண்டது. கைகளை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டது.

''அவருக்குத்தான் தெரியலை. அபத்தமா பேசறார்னா. நீங்க பெரியவா இப்படி வேகமா நடந்துக்கலாமா, அவன் தட்சிணை தராட்டி என்ன. நாங்க தர்றோம். எங்க பங்கிலேர்ந்து தர்றோம். மந்திர ஜபம் சரியா செய்யலைன்னா, ஹோமம் சரியா நடக்குமா, உருட்டி விட்டுறாதா. என்ன விளையாட்டு இது. நீங்க எப்படி அந்த மாதிரி கோவிச்சுண்டு போகலாம். உங்களை நாங்கதானே கூப்டுண்டு வந்தோம்'' என்று அவரை அழைத்துப்போய், ''அப்பா தட்சிணை வேண்டாம். நாங்க பாத்துக்கறோம்'' என்று அவனிடம் சொல்ல, அவன் லேசாய் கலவரமானான்.

அவர்களை மறுபடியும் உட்கார வைத்து, மாலை மரியாதை செய்து மந்திர ஜபம் செய்யும்படி வைதீகர்கள் கூட்டம் வேண்டிக் கொண்டது. மந்திர ஜபம் செய்ததும் தட்சிணை வாங்க குப்புசாமி வாத்தியார் மறுத்து விட்டார். வைதீகர்கள் மிக மரியாதையாய் அந்த தனவந்தன் அவர்களுக்கு என்ன

தருவானோ அதே விதமான தட்சிணையை குப்புசாமி வாத்தியாருக்கும், பட்டுவுக்கும் தர, அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் காசு வாங்கிய அதே க்ஷணம் அந்த மண்டபத்தின் மூலையில் அறுபது வயது கிழவி அந்த தனவந்தனின் உறவுக்காரி திடீரென்று எழுந்தாள். கையிலிருக்கிற தாம்பாளத்தை விசிறி எறிந்தாள்.

''தொலைச்சுடுவேன். கொன்னு குழி வெட்டிடுவேன், என்னடா நினைச்சிண்டிருக்கே. எச்சக்கலை நாயே. தட்சிணைக்கு சுணங்கற நீ ஹோமம் எதுக்குடா பண்றே?'' என்று அந்த தனவந்தனை வாய்க்கு வந்தபடி ஏசினாள். தனவந்தன் நடுங்கினான்.

''நான் உங்க அம்மா பேசறேன். கொண்டு வா. காசைக் கொண்டு வா'' என்று சொல்ல, அந்த தனவந்தன் காசு இருக்கின்ற தோள் பையை நீட்ட, அந்தக் கிழவி அதைப் பிடுங்கி உள்ளுக்குள் கை விட்டு, கொத்துக்காசை எடுத்துக் கொண்டு போய் குப்புசாமியின் காலடியில் வைத்தாள். கை கூப்பினாள்.

''மன்னித்துக் கொள்ள வேண்டும்... இவனை எட்டி உதைத்து இவன் பாபத்தைப் போக்க வேண்டும்'' என்று சொன்னாள்.

குப்புசாமி வாத்தியார் மெல்ல அவன் முதுகில் இரண்டு முறை அடித்து தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டார். காலில் விழுந்த தட்சிணையை எடுத்து வைதீகர்களிடம் கொடுத்து விட்டு, ''போதும்... இதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று எவ்வளவு இருந்தது என்ற எண்ணிக்கை கூட தெரியாமல் கொடுத்து விட்டு வெளியே வந்தார். இந்த சம்பவம் ஊரில் பெரும் பரப்பை ஏற்படுத்தியது.

மந்திர ஜபம் என்பது மிக முக்கியம். வேதமறிந்த வைதீகர்களே அவசியம் என்று கருதுகிற விஷயம். சடங்குகள் முக்கியமென்றாலும், அந்த சடங்குகள் நடக்கிற போது மந்திர

ஜபம் செய்து தேவதையைக் குளிரச் செய்தால், அந்த தேவதை அங்கு பிரசன்னமாகி, அந்த ஹோமமோ, பூஜையோ சிறப்பாக நடக்க உதவி செய்வாள் என்று பேசிக் கொண்டார்கள்.

''பட்டு, இவன் என் அக்கா பிள்ளை. என் மருமகன், கொஞ்சம் ரெட்டை வாலு. ஒரு இடத்தில் உட்கார மாட்டேங்கறான். இவனுக்கு மஹாகணபதி மந்திரமும், பாலா திரிபுர சுந்தரியும் சொல்லிக் கொடு.'' குப்புசாமி வாத்தியார் சீடன் பட்டுவிடம் விண்ணப்பித்தார். ''இவன் கிட்டே வேகம் இருக்கு. ஆனா விவேகம் இல்ல. இவன் கிட்டே வலுவிருக்கு. ஆனா உபயோகப்படுத்தத் தெரியலை. ரெண்டுங்கெட்டானா வளர்ந்துடுவானோன்னு கவலையா இருக்கு. இவன் அம்மாவும் கவலைப்படறா. இவனைச் சரிபண்ண வேண்டியது உன் பொறுப்பு. இவனுக்கு மந்திர ஜபம் சொல்லிக் கொடுத்து, இவனுக்கு அருகே நீயும் செய்து, இவனை ஜபத்தில் உட்கார வைத்தால் இவன் உருப்பட்டு விடுவான் என்று தோன்றுகிறது. எனக்கு தயவு செய்து இந்த உதவியைச் செய். எனக்கு இவனைப் பார்க்கும் போதெல்லாம் என்னுடைய தமக்கையும், அவள் பட்ட கஷ்டங்களும் நினைவுக்கு வருகிறது. எனவே என்னால், இவனை வலுவாக உட்கார வைக்க முடியவில்லை. பந்தம் இழுக்கிறது. சொந்தம் ஆட்டுவிக்கிறது. எனவே இந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். தயவுசெய்து இவனுக்கு மந்திர ஜபம் சொல்லிக் கொடுத்து, இவனுக்கு அருகே மந்திர ஜபம் செய்து இவனை நெறிப்படுத்து'' என்றார்.

குப்புசாமி வாத்தியாரின் கட்டளையை ஏற்றுக் கொண்டு மிக எளிதாக அவருடைய மருமகனுக்கு பட்டு மந்திரம் சொல்லிக் கொடுத்தார். அவனுக்கு திரும்பத் திரும்ப இதனுடைய மகிமையை அழகாக விளக்கினார். அவனுடைய குதியலான மனதிற்குப் புரியும்படி பல்வேறு யுக்திகளுடன் கதைகளுடன் விளக்கிச் சொன்னார். ஆரம்பத்தில் ஆட்டம் போட்ட அந்தக் குழந்தை, மெல்ல மெல்ல ஒரு நிலைக்கு வந்தான். புரிந்து கொண்டான். ஜபத்தில் உட்கார்ந்தான். மற்ற

மாணவர்களைக் காட்டிலும் இன்னும் ஆழமாகவும், கனமாகவும், அமைதியாகவும் வெகுநேரமும் மந்திர ஜபம் செய்யத் துவங்கினான். குப்புசாமி வாத்தியார் மனமகிழ்ந்தார். பட்டுவைக் கொண்டாடினார்.

''உனக்கு சொல்லிக் கொடுக்க தெரிஞ்சிடுத்துடா. நீ நல்ல வாத்தியாராயிட்ட. இனிமே உன்னை வெறுமே பட்டுன்னு நான் கூட கூப்பிடக்கூடாது. ஊர்ல எல்லாருக்கும் சொல்லிடறேன். இனிமே நீ வெறும் பட்டு இல்ல. பட்டு வாத்தியார். உன்னை அப்படித்தான் கூப்பிடணும்'' என்று பதவி உயர்வு கொடுத்தார்.

காவிரிக் கரையிலுள்ள அந்த செழிப்பான கிராமம் பட்டுவை, பட்டு வாத்தியார் என்று அழைக்கத் துவங்கியது.

குப்புசாமி வாத்தியார், பட்டு வாத்தியாரிடம் சொன்னது போலவே நல்ல சீடர்கள் வரும்போது மனதிற்குள் ஒரு பரபரப்பு ஏற்படுகிறது. விடியும் பொழுதே இன்று யாரோ நல்ல ஆளா சந்திக்க போகிறோம். நல்ல விஷயம் செய்யப் போகிறோம் என்று ஒரு எண்ணம் வந்து விடுகிறது. அந்த எண்ணம் சுகமாக இருக்கிறது. யார் என்று ஆவல் கிளம்புகிறது. அட இன்னும் காணோமே, என்று லேசாக பரபரப்பு ஏற்படுகிறது. எல்லாரையும் 'நீயா' என்று ஊடுருவிப் பார்க்கிறது. அதில் பலரைக் கழித்து, இவன்தான் இவனுக்காகத்தான் காத்திருக்கிறேன் என்று சரியாக விரல் சுட்டுகிறது.

பட்டு வாத்தியார் அன்று காலை கோதுமைக் கஞ்சி குடித்துவிட்டு, சாய்வு நாற்காலியில் சாய்ந்து காலைத் தூக்கி ஸ்டூலில் போட்டபடி வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தார். மனம் மந்திர ஜபத்தோடு ஒன்றிக்கிடந்தது.

கால் மடித்து உட்கார வேண்டும், முதுகு நேரே நிற்க வேண்டும் என்ற மந்திர ஜபத்திற்குரிய விதிமுறைகள் எல்லாம் பழகிப் பழகி ஒரு உச்சிக்குப் போன பிறகு தளர்ந்து விடுகிறது. எந்த நிலையிலிருந்தாலும், எந்த இடத்திலிருந்தாலும் மனம் மந்திரத்திற்குப் போக பழக்கப்பட்டு விட்டது.

பட்டு வாத்தியார் கண்கள் மூடியும், மூடாமலும் வெறுமே வாசலைப் பார்த்தவாறு மந்திர ஜபத்தோடு கிடக்க, வாசல் எதிரே ஒரு மனிதன் வந்து நின்றான்.

''யாரு?'' பட்டு வாத்தியார் குரல் கொடுத்தார்.

''என் பேரு சீனிவாசன்'' வந்தவன் உள்ளுக்குள் காலடி எடுத்து வைத்து நேராக நின்று கை கூப்பினான்.

பின் பக்கமும் வெளிச்சமாக இருக்க முன்புறம் ஆள் வந்து நிற்க, அவன் கைகூப்பி நின்றது ஒரு சிலை நிற்பது போல் இருந்தது.

''உள்ள வாங்கோ'' பட்டு வாத்தியார் குரல் கொடுக்க, அவன் நிதானமாய் உள்ளே வந்தான். நேரே நின்றான்.

''என் பேர் சீனிவாசன். நான் மயிலாப்பூர்லர்ந்து வர்றேன். சிமெண்ட் கம்பெனில கிளார்க்கா உத்யோகம் பார்க்கறேன். உங்களைப் பத்தி கேள்விப்பட்டிருக்கேன். உங்களை வந்து பார்க்கணும்னு ஒரு வருஷமா ஆசை. இன்னைக்கு காத்தால ஒரு உந்துதல், உங்களைப் பார்த்தே ஆகணும்னு ஒரு வேகம், கனவு மாதிரி ஏதோ ஒரு எண்ணம், அதனாலே உங்களைப் பாக்க வந்திருக்கேன்.''

''அப்படியா. உக்காருங்கோ, காபி சாப்பிடறேளா.''

அவன் பதில் சொல்லாதிருந்தான்.

''ஏதாவது குடிக்க கொண்டா'' அவர் பின்பக்கம் திரும்பிக் குரல் கொடுத்தார்.

''அரை டம்ளர் போதும்'' அவன் தொடர்ந்து குரல் கொடுத்தான்.

வேண்டாம், மாட்டேன் என்றெல்லாம் சொல்லாமல், வேண்டும் என்றும் சொல்லாமல், வெறுமே நின்றதும், பிறகு பானத்திற்கு உத்தரவிட்டதும், அதற்கு அளவு சொன்னதும் பட்டு வாத்தியாருக்கு மெல்லிய சிரிப்பையும், சந்தோஷத்தையும் கொடுத்தது. அவனை உற்றுப் பார்க்க ஆரம்பித்தார். இதுதான்

போலியற்ற ஒரு நிலை. அவன் கண்களை ஆழ்ந்து ஊடுருவினார். அவன் அவரையே வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன வேணும்?"

"மந்திர ஜபம் கத்துக்கணும்."

"அப்படியா. கத்துக்கச் சொல்லி யார் சொன்னா?"

"யாரும் சொல்லலை. உள்ளே தோணித்து."

"எங்க இந்த எண்ணம் உற்பத்தியாச்சு, எதனாலே தோணித்துன்னு சொல்ல முடியுமா?"

"ஒரு கதை படிச்சேன். அதில் இது பத்தி விசேஷமா போட்டிருந்தது. அதனால இத கத்துக்கணும்னு ஆசை அப்ப தோணித்து. கதை படிச்சு ஒன்றரை வருஷம் ஆச்சு. நான் வெறுமனே இதைக் கத்துக்கணும், கத்துக்கணும்னு நினைச்சிண்டிருந்தேனே தவிர, யார் கிட்ட போய் கத்துக்கறது, என்ன கத்துக்கறதுன்னு தெரியாம இருந்தது."

"ஓஹோ இப்ப இரண்டுமே தெரிஞ்சிடுத்தோ" பட்டு வாத்தியார் கேட்க, எதிரே இருந்தவன் மௌனமாக இருந்தான்.

"உங்களைத்தான். இப்ப ரெண்டும் தெரிஞ்சிடுத் தோன்னு கேக்கறேன்.

"ஆமாம்" எதிரே இருந்தவன் தீர்க்கமாய் பதில் சொன்னான்.

பட்டு வாத்தியார் கூர்மையானார்.

"என்ன தெரிஞ்சுது?"

"உங்ககிட்டே வந்து கத்துக்கணும்னு தெரிஞ்சுது."

"எதனால்?"

"நேத்து சாயந்திரம் எனக்கு அறிமுகமே இல்லாத ஒருத்தர் என்கிட்டே வந்து, மாம்பலத்துல பட்டு வாத்தியார்னு ஒருத்தர்

இருக்கார். ரொம்ப அற்புதமான மனிதர். நிறைய மந்திர ஜபம் சொல்லி முழுக்க முழுக்க தன்னையே மந்திரமயமா மாத்திண்டவர். அவரண்ட போய் மந்திரம் கத்துக்கறது பெரிய விசேஷம். ரொம்ப பாத்துதான் சொல்லித்தருவார், அப்படின்னு சொன்னார்.''

''யாரது?''

''கோதண்டபாணியாம் மாம்பலத்துல வீடாம்.''

''எந்த கோதண்டபாணி, எப்படி இருந்தான்?''

''உயரமா, தலை கொஞ்சம் பரட்டையா இருந்தது.''

''ஓ அவனா, திடீர்னு அவன் உன்கிட்ட வந்து இதைச் சொல்வானேன்.''

''அதான் எனக்கும் தெரியலை.''

''எந்த இடத்துல சொன்னான்?''

''கபாலி கோயில்ல, சந்நிதி முன்னாடி நின்று ஓம் சிவாய நமஹ, ஓம் சிவாய நமஹன்னு சொல்லிண்டிருந்தேன். பக்கத்துல வந்து நின்று என்னையே பார்த்தார். 'தினம் இங்கே வந்து இப்படி சொல்வேள் இல்ல' அப்படின்னு கேட்டார் 'ஆமாம்'னு சொன்னேன். பட்டு வாத்தியார்னு ஒருத்தர் மாம்பலத்துல இருக்கார்னு ஆரம்பிச்சு உங்களைப் பத்தி சொன்னார்.''

''சரி வெறுமே 'சிவாய நமஹ'ன்னு சொல்லிண்டிருக் கானே, இவனுக்கு மந்திர ஜபம் கத்துக் கொடுக்கலாம்னு நினைச்சிருப்பான். நம்ம கோதண்டபாணிடா. பரட்டை'' என்று பட்டு வாத்தியார் தன் மகனை நோக்கிப் பேசினார். மகன் தலையசைத்தது சீனிவாசனுக்குப் புரிந்தது.

''அப்புறம் என்ன கத்துக்கணும் அப்படின்னு தெரிஞ்சுடுத்துன்னேளே. அது என்ன?''

எதிரே இருந்தவன் தயங்கினான்.

''சொல்லுங்கோ. என்ன கத்துக்கணும்னு தோணித்து?''

''இதை சொல்லலாமான்னு தெரியலை. சொல்றதுல தப்பிருந்தா தயவு செய்து மன்னிச்சுக்கணும். அகம் பாவத்தாலேயோ, ஆத்திரத்தினாலேயோ இதைச் சொல்லலை. எனக்கு உள்ளுக்குள் ஏற்பட்ட ஒரு எண்ணத்தினுடைய விளைவாகத்தான் இதைச் சொல்றேன். எனக்கு உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரம் கத்துக்கணும்னு ஆசை.''

அந்த வீடு சட்டென்று சலனமில்லாமல் அமைதியானதை சீனிவாசன் உணர்ந்தான். வீட்டிலுள்ள எல்லோரும் வந்து அவனை எட்டிப் பார்த்து விட்டுப் போனார்கள். அந்த வீட்டுப் பெண்களும் அவனை நின்று கூர்மையாய் கவனித்து விட்டு நகர்ந்தார்கள். பட்டு வாத்தியார் சலனமில்லாமல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். மகன் அவர் அருகே வந்து உட்கார்ந்து கொண்டான்.

''சொல்லு'' பட்டு வாத்தியார் மகனைப் பார்த்துக் கட்டளையிட்டார்.

''உன் பேரென்ன சொன்னே?''

''சீனிவாசன்.''

''கல்யாணமாயிடுத்தா.''

''ஆயிடுத்து. ஒரு பையன், ஒரு பொண்ணு.''

''பையனுக்கு என்ன வயசு?''

''பத்து வயசு.''

''பெண்ணுக்கு?''

''ஆறு வயசு.''

''சரி. அப்பா, அம்மா இருக்காளா.''

''அப்பா இல்லே. அம்மா இருக்கா. தங்கையோட இருப்பா, பிறகு என் கூட இருப்பா. ரெண்டு இடத்துலேயும் மாறி மாறி இருந்துண்டிருப்பா.''

''சரி, உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரம் கொஞ்சம் கஷ்டமானது. அது ஒரு உக்கிரமான தேவதை உபாசனை.

சட்டுன்னு அதை யாரும் சொல்லித்தர மாட்டா. அதை சொல்கிற போதே சுற்றிலும் வேகமான மாற்றங்கள் நிகழும். அந்த தேவதை ஒருவேளை நெருங்கி வந்து விட்டால், அதை உங்களால தாங்க முடியாம போயிடும். அதனால அதைக் கத்துக்காம வேறு ஏதாவது கத்துக்கலாம். மஹாகணபதி மந்திரம் தெரியுமா?''

''தெரியாது. பதினோரு வயசுல பூணூல் போட்ட போது காயத்ரி மந்திரம் கத்துண்டேன். எப்பவாவது தான் சொல்வேன். வேலைக்குப் போகணும்னு ஒரு சாக்குனால சந்தியா வந்தனமும், மந்திர ஜபமும் சரியா பண்றதில்லே...''

''ஏன் உச்சிஷ்ட மஹா கணபதி பண்ணணும்னு தோணித்து?''

''கனவு வந்தது.''

''எப்போ?''

''நேத்து ராத்திரி.''

''எத்தனை மணிக்கு?''

''ரெண்டு மணிக்கு.''

''என்ன கனவு?'' பட்டு வாத்தியார் கேட்க, அவன் கண்களை மூடிக் கொண்டான்.

''யானை என் கனவுல வந்தது.''

''நல்லதுதானே. யானை வந்தா நல்ல கனவுன்னு தான் அர்த்தம்.''

''யானை நடந்து வந்து தும்பிக்கையாலே என் கழுத்தை இறுக்கி நெரிக்கிறது. சுவத்தோடு வைக்கறது. 'நாளைக்கு கார்த்தாலே உச்சிஷ்ட மஹா கணபதி மந்திரம் கத்துக்கலை அடிச்சுக் கொன்னுடுவேன். போ போய் கத்துக்கோ. எத்தனை தடவை சொல்றது. உனக்கு அறிவில்லை' அப்படின்னு கத்தறது.''

''இதுக்கு முன்னாடி இந்த கனவு வந்திருக்கா சீனிவாசன்.''

''வந்திருக்கணும்னு இப்ப தோன்றது. அதை நான் மறந்து போயிருக்கேன். அல்லது அலட்சியம் பண்ணியிருக்கேன். எனக்கு யானைக் கனவு அடிக்கடி வரும். ஆனால் இப்படி ஒரு கனவு கண்டதா தெளிவா ஞாபகம் இல்ல. உச்சிஷ்ட மஹாகணபதி என்கிற வார்த்தையும் நான் கேள்விப் பட்டதில்லை. ரொம்பத் தெளிவா, 'உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரம் கத்துக்க, இல்லை அடிச்சுக் கொன்னுடுவேன்' அப்படின்னு ரொம்ப ஆரவாரமா, ரொம்ப கோவமா, ரொம்ப நிஜமா தமிழ்ல யானை பேசினது.

எனக்கு அது என்ன பேசறதுங்கறதைவிட அட, யானை தமிழ்ல பேசுதே அப்படின்னு ஒரு அதிசயம். நான் யானையை அதிசயத்தோட, சிரிப்போட பார்க்க. அது என்னை உலுக்கி, மண்டைய சுவத்துல இடிக்கறது. சிரிக்கிறதை நிறுத்துங்கற மாதிரி இருந்தது. நான் சிரிப்பை நிறுத்திட்டு பயத்தோட பார்த்தேன்.

மறுபடியும் அதையே சொல்றது, 'உடனே போய், உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரம் கத்துக்க, இல்ல அடிச்சு கொன்னுடுவேன்' அப்படின்னு திரும்பவும் சொல்ல, நான் 'சரி'ன்னு என்னை மீறி சொன்னேன். உடனே யானை பின்னாடி நாலடி நகர்ந்து. அப்படியே வட்டமடிச்சு நடந்து போயிடுத்து. ரொம்பத் தூரம், யானை போற வரைக்கும் யானையையே பாத்துண்டிருக்கேன். அவ்வளவுதான். கனவு கலைஞ்சிடுத்து.''

''சரி காபியைக் குடி. நான் உத்தரவு கேட்டுண்டு வரேன். உள்ளுக்குள்ளே போய் அம்பாள்ட்ட உனக்கு மந்திர ஜபம் கத்துக்கொடுக்கலாமான்னு கேக்கறேன். அவ சரின்னு சொன்னா, கத்துக் கொடுக்கறேன். இல்லைன்னா உன்பாடு அந்த யானை பாடு.''

அவர் எழுந்து நின்றார். பின் பக்கம் போய் கைகால் கழுவிக் கொண்டார். முகம் அலம்பிக் கொண்டார். பூஜையில் அமர்ந்தார். அமர்ந்த சில விநாடிகளில் சொல்லிக் கொடு என்று அவருக்கு

உள்ளுக்குள் குரல் கேட்டது. சட்டென்று கண் விழித்தார். பூக்களை மேருவின் மீது போட்டார். குங்குமம் எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டார். ஒரு சிட்டிகை குங்குமம் எடுத்துக் கொண்டு சீனிவாசனிடம் வந்தார். அவன் உள்ளங்கை நீட்ட, அந்த உள்ளங்கையில் குங்குமம் போட்டார். சீனிவாசன் அந்த குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டான்.

''சரி வா'' என்று அவர் அவனை கூடத்தின் நடுவே அழைத்தார். உட்கார வைத்தார். பிராணாயாமம் சொல்லிக் கொடுத்தார். தலையில் மெல்லியதாய் குட்டிக் கொள்ளச் சொல்லிக் கொடுத்தார். அதன் தாத்பரியத்தை விளக்கினார். உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரம் காதில் ஓதினார்.

## 2

அவள் இறந்து போய் ஆயிரம் வருடங்களாகி விட்டன. அவள் தன்னுடைய உடலை தன் இருபத்து ஐந்தாவது வயதில் மெல்ல உகுத்தாள். இறந்த பிறகும் அவள் உயிரோடு இருப்பது போலவே பலருக்குத் தோன்றியது.

கிணற்றுக்குள் ஒருநாள் முழுவதும் பொலிவாக இருந்த பிறகே அவள் உடம்பு மாறத் துவங்கியது. அவள் தன் உடம்புக்கு அருகே இருந்து அதை வியப்புடனும் ஆதரவுடனும் பார்த்தாள். அவள் பார்த்த அந்த இருபத்து நாலு மணி நேரம், உடம்பு பூவாய் மணம் வீசிக் கொண்டிருந்தது. அவள் பார்த்துக் கொண்டிருந்த அந்த நேரங்களில் தன் உடம்பு ஈடுபட்ட காரியங்களெல்லாம் அவள் நினைவுக்கு வந்தன. இருபத்தைந்து வயது வாழ்க்கையின் சந்தோஷங்களும், துக்கங்களும் அவளுக்கு ஞாபகம் வந்தன. அந்த ஞாபகத்தால் துக்கமும், சிரிப்பும் அவளுக்கு மாறி மாறி ஏற்பட்டன.

தென்னைகள் அதிகம் சூழ்ந்த கிராமத்தில் அவள் பிறந்து வளர்ந்தாள். ஒரு நதியிலிருந்து பிரிந்த இரண்டு குளங்களைத் தாண்டி வருகின்ற ஓடையொன்று அவள் வீட்டுக்கு அருகே இருந்தது. செங்கழுநீர் ஓடை என்று அந்த ஓடைக்கு அழகான தமிழ்ப் பெயர் இட்டார்கள். அந்த ஓடையின் நீர் சுத்தமாக இருந்தது. காடுகள் அதிகமிருந்ததால் அடிக்கடி மழை பெய்தது. மழையும் பலமாக இருந்தது. பெய்கிற மழை வேகமாகவும், தாராளமாகவும் இருப்பதால் நீர் நிலைகளில் தண்ணீர் நிரம்பி இருந்தது. பூமியிலிருந்து ஊறும் தண்ணீர் நீர் நிலையின் துவாரங்களிலிருந்து ஓடைக்கு வழிந்து கடல் நோக்கிப் போயிற்று. அப்படிக் கடல் நோக்கிப் போகும் வழியில் அவள் வீட்டு வாசலை அந்த ஓடை ஈரப்படுத்தியது.

அவள் பிறந்த போது அந்த ஓடையில் தான் முக்கி கழுவி குளிப்பாட்டினார்கள். அவள் பூப்படைந்த போதும் அந்த ஓடையின் அருகில் வைத்துதான் தலையில் தண்ணீர் ஊற்றினார்கள். அவளுக்குத் திருமணம் ஆன போதும் அந்த ஓடையில்தான் பாலிகை கரைத்தார்கள். அது வணிகர்கள் அதிகமாக இருக்கின்ற ஒரு செழிப்பான கிராமம். இரண்டாயிரம் வீடுகளுக்கு மேல் பகுதி பகுதியாய் அந்தக் கிராமம் பிரிந்திருந்தது.

கடற்கரைப் பக்கம் மிகப் பெரிய கோயில் இருந்தது. கடலின் அலைகள் கோயிலின் மதில் மீது மோதி நீர் தெறித்து பார்ப்பவரை உற்சாகப்படுத்தின. கடலைப் பார்ப்பதற்காக வருகின்ற கிராமத்து மக்கள், அந்த மதில் சுவரில் ஏறி அலைகள் அடிக்கும் போதெல்லாம் ஆரவாரித்தார்கள்.

அந்தக் கோயில் மிகப் புராதனமானது. அங்கே பல பெரியோர்கள் வந்து சுவாமி தரிசனம் முடித்து, மக்களிடையே பேசி அவர்களுக்கு நல்லது செய்திருக்கிறார்கள். பதினோரு வயது கடவுள் அருள் பெற்ற பிள்ளை அங்கு வந்து பதிகம் பாடி, இறந்து போன ஒரு வணிகனின் மகளை உயிர்ப்பித்துக் கொடுத்தார். பானையிலிருந்த எலும்புகள் ஒன்றாகி அந்தப்

பெண் இறக்கும் போது எவ்விதம் இருந்தாளோ, அதே பொலிவோடு மறுபடியும் மீண்டு வந்தாள். அந்தப் பெண் திருமணம் செய்து கொள்ளாமல் வெகுநாள் இறை பணி செய்து கொண்டிருந்ததாய் செவிவழிச் செய்திகள் சொல்லும்.

பிரம்ம ரகசியத்தை இறைவன் சொல்லிக் கொண்டிருந்த போது இறைவி அதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது மயில் ஒன்று தோகை விரித்து நடனமாட இறைவியின் எண்ணம் திசை திரும்பியது. மயிலின் அழகில் மயங்கியது. இறைவன் உடனே, ‘‘நல்லது. நீ மயிலாகப் பிறந்து பிறகு பிரம்ம ரகசியம் கேட்க வா’’ என்று சொல்லி விட்டார்.

இறைவி வருத்தப்பட்டாள். பெண் மயிலாகப் பிறந்தாள். இறைவன் திருவுருவைத் தினமும் பூஜித்தாள். பிறகு இறைவனோடு கலந்தாள். மயில் வடிவாய் இறைவி வந்து பூஜித்ததால் மயிலாபுரி என்று அந்த ஊர் அழைக்கப்பட்டது. மயில் ஆர்க்கும் ஊர் என்றும் சொல்லப்பட்டது. மயிலை என்று சுருக்கமாய் எல்லோராலும் அழைக்கப்பட்டது.

அல்லிக்கேணியும், மயிலையும் அருகருகே இருந்தன. அல்லிக்கேணி ஒரு வகையான கிராமம். மயிலை இன்னொரு வகையான கிராமம். அல்லிக்கேணி வைணவர்கள் அதிகம் வாழும் தலம். மயிலை சிவனருட் செல்வர்கள் வாழுகின்ற இடம். இவர்களுக்குள் அபிப்ராய பேதங்கள் அதிகமில்லையெனினும், ஒருவரை ஒருவர் அதிகம் கொண்டாடிக் கொள்வதில்லை.

இறந்து போன பிறகும் அவளுக்கு இந்தப் பூமியை விட்டு வெளியே போக மனம் வரவில்லை. மரணத்தறுவாயில் அவள் மரணம் பற்றிச் சிறிதளவும் பயப்படவில்லை. அடே உடம்பை விட்டுப்போகப் போகிறோம். அவ்வளவுதானே. ஆனால் எங்கு போகப் போகிறோம்? என்று தெரியவில்லையே. பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த இடத்திற்கு இது நகர்ந்துவிடும் என்று. அப்படி நகருகின்ற இடம் பற்றியும் வர்ணித்திருக்

கிறார்கள். அது வெகு தொலைவில் இருக்கும் போலிருக்கிறது. அந்த தொலைவுக்குப் போகும் முன்பு இங்கே இந்தப் பூமி எத்தகையது, என்ன விஷயம் என்று தெரிந்து கொள்ளலாமே. நாம் உடம்பாய் இருந்து பார்த்த பூமிக்கும், உடம்பு விட்ட பிறகு பார்க்கின்ற பூமிக்கும் என்ன வித்தியாசம் என்று புரிந்து கொள்ளலாமே என்று யோசித்தாள்.

மரணத் தறுவாயில் இடைவிடாது பல விஷயங்களை யோசித்துக் கொண்டிருந்த அவள் மனம் தொடர்ந்து யோசிப்பை அதிகரித்தது. வனப்போடு இருந்த அவளுடைய உடம்பு ஞாபகத்திற்கு வந்தது. பருவ வயதில் அவளுடைய அழகைக் கண்டு சொக்கிய ஆண்களை அவள் நினைத்துக் கொண்டாள். அவர்களெல்லாம் இப்போது எங்கே என்று தேடினாள்.

பதினைந்து வயதில் அவளை மணப்பதற்கு அதிகம் முயற்சி செய்த நாற்பது வயது ஆளை அவள் நினைவுக்குக் கொண்டு வந்தாள். மயிலை கோயிலுக்கு அருகே இருக்கும் மிகப்பெரிய தனவந்தரான அவர் அவள் வீட்டிற்கு ஆள் மேல் ஆள் அனுப்பி, 'அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுங்கள். மூன்று வீடுகள், ஐந்து வேலி நிலம் உங்களுக்கு எழுதி வைக்கிறேன்' என்று ஓலை அனுப்பினார்.

தந்தை அவளை நிமிர்ந்து பார்க்க, அவள் மாட்டேன் என்று சொல்ல, அந்த சம்பந்தம் மறுக்கப்பட்டு விட்டது. 'வேறு எங்கு திருமணம் செய்து கொடுத்து விடுவீர்கள் என்று பார்க்கிறேன்' அவர் கோபமாய் எகிற, அவள் தந்தை பதிலுக்குக் கோபமானார். சம்பந்தப்பட்ட தன வணிகரை மிரட்டினார்.

"கேட்க உனக்கு உரிமையிருக்கிறது. கேட்டாய். மறுக்க எனக்கு உரிமையிருக்கிறது. மறுத்து விட்டேன். இதற்கப்பாலும் இந்த விஷயத்தைப் பற்றி நீ பேசினால் அல்லது வேறு ஏதேனும் இடைஞ்சல்கள் செய்தால் நான் சும்மாயிருக்க மாட்டேன். பரம்பரை பரம்பரையாய் போர் செய்து, போர் குணமுள்ளவர்கள் நாங்கள். எங்கள் அமைதி உடைந்தால் உன்னால் தாங்க

முடியாது. எனவே, வேறு எங்கேனும் திசை திரும்பு'' என்று வீட்டு வாசற்படியில் நின்று உரத்துச் சொல்லிவிட்டு வந்தார்.

அவளின் தாய் அவசரப்படுத்த அவளுக்கு அவர்கள் ஜாதியிலேயே ஒரு பையனைத் திருமணம் முடிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்தப் பையன் பெரியதொரு போருக்கு வடக்குப் பக்கம்போய் அப்பொழுதுதான் திரும்பியிருந்தான். தஞ்சாவூர் அரசர்களிடம் பல வருடங்கள் சேவை செய்து ஊருக்குத் திரும்பியிருந்தான். அவளுக்கும் அவனுக்கும் இடையே பத்து வருட வித்தியாசம் இருந்தது. அவனுடைய அனுபவங்கள் அவனைக் கனிய வைத்திருந்தன. பல யுத்தங்கள் பார்த்து, பல மரணங்கள் பார்த்து பலவேறு விதமான மனிதர்களைப் பார்த்து அவன் திகைத்துப் போய் வாழ்க்கை எந்த அர்த்தமுமில்லாதது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தான்.

ஆனால், அதே நேரம் வாழ்ந்துதான் ஆக வேண்டும். ஊரோடு ஒட்டி, இயல்பாய் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து வைத்திருந்தான். அவன் முகத்தில் ஒரு அமைதி நிலவியது. உடம்பில் நல்ல வலுவிருந்தது. அவனுக்குப் பெண் கொடுக்க பல பேர் போட்டியிட்டாலும், அவன் செங்கழுநீர் ஓடைப் பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டு விட்டு, அவளையே திருமணம் செய்து கொள்கிறேன் என்று அவர்கள் வீட்டில் சொன்னான்.

அவளுடைய தகப்பனார் குதிரை வாங்க வேண்டும் என்று சொன்னபோது, அவரோடு திருமல்லைக்கு நடந்து போய் அங்கு கப்பல்களில் வரும் குதிரைகளைப் பார்த்துத் தேர்ந்தெடுத்து நல்ல மூன்று குதிரைகள் அவருக்கு வாங்கிக் கொடுத்தான். அப்பா இரண்டு குதிரைகள்தான் வாங்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு போனார். ஒரு குதிரை அதிகப்படியாக வாங்கி அவன் பரிசளித்ததும் பதட்டமானார்.

'இப்பொழுதே கொடுக்கிறீர்களே. உறவுக்குப் பின் பண்ட மாற்றம் வைத்துக் கொள்ளலாமே'' என்று சொன்னார்.

''உறவு ஏற்பட்டு விட்டது என்று நினைத்துக் கொள்ளுங்கள். இனி உங்கள் மகளல்லாது, வேறு எவரையும் நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன். நீங்கள் உடனே திருமணம் செய்து வைத்தாலும், இன்னும் ஒரு வருடம் தள்ளித் திருமணம் செய்து வைத்தாலும் என்னுடைய நிலை இதுதான்'' என்று சொன்னான்.

அப்பா, வீட்டில் வந்து அதைச் சொல்ல, வீட்டிலுள்ள எல்லா பெண்களும் சந்தோஷப்பட்டார்கள். இவள் அதிர்ஷ்டத்தைப் பார் என்று கொண்டாடினார்கள்.

''பொன்னி என்று எப்பொழுது பெயர் வைத்தாயோ அவளுக்கு எல்லா விஷயமும் பொன்னாகத்தான் கிடைக்கிறது, ஒரு மாற்றுக் கூட குறையாத தங்கமாகத்தான் இவள் வாங்கிக் கொண்டிருக்கிறாள். இவள் மாநிறமாக இருந்தாலும் இவளுக்கு வரப்போகிற கணவனுடைய நிறத்தைப் பார்த்தாயா, பொன்னிறமாக இருக்கிறார். மனமும் தங்கமாக இருக்கிறது. இது பூர்வஜென்ம பந்தம். விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று சொன்னார்கள்.

ஆனால் மறுபடியும் போர் வந்துவிட்டது. வடக்கே வெகுதூரம் போய் பல மன்னர்களை ஜெயித்து விட்டு பெரும் செல்வத்துடன் திரும்பி வந்தது போதாமல், தெற்கு பக்கத்திலிருந்து படையெடுத்து தலைநகரத்தை முற்றுகை யிடுகிறார்கள் என்று கேள்விப்பட்டு, இங்கிருந்து ஒரு படை தலைநகரம் நோக்கிப் போயிற்று.

தலைநகரம் காவிரிக்கரையில் இருந்தது. அங்குள்ள அரசர்கள் மெத்தப் படித்தவர்களாகவும், மிகுந்த நாகரீகர்க ளாகவும், சிறந்த சிவனருட் செல்வர்களாகவும் இருந்தார்கள். விரைவில் அங்கு போய் தலைநகரைக் காக்க வேண்டியது கடமை என்று அவன் படபடக்க, அவனும் அவனைச் சார்ந்த நூறு இளைஞர்களும் குதிரையேறி தலைநகர் நோக்கிப் பயணப் பட்டார்கள். அவள் அப்பாவினுடைய மூன்று குதிரைகளும்

அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. வீட்டை விட தேசம் முக்கியமென்பதால், பல்வேறு விதமான சுகசௌகரியங்கள் அந்த இளைஞர்களுக்குத் தரப்பட்டு அவர்கள் காவிரிக் கரை நோக்கி அனுப்பப்பட்டார்கள்.

திருமணம் அவர்கள் வந்த பிறகு தான் நடக்கும். அங்கே என்ன நடக்கிறது, போர் எவ்வளவு தூரம் மும்முரமாகிறது, போரின் முடிவென்ன என்று தெரியாமல் வீட்டிலுள்ளோர் கவலைப் பட்டார்கள். இடையறாது மயிலாப்பூரில் உறைந்துள்ள கற்பகத்தாயை வேண்டினார்கள். அவ்வப்போது அந்தப் பக்கத்திலிருந்து செய்திகள் வந்து கொண்டிருந்தன.

பெரிய போர் ஏதும் நடக்கவில்லை. காவிரிக் கரையிலிருந்த வீரர்களே, தெற்கிலிருந்து வந்து வீரர்களை விரட்டி விட்டார்கள். இங்கிருந்த ஒரு படை காவிரிக் கரைக்கு வந்தது என்று மன்னர் கேள்விப்பட்டதும் மிகவும் மகிழ்ந்து, உடனே போக வேண்டாம். இன்னும் சிறிதுநாள் தங்கி விட்டுப் போகலாம் என்று சொல்ல, அவர்களுக்குத் தஞ்சையில் வேறு விதமான போர்ப் பயிற்சிகள் தரப்பட்டன. அவர்கள் தலைநகரைக் காக்கும் ஆவலுள்ள வீரர்களாய், மன்னர் மீது நேசமுள்ள வீரர்களாய் இருப்பதால், அவர்களுக்குத் தனித்த பயிற்சி கொடுக்கப்பட்டு பதவி உயர்வும் கொடுக்கப்பட்டன.

மறுபடியும் மூன்று மாதங்கள் கழித்து அவர்கள் ஊருக்குத் திரும்பலாம் என்று சொல்லப்பட்டு அவர்கள் புஜங்களில் கேயூரங்கள் மாட்டி உபதளபதிகள் என்று பெயரிட்டு அழைத்து, அவர்களை, அவர்களுடைய எல்லைகளிலுள்ள படைகளுக்கு காவல் தலைவர்களாக இருக்க உத்தரவு தரப்பட்டது. அரசரைத் தவிர வேறு எவருக்கும் அவர்கள் கைகட்டி சேவகம் செய்ய வேண்டிய அவசியமில்லை. அதேநேரம், எல்லையைப் பாதுகாக்க அவர்களுக்கு உரிமை இருந்தது. ஊர் சபை கூட்டுகிற போது இவர்கள் அவசியம் இருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது.

திருமணம் நிச்சயமாகி அதைப் பற்றிப் பொருட் படுத்தாமல் பொன்னியின் வருங்கால புருஷன் காவிரிக்கரைக்கு வந்திருக்கிறான் என்று மன்னருக்குச் சொல்லப்பட, மன்னர் மனம் மகிழ்ந்து அவனை ஆரத் தழுவி அவன் கழுத்தில் பவளம் போட்ட மாலை அணிவித்து திருமணப் பரிசாய் பதினைந்து கழஞ்சுகள் கொடுத்தார். மயிலையிலிருந்து குதிரைகள் கடன் வாங்கி வந்திருக்கிறார்கள் என்று தெரிந்து, அந்த குதிரைகளை தஞ்சையிலேயே விட்டுவிட்டு கடல் மல்லைக்குப் போய் புதிய குதிரைகள் வாங்கிக் கொள்ளச் சொன்னார்.

அவன் கடல் மல்லைக்குப் போய் ஆறு குதிரைகளோடு ஊருக்குத் திரும்பினான். ஊர் அவனைக் கொண்டாடி வரவேற்றது. இவனை உனக்கு நிச்சயித்த வேளை, எப்பேற்பட்ட மரியாதையெல்லாம் இவனுக்குக் கிடைக்கிறது பார் என்று அவளைப் புகழ்ந்து பேசியது.

அவனும் அதை ஆமோதித்தான். உண்மையென்று நம்பினான். அவர்கள் வீட்டிற்கு வந்து மூன்று குதிரைகளுக்குப் பதில் நான்கு குதிரைகளாகக் கொடுத்தான். அவள் அப்பா சந்தோஷமாக, அந்தப் புதிய குதிரைகளை வாங்கிக் கொண்டார். லாயத்தைப் பெரிதுபடுத்தினார். திருமணத்தை விரைவில் நடத்த வேண்டும் என்று முடிவு செய்து, உறவினர்களுக்கு ஓலை அனுப்பினார்.

வேளாளர்கள் குடும்பத்தில் பிறந்த பொன்னி பல்வேறு விதமான சௌகரியங்களும், சுகங்களும், சூழ தன் திருமணத்திற்குத் தயாரானாள். தன் வருங்கால கணவன் பல பேர் புகழும் படியாய் இருக்கிறவன் என்று தெரிந்த தினமே அவள் அழகு கூடி விட்டது.

''வெறும் உழவனல்லடி. அவன் உபதளபதி. எனவே அரசாங்க அதிகாரிகள் வந்து போய்க் கொண்டிருப்பார்கள்.

எனக்கு எதுவும் தெரியாது என்று கதவு சார்த்திக் கொண்டிருக்கிற சாதாரணப் பெண்ணாக இல்லாமல், வந்தவர்களை வரவேற்று. உபசரித்து உட்கார வைத்து தாகத்திற்கு நீரோ, மோரோ கொடுத்து, என்ன விஷயம் என்று பேசி, தெரிந்தால் விவரம் சொல்லி, சொல்லக்கூடாததை உள்ளுக்குள் வைத்து என பல சாமர்த்தியங்களை நீ கற்றாக வேண்டும். அது அந்த உப தளபதிக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும்.

இன்றைய அவன் வளர்ச்சியை நாளையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவன் மயிலை, திருவல்லிக்கேணியின் முதல் மனிதனாக, தலைமைத் தளபதியாக வருவான் என்பதில் நெல் முனையளவும் சந்தேகம் இல்லை. ஒரு வேளாளர் தலைமைத் தளபதியாக வருவது, எவ்வளவு சந்தோஷமான விஷயம். இப்பொழுது மயிலை, திருவல்லிக்கேணிக்கு ஒரு அந்தணரல்லவா தலைமைத் தளபதியாக இருக்கிறார். அக்ரஹாரமல்லவா கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. அந்தப் பக்கத்திலுள்ளவர்களல்லவா சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீ உன் புருஷனுக்கு உதவி செய்தால், இன்னமும் சிறப்பாக ஒரு வாழ்க்கை வெகு நிச்சயமாக உனக்கும் கிடைக்கும். உன் குடும்பத்திற்கும் கிடைக்கும், இந்த ஊருக்கும் கிடைக்கும். எனவே உன் வருங்கால புருஷனான நீலகண்ட சிவனுக்கு ஏற்றபடி உன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது மிகமிக முக்கியம். புரிகிறதா'' என்று வயதில் முதிர்ந்த பெண்மணிகள் சொல்ல, அவள் தலையசைத்தாள். மனதுக்குள் கற்பகத்தாயை நோக்கிக் கைகூப்பினாள்.

''எனக்குச் சொல்லிக் கொடு, நான் என்ன கற்க வேண்டுமோ, அதை எனக்குச் சொல்லிக் கொடு'' என்று இறைஞ்சினாள்.

ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் யோசித்தார்கள். ''இதைக் கற்பதற்கென்று பள்ளிக்கூடம் ஏதேனும் இருக்கிறதா. அரசாங்க விஷயம் பற்றி நம்மில் யாருக்கு அதிகம் தெரியும். அந்தணர் களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் சொல்லித் தருவார்களா,

மாட்டேன் என்று சொல்லி விட்டால் நல்லதா, சொல்லிக் கொடுக்கும் போது நமது பெண் குழந்தையைக் கேலி செய்தோ, புறக்கணித்தோ பேசினால் அவளுக்குத் தாங்குமா, வேண்டுமென்றே அவர்கள் வடமொழி கலந்து தமிழில் பேசுவார்கள். நம் குழந்தை விபரம் தெரியாமல் விழிப்பாள். அதுபார்த்து அவர்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள். பேசுவதையே புரிந்து கொள்ள முடியவில்லையே, மற்றதை எப்படிப் புரிந்து கொள்வாய் என்று கேட்பார்கள். கற்றுக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லாமல் வெவ்வேறு விதமாய் புறக்கணிப்பார்கள். இந்த கற்றுக் கொடுத்தலை, நமக்குத் தெரியாத இந்த விஷயத்தை, அந்தணர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயத்தை, நாம் நம்முடைய நீலகண்ட சிவனையே விட்டு சொல்லிக் கொடுக்கச் செய்தாலென்ன'' என்று பேசினார்கள்.

குறிப்பாய் அண்ணியின் தூண்டுதலால் பெரிய அண்ணன் தான் இதை சபை முன் வைத்தார். சபை திடுக்கிட்டுப் பார்த்தது.

''இது வழக்கமில்லையே தம்பி'' என்று பெரியவர் ஒருவர் பேசினார்.

''எனக்கும் புரிகிறது. திருமணத்திற்கு முன்பு கணவனும் மனைவியும் பேசிக் கொள்வதில்லை. இது நமது வழக்கம் ஆனால் மிகப் பெரிய வாய்ப்பு நமது சமுதாயத்திற்கு இருக்கிற போது அதைப் புறக்கணித்து விட்டு, ஏதோ நடந்து விட்டுப் போகட்டும் என்று எப்படி இருப்பது. நான் சொல்வதைக் கொஞ்சம் பெரிய மனது வைத்து யோசித்துப் பாருங்கள். அவன் மிக நல்லவன். இவள் நிச்சயம் முட்டாள்தனமாக நடந்து கொள்ள மாட்டாள். ஒதுக்குப்புறமாக இல்லாமல் நமது வீட்டுத் தோட்டத்தில், கொல்லைப் புறத்தில் அவர்கள் பேச இடம் கொடுத்து, அவர்களைப் பழகச் சொல்கிற போது நீலகண்ட சிவன் இந்தத் தேசம் பற்றியும், அதிகாரிகள் பற்றியும், போர் பற்றியும், அரசாங்க நடவடிக்கைகள் பற்றியும் அவளுக்கு

எவ்வளவு தெரியவேண்டுமோ அத்தனையும் சொல்லிக் கொடுப்பான்.

தலைநகரிலிருந்து சிறுபடையோடு ஒரு அதிகாரி வந்தால், நாம் எப்படி பதைத்துப் போகிறோம். இந்த வண்ணம் இவளும் பதைத்தால் வருபவரை யார் வரவேற்பது, நம்மைப் பற்றிக் கேலியாக தலைநகரிலுள்ளோர் பேச மாட்டார்களா? அந்தக் குறை நீங்க வேண்டும் என்று மிகவும் அக்கறைப் படுகிறேன்'' என்று பெரிய அண்ணன் சொல்ல, மற்ற எல்லோரும் அதை ஆமோதித்தார்கள்.

''மிகத் தெளிவாய் பேசுகிறாய் தம்பி. இது நிச்சயம் நடக்க வேண்டிய ஒரு விஷயம். இது பற்றி இன்னும் சிலரோடு பேசிவிட்டு யோசிப்போம்'' என்று சொல்லி கலைந்தார்கள்.

அவரவர் வீட்டிலுள்ள பெண்மணிகளைக் கூப்பிட்டுப் பேசினார்கள். அந்தப் பெண்மணிகளுக்கு முதலில் அது புரியவில்லை. 'ஆ அது எப்படி? எதற்காக ஆணையும் பெண்ணையும் திருமணத்திற்கு முன்பே கோர்த்து விடுகிறீர்கள்' என்று வேகமாகப் பேச, பெரியவர்கள் தங்கள் வீட்டுப் பெண்களிடம் இதனுடைய காரண, காரியத்தை விளக்கினார்கள்.

''நம்முடைய இனத்திலிருந்து ஒருவன் உப தளபதி ஆகியிருப்பதே மிகப் பெரிய விஷயம். இருபத்தைந்து வயது நிரம்பிய இந்தப் பையன் உப தளபதி ஆகியிருக்கிறான். அவன் முப்பத்தைந்து வயதில் உயரிய இடத்திற்கு வருவான். நாற்பது, நாற்பத்தைந்து வயதில் இந்த இடம் முழுவதும் ஆளுகின்ற திறன் அவனுக்கு வந்துவிடும். அப்பேற்பட்ட ஒரு நல்லவனுக்கு நாமும் நம் சுற்றத்தாரும் பல்வேறு விதமான உதவிகள் செய்து தர வேண்டும்.

அவனுக்குத் திருமணமான பிறகு நல்ல பெரிய வீடு கட்டித் தர வேண்டும். வந்து வீட்டில் தங்கும் போது விருந்து ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இருபது முப்பது பேர் கொண்ட படை வந்தாலும் சமைப்பதற்கும், உணவு பரிமாறுவதற்கும்

இடம் கொடுக்க வேண்டும். இதையெல்லாம் நாம் செய்தால்தான் நமக்கும் மதிப்பு, அவனுக்கும் மதிப்பு.

நாளைக்கு நாங்கள் ஏதேனும் ஏற்பாடு செய்ய, நீங்கள் அந்தப் பெண்ணைக் குறை சொன்னால் சகலமும் கவிழ்ந்து போகும். அந்தப் பெண் நடுங்கிப் போவாள். எனவே உங்களுடைய ஒத்துழைப்பு, உங்களுடைய பாராட்டு, உங்களுடைய ஆதரவு இந்த விஷயத்திற்குத் தேவை'' என்று பெரியவர்கள் சொல்ல, அந்தப் பெண்கள் ஆற்றங்கரையிலும், கோயில் வாசலிலும், மாடுகள் மேய்க்கின்ற புல் திட்டிலும் நின்று, கூடிப் பேசினார்கள். அண்ணி அவர்களுக்கு நடுவே நடுநாயகமாக நின்று பேசினாள்.

''வேளாளர்களுக்கு இதனால் என்னஉபயோகம் என்று கேட்கிறீர்களா, மோர் பானையை இடுக்கிக் கொண்டு தயவு செய்து அக்ரஹாரம் பக்கம் போய்ப் பாருங்கள். அந்தணர்கள் குடியிருப்பு எவ்வளவு செழுமையுடன் இருக்கிறது என்று பாருங்கள்.

முப்பது பேர் கொண்ட படை ஒன்று வந்ததென்றால், அதற்கு உணவிடுகிற சாக்கில் ஊரிலுள்ள அத்தனை குழந்தைகளுக்கும் உணவிடுகிறார்கள். முப்பது பேருக்குப் பதிலாய் நாற்பது பேருக்கு சமைக்கிறார்கள். படைக்கு உணவிட்டு பின்பு மீதியை அத்தனை குழந்தைகளுக்கும் பகிர்ந்து கொடுக்கிறார்கள். அரசாங்க செலவில் குழந்தைகள் மிகுந்த ஆரோக்கியமாய் நல்ல போஷாக்குடன் வளர்க்கப் படுகின்றன.

அரசரைப் பார்க்கும்போது, தன் ஊருக்கு வேத பாடசாலை நிறுவ வேண்டும் என்று கேட்டு, அதற்கான பொற்கழஞ்சுகளோடு வந்திருக்கிறார்கள். பெரிய சத்திரம் அளவிற்கு அதைக் கட்டுகிறார்கள். வெறும் வேத பாடசாலையா அங்கு நடக்கிறது. திருமணம் நடக்கிறது. சீமந்தம் நடக்கிறது. மற்ற பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்கள் நடக்கின்றன.

ஹோமங்கள், யாகங்கள் நடக்கின்றன. ஒவ்வொரு விழா நடக்கும் போதும் ஊரே கூடி சாப்பிடுகிறது. எப்பேற்பட்ட மாளிகைகள் அவர்கள் இத்தனை நாட்களில் கட்டியிருக்கிறார்கள் தெரியுமா?

நமது பக்கம் சாலைகள் கூட சரியாக இல்லை. இந்தப் பக்கம் எந்தப் படையும் வருவதில்லை. வந்தாலும் தங்குவதில்லை. இப்போதிருக்கிற அரசர் இரண்டுமுறை மயிலையில் அந்த அக்ரஹாரத்திற்கு வந்து போயிருக்கிறார். நம் தெருவிற்கு இந்த உபதளபதியைத் தவிர வேறு எந்த அதிகாரியும் வந்ததில்லை. வரி வசூல் பண்ணும் கணக்குப் புத்தகம் மட்டுமே நம்முடைய ஊருக்கு வருகிறது. நிலவரியை வசூலித்துக் கொண்டு கணக்கர் திரும்பி விட, நமக்குப் பெரிய நிம்மதிப் பெருமூச்சு வருகிறது. நாம் மாற வேண்டும். நாம் வளர வேண்டும். நம் அடுத்த தலைமுறையாவது பயமின்றி செழிப்பாக வாழவேண்டும்.

நம்முடைய இடங்கள் சுத்தமாக வேண்டும். செங்கழுநீர் ஓடை தூர் அடைத்து எவ்வளவு அசிங்கமாக இருக்கிறது. அதில் தூர் வாருவதற்கு நம்மால் முடியவில்லை. ஏனெனில் நம்மிடம் காசு இல்லை. நாம் சம்பாதிக்கும் காசு கைக்கும் வாய்க்குமே சரியாக இருக்கிறது. இந்த ஓடை தூர்வாரப்பட்டு, கரைகள் உயர்த்தப்பட்டால் நம் விவசாயம் இன்னும் செழிப்பானதாக மாறும். இதற்கு விண்ணப்பிக்கக்கூட நமக்குத் தெரியவில்லை.

ஆனால், அக்ரஹாரத்தில் உள்ள குளத்தை பலமுறை தூர்வாரி சுத்தம் செய்திருக்கிறார்கள். அந்தணர்கள் குளிக்க வேண்டும் என்பதற்காக இரண்டு குளங்கள் வெட்டியிருக்கிறார்கள். நமக்கு இந்த வசதிகள் ஏன் கிடைக்கவில்லை. நாம் இதற்காக ஏன் போராடக் கூடாது. இப்போது நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறதே, அதை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

எனவே தான் பொன்னியை நீலகண்ட சிவனோடு பேச விட்டு, பழகவிட்டு, திருமணத்திற்குப் பிறகு நல்லபடி பல்வேறு

விஷயங்களை, அவள் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.''

''மூன்று மாதத்தில் திருமணம் நடக்கப் போகிறது. இதையெல்லாம் அதற்குப் பிறகு வைத்துக் கொள்ளட்டுமே. இந்த மூன்று மாதத்தில் கற்றுக் கொள்ளவில்லையென்றால் என்ன குடிமூழ்கிப் போய்விடும்.

திருமணமான பிறகு எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். நானும் கூட உதவி செய்கிறேன்'' என்று ஒரு பெண் சொல்ல, சகலரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அண்ணி கோபமானாள்.

''முட்டாள்தனமாய் பேசுகிறீர்கள். எல்லாப் பேச்சையும் கடைசியில் படுக்கை அறையில் கொண்டு போய் முடிக்கிறீர்கள். உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் சாப்பிடுவது, பிறகு படுக்கை அறையில் புருஷனோடு சல்லாபிப்பது போன்றவைதான். வேறு ஒரு உலகத்தை நீங்கள் எட்டியே பார்க்க மாட்டேன் என்கிறீர்கள். இதுதான் உங்களைக் கீழான நிலையில் வைத்திருக்கிறது.

இவளுடைய திருமணத்திற்குப் பல அதிகாரிகள் வரக்கூடும். பல பெரிய மனிதர்கள் வரக்கூடும். இளவரசர் வரக்கூடும். ஏன் அரசரே கூட வரலாம். அப்படி இளவரசரோ, அரசரோ வந்தால் அவரை முன் நின்று வரவேற்று, வருக என்று வணக்கம் சொல்லி, அவரோடு இரண்டு வார்த்தை பேசுகின்ற ஒரு துணிச்சல் இவளுக்கு இருக்க வேண்டாமா? அப்படி துணிச்சலுள்ள ஒரு பெண் இவனுக்கு மனைவியாக வரப்போகிறாள் என்று அந்த அதிகாரிகளுக்குத் தெரிந்தால், இவனுக்கு மதிப்பு இன்னும் அதிகரிக்குமல்லவா? இவன் மனைவி கெட்டிக்காரி. இவன் இல்லையென்றாலும் அவள் திறம்பட பல்வேறு விஷயங்களை நிர்வாகம் செய்வாள் என்ற நம்பிக்கை வராதா?

உங்களைச் சொல்லி குற்றமில்லை. இப்படி ஒரு விஷயம் இருக்கிறது என்பதே உங்களுக்குத் தெரியவில்லை. அந்தணப் பெண்களுடைய பழக்க வழக்கங்களை நீங்கள் ஊன்றிக் கவனிக்கவில்லை. உங்கள் வாழ்க்கை மேம்போக்காக இருக்கிறது.

உங்களிடம் நான் வேண்டிக் கேட்டுக் கொள்வது ஒன்றுமட்டும்தான். இந்த விஷயத்தைக் கேலியாகவோ, சிரிப்பாகவோ பொன்னியின் மனது புண்படும் வண்ணமோ, நீலகண்ட சிவனை இழிவுபடுத்தும் வண்ணமோ பேசி விடாதீர்கள்; ஊர் கூடி ஒரு முடிவு செய்திருக்கிறது என்ற மரியாதையுடனேயே நடந்து கொள்ளுங்கள். மற்ற விஷயங்கள் நல்லபடியாய் நடக்கும்.'' அண்ணி கட்டளையிடுவது போல் பேச, அவர்கள் 'சரி' என்று தலையசைத்தார்கள்.

''ஏதோ காரணமில்லாமலா இவ்வளவு பெரிதாக இந்த விவகாரம் வளர்ந்திருக்கிறது. வீட்டுப் பெரியவர்கள் எல்லாம் எங்களைக் கூப்பிட்டுப் பேசுகிறார்கள் என்றால், இது ஏதோ முக்கியமான விஷயம்தான். நாங்கள் கேலி செய்யவில்லையம்மா, கேலி செய்ய மாட்டோம். இது சத்தியம். கற்பகத்தாய் சத்தியம்'' ஒரு பெண் உரத்துச் சொல்ல, மற்ற எல்லாப் பெண்களும் பின் தொடர்ந்து சொன்னார்கள்.

என்ன சொல்கிறோம் என்றுகூட இவர்களுக்குத் தெரியவில்லை என்று அண்ணி புரிந்து கொண்டு வாய்விட்டுச் சிரித்தாள். ''உங்களை காலம் நிச்சயம் மாற்றும்'' என்று சொன்னாள்.

நீலகண்ட சிவன் மிரண்டான்.

''எனக்குப் புரியவே இல்லை. மூன்று மாதத்திற்குள், வெட்கப்படுகின்ற ஒரு பெண்ணுக்கு என்ன கற்றுக் கொடுத்து விட முடியும். அவள் பேசுவதற்கே ஒரு மாதம் ஆகும். ஒரு வேளை பேசுகிற சாக்கில் நான் தோளில் கை வைத்தாலோ, கைகளைப் பிணைந்து கொண்டாலோ அவள் செத்தே

போவாளே தவிர, நான் பேசுவதை அவள் எங்கே காது கொடுத்து கேட்கப் போகிறாள். இது ஏன் தேவையற்ற ஒரு விவகாரம். இதை நாம் செய்து மற்றவர்களுடைய பேச்சுக்கு ஆளாவானேன். சரி வேளாளப் பெண்களை நீங்கள் ஒரு வழிக்குக் கொண்டு வந்து விட்டீர்கள். இந்த விஷயம் அந்தணர்களுக்குத் தெரியாமல் போகுமா? அடடே மனைவிக்குத் திருமணத்திற்கு முன்பே அரசாங்க அலுவலகப் பயிற்சி கொடுக்கிறானய்யா என்று ஆரம்பித்து, வீட்டிற்கு வந்து கதவுதட்டி விசாரித்து கேலி செய்து விட்டுப் போவார்கள். நமக்கு இது தேவைதானா'' நீலகண்ட சிவன் கைகட்டிக் கொண்டு பேசினான். அவனையும் அண்ணிதான் சமாளித்தாள்.

''தேவைதான். இந்த கேலியை எதிர்கொள்வோம். இந்த கேலிக்கு மாற்று கிடையாது. எனவே அதை அங்கீகரிப்போம். ஆமாம் ஐயா. நாங்கள் ஏதோ குழந்தை முயற்சி செய்கிறோம். ஆசீர்வதித்து விட்டுப் போங்கள் என்று இருவரும் வணங்கி நில்லுங்கள்.''

''இறையருள் இருப்பின் இது நல்லபடி நிறைவேறும். எந்த முயற்சியும் இல்லாமல், வெறுமே வேளாளராய். உழவராய் மண் தோண்டி மண் தோண்டி பயிர் செய்வதற்குப் பதிலாய், வேறு ஒரு அரசியல் விவகாரத்தில் பயிற்சி ஏற்படட்டும் என்று இதைச் சொல்கிறேன். நம் வீட்டுப் பெண்கள் மலரட்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அடுத்த தலைமுறையாவது பல நன்மைகளை அனுபவிக்க வேண்டும் என்ற ஆவலின் உந்துதலால் இந்தக் காரியத்தில் ஈடுபடுகிறேன். இதற்கு நீங்கள் எல்லோரும் தான் துணை நிற்க வேண்டும்'' அண்ணி சொல்ல, ஒரு வயது மிகுந்த வேளாளர் எழுந்து நின்றார்.

அவர் பேச்சைக் குறைத்தவர். உணவைச் சுருக்கியவர் எப்போது பார்த்தாலும் கற்பகத்தாய் கோயிலுக்கு வந்து நமச்சிவாய மந்திரம் சொல்லிக் கொண்டிருப்பவர்.

''தாயே, உன் பெயர் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் உன்னைப் பார்த்தால் ஒரு தேவதை

போல இருக்கிறது. ஒரு சமூகம் மொத்தமும் வளர வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு நீ போராடுவது எனக்குப் பிடித்திருக்கிறது. இதில் உன்னை எதிர்க்க உன் வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உன் முகத்தில் இது நன்கு நிறைவேற வேண்டுமே என்று கலவரம் இருப்பதைப் பார்க்கிறேன். இது நல்ல முயற்சி. வெகு நிச்சயமாய் நாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சி.

நீ சொன்னது போலவே இதற்கு இடைஞ்சல்கள் கேலியாகவும், எதிர்ப்பாகவும், ஏன் அரசாங்க கட்டளைகளாகவும் வரலாம். உப தளபதியின் வீட்டிற்கு எந்தப் படைகளும் போகக் கூடாது. படைகள் அக்ரஹாரத்திற்குத்தான் வர வேண்டும். அங்கு தான் உண்ண வேண்டும் என்று அக்ரஹாரத்தில் உள்ள தளபதி கட்டளையிடலாம்.

ஆயினும், இதையெல்லாம் மிஞ்சி ஒரு தலைமுறை நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக நாம் சில முயற்சிகளைச் செய்வது தவறல்ல. நீ நல்ல நேரத்தில், நல்ல விதமாய் இந்த விஷயத்தை ஆரம்பித்திருக்கிறாய். இது நிச்சயம் நல்ல பலனைக் கொடுக்கும். ஆனால், தியாகங்கள் இல்லாமல் எந்த விஷயமும் நிறைவேறுவதில்லை. நீலகண்ட சிவனும், பொன்னியும் தங்களுடைய மதிப்பை, மரியாதையை ஏன் இன்னும் சிலவற்றையும் தியாகம் செய்ய வேண்டியிருக்கும்.

நீ செய்வது நல்ல முயற்சி. இந்த ஊர் முழுவதும் ஒன்று கூடி இதற்கு துணையிருக்க வேண்டும். இருந்தே ஆக வேண்டும் என்று கட்டளை போடுங்கள். நமது சபைத் தலைவரை அழைத்து, இந்த ஊரில் இந்த ஒரு விஷயத்தை எவர் புறம் சொல்லிப் பேசினாலும் ஒரு பொற்காசு தண்டனை' என்று வாய் வார்த்தையாகச் சொல்லுங்கள். பறையறிக்க வேண்டாம்'' என்று அந்தக் கிழவர் சொல்ல, சபை ஆரவாரித்தது.

அந்தக் கிழவர் பேசியதைக் கேட்டதும் நீலகண்ட சிவன் திடுக்கிட்டான். நேரே போய் அவர் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தான்.

"உங்கள் மீது எனக்கு மிகப் பெரிய மதிப்பு உண்டு ஐயா. உங்கள் வாழ்க்கை போல் என் வாழ்க்கையும் கடைசி காலத்தில், நிறைய நமச்சிவாயம் சொல்கின்ற வாழ்க்கையாக அமைய வேண்டும் என்று நான் விரும்பியதுண்டு. ஐயா, உங்கள் வாயால் இந்த விஷயம் நடக்க வேண்டும் என்று சொன்னதிலிருந்து இது வெறும் விஷயமல்ல என்று எனக்குப் புரிந்து விட்டது. அண்ணியார் அனுபவமின்றிப் பேசுகிறார்களோ என்ற அச்சத்தில் நான் இருந்தேன். எப்போது நீங்களும் இதற்கு சரியென்று ஒப்புமை சொல்லிவிட்டீர்களோ அப்போது இது நல்ல விஷயம்தான். ஒருவேளை இதனுடைய வலிமை இன்று எனக்குப் புரியாமல் பிறகொரு நாள் புரியக்கூடும். அப்போது அதை இன்னமும் திறம்பட நான் நிறைவேற்றுவேன். இன்னும் பலருக்கு இதே விதமான சௌகரியங்களைச் செய்து கொடுப்பேன்" என்று சொல்ல, மறுபடியும் சபை ஆரவாரித்தது. கை தட்டியது.

"ஆக வேளாளர் வாழ்க்கை முறையே மாறப் போகிறது" தொலை தூரத்திலிருந்து ஒரு பெண்மணி குரல் கொடுத்தாள். அண்ணி குரல் வந்த திக்கை நோக்கித் திரும்பினாள்.

"ஆமாம். மாறாமல் ஒரே விதமாக வாழ நாம் என்ன கறவைகளா, கால் நடைகளா" என்று அண்ணி உரத்துக் கேட்டாள். அந்தக் குரலில் ஒரு கோபமிருந்தது. மறுபடியும் கூட்டம் ஆரவாரித்தது.

நீலகண்ட சிவன் பொன்னிக்கு பாடம் ஆரம்பித்தான்.

"இதோ பார். இதுதான் பரத கண்டம். பூமி உருண்டை வடிவானது. இந்த உருண்டை வடிவத்தில் இந்த இடத்தில் ஒரு வகை கடலும், இந்த இடத்தில் வேறொரு வகை கடலும், பரத கண்டத்தின் காலின் கீழ் ஒரு வகை கடலும், தலைக்கு மேலே கிரீடம் அமைந்தது போல் மலைத் தொடர்களும் இருக்கின்றன.

இவைகளில் குமரி மாவட்டத்து கடலையும், சேர தேசத்து கடலையும், மயிலாபுரியிலிருந்து தெரியும் இந்தப் பக்கத்து

கடலையும் நான் பார்த்திருக்கிறேன். கிரீடமாக அமைந்துள்ள இமயமலையை நான் பார்த்ததில்லை.

இமயமலையிலிருந்து இப்படி ஒரு நதி இந்த வழியாக வந்து, இங்கே பல வகையாகப் பிரிந்து கடலில் சேருகிறது. கங்கை என்று அதற்குப் பெயர். இப்படி ஒரு நதி வருகிறது. அதற்கு யமுனை என்று பெயர். இந்த வழியாக வரும் நதியை சரஸ்வதி என்று அழைக்கிறார்கள். இங்கிருந்து கிருஷ்ணை நதியும், இங்கிருந்து கோதாவரியும், இந்தப் பக்கம் தென்பெண்ணையும், நடுவே இருக்கின்ற மலைகளிலிருந்து பொங்கிய நீர் காவிரியாகவும், பரத கண்டத்தில் பாய்கிறது. ஐந்து நதிகள் பாய்கின்ற இடம் இங்கே இருக்கிறதென்று சொல்கிறார்கள். இங்கே போனவர்கள் மிகக் குறைவு. இது வேறு விதமான நாகரீகம் என்று சொல்கிறார்கள்'' அவன் அவர்கள் வீட்டு மாடியில் உட்கார்ந்து கொண்டு படம் போட்டு விளக்கத் துவங்கினான்.

முதல் மூன்று நாட்கள் அவன் பேசிய பேச்சுக்கள் எதுவுமே அவளுக்கு முழுமையாய் காதில் விழவில்லை. முதல் நாள் பதட்டமாக இருந்தது. இரண்டாம் நாள் யாரெல்லாம் தொலைவிலிருந்து பார்க்கிறார்கள், என்னவெல்லாம் நினைத்துக் கொள்கிறார்கள் என்று சிந்தனை மற்றவர்பால் ஓடிற்று. மூன்றாம் நாள் அவன் உயரமும், அகலமும், தலைமுடியும், உதடும், மீசையும், கண்களும், விரல்களும் உற்று உற்றுப் பார்க்கத் தோன்றிற்று.

இந்த விரல்கள்தான் என்னைப் பற்றப் போகின்றன. இந்த மார்புதானே என்னை இறுக்கி அணைத்துக் கொள்ளப் போகிறது. இந்த உதடுகள் தானே என்னைக் கவ்வி சுவைக்கப் போகின்றன. இப்படி வேட்டியும், மேல்துண்டுமாய் உட்கார்ந்திருக்கிறவன் சட்டென்று அவைகளைக் களைந்து என் மீது தாவுவானல்லவா. என்னையும் களைய வைப்பானல்லவா என்று அதீதமாய் புத்தி போயிற்று.

அவள் மனம் நடுங்கினாள். இது சரியா. கடவுளே. எந்தப் பெண்ணுக்கும் ஏற்படாத ஒரு இம்சை எனக்கு ஏன் ஏற்படுகிறது? நானும் வழக்கம் போல் நாணிக் கண்பொத்தி ஒரு ஓரமாய் நின்று தொலைவிலிருந்து அவனைப் பார்த்தும் பாராததுபோல் இருந்தால், வாழ்க்கை எவ்வளவு சௌகரியமாக இருக்கும். அதை விட்டுவிட்டு, ஏன் இவ்விதம் புருஷனாக வரப்போகிறவன் அருகில் உட்கார்ந்து பாடம் கேட்கிற ஒரு விஷயத்தை ஏற்படுத்தினாய்.

வெளியே போகும் போது வழியில் எவர் சிரித்தாலும் இது குறித்துத்தான் சிரிக்கிறார்களோ என்று பயமாக இருக்கிறது. என்னைப் பற்றி, என் மனம் பற்றி, என் தினசரி வேலை பற்றி என்னால் சிந்திக்கவே முடியவில்லை. மாறாய், என் வேலைகள் அனைத்தும் குழப்பமாய் போகின்றன. நான் உடுப்பது, உண்பது எல்லாமே அபத்தமாய் முடிகிறது. மிகவும் பிரியமான அம்மாவும் கேலி செய்து சிரிக்கிறாள்.

என்ன இப்படி செயல்படுகிறாய்? எந்த நேரமும் அந்த மனிதனின் சிந்தனைதானா, உன்னைக் கொஞ்சம் ஒழுங்காகப் பார்த்துக் கொள். சீராக உடுத்திக் கொள். நன்றாக தலைவாரிக் கொள். நறுமணமாக இரு. புத்தியை நிலைநிறுத்து. புத்தியை நிலைநிறுத்தினால் அல்லவா, அவன் பேசுவதைப் புரிந்து கொள்ள முடியும். அவன் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும் என்று இடித்துரைக்கிறாள்.

ஆனால் புத்தியை எப்படி நிலைநிறுத்துவது என்று அம்மாவும் சொல்லித் தரவில்லை. அப்பாவும் சொல்லித் தரவில்லை. அவள் திகைத்துப் போய் செங்கழுநீர் ஓடை நீர்த்துறைப் படியில் அமர்ந்திருந்தபோது, அவன் அங்கே குதிரையை மெல்ல செலுத்திக் கொண்டு வந்தான். மரத்திற்கருகே குதிரையைக் கட்டினான். அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

ஏதோ வீட்டுக்கொல்லைப் புறத்தில், மேல்மாடத்தில், வலப்பக்கம் இருக்கிற மாந்தோப்பில் உட்கார்ந்து பேசுவது

வழக்கமாக இருந்தது. இப்படி ஊர்குளிக்கும் செங்கழுநீர் ஓடைத்துறையில் வந்தும் பேசினானென்றால், இது எங்கே போய் முடியும்? இந்தப் பேச்சைக் கேட்க ஊர்ஜனங்கள் கூடி விடமாட்டார்களா. பெண்கள் குடத்தை இடுக்கிக்கொண்டு வந்து வெறிக்க வெறிக்கப் பார்க்க மாட்டார்களா. பத்துப் பெண்கள் வெறிக்கப் பார்ப்பதை விட வேதனையான விஷயம் வேறு ஏதேனும் உண்டா. மறுபடி இந்த நீர்த் துறைக்கு வர முடியுமா. என்ன வேதனை இது, என்று அவள் மருக, அவன் ''இன்னும் பதட்டம் தீரவில்லையா'' என்று ஆரம்பித்தான்.

''இது எப்போது உனக்கு சகஜமாகப் போகும் என்று எனக்குத் தெரியவில்லை. இது சகஜமாகப் போனால் தான் நல்லது. எப்பொழுது சகஜமாகப் போக முடியும். மனதை நிலை நிறுத்தினால்தான் சகஜமாகப் போக முடியும். நீ மற்றவர் களுடைய அனுமதியோடு தான் இதைச் செய்கிறாய். எனவே அவர்கள் என்ன சொல்வார்கள் என்கிற எண்ணம் உனக்குத் தேவையில்லை. என்மீது முழுவதும் புத்தியைச் செலுத்தினா லொழிய நான் பேசுவது உனக்குப் புரியாது. இனி ஏகாந்தமான மாந்தோப்பிலோ, கொல்லைப் புறத்திலோ இருப்பதைவிட, பத்து பேர்கள் பார்க்கின்ற இந்த இடத்திலேயே பேசத் துவங்கப் போகிறேன். எல்லோரும் வந்து பார்க்கட்டும். அவர்கள் பார்ப்பது உனக்கு சகஜமாகட்டும். நான் பேசுவது அவர்களுக்கு சகஜமாகட்டும். பிறகு நாம் பாடத்தை ஆரம்பிப்போம்.

நான் உடனடியாக பாடத்தை ஆரம்பித்தது என் தவறு. நீ வேகமாகப் புரிந்து கொள்வாய் என்று நினைத்து அப்படி ஆரம்பித்து விட்டேன். ஆனால் ஒரு பெண்ணுடைய சூழ்நிலை பற்றி முதலில் எனக்குத் தெரியவில்லை. யோசித்துப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. இரவு முழுவதும் நீயாக நான் இருந்த பொழுதுதான் உன்னைப் பற்றி உணர முடிந்தது. எனவே இப்போது நான் வெறுமனே பல்வேறு கதைகளைப் பேசிக் கொண்டிருக்க பிரியப்படுகிறேன். இங்கேதான் பேசப் போகிறோம் சரிதானே'' அவன் உற்றுப் பார்த்துக் கேட்க, அவள் சரியென்று தலையசைத்தாள்.

"நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?" அவன் மறுபடியும் கேட்டான்.

"புரிகிறது."

"என்ன புரிகிறது?"

"வேடிக்கை பார்க்க, வேடிக்கை பார்க்க அவர்களுக்கும் அலுக்கும். நமக்கும் அலுக்கும். பிறகு சகஜமாகி நாம் நம் காரியத்தில் ஈடுபடலாம். அவர்கள் தங்கள் காரியங்களில் ஈடுபடுவார்கள்."

"ஆஹா ஆஹா இவ்வளவு கெட்டிக்காரியா நீ. எனக்கு மிக்க மகிழ்ச்சி. இந்த தெளிவு உனக்கு இன்னும் சற்று முன்னமே வந்திருக்கலாம். நல்லது. உனக்கு என்னிடம் ஏதேனும் கேள்விகள் கேட்க வேண்டுமா."

"ம்... சில கேள்விகள் இருக்கின்றன."

"கேளேன்."

"வடக்கே எவ்வளவு தூரம் போயிருக்கிறீர்கள்?"

"அடடா, பயணம் பற்றித் தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறாயா. வடக்கே கங்கைக்கரை வரை போயிருக்கிறேன். கங்கையைத் தாண்டி மறுகரைக்கும் போயிருக்கிறேன். மறுகரையிலிருந்து சற்று தொலைவிற்குப் போய் பார்த்திருக்கிறேன். ஆனால் இமயமலை அடிவாரம் போகவில்லை. போகவேண்டும் என்று திட்டமிருந்தது, விட்டு விட்டோம்.

மயிலையை ஒட்டி ஒரு நீண்ட கடற்கரைப் பாதை போகிறது. சற்று தொலைவிற்குப் பிறகு, அதாவது கங்கை நாட்டிற்குப் பிறகு பாதை சற்று உள்ளடங்கிப் போய் விடுகிறது. அந்தப் பாதை வழியாக கங்கைக்குப் போயிருக்கிறோம். கங்கையின் உற்பத்தி ஸ்தானமும், கங்கை அகலமாகின்ற இடமும், காசி தேசமும் பார்க்க வேண்டும் என்று ஆசை. கங்கைக்கரை ஓரமாகவே போனால் காசி தேசத்தை ஆறு அல்லது

ஏழு நாட்களில் கடந்து விடலாம் என்று சொன்னார்கள். நமது படை வீரர்கள் இளைத்து விட்டதால், பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பி விட்டோம். பல வீரர்களுக்கு கங்கையைப் பார்த்ததுமே நிறைந்து விட்டது.''

''உங்களுக்கு நிறையவில்லையா.''

''இல்லை. எனக்கு நிறையவில்லை. எனக்கும் நமது இளவரசருக்கும் ஒரு நிறைவு ஏற்படவே இல்லை. இவ்வளவு பெரிய ஆறு எங்கே ஆரம்பிக்கும் என்றுதான் நான் கேட்டேன். இளவரசர் உடனே அருகே வந்து என் தோளில் கை வைத்து நானும் அதையேதான் நினைத்துக் கொண்டிருந்தேன் என்றார். அதற்குப் பிறகு நானும், இளவரசரும் நிறையப் பேச ஆரம்பித்து விட்டோம். நாங்கள் இரண்டு பேரும் ஒரே விதமாய் யோசிக்கிறோம் என்பதும் புரிந்து போயிற்று. வேறு ஏதேனும் கேள்விகள் உண்டா?''

''நமது வாழ்க்கைக்கும், கங்கைக் கரையிலுள்ளோர் வாழ்க்கைக்கும் வித்தியாசம் உண்டா?''

''அட, உன் கேள்விகள் அற்புதமாக இருக்கின்றன. நான் நினைத்ததை விட நீ கெட்டிக்காரியாக இருக்கிறாய். அவர்களுக்கும் நமக்கும் மிகச் சிறிய வித்தியாசங்கள் இருக்கின்றன. உணவில், உடையில், மொழியில் என்று சிறுசிறு வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆனால், அவர்களும் சிவபெருமான் வழிபாட்டையும், விஷ்ணு வழிபாட்டையும் சோம யாகங்களையும், மனுதர்ம சாஸ்த்திரத்தையும் கடைப்பிடித்து வருகிறார்கள். சற்று இழுத்தாற்போல் மந்திரங்களைச் சொல்கிறார்கள். இங்கே உள்ளது போல வர்ணாஸ்ரம தர்மம் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அவர்கள் நான்காவது வருணத்தாரை அதிகம் இழிவுபடுத்துகிறார்கள். நம்மிடையே அப்படி ஒரு இழிவு இல்லை. நாம் பிரிந்திருக்கிறோமே தவிர, பிணக்குகள் கொண்டதில்லை. அங்கே பிணக்குகள் இருக்கின்றன.

அவன் இறைவன் காலிலிருந்து பிறந்தவன் என்று ஒரு அந்தணர் சொல்ல, இளவரசர் அப்படியானால் இறைவன் கால் அசுத்தமானதா என்று பதிலுக்குக் கேட்டார். அந்த அந்தணர்கள் கோபித்துக் கொண்டார்கள். அப்படியானால் இறைவன் காலை வெட்டி விடலாமா என்று மறுபடியும் கேட்க, சீறினார்கள். இளவரசர் சிரித்தார்.

''மிகத் தவறான ஒரு விளக்கத்தை மக்களிடையே சொல்லி, அதை நீங்களும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். உடம்பின் அங்கங்கள் எல்லாமே முக்கியமானவை. தலையில் பிறந்தாலும், காலில் பிறந்தாலும், வயிற்றில் பிறந்தாலும், இருதயத்தில் பிறந்தாலும் ஒன்றுதான். வேலைகள் வெவ்வேறு என்று சொல்வதற்காகத்தான் இந்த உவமானங்கள் ஏற்பட்டதே தவிர, இழிவுபடுத்துவதற்கு அல்ல'' என்று இளவரசர் சொல்ல, அவர்கள் அதிகம் பேசாமல் முகம் திருப்பிக் கொண்டார்கள். மறுநாள் அவர்கள் இளவரசரைப் பார்ப்பதையே தவிர்த்து, வேறு பக்கமாய் ஒதுங்கிக் கொண்டார்கள். இளவரசர் நான்காவது வருணத்தாரோடு சகஜமாகவும், சந்தோஷமாகவும் பேசினார்.

''நமது வீட்டில், நாம் எப்படி அவர்களை நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?''

''அற்புதம் காட்டுகிறாய் பெண்ணே. உன் கேள்விகள் என்னை உலுக்குகின்றன. எதிரிகளையும் மனிதர்களாக நடத்துவதுதான் நம்முடைய பண்பாடு.''

''ஒரு மனிதன் தவறு செய்து விடுகிறான். அல்லது நமது ஊரின் மீது படையெடுத்து விடுகிறான். நம்மை ஆக்கிரமிக்க முடியும் என்ற நினைப்பில் படை திரட்டி நமது ஊரைக் கொள்ளையடித்து, சிலரைக் கொலை செய்திருக்கிறான். நாம் பதிலுக்குப் படை திரட்டி அவனை அடித்து நொறுக்கி இங்கேயே கைது செய்து விட்டோம். இப்பொழுது அவனை நாம் எப்படி நடத்த வேண்டும்?''

"மனிதனாகத்தான் நடத்த வேண்டும். அவன் மிருகமல்ல. அவனுடைய செயல்கள் மிருகச் செயல்களாக இருந்த போதும், நாம் அவனுக்கு தண்டனை தரும் போது ஒரு மனிதன் என்ற அளவிலேதான் தண்டனை தர வேண்டும்.

"அப்படிப்பட்டவருக்கு என்ன தண்டனை தரலாம்?" அவள் சற்றும் தயக்கமின்றிக் கேட்டாள்.

"ஆயுள் தண்டனை தரலாம். ஒருவேளை உணவிட்டு உடம்பு நொடிய திமிரைக் குறைத்து, காலில் சங்கிலி பூட்டி, தனிமையான சிறையில் அடைத்து, ஐந்து வருட காலம் அல்லது ஆறு வருட காலம் அவனுக்குத் தண்டனை தரலாம். அப்படியும் திமிர் குறையவில்லையெனில், அதை ஆயுள் காலம் வரைக்கும் நீட்டிக்கலாம். உடம்பின் வலுதான் உலகில் உயர்வான விஷயம் என்று நினைப்பவனுடைய வக்கிரத்தை, திமிரை விலக்க வேண்டுமேயொழிய, அவனுடைய அங்கங்களைச் சிதைப்பதும் துடிக்கத் துடிக்க அடிப்பதும் எந்தப் பயனும் தராது. மாறாய் வன்மத்தைத் தான் ஏற்படுத்தும்.

இப்படி தனிமைச் சிறையில் வாடுபவன் தன்னுடைய உரம் குன்றினால், தன்னுடைய மனோபலம் குன்றினால் மறுபடியும் மனம் மாற வாய்ப்பிருக்கிறது." அவன் சொல்லிக் கொண்டிருக்க, அவள் அவனையே உற்று நோக்கினாள்.

"என்ன?" நீலகண்ட சிவன் கேட்டான்.

"நீங்கள் மது அருந்துவீர்களா?"

"அருந்துவேன்."

"எப்போதுமா?"

"போருக்குப் போகிற நேரத்தில். வலியை மறக்க, வெறி ஏற்படுத்திக் கொள்ள, உக்கிரத்தை வரவழைத்துக் கொள்ள மது மிக மிக அவசியம். மது வேளாளர்கள் வாழ்க்கையோடு, வலிமையோடு சம்பந்தப்பட்டது. உடல் உழைப்போடு பின்னிப் பிணைந்தது. இரவு திரும்பியதும் நல்ல சுடுநீரில் குளித்து,

உணவு உண்டு படுக்கப்போகும்போது மனைவி கை, கால்க மிதித்து விட வேண்டியிருக்கும். ஏனெனில் அந்த உழைப் கணுக்கணுவாக ஒரு வலியை ஏற்படுத்தும். அந்த வலி இருப்பி அவனால் தூங்க முடியாது. தூங்குவதற்கென்றே சிலர் ம அருந்துவார்கள். ஏனெனில் அவர்களுக்குப் பிரியத்துடன் கை கால் பிடித்து விட ஆட்கள் இருக்காது. ஆனால் ஒரு நல் மனைவி அவன் அருகேயிருந்து கால் நாழிகைக்கும் குறைவா அவன் உடம்பைப் பிடித்து விட்டால் போதும். அந்த பிடிக்கு சுகத்தில் அவன் நன்கு உறங்கி விடுவான்.'

''இன்னொரு கேள்வி. நீங்கள் வேறொரு பெண்ணை அனுபவித்ததுண்டா?''

''உண்டு'' அவன் சற்றும் தயங்காமல் பதில் சொன்னா

''எனக்கு இருபத்தைந்து அகவை ஆகிறது. தேசத்தின் ப பகுதிகளைப் பார்த்து விட்டேன். பல போர்களில் கலந் கொண்டு விட்டேன். இறந்து போய் விடுவோம் என்ற நிலைக் பலமுறை தள்ளப்பட்டிருக்கிறேன். அப்படித் தள்ளப்படுகி போது வாழ்க்கையினுடைய நல்ல விஷயங்களெல்லா யோசித்திருக்கிறேன். இவைகளை அனுபவிக்காம போகிறோமே என்று பயந்திருக்கிறேன். அதனால் காசு கொடுத் பெண்களை அனுபவித்திருக்கிறேன்.''

''கற்பழித்ததுண்டா?''

''இல்லை. என்னால் கற்பழிக்க முடியாது.''

''ஏன்?''

''தேறல் அருந்திய பிறகும் கூட ஒரு பெண்ணை வன்முறையாய் நடத்த வேண்டும் என்று மனம் விரும்பவில்லை உண்மையில் தேறல் அருந்திய பிறகு கூடுகின்ற எண்ணே என்னை விட்டுப் போய் விடுகிறது.''

''உண்மையாகவா.''

''உண்மையாகதான். தேறல் அருந்திய பிறகு மனம் தனிமையை நாடுகிறது. பாட்டுப் பாட வேண்டும் போல் இருக்கிறது. எங்கேனும் தனியே அமர்ந்து யாரேனும் குழலிசைக்க, கேட்க வேண்டும் போல் இருக்கிறது. அல்லது மெல்ல நீர்க்கரையோரம் நடக்க வேண்டும் போல் தோன்றுகிறது. சிறிது நேரம் நடந்து உடம்பு அயர்ந்த பிறகு, தரையில் துணி விரித்து ஆழ்ந்து தூங்க வேண்டும் போல் தோன்றுகிறது. சரி, இப்போது நான் உன்னை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்'' அவன் துவங்கினான்.

''கேளுங்கள்'' அவள் அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

''சற்றுமுன் நீ என்னைக் கேட்ட அதே கேள்வியை நான் உன்னிடம் கேட்டால் நீ என்ன செய்வாய்?''

அவள் தலை குனிந்தாள். நிமிர்ந்து ஆழ அவனை உற்றுப் பார்த்தாள். 'அடப்பாவி' என்பது போல அந்தப் பார்வை இருந்தது.

''கேள்வியாகக் கேளுங்கள்'' என்று அடிக்குரலில் குரல் குழறப் பேசினாள்.

''நீ வேறு ஆண்களோடு சல்லாபித்திருக்கிறாயா?'' அவன் சற்றும் தயங்காமல் கேட்டான்.

அவள் கண்களை மூடிக் கொண்டாள். மெல்ல கண் திறந்து அவனைப் பார்த்தாள். விழியோரம் நீர் தளும்பியிருந்தது. பற்களைக் கடித்து அழுகையை அடக்கிக் கொண்டாள். மூக்குறிஞ்சினாள். அமைதியாக தலைகுனிந்து உட்காந்திருந்தாள்.

நிமிர்ந்து, ''இல்லை. மனதாலும் நினைத்ததில்லை. அப்படி நினைப்பது தவறு என்று எங்களுக்கு மிக மிகச் சிறுவயதிலிருந்தே சொல்லித் தரப்பட்டிருக்கிறது. நான் தேறல் அருந்தியதில்லை. கட்டுப்பாடு இல்லாமல் சிந்திப்பதில்லை. எல்லா விஷயத்திலும் ஒரு ஒழுங்கோடு இருக்க வேண்டும் என்றுதான் நானும் இங்கு வாழும் மற்ற பெண்களும் முயற்சி

செய்து வருகிறோம். நமது வேளாளப் பெண்கள் மட்டுமல்லாது இந்தத் தேசத்திலே உள்ள அத்தனை ஜாதிப் பெண்களுக்கு இதுதான் எண்ணமாக இருக்கிறது.

இதைப் பற்றி நான் யோசித்திருக்கிறேன். வகை தொகை தெரியாத காமம் பெண்களுக்கு ஏற்படுவதில்லை. பாதுகாப்பு மிகுந்த, பக்குவமான, அமைதியான என்னை வளர்க்கக்கூடிய காமம், அதாவது கூடல்தான் எனக்கு விருப்பம். நான் விரும்புகிற கூடல் என்னை இழிவுபடுத்தக் கூடாது என்பதில் நான் மிக முக்கியமாக இருக்கிறேன். என்னை இழிவுபடுத்துபவன் என்னோடு கூடக்கூடாது என்பதில் நான் திடமாக இருக்கிறேன். என்னைக் கூடுவது என்பதில் மிக முக்கியமான விஷயம் என்னை மதிப்பதுதான் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, மதித்தலற்ற ஒரு செயலை எந்தப் பெண்ணும் செய்ய மாட்டாள். என்னுடைய காமம் அல்லது கூடல் மதிப்பு மிகுந்தது. என்னை மரியாதை யுடனும், மதிப்புடனும் நடத்துபவர் மட்டுமே என்னோடு கூட முடியும்.

இங்கே சுகம் என்பது உடம்போடு உடம்பு உரசுவது அல்ல. பிணைந்து கொள்வதல்ல. இங்கு சுகம் என்பது என்னை கண்ணே, மணியே என்று கொஞ்சுவதும், ஊருக்கு முன்னே இவள் என்னவள் என்று சொல்வதும் தான் மிகப் பெரிய சுகம். இதுதான் கூடல். இதுதான் காமம். இதை அனுபவிக்கத்தான் எனக்கும், என்னைப் போன்ற பெண்களுக்கும் ஆசை'' அவள் சொல்ல, அவன் திகைத்துப் போய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''கடவுளே எவ்வளவு அழகாகப் பேசுகிறாய்?'' அவன் இரண்டு கைகளையும் கூப்பி அவளை நமஸ்கரித்தான்.

''ஆனால், என் கேள்வி முடிந்து விடவில்லை பொன்னி அப்படியென்றால் தாசிகள் யார்? தேவரடியார் என்று சொல்லப்படும் அந்தப் பெண்கள் காசுக்கு வருகின்றனரே அந்தப் பெண்களின் மனோநிலை என்ன?''

''சமூகம் செய்த கேடு. ஆண்கள் செய்த அசிங்கம். குறிப்பிட்ட சில பெண்களை, தங்கள் சுகத்திற்காக ஒரு வரைமுறை வைத்து அந்தப் பெண்களை தங்களுடைய கூடலுக்கென்று வைத்திருக்கிறார்கள். எனவேதான் அந்தப் பெண்கள் வெறுமே கூடலுக்கென்று தங்களை உருவாக்கிக் கொள்ளாமல் ஆடலுக்கும், பாடலுக்குமாகவும் தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். சமூகத்தில் அவர்களுக்கும் ஒரு மதிப்பு தேவையாயிருக்கிறது. மரியாதை தேவையாயிருக்கிறது. ஊரின் பாராட்டுதல்கள் தேவையாக இருக்கின்றன. எனவேதான் அவள் வெறுமே சதை விற்கும் பிண்டமாக இல்லாமல் ஆடலுக்கும் பாடலுக்குமுண்டான நக்கன் என்கிற அடை மொழியோடு இறைவனுக்கும் அடியவளாக நான் இருக்கிறேன் என்ற தனித்தன்மையோடு விளங்குகிறாள். மதிப்பற்று வாழ உலகில் எந்த உயிரும் விரும்புவதில்லை. தன் மதிப்பை உயர்த்திக் கொள்ளலும், பிறரை மதித்தலும் சீரான வாழ்க்கை. செம்மையான வாழ்க்கை. அதுதான் வாழ்க்கை.

போர் என்பது மதிப்பை அழிக்கின்ற விஷயம் என்றாலும் அதைக் கூட பொறுத்துக் கொள்ளலாம். சவாலாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கற்பழிப்பு என்பது மிகமிகக் கேவலமான விஷயம். தன்னோடு வாழ்கின்ற ஒரு சக உயிரை, அவன் சற்றும் மதிக்கவில்லை. வெறும் மிருகமாக வாழ்கிறான் என்று அர்த்தம்.

ஆனால், அப்படி சொல்வது கூட தவறுதான். எந்த மிருகமும் கற்பழிப்பதில்லை. மனிதன் மட்டுமே இதைச் செய்கிறான். அரக்கத்தனமாக வாழ்கின்றான். மிருகங்களில் தேவர்களும் இல்லை. அரக்கர்களும் இல்லை. மிருகங்கள் அவைகள் இயல்புப்படி மிருகங்களாகவே இருக்கின்றன. மனிதர்களில்தான் அரக்கர்கள் போன்ற கேடுகெட்ட மனிதர்களும், அதற்கு நேர்மாறாக எத்தனை துன்பம் வந்தாலும் நல்லதையே செய்கின்ற சில சிறந்த மனிதர்களும்

இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவர்கள் என்றழைக்கப் படுகிறார்கள். தேவர்களும், அரக்கர்களும் மனிதகுணாதிச யங்களேயன்றி வேறெதுவும் அல்ல.''

அவன் சட்டென்று எகிறி அவளுக்கு அருகே நெருங்கி உட்கார்ந்து கொண்டான். அவள் பயந்து விலக முறபட்டபோது, அவள் தோளில் கை வைத்து இழுத்து இறுக்கிக் கொண்டான். அவளுடைய இடுப்பைச் சுற்றி கை போட்டு, தன் வலது கையால் அவளுடைய வலது கையைப் பற்றிக் கொண்டான். உற்றுப் பார்த்தான். அவள் திமிறினாள். ''சும்மாயிரு'' என்று அவன் அதட்டினான். அவள் பயந்து போய் அவனைப் பார்த்தாள்.

''நான் ஏதோ உனக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று வந்தேன். நான் எவ்வளவு பெரிய முட்டாள். நீ எத்தனை அழகாகப் பேசுகிறாய். எவ்வளவு அற்புதமாகச் சிந்திக்கிறாய். உன்னிடமிருந்து நான் கற்க வேண்டியது எவ்வளவு இருக்கிறது என்று எனக்கு இப்போது புரிந்து போயிற்று. பொன்னி, படிப்பு என்பது இனி நம்மிடையே பரஸ்பரமாக இருக்கட்டும். பாடம் என்பது இருவருமே நடக்கின்ற விஷயமாக இருக்கட்டும்.

பொன்னி, நீ என்னை புருஷன் என்று உயர்த்தி வைத்து விலக்கி விடாதே, என்னோடு பேசு. விவாதம் செய். உன் அபிப்ராயங்களைத் தெள்ளத் தெளிவாக என் முன்பு கொட்டு. அதே நேரம் அந்த அபிப்ராயங்களை நான் மறுத்துச் சொன்னால் மாற்றிக் கொள்ளவும் தயாராக இரு. அதைப் போலவே, நானும் அபிப்ராயங்கள் சொல்லுபவனாகவும், அந்த அபிப்பிராயங்கள் தவறாக இருந்தால் ஏற்றுக்கொண்டு எண்ணத்தை மாற்றிக் கொள்பவனாகவும் இருப்பேன்.

என் மனதில் சந்தோஷம் தலைகால் புரியாமல் ஆடுகிறது. இந்த நேரம் உன்னை அணைத்துக் கொண்டு முத்த மழை பொழிய வேண்டுமா அல்லது தூக்கிக் கொண்டு எங்கேனும் ஓடி எனக்கு நீதான் என்று உறுதி செய்து கொள்ள, உன்னை

பலவந்தப்படுத்தி அடைய வேண்டுமா? எதைச் செய்வது என்று புரியாமல் உள்ளுக்குள் ஒரு பரபரப்பு ஏற்படுகிறது. ஆனால், நான் எதைச் செய்தாலும்; அது உனக்கு தீங்காகவே முடியும். உன் அருகில் இப்படி உட்கார்ந்திருப்பதைக் கூட எவரேனும் பார்த்து உன்னை கேலி செய்யக்கூடும். அந்தக் கேலி உன் மனதைப் புண்படுத்தும். உன் மனம் புண்பட்டால் நான் புண்பட்டது போல. எனவே விலகிக் கொள்கிறேன். ஆயினும் ஒரே ஒரு செய்கை செய்யப் போகிறேன். தயவுசெய்து எழுந்திரு'' என்று நீலகண்ட சிவன் சொல்ல, அவள் எழுந்து நின்றாள்.

''எது கிழக்கு?'' என்று கேட்டு அவன் அவளை கிழக்குப் பார்த்து நிற்க வைத்தான். கை கூப்பினான்.

''வாலை என்கிற ஒரு தேவதையை வழிபடக்கூடிய மந்திரத்தை நான் ஒரு சாதுவிடமிருந்து கங்கைக்கரையில் கற்றுக் கொண்டேன். கங்கைக்கரைக்கு வந்த ஞாபகமாக இங்கிருந்து என்ன கொண்டு செல்வது என்று அந்த சாதுவைக் கேட்டபோது, 'எதை எடுத்துக் கொண்டு போனாலும் சில நாட்களுக்கு மட்டுமே வரும். மிக கெட்டியான பொருளாய் இருந்தால் இந்த ஜென்மம் முழுவதும் இருக்கும். ஆனால், பல ஜென்மங்கள் தொடர்ந்து நீ எடுத்துப் போகக்கூடிய ஒரு விஷயத்தை நான் உனக்குத் தருகிறேன். ஏற்றுக் கொள்கிறாயா' என்று அந்த சாது கேட்க, நான் தலையசைத்தேன். எனக்கு மந்திர உபதேசம் அவர் செய்தார். வாலை என்கிற தேவதை பற்றி விளக்கினார்.

'கன்னித்தன்மை உடையவளும், அழகானவளும், பூப்படைந்தவளும், மிகவும் கெட்டிக்காரியும், தாய் போல நேசிக்கின்ற குணமுடையவளும், உலகத்தை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணமுடையவளும் விரைவாக வந்து உதவி செய்பவளுமான வாலையை நான் பூஜிக்கிறேன்' என்று அந்த ஸ்லோகம் சொல்கிறது.

இளம் பெண்களை வாலை என்கிற தேவதையாக நினைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறது. குறிப்பாய்

பூப்படைவதற்கு முன்னால், எப்பொழுது வேண்டுமானாலும் பூப்படையத் தயாராக இருக்கும் பெண்களை நமஸ்கரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை இந்த மந்திரம் ஏற்படுத்துகிறது. பூப்படைந்த பிறகு அவளை இன்னும் மரியாதையாக நடத்தச் சொல்கிறது.

எனவே உன்னை வாலை என்கிற பெண்ணாக மனத்திற்குள் தியானித்து, அந்த மந்திரத்தை மூன்று முறை சொல்லி நமஸ்கரிக்கப் போகிறேன்.''

அவன் உரக்க மந்திரம் சொன்னான். அவள் திகைத்து தடுப்பதற்கு முன்பு நெடுஞ்சாண்கிடையாக அவள் காலில் விழுந்து வணங்கினான். தொலைவே சிரிப்புக் குரல் கேட்டது. அவள் பயந்தாள். அவன் எழுந்து அவள் கன்னங்களைத் தாங்கி நெற்றியில் முத்தமிட்டு, சற்று நேரம் கழித்து இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டு, குதிரையை அவிழ்த்து ஏறிக் கொண்டு அவள் வீடு நோக்கிப் போனான்.

தொலைவிலுள்ள மரத்தின் மறைவிலிருந்து அண்ணி திபுதிபுவென்று ஓடி வந்தாள். ஓடி வந்து இறுக்கிக் கொண்டாள். அவள் கண்களில் நீர் தளும்பியிருந்தது. கண்ணீர் வழிந்திருந்தது.

''நான் என்ன நினைத்தேனோ அது நடந்து விட்டது. உன்னுடைய கெட்டிக்கார தனத்தை அவன் புரிந்து கொண்டு விட்டான். நான்காவது நாளிலேயே அவன் நமஸ்கரிக்கும் படியாய் நீ பேசியிருக்கிறாயென்றால், இது இறைவனுடைய தூண்டுதல். என் கனவுகள் பலித்துக் கொண்டு வருகின்றன. எனக்கு மிகவும் சந்தோஷம். வெகு விரைவில் உங்கள் திருமணம் நடக்க வேண்டும்'' என்று அண்ணி அவளை அணைத்துக் கொள்ள, மற்ற பெண்களும் வெளியே வந்தார்கள்.

அவளை கேலி செய்தார்கள். அவள் நாணினாள். அவர்கள் சூழ வீட்டுக்கு வந்தாள். அவர்கள் திருமணம் விரைவில் நடத்த ஏற்பாடாயிற்று.

# 3

மயிலை, திருவல்லிக்கேணியே கிடுகிடுக்கின்ற வகையில் அவர்களுடைய திருமணம் நடைபெற்றது. பந்தக் கால் நட்ட நேரத்தில் அந்தப் பந்தக்காலுக்கு பெண்ணின் தந்தையும், பிள்ளையின் தந்தையும் பூஜை செய்து கொண்டிருக்கிற நேரத்தில் இளவரசர் திருவொற்றியூருக்கு வந்து பாடி இறங்கியிருக்கிறார் என்ற செய்தி வர, அவன் உடனே குதிரையில் தாவி ஏறினான்.

''அப்பனே இப்படி விரைவாகப் போகக்கூடாது. நாங்களும் வருகிறோம். அமைதியாக இரு'' என்று அவனை ஆசுவாசப்படுத்தி, ஒன்று இரண்டாகச் சேர்ந்து மொத்தம் நாற்பது பேர்கள் திருவொற்றியூர் நோக்கி விரைந்தார்கள்.

போய்ச் சேர்ந்ததும், இளவரசர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி கேட்டு விலகி ஓரமாக நின்றார்கள். இவர்கள் வந்த ஆரவாரம் கேட்டோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலேயோ ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இளவரசர் சட்டென்று விழித்துக் கொண்டார். என்ன சப்தம் என்று கேட்டு வெளியே எட்டிப்பார்த்தார். நாற்பது குதிரைகளில் வீரர்கள் நிற்பதைக் கண்டு ஆவலாகி, யார் அவர்கள் என்று விசாரித்துக் கீழே இறங்கி வந்தார். அதில் கேயூரமணிந்து வந்திருந்த நீலகண்ட சிவனைப் பார்த்து அருகே வரச் சொன்னார்.

''எப்போது கேயூரம் வாங்கினாய். யாரிடம் வாங்கினாய்?'' என்று விசாரித்தார். ''மயிலை திருவல்லிக்கேணி தளபதி ஒரு அந்தணன்தானே. நீங்கள் எந்தப் பகுதியிலிருந்து வருகிறீர்கள்...'' என்று கேட்டார்.

''மயிலையின் நடுப்பகுதியான செழுங்கழுநீர் ஓடையின் அருகே இருந்துவருகிறோம்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

''நான் பார்த்திருக்கிறேன். மிகக் குளுமையான இடமது. ஓடையில் நீர் இருக்கிறதா, ஏதேனும் உதவிகள் செய்ய வேண்டுமா? எத்தனை போகம் நெல் விளைவிக்கிறீர்கள்? வேறு என்ன பயிரெல்லாம் விளைகிறது? நீங்கள் வேளாளர்கள்தானே. திருத்திய காடுகள் எவ்வளவு உள்ளன? இன்னும் திருத்தப்பட வேண்டியவை எவ்வளவு உள்ளன?'' என்று கேள்விகள் கேட்டு விவரங்கள் குறித்துக் கொள்ளச் சொன்னார்.

நீலகண்ட சிவனிடம் அவரில்லாது அவன் கலந்து கொண்ட படையெடுப்புகள் பற்றி விசாரித்தார்.

''நல்லது. நான் இன்னும் சில நாட்கள் இருப்பேன். முடியும்போது மயிலை பக்கமும் வருகிறேன்'' என்று சொல்ல, நீலகண்ட சிவனின் திருமணம் இன்னும் ஐந்து நாளில் நடக்கப் போவதைப் பற்றி அவர்கள் சொன்னார்கள், நீலகண்ட சிவன் கைகட்டி நாணி நின்றான்.

''இன்னும் திருமணமாகவில்லையா, ஏன் இப்படி, எதனால் இவ்வளவு தள்ளிப் போட்டீர்கள்? தங்களுக்கு இருபத்தைந்து அகவைக்கு மேல் இருக்கும் போலிருக்கிறதே'' என்று இளவரசர் வியக்க, அவன் ஐந்து வருடங்கள் அவருடைய படையெடுப்பில் கலந்து கொண்டு வடக்கே பல இடங்கள் போனதைச் சொன்னான். அங்கே பாடி அமைத்துத் தங்கியதை விவரித்தான்.

''இந்த தேசத்திற்கென்றே உன் சுகத்தைத் தள்ளிப் போட்டிருக்கிறாய் அல்லவா. அதைவிட மிகப் பெரிய தியாகம் ஏதுமில்லை. இது மிகவும் உன்னதமான விஷயம். இந்தத் தேசத்திற்கு இப்படிப்பட்ட ஒரு தியாகத்தை நீ செய்திருக்கிற படியால் உனக்கு நான் ஏதேனும் செய்தாக வேண்டும். எனவே வெகு நிச்சயமாய் உன் திருமணத்திற்கு வருகிறேன்'' என்று சொல்லி, அருகே உள்ள ஆட்களிடம் அவன் திருமண நேரத்தையும் தேதியையும் குறித்துக் கொள்ளச் சொன்னார். பேசி அயர்ந்ததால் கொட்டாவி விட்டார். 'ஓய்வெடுக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

மற்ற அதிகாரிகள் வந்தவர்களை மெல்ல விலக்க, அவர்கள் வணங்கி விடை பெற்றார்கள். காணிக்கையாக ஒரு சிறு பை நிறைய பொற்கழஞ்சுகள் கொடுத்தார்கள். இளவரசர் அதைக் கையில் வாங்கி மறுபடியும் அவர்களிடமே திருப்பிக் கொடுத்தார்.

"உங்களுக்கு நான் ஏதேனும் தர வேண்டிய அவசியம் வந்திருப்பதை உணருகிறேன், இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். வரியை ஒழுங்காகச் செலுத்தினால் போது மானது. மற்ற சன்மானங்கள் எதுவும் தேவையில்லை. வரி ஒழுங்காகச் செலுத்தப்பட்டிருக்கிறதா" என்று கேட்க, மயிலைப்பகுதி முழுவதுமே வரி வசூலிப்பு சரியாக நடந்திருப்பது அதிகாரிகளால் சொல்லப்பட்டது. இளவரசர் இன்னும் சந்தோஷமானார். அவர்களை நல்லபடி வழியனுப்பி வைத்தார்.

அவர்கள் வெளியேறியபோது அந்தணர்கள் பெரும் படையோடு உள்ளுக்குள் நுழைந்தார்கள். இளவரசர் ஓய்வெடுக்க உள்ளுக்குள்ளே போய்விட்டார். வெகு நேரம் இனி காத்திருக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் புரிந்தது. மயிலையின் தளபதியான வயது முதிர்ந்த அந்தணர், நீலகண்ட சிவனைக் கூப்பிட்டார்.

"நீ தவறு செய்கிறாய். தளபதியாக நான் இருக்கும் போது, நீ அவசரப்பட்டு உப தளபதியாக உன்னைக் காண்பித்துக் கொள்ள இங்கே வந்திருக்கிறாய். ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கடிந்து கொண்டார்.

"நான் உபதளபதியாக வரவில்லை. என்னுடைய திருமணத்திற்கு இளவரசரை அழைக்க வேண்டுமென்பதற்காக வந்தேன். வரும் ஐந்தாம் நாள் என் திருமணம். நீங்களும் வந்து வாழ்த்த வேண்டும். இளவரசர் வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவர் வருவதற்குண்டான ஏற்பாட்டை நீங்கள்தான் செய்ய வேண்டும். அதற்காக நானே உங்கள்ளைத் தேடி வரலா

மென்றிருந்தேன்'' என்று நீலகண்ட சிவன் சொல்ல, அவர் திகைத்தார். யோசித்தார்.

''சரி நான் இளவரசரைப் பார்த்துவிட்டு வருகிறேன். நீ அக்ரஹாரத்திற்கு வந்து எல்லோரிடமும் செய்தி சொல்லி விடு'' என்று சொன்னார்.

அவன் சற்று கவலையானான். அவன் கூட இருந்தவர்களும் கவலையானார்கள்.

அந்தணர்கள் வசிக்கும் பிரம்ம தேயங்கள் சுத்தமாக இருந்தன. அவர்கள் வீடுகள் பெரிதாக இருந்தன. உறுதியாக இருந்தன. செங்கல் சுவர் கட்டி, முன்னும் பின்னும் வாசல் வைத்து, நிலைக் கதவு வைத்து அகலமான, உயரமான திண்ணை வைத்து, அசையாத ஓடுகள் வேய்ந்து, சுற்றி தோட்டம் அமைத்து, நீண்ட கொல்லைப் புறங்கள் அமைத்து, ஒவ்வொரு வீட்டிலும் அகலமான கேணியை உருவாக்கி பெரிய கம்பீரத்துடன் அவர்கள் வாழ்ந்தார்கள்.

ஆனால், அவர்களுக்கிடையே ஒற்றுமையில்லை என்பது அங்கு போய் உட்கார்ந்தவுடனேயே தெரிந்து போயிற்று. யார் தலைவராக இருக்கிறாரோ அவரை மதிக்கக்கூடாது என்பது போல் மற்றவர்கள் செயல்பட்டார்கள். வேறு எவருக்கு தலைவராக இருக்க வேண்டும் என்ற ஆசையிருக்கிறதோ, அவரை தலைவருக்கு எதிராகத் தூண்டி விட்டார்கள். இதனால் தனக்கு எந்தப் பலனும் இல்லையென்றாலும் ஒரு சந்தோஷத்திற்காக சண்டைகளைத் துவக்கினார்கள்.

சிறு பையன்களுக்கோ, பெரியவர்களுக்கோ, நடுத்தர வயதினருக்கோ என எவருக்குமே அடக்கமோ, அமைதியோ இல்லை. எப்பொழுதும் ஒரு வெற்றிக் களிப்பில் அல்லது தன்னைப்போல் உண்டா என்ற இறுமாப்பில் சகலரும் அலைந்தார்கள்.

நீலகண்ட சிவனின் அப்பா, சதாசிவத்தார் இதைப் பார்த்து விட்டு தலையிலடித்துக் கொண்டார். தவறு இவர்கள் மேல் அல்ல. அரசாங்கத்தின் மீது. அரசாங்கம் இவர்களுக்கு

சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறது. அளவுக்கு மிஞ்சி கொண்டாடியிருக்கிறது. எனவே, அவர்களுடைய யோக்கியதைக்கு அதிகமாகவே இறுமாப்பு கொள்கிறார்கள். மதிக்கப்பட வேண்டிய விதத்தில் மதிக்கப்பட்டால் பிரச்சினை இல்லை. தனக்கு மதிப்பு இருக்கிறதா, இல்லையா என்று ஒருவருக்குப் புரிவதற்கு முன்னே அவருக்கு மிகப் பெரிய மதிப்பு வந்துவிடுவதால் சிக்கல் ஏற்பட்டு விடுகிறது.

''இதோ இந்த பதினைந்து வயது இளைஞனுக்கு எந்த விஷயமும் தெரியாது. ஆனாலும் குடுமியும் பூணூலும், கையில் அரசங்கழியும், இடுப்பில் கோமணமும் துண்டும், நெற்றியில் திருச்சின்னமும் கொண்டிருப்பதாலேயே அவன் தன்னை ஞானி என்று நினைத்துக் கொள்கிறான். சில ஸ்லோகங்களை வாய் விட்டு உரத்துச் சொல்லுவதாலேயே எல்லாம் தெரிந்து விட்டதாய் ஒரு கம்பீரம் வந்து விடுகிறது. அறிந்து கொள்ள ஆரம்ப முயற்சி கூட செய்யாமல் வெறும் தவளைப் பாடத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி, அந்த தவளைப் பாடத்திற்கு சன்மானம் வாங்கி, அந்த சன்மானத்தால் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வாழ்க்கைத்தரம் உயர்ந்ததால் கர்வக் கொம்புகள் ஏற்பட்டு விட்டன. சலுகை பெறும் எந்தக் குடும்பமும், எந்தக் குலமும் இத்தகைய இறுமாப்பை அடையும். இந்த இறுமாப்பு அவர்களை நிலைகுலைய வைக்கும் அளவிற்கு வளர்ந்துவிடும்.

பத்மாசுரன் கதை இதைத்தான் சொல்கிறது. ஒரு குலம் மற்றவரால் அழியப் போவதில்லை. அது அவர்களாலேயே அழியும். வலிவுள்ளவர்கள் மற்றவர்களால் தாக்கப்படுவதில்லை. தன்னைத் தானே மாய்த்துக் கொள்கின்ற மூடத்தனத்தை அவர்கள் பெற்று விடுகிறார்கள்.''

''அப்பொழுது, என்ன செய்வது? அரசாங்கம் சலுகை கொடுத்தால் வேண்டாமென்று சொல்லி விடுவதா?''

''சொல்ல முடியாது. சொல்ல விடமாட்டார்கள். அழியும் தருணத்தில் சலுகைகள் கிடைக்கும். மடியும் தருணத்தில் சில மனிதர்கள் முகம் மலர உறவாடுவார்கள், அது போலத்தான் இது.''

''நாம் நமது திருமணத்திற்கு அழைக்கத்தானே வந்திருக்கிறோம். வரவேற்புக்குழு அமைப்பதற்கும், இளவரசருக்குண்டான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகவும் தானே வந்திருக்கிறோம்?''

''அது ஒரு சாக்கு. அந்தணக் குடியிருப்பை உற்றுப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை. அவர்கள் தங்கள் கூட்டங்களுக்கு நம்மை அழைப்பதே இல்லை. நம்மை அழைத்தால் இவர்களுடைய பிளவு நமக்குத் தெரிந்து விடும் என்ற பயம் காரணமாக இருக்கலாம். இப்போது நாம் இங்கு இருப்பதாலேயே அடங்கிப் போகிறார்கள். இல்லையென்றால் இப்போது, இங்கே பெரிய சண்டை ஏற்பட்டிருக்கும் என்பது இவர்கள் பேச்சிலிருந்து தெரிகிறது. பின்னால் பெண்கள் அலுத்துக் கொள்வதைப் பார்த்தாயா? வேளாளர்கள் வந்த போதும், இன்னும் வீராப்பு குறையாமல் பேசுகிறீர்களே. மறுபடியும் சண்டை ஆரம்பித்து விடாதீர்கள். நீங்கள் சண்டை போட்டது போதுமென்று ஒரு பெண்மணி சொன்னதை நான் கேட்டேன். அவள் எவ்வளவு நொந்து போய் சொல்கிறா ளென்பதை அவள் முகபாவத்திலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

பெண்களும் இங்கே நன்கு நடத்தப்படுவதில்லை. அவர்கள் வருத்தப்படும்படி பல ஆண்கள் நடந்து கொள் கிறார்கள். பெண்கள் அடக்கி வைக்கப்பட வேண்டியவர்கள், விலக்கி வைக்கப்ட ட வேண்டியவர்கள் என்கிற கீழ்த்தரமான கம்பீரத்துடன் இவர்கள் இருக்கிறார்கள்.

''வேளாளர்களாகிய நாம் இப்படி எந்தச் சலுகையும் பெறாமல் எந்த முக்கியத்துவமும் இல்லாமல், இப்படி அமைதியாக இருந்துவிட்டால் நல்லபடியாக வாழ்வோம் என்று நினைக்கிறீர்களா?''

''நாம் வளர்வதும், நல்லபடியாக இருப்பதும் ஒரு தனிமனிதன் கையில் இல்லை. குறிப்பாய் என் கையிலில்லை.

காலம் விளையாடுகிற இடம் இது. காலம் நம்மை சில சமயம் உச்சிக்கு ஏற்றும். சில சமயம் உருட்டியும் விட்டு விடும். பெரிய பெரிய குழுக்களை, தேசத்தை, இனத்தை அது உருமாற்றும். இதையெல்லாம் தனிமனிதன் தடுத்துக் கொண்டிருக்க முடியாது.''

''வெறுமே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதா, நம்மாலான உதவியை நாம் செய்யலாமல்லவா?''

''எது உதவி என்பதைப் புரிந்து கொள்ளவே ஒரு ஆயுசு போதாது. இப்போது உபதளபதியாய் ஆகியிருக்கிறாயே. இது உதவியா இல்லை, வம்பா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

இந்த அந்தணர் குடியிருப்பில் உட்கார்ந்து உனக்கு லக்ன பத்திரிகை எழுதிக் கொண்டு, இவர்களை வரவேற்க வேண்டிய அவசியம் நமக்கு என்ன வந்தது என்று யோசிக்கிறேன். இவர்கள் சண்டையைப் பார்க்க வேண்டிய ஒரு வேதனை நமக்கு ஏன் வந்தது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். வளர்ச்சி என்பதை நிதானமாக வைத்துக் கொள்ள எவருக்கும் தெரிவதே இல்லை. என்ன செய்வது, மனிதனுடைய இயல்பு அது. வளர்ச்சியில் தன் வசம் இருப்பது எல்லோருக்கும் இயல்பு. நம் பேச்சை மறந்துவிட்டு இவர்களைக் கவனி. இவர்களை நம் இடத்திற்கு வரவழைக்க முயற்சி செய்.

இப்போதைய திட்டத்தின்படி உன் திருமணத்தை இங்கேயே நடுத்தெருவில் நடத்தினாலென்ன என்று ஒரு அந்தணர் யோசனை சொல்லியிருக்கிறார். அந்த யோசனையை அவர்களே கேட்காதது போல் இருக்கிறார்கள். நாம் கேட்டு விட்டோமா என்று உற்றுப் பார்க்கிறார்கள். ஒரு கால் நாழிகை பொறுத்து, இப்படி ஒரு யோசனை யாரோ சொன்னார்களே அந்த யோசனை உங்களுக்குப் பிடித்திருந்ததா என்று குழைவாகக் கேட்பார்கள். எங்கேனும் லேசாய் சம்மதம் தெரிவித்து விட்டால் அப்படியே பாய்வார்கள். அந்தணக் குடியிருப்பில் உன்

திருமணத்தை நடத்தி, இளவரசரை அங்கு வரவழைத்து, அப்படியே திருவொற்றியூருக்கு அனுப்பி விடுவார்கள்.''

''அப்பா, இவ்வளவு கூர்மையாகப் பார்க்க எங்கு கற்றுக் கொண்டீர்கள்?''

''நீயும் கற்றுக் கொள்ள வேண்டும். நீலகண்ட சிவனே, நீயும் கற்றுக் கொள்ள வேண்டும்'' அப்பா கவலையோடு பேசினார்.

நீலகண்ட சிவன் அவர்களின் யோசனையைக் காதிலேயே வாங்காதவன் போல், மறுபடியும் கைகூப்பி, தன்னுடைய திருமணம் இங்கே இன்ன விதமாய் நடக்கும் என்றும், அங்கு வந்து ஆசீர்வதிக்குமாறும் கேட்டுக் கொண்டான்.

யாரோ ஏதோ சொன்னார்களே என்று அவர்கள் ஆரம்பித்த போது, ''யாரும் எதுவும் சொல்லவில்லை. என்னுடைய திருமணம், என்னுடைய ஊரில், என்னுடைய கோயிலில்தான் நடைபெற வேண்டுமே தவிர, நடுத்தெருவில் நடைபெற இயலாது. நீங்கள் வேறு விதம். நாங்கள் வேறு விதம். எங்கள் பறையும், எக்காளமும் இங்கு முழங்குவதில் எனக்கு விருப்பமில்லை. வேதம் சொல்லும் புனிதமான ஒரு இடத்தை எங்களுடைய ஆடம்பரமான வாத்தியங்களால் அதிரடிப்பதற்கு விருப்பமில்லை. எனவே, தயைகூர்ந்து, நீங்கள் அனைவரும் அங்கு வந்து என்னை ஆசீர்வதித்து தட்சிணை பெற்றுப் போகும்படி கேட்டுக் கொள்கிறேன்.''

''தட்சிணையெல்லாம் வேண்டாமப்பா'' என்று தலைவர் சொல்ல, இன்னொருவர் ''என்ன தட்சிணை?'' என்று கேட்டார்.

வேளாளர் கூட்டம் அவர்களின் பிளவு கண்டு முகம் சுளித்தது.

''நான் மணமகனோடு பேசிக் கொண்டிருக்க, நீ திடீரென்று குறுக்கே பாய்ந்து பேசுகிறாயே'' என்று தலைவர்

தட்சிணை கேட்டவரை கண்டிக்க, ''நீயே பேசிக் கொண்டிருக்கிறாயே என்றுதான் நான் பேசினேன்'' என்று குறுக்கே பேசியவர் விளக்கமளித்தார்.

இதை எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் செய்து கொள்ளலாம். உனக்கு வாய் வலிக்குமோ என்று நான் பேசினேன் என்றும் சொல்லிக் கொள்ளலாம். அல்லது நீ மட்டும் பேசினால் முடிந்து போயிற்றா, நான் பேசக் கூடாதா என்றும் எடுத்துக் கொள்ளலாம். வார்த்தைகளில் அவர்கள் விற்பன்னர்களாக இருந்தார்கள். வார்த்தைகளிலேயே விளையாடினார்கள்.

''விடைபெற்றுக் கொள்கிறோம்'' என்று வேளாளர்கள் எழும்ப, அந்தணர்கள் பரபரப்பானார்கள். ''இன்னும் முடிவாகவே இல்லையே'' என்று கூச்சலாய் பேசினார்கள்.

''திருமணம்தானே. எப்போதோ முடிவாகிவிட்டதே. அது குறித்து எந்தச் சந்தேகமும் இல்லையே'' என்று நீலகண்ட சிவனின் தகப்பனார் அப்பாவியாய் பேசினார்.

''இல்லை. எங்கு திருமணம் நடப்பது என்பது குறித்து.''

''இது குறித்து கேள்வி எழவே வாய்ப்பு இல்லையே. நாங்கள் அழைக்க வந்திருக்கிறோம். நீங்கள்தானே வர வேண்டும். உங்கள் வீட்டில் திருமணம் நடத்திக் கொள்ளலாமா என்று கேட்கவா வந்தோம்'' என்று வாய்விட்டுச் சிரித்தார்.

''இல்லை. இளவரசருடைய பாதுகாப்புக் கருதி திருமணம்...''

''எங்களுடைய இடம் பாதுகாப்பு அற்றது என்று கருதினால், அது இளவரசருக்கும், இந்த அரசுக்கும் இழுக்கு. இந்த பூமியின், இந்தத் தேசத்தின் ஒவ்வொரு சாணும் அரசரால் பாதுகாக்கப்படுகிறது. பிரம்ம தேய இடங்கள் மட்டும் பாதுகாப்பானவை, வேளாளர் குடியிருப்புகள் எந்த பாதுகாப்பு மற்றவை என்று நீங்கள் சொன்னதாய் இளவரசர் கேள்விப்பட்டால், மிகவும் வருத்தப்படுவார்.'' நீலகண்ட சிவனின்

தகப்பனார் சொல்ல, அந்தணர்கள் மிரண்டார்கள். அவரை உற்றுப் பார்த்தார்கள். இவ்வளவு கெட்டிக்காரனா நீ என்பது போல் முகம் சுளித்தார்கள்.

நீலகண்ட சிவனின் அப்பா அமைதியாய் கைகட்டி நின்றிருந்தார்.

"அப்பொழுது திருமணம் அங்குதான் நடக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?"

"அதில் இன்னொரு கருத்துக்கே இடமில்லை. உங்களுக்கு ஏன் இந்தச் சந்தேகம் வந்தது என்று எனக்குப் புரியவில்லை" நீலகண்ட சிவனின் அப்பா தீர்க்கமாய் சொன்னார்.

அந்தணர்கள் முகம் சுருங்கினார்கள். மறுபடியும் கூடி யோசித்தார்கள்.

"நல்லது. இளவரசர் வருவதும் போவதும் எங்களுக்கு யார் தெரிவிப்பார்கள். நாங்கள் இளவரசர் வந்த பிறகு வரலாமென்று இருக்கிறோம்."

"அடடா, அப்படியே செய்யலாம். ஆனால் நீங்கள் கிளம்புவதற்கு அரை நாழிகை ஆகும். வருவதற்கு அரை நாழிகை ஆகும். வந்து சேர்ந்து அரசரைப் பார்ப்பதற்கு அரை நாழிகையாகும். ஒன்றரை நாழிகைக்கு மேல் இளவரச உங்களுக்காக அங்கு காத்திருப்பாரா... என்பதை மட்டும் நீங்கள் தெரிந்து கொண்டு சொன்னால், மற்றவைகளை நாங்கள் ஏற்பாடு செய்து கொள்கிறோம்."

தலைவராகப்பட்டவர் காத்திருந்து இளவரசனை எதிர்கொண்டு அழைக்கும் நிலைமை மாறி, இளவரச காத்திருக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டதெனில், அது மிகப் பெரிய பூகம்பத்தை ஏற்படுத்தும். ஒரே வீச்சில் அக்ரஹாரத்தின் அதிகாரங்கள் துடைக்கப்பட்டு விடும். அப்படி துடைக்கப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

அரசரைப்போல் இளவரசர் அந்தணர்மீது அவ்வளவு நம்பிக்கை உள்ளவர் அல்ல. அவருக்கு மிகவும் பிடித்தவர்கள் கருமார்கள். ஆயுதம் செய்கின்ற அந்த இனத்தாரை இளவரசர் அதிகம் கொண்டாடுவார். அவர்களோடு சரிசமமாய் பந்தியில் அமர்ந்து சாப்பிடுவார். அவர்கள் வீட்டுத் திண்ணையிலேயே கூட பலமுறை தூங்கியிருக்கிறார். யுத்த களத்தில் கருமார்களுடைய சேவை மிகப் பெரியது என்று பலமுறை பாராட்டியிருக்கிறார். கருமார்களுக்குப் பிறகு இளவரசருக்கு வேளாளர்களைப் பிடிக்கும்.

அரசர் அந்தணர்களை ஆதரிப்பது போல இளவரசர் அந்தணர்களைக் கொண்டாடுவதில்லை. 'சரி சரி என்ன' என்று அவர்கள் பேச ஆரம்பிக்கும் போதே முடிக்கின்ற தோரணையை ஏற்படுத்திக் கொள்வார். அந்தணர்கள் சொல்வதைச் சிரிப்போடு கேட்டுக் கொள்வார்.

அதனால் அந்தணர்கள் ஒருவித அச்சத்தோடு தான் இருந்தார்கள். இதுபற்றி இளவரசரிடம் கேட்டபோது, "என்னிடம் பிரியமாக இருப்பவர்களிடம் நான் பிரியமாக இருப்பேன். என்னை விட பெரியவன் என்று எவன் நினைத்தாலும் அவனை விட நான் பெரியவன் என்று நிரூபிப்பேன்" என்று அதட்டிச் சொன்னாராம்.

அந்தணர்கள் அதற்குப் பிறகு அவரை அதிகம் பகைத்துக் கொள்ள விரும்பாமல் மிருதுவாக நடத்த முயற்சி செய்தார்கள். இப்பொழுது இந்த திருமணத்தை வேறு எங்கும் நடத்தி, அதில் அவர் ஏதாவது குறை கண்டுபிடித்து இடி வாங்க வேண்டுமா என்ற ஒரு கேள்வியும் அவர்களுக்கு இருந்தது. அதனால் அந்தணர்கள் சட்டென்று வேளாளர்கள் குடியிருப்புக்கு வர சம்மதித்தார்கள். 'என்ன தட்சிணை, என்ன தட்சிணை' என்று பல பக்கமும் குரல் எழும்பியது.

சொல்லிவிடலாமா என்று நீலகண்ட சிவன் வாய் திறக்க முயற்சித்த போது, சட்டென்று நீலகண்ட சிவன் தகப்பனார் அவனை அடக்கினார்.

''இளவரசர் என்ன கட்டளையிடுகிறாரோ, அதை உடனடியாகச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.''

''தட்சிணை என்ன என்று இளவரசர் சொல்ல வேண்டுமா... அதை நீங்கள் தீர்மானிக்க முடியாதா?''

''வீட்டில் பெரியவன் நான். என்னைவிட பெரியவ இளவரசர். ஒரு சபையில் யார் பெரியவரோ அவர் சொல்லித்தா நான் முடிவெடுக்க வேண்டுமே தவிர, நானாக முடிவெடுக் முடியாது. ஒரு வேளை நான் உங்களுக்கு ஒரு காசு தட்சிணை தருகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். இளவரச கோபித்துக் கொண்டு, 'ஒரு அந்தணருக்கு ஒரு காசுதா தட்சிணையா பத்து காசு கொடு' என்றால் கொடுத்து விட்டு போகிறேன்.''

அந்தணர்கள் மறுபடியும் இந்த சாமர்த்தியம் கண்டு திகைத்தார்கள். வாசலிலிருந்த அந்தணர் வாய் விட்டுச் சிரித்தா

''அய்யா, ஒரு தீர்மானத்தோடுதான் உள்ளே நுழைந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது. உமக்கு காயங்க படாமல் பார்த்துக் கொள்ளும். எப்போது வாள் உருவி விரட் ஆரம்பித்தீரோ, அப்போது எதிர்பக்கமும் வாள் உருவப்படு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எப்பொழுது வார்த்தையா விளையாடத் துவங்கி விட்டீர்களோ, அதே விதமா வார்த்தைகளால் உங்களைக் காயப்படுத்தவும் பலர் தயாரா விடக்கூடும். எனவே, பொறுப்பு உங்களுக்கு அதிகமாகிறது என்று அந்த அந்தணர் பிரியமாகச் சொன்னார்.

நீலகண்ட சிவனின் அப்பா சதாசிவத்தார் அவனை நோக்கி கைகூப்பினார். ''இறைவன் இருக்கிறார். கற்பகத்தா இருக்கிறாள். கைவிட மாட்டாள்'' என்று சொன்னார்.

அந்தணர்கள் ஒட்டுமொத்தமாய் அங்கு வருவதற்கு சம்மதித்தார்கள். ''நல்ல தட்சிணை கொடுக்கவேண்டும்'' என்று கூறினார்கள்.

திருமணத்தன்று காலையிலேயே அந்தணர்கள் வந்து விட்டார்கள். மொத்தம் இருபத்தேழு அந்தணர் வீடுகள். அந்த இருபத்தேழு அந்தணர் வீட்டிலிருந்தும் பல வேதம் படித்த இளைஞர்கள் வர, அங்கு வந்த அந்தணர்கள் எண்ணிக்கை ஐம்பத்து மூன்றாக உயர்ந்தது.

அவர்கள் தனிப் பந்தலில் அமர்ந்து ஒரே குரலில், வேதம் சொல்ல ஆரம்பித்தார்கள். அவர்கள் அப்படிச் சொல்வது மிக இனிமையாக இருந்தது. அந்த இடத்தின் அதிர்வுகளை மாற்றியது.

வேளாளர்கள் அவர்களை வலம் வந்து வணங்கினார்கள். வேளாளர்கள் குடியிருப்பிலிருந்து பசும்பாலும், பழங்களும் அந்தணர்களுக்குக் காணிக்கையாகத் தரப்பட்டன. மந்திர ஓலையை மணமகன் நெற்றியில் கட்டும்படியாகவும், மந்திர தர்ப்பையை மணமகளின் இடுப்பில் கட்டும்படியாகவும் அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

அதர்வண வேதம் படித்த நான்கு இளைஞர்கள் வலம் வந்து, ஜலம் தெளித்து, ஆசீர்வதித்தார்கள். வேளாளர்களின் விநாயகர் கோயிலுக்குப் போய் ஜபம் செய்தார்கள். இன்னும் சிலர் வேளாளர்களின் நிலங்களின் மீது அட்சதைகளையும், புனித நீரையும் தெளித்தார்கள். மணமகனின் சார்பாக அக்னி வளர்த்து, பல ஹோமங்கள் செய்தார்கள். அந்த வீட்டின் முற்றம் முழுவதும் புகை சூழ்ந்தது. அந்தணர்கள் வருகையால் அந்த இடம் கம்பீரமும், கலகலப்பும் அடைந்தது.

திருமண முகூர்த்தம் நெருங்கியது. இளவரசர் வருகிறார் என்று அறிவிக்க வரும் தூதுவன் கூட வரவில்லை.

'என்ன செய்வது இளவரசருக்காக காத்திருப்பதா அல்லது முகூர்த்தம் பார்த்து முடித்து விடுவதா' எல்லோரும் யோசித்தார்கள்.

ஒரு தூதுவன் முகூர்த்த நேரம் துவங்கியதும் ஓடி வந்தான். குதிரையிலிருந்து வேர்த்து விறுவிறுக்க இறங்கினான்.

''நேரம் தவறாது திருமணத்தை நடத்தி விடுமாறு, இளவரசர் கட்டளையிட்டிருக்கிறார். வெகு நிச்சயமாய் வந்து வாழ்த்துத் தெரிவிப்பார். எனவே, இளவரசர் வருகைக்கு உங்கள் ஊர் தயாராக இருக்கட்டும்'' என்று சொன்னான்.

திருமணம் நடந்தது. தீயை வலம் வந்து கற்பாறையில் ஏறி மணமகளின் காலைப் பிடித்து மணமகன் மெட்டியிட்டான். தலைக்குப் பொட்டிட்டான். பின்னலில் பூ வைத்தான். மேலே மஞ்சள் உடுப்பைப் போட்டு, தலையில் அட்சதை தெளித்து ஆசீர்வதித்தான். மணமகள் விழுந்து வணங்கினாள். பிறகு வேளாளர் சம்பிரதாயப்படி மணமகன் மங்கல நாணை அவள் கழுத்திலே பூட்டினான். வாத்தியங்கள் முழங்கின.

நீலகண்ட சிவனும், பொன்னியும் சபையைப் பலமுறை நமஸ்கரித்தார்கள். ஒவ்வொரு அந்தணராக விழுந்து வணங்கி அட்சதை வாங்கிக் கொண்டார்கள் வீட்டுப் பெரியவர்கள் எல்லோரையும் வணங்கினார்கள்.

''இனப்பாகுபாடு பார்க்க வேண்டாம். வயது முதிர்ந்தவர்கள் பிரம்மனுக்கு இணையாவார்கள். எனவே இனபாகுபாடு பார்க்காமல் வயது முதிர்ந்தவர்கள் மனம் குளிர அவர்கள் காலில் விழுந்து நமஸ்கரித்து அவர்கள் வருகையைப் பாராட்டி நன்றியோடு பேசு'' என்று அண்ணி சொல்ல, நீலகண்ட சிவனும், பொன்னியும் சுற்றியிருந்த பல பெரியவர்களின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

''நீங்கள் இந்தத் திருமணத்திற்கு வந்தது எங்கள் பாக்கியம். உங்கள் வாழ்த்துக்கள் எங்கள் வாழ்க்கையைப் பலப்படுத்த வேண்டும். நான் தீர்க்க சுமங்கலியாக இருக்கவும், நல்ல குழந்தைகளைப் பெறவும், என் கணவர் உயர்ந்த நிலையிலிருக்கவும், எங்கள் குடும்பத்தார், எங்கள் குலம் தழைக்கவும் நீங்கள் மனமார ஆசீர்வதிக்க வேண்டும். இந்தப் பெரும்பேறு மூத்தோர் புண்ணியம்'' என்று சொல்லி பொன்னி வணங்க, எதிரே இருந்தவர்கள் நெகிழ்ந்து போய், இரண்டு

கைகளையும் உயரத் தூக்கி, அவள் தலையில் கை வைத்து வானம் நோக்கி, 'இறையே, இறையே சகல சௌபாக்கியங்களும் இந்தக் குழந்தைகளுக்குக் கொடு' என்று கதறலாய் சொல்ல, அங்கு பலபேர் கண்களில் கண்ணீர் வழிந்தது. திருமணம் என்பது எழுச்சியான ஒரு விழாவாகப் போயிற்று.

எல்லாரிடமும் ஆசீர்வாதம் வாங்கியாயிற்றா. இனி யாரிடம் வாங்க வேண்டும் என்று தேடிக்கொண்டிருந்த போது, அந்தணர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து இளவரசர் வருவாரா, மாட்டாரா என்று பேசிக் கொண்டிருந்த போது, நீலகண்ட சிவன் தட்சிணை தரத் துவங்கி விடலாமா என்று தன் குடும்பத்தாருடன் பேசிக் கொண்டிருந்தபோது வாசலில் எக்காளம் கேட்டது.

ஆறு குதிரைகள் அடங்கிய மிகச் சிறிய படையுடன் எந்தவித அலங்காரமுமில்லாமல் இடுப்பிலே நல்ல வேட்டியும், கழுத்திலே நவரத்தின பதக்கமும், தலையிலே இறுக்கிக் கட்டிய முண்டாசும் கைகளில் கேயூரமும், விரலில் முத்திரை மோதிரமும், வளைந்த பாதுகைகளும், திடகாத்திரமான உருவமும், கம்பீரமான முகமும் கொண்ட இளவரசர் ஓடும் குதிரையிலிருந்து குதித்து இறங்கினார். குதிரையை அடுத்து வந்தவர் பிடித்துக் கொள்ள, அது கொட்டகை நோக்கி செலுத்தப்பட்டது. இறங்கிய இளவரசர் வலது கையை நீட்ட அவரிடம் ஒரு பெரிய சால்வை தரப்பட்டது. அந்த சால்வையை விரித்து உதறி எங்கே மணமகன் என்று இளவரசர் கேட்டார். உள்ளுக்குள் நுழைந்தார். பாதுகைகளை ஓரமாக வைத்தார். மண்டபத்தின் மேல் ஏறி மணமகனுக்கு அருகே போய், சால்வையை விசிறி, அவன் தோளில் இறுக்கப் பொருத்தி, அவனை அணைத்துக் கொண்டார்.

''மிக்க சந்தோஷம். மிக்க சந்தோஷம். மகிழ்ச்சியோடு நீண்ட நெடுநாள் குடித்தனம் செய்து நமது தேசத்திற்கு நல்ல பல வீரர்களை உருவாக்கித் தர வேண்டும். எங்கே உன் துணைவி?'' என்று திரும்பிக் கேட்க, பின்பக்கமிருந்த பொன்னிக்கு செய்தி

போயிற்று. பொன்னி கூட்டம் பிளந்து வந்து, அவருக்கு அருகே நின்று கை கூப்பி வணங்கினாள்.

"வாழ்க இளவரசர். வாழ்க தேசம். வாழ்க மாமன்னர். வாழ்க தமிழ்மொழி. வாழ்க இறைப்பற்று" என்று கூவினாள். இளவ ரசர் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"மிகச் சிறிய பெண்ணாக இருப்பாள் என்று நினைத்தேன். வேளாளர்களில் அதுதானே வழக்கம். பூப்படைவதற்கு முன்பே திருமணம் செய்து விடுவீர்களல்லவா. ஆனால் இந்தப் பெண் சற்று பெரியவளாக இருக்கிறாளே."

"ஆமாம். சற்று செல்லம் கொடுத்து வளர்த்து விட்டோம், நல்ல மணமகனுக்காகக் காத்திருந்தோம்" பொன்னியின் அப்பா சொல்ல...

"நல்ல மணமகன் கிடைத்து விட்டானல்லவா" என்று இளவரசர் திரும்பி பொன்னியைப் பார்த்துக் கேட்க, பொன்னி "ஆம்" என்று சொன்னாள்.

"ஆமென்றா சொல்கிறாய். இவனை நல்ல மணமகன் என்று உனக்கு யார் சொன்னார்கள். நீயாக அறிந்து கொண்டாயா, அல்லது எவரேனும் சொன்னார்களா?"

"நானாக அறிந்து கொண்டேன்" பொன்னி நிதானமாகச் சொல்ல, இளவரசர் பெரிதும் திகைத்தார்.

"அதாவது நீலகண்ட சிவனை உனக்கு ஏற்கெனவே தெரியும் என்று சொல்கிறாயா?"

"ஆமாம். எங்கள் திருமணம் நிச்சயமான பிறகு அவரும் நானும் வெகுநேரம் பல இடங்களில் சந்தித்து உரையாடி ஒருவரையொருவர் புரிந்து கொண்டிருக்கிறோம்."

"அற்புதம் அற்புதம்" இளவரசர் கை கொட்டினார். "என்ன புரிந்து கொண்டாய். உன் புருஷனைப் பற்றி, நீ என்ன அபிப்ராயம் கொண்டிருக்கிறாய் சொல்."

''நடு சபையில் புருஷனைப் பற்றி அபிப்ராயம் சொல்வது அழகல்லவே.'' ஒரு நொடிகூட தாமதிக்காமல் பொன்னி பேசினாள்.

இளவரசர் திகைத்துப் போனார். இவ்வளவு வேகமாய் அவரை எவரும் இதுவரை மடக்கியதில்லை.

''நல்லது. நீ சொல்வதில் ஓர் உண்மை இருக்கிறது. கேள்வியை இப்படி கேட்கிறேன். உபதளபதி நீலகண்ட சிவனிடம் உனக்குப் பிடித்தது என்ன?''

''தேசப்பற்று'' பளிச்சென்று மறுபடி பதில் வந்தது.

இளவரசர் முகம் சுருக்கி அவளையே பார்த்தார்.

''தொடர்ந்து சொல்.''

''தேசப்பற்றுதான் அவருடைய தலையாய எண்ணம். பிறகுதான் குடும்பம். பிறகுதான் மனைவி. மற்றோர். அவர் இந்த தேசத்தைக் குறித்தும், மாமன்னர் குறித்தும், உங்களைக் குறித்தும்தான் அதிகம் சிந்திக்கிறார். குறிப்பாய் உங்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று பதட்டப்படுகிறார். 'நான் இளவரசர் இருக்குமிடத்தில் வேலை செய்யாமல் போனேனே. அவருடைய படையில் முக்கிய இடம் கிடைக்கவில்லையே' என்று இரண்டு, மூன்று முறை என்னிடம் புலம்பியிருக்கிறார். 'ஆனால் அங்கு என்னைவிட மிகத் திறமையானவர் களெல்லாம் இருக்கிறார்கள். என் திறமை அங்கு எடுபடாது' என்று அவரே அதற்கு சமாதானமும் சொல்லிக் கொள்வார். என் புருஷனுக்கு தேசமும், மன்னரும், இளவரசரும் தான் முக்கியம். அவருடைய நல்ல குணங்களில் இதுவும் ஒன்று.''

''இதை நல்ல குணமென்றா சொல்கிறாய். வீட்டை நேசிக்கிறவன்தானே நாட்டை நேசிக்க முடியும்.''

''அது சாதாரணர்கள் செய்வது. நாட்டை நேசித்தால்தான் வீடு இருக்க முடியும் என்பதை நல்லோர்கள், சான்றோர்கள் உணர்வார்கள். தியாகம் செய்வதற்கென்றே பிறந்தவர்கள்

வேறுவிதமாகத்தான் வாழ்வார்கள். நாடு என்கிற விஷயத்தில் அவர்கள் நன்கு உழைப்பதால், அவர்கள் வீடும் தானாக நல்ல நிலைமை அடைந்து விடும்.''

''அதாவது நீலகண்ட சிவன் எனக்கு உழைத்தால் உன் வீடு உருப்பட்டு விடும் என்று சொல்கிறாயா?''

''வெகு நிச்சயமாகச் சொல்கிறேன். என் புருஷன் உங்களுக்காக உழைத்தால் அந்த உழைப்பை நீங்கள் வெறுமே தரையிலா போட்டு விடுவீர்கள். உறிஞ்சி வெளியேவா துப்பிவிடுவீர்கள். அதற்குரிய மரியாதைகளை நீங்கள் செய்ய மாட்டீர்களா. ஒவ்வொரு போர் வீரருக்கும் குடும்பம் இருக்கிறது, மனைவி, மக்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறியாதவரா. அவருக்குண்டான வசதிகளை நீங்கள் செய்து தரத்தான் போகிறீர்கள். செய்து கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். போர் வீரர்கள் இல்லையெனில், வேளாளர்கள் இல்லையெனில், தேசம் எந்த வளமும் அடைய முடியாது என்று உங்களுக்கு நன்கு தெரியும்.

நீங்கள் அவ்விதம்தான் அரசாட்சி செய்து வருகிறீர்கள். எனவே, என் புருஷன் நாட்டுக்கு உழைத்தால் அதற்குண்டான சன்மானம் அரசர் மூலமோ, இளவரசர் மூலமோ என் கைக்கு வந்து சேருமென்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.''

''அற்புதம். ஒரு வேளாளர் பெண் இப்படிப் பேசி நான் பார்த்ததே இல்லை. இது வித்தியாசமாக இருக்கிறது. தொண்டை நாடல்லவா. சான்றோர்களுக்கு நடுவே பிறந்த பெண்ணல்லவா, அதனால்தான் எது குறித்தும் தெளிவாக யோசிக்க உனக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வயதுதான் திருமணத்திற்கு ஏற்ற வயது என்று நான் நினைக்கிறேன். பூப்படைவதற்கு முன்பு திருமணத்தை நடத்திவிட்டு அந்தக் குழந்தை என்ன பேசுவது, எப்படி நிற்பது, எப்படி நடப்பது என்று தெரியாமல் வெறும் பொம்மையாக இயங்கத் தொடங்கி

விடுகிறாள். பூப்படைவதற்கு முன்பே குடும்பச் சுமை அவளை அழுத்தத் தொடங்கி விடுகிறது. இது நல்ல பருவம். பெண்ணை நன்கு வளர்த்திருக்கிறீர்கள். நீலகண்ட சிவன் அதிர்ஷ்டக்காரன். வாழ்க மணமக்கள்'' என்று அட்சதை தூவி இளவரசர் வாழ்த்த, மணமக்கள் அவர் காலில் விழுந்து வணங்கினார்கள்.

இளவரசர் வலது கையை நீட்ட, அவரிடம் ஒரு பொற்கிழி தரப்பட்டது.

''நிறைய அந்தணர்கள் வந்திருக்கிறார்கள். செலவு அதிகமிருக்கும் போலிருக்கிறதே. இந்தா, இதை வைத்துக் கொள்'' என்று அந்த பொற்கிழியை நீலகண்ட சிவனிடம் கொடுத்தார். மறுபடியும் கை நீட்டினார். இன்னொரு பொற்கிழி தரப்பட்டது. அந்தப் பொற்கிழியை பொன்னியிடம் கொடுத்தார். மறுபடியும் கை நீட்டினார். இன்னும் ஒரு பொற்கிழி வைக்கப்பட்டது. அந்தப் பொற்கிழியை நீலகண்ட சிவனின் தகப்பனாரிடம் கொடுத்தார்.

''பொன்னிக்குக் கொடுத்த பொற்கிழி அவள் குடும்பம் நடத்துவதற்கு உதவியாக இருக்கட்டும். நீலகண்டசிவனிடம் கொடுத்த பொற்கிழி இந்த திருமணம் நடத்த வந்தவர்களுக்கு காணிக்கையாகப் போகட்டும். நீலகண்ட சிவனின் தகப்பனார் சதாசிவத்தாரிடம் கொடுத்த பொற்கிழி இந்த ஊரில் மராமத்து வேலைகள் செய்வதற்கு உதவியாக இருக்கட்டும். உங்கள் ஊரில் ஏதேனும் வேலைகள் உண்டா? அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் உண்டா? இந்தக் காசு போதுமா'' என்று சதாசிவத்திடம் இளவரசர் கேட்க, வேளாளர்கள் கூட்டம் மௌனமாக இருந்தது.

''வாசலில் அந்தணர்கள் இருக்கிறார்கள். இப்படி ஒரு கேள்விக்கு நாங்கள் மட்டும் பதில் சொல்லாது அவர்களும் சேர்ந்து சொன்னால் நன்றாக இருக்கும்'' வேளாளர்கள் சொல்ல, ''அது மயிலைக் குடியிருப்பல்லவா? நான் கேட்பது செழுங்கழுநீர் ஓடைக்குடியிருப்பில், இந்த வேளாளர் குடியிருப்பில் அரசாங்கம் ஏதேனும் செய்து கொடுக்க வேண்டுமா?''

"செழுங்கழுநீர் ஓடைக்கரைகளைப் பலப்படுத்தினால் நல்லது. மண் களிமண். நீர் போக்குவரத்து அதிகமாகும் போது ஆறு மண்ணை அடித்துக் கொண்டே போய் விடுகிறது. வெறும் சேறாக பல இடங்களில் தேங்கி விடுகிறது. ஊர் ஆரம்பிக்கிற இடத்திலிருந்து முடியும் இடம் வரை கற்பாறைகள் போட்டு கெட்டிப்படுத்தி விட்டோமென்றால் நீர் தேங்காது வேகமாகப் போகும். தூர் எடுத்தோமென்றால் இன்னும் தெளிவாக இருக்கும்."

"அதற்கு எவ்வளவு செலவாகும் என்று யாராவது மதிப்பு போட்டு வைத்திருக்கிறீர்களா?"

"போனமுறை மதிப்புப் போட்டு ஒரு தகவலை அரசாங்கத்திற்கு அனுப்பினோம். மன்னரிடமிருந்து விரைவில் செய்வதாக ஒரு உறுதி வந்தது. ஆனால் எப்போது என்று சொல்லப்படவில்லை. என்னுடைய அபிப்ராயப்படி இப்படி கல்வேலை செய்து தூர் எடுப்பதற்கு நூறு கழஞ்சுகளாகும் என்று நினைக்கிறேன். இது வெகுநாள் முன்பு போட்ட மதிப்பீடு. இப்போது அதிகமும் ஆகலாம். ஊர் சிறிது காசு போட்டு இந்த வேலையை முடித்துக் கொள்ளும் என்று நான் நினைக்கிறேன்."

"நல்லது. நான் திருவொற்றியூர் விட்டுப் போவதற்குள் நூறு கழஞ்சுகள் உங்களுக்குத் தரப்படும். அதை நீங்கள் வந்து வாங்க வேண்டிய அவசியமில்லை. இங்கேயே நான் அதை அனுப்பி வைக்கிறேன். சரியாகத் திட்டமிட்டு சரியாக வேலை செய்யுங்கள்.

செழுங்கழுநீர் ஓடைக்கு அருகே ஒரு பிள்ளையார் கோயில் இருப்பதைப் பார்த்தேன். அந்தக் கோயிலையும் நல்லபடி கட்டி வையுங்கள். அந்தக் கோயிலுக்குப் போகின்ற பாதையில் நல்ல பூங்காவனங்களை ஏற்படுத்துங்கள்.

வரும்போது கடற்கரைக்கு அருகேயுள்ள கற்பகத்தாயின் கோயிலைப் பார்த்து விட்டு வந்தேன். மதில் சுவரின் மீது கடல் அலை நீர் அடித்து மோதுகிறது. மதில்சுவர் அவ்வளவு பத்திரமாய்

இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை. வெகுநாளைக்கு முன்பு கட்டப்பட்ட கற்றளியாக இருக்கும் போல் தெரிகிறது. கற்பகத்தாய்க்கென்று ஒரு பெரிய இடம் தேர்ந்தெடுத்து. அந்த இடத்திலே ஒரு விநாயகர் சிலையை ஸ்தாபித்து, பெரிய பூஞ்செடிகள் வளர்த்து அந்தப் பூக்களினால் மாலைகட்டி, தினமும் என் சார்பாய் கபாலீசுவரருக்கும், கற்பகத் தாய்க்கும் அனுப்பவேண்டும். இதற்கு தனியாகவே இன்னொரு பொற்கிழி தருகிறேன். உங்களில் யாரேனும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து என்னிடம் அனுப்புங்கள். என்ன விதமான மலர்கள் இருக்க வேண்டும் என்று சொல்கிறேன். பசிக்கிறது, ஏதேனும் உண்ணக் கொடுங்கள்'' என்று கேட்க, அந்த இடம் பரபரத்தது.

இளவரசர் வெளியே வந்து நின்றார். அங்கே அந்தணர்கள் காத்திருந்தார்கள். இளவரசர் அவர்களுக்கு நடுவே போய் உட்கார்ந்து கொள்ள, அவர்கள் உரக்க இளவரசரை வாழ்த்தி ஸ்லோகங்கள் சொன்னார்கள். மந்திர அட்சதை தெளித்தார்கள். புனித நீர் வீசினார்கள். மந்திர மாலை போட்டார்கள். வெற்றிலையும், பாக்கும் வைத்து கோடித் துணி வைத்து அவருக்கு மரியாதை செய்தார்கள்.

இளவரசர் அந்த கோடித் துணியை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டு, நீலகண்ட சிவனை அழைத்து அதை அவன் கைகளில் கொடுத்தார். வெற்றிலை. பாக்கை எடுத்து மெல்லத் தொடங்கினார்.

அந்தணர்கள் ஏதோ பேச முற்பட, அதிகம் அதில் ஈடுபடாமல் சுற்றியுள்ள ஜனங்களைக் கவனிப்பதாகக் காட்டிக் கொண்டார். வேளாளர்களால் இளவரசருக்கு உண்ண இனிப்பு அப்பமும், சர்க்கரைப் பொங்கலும், வெண் பொங்கலும் தரப்பட்டன.

''நான் உணவருந்தி விட்டு வரட்டுமா'' என்று அந்தணர்களைப் பார்த்து இளவரசர் சொல்ல, அந்தணர்கள் அதுவரை தாங்கள் இருந்த இடத்தை விட்டு நகர்ந்து வெளியே போய் மரத்தடிகளில் நின்று கொண்டார்கள்.

அந்தணர்கள் இருந்த இடத்தில் வேளாளர்கள் சூழ்ந்து கொள்ள, இளவரசர் அப்பம் பிட்டு சாப்பிடத் துவங்கினார். ''இன்னும் இரண்டு அப்பம் போடுங்கள்'' என்று கேட்டார். போட்ட அப்பத்தைப் பிட்டு அருகிலுள்ள குழந்தைகளுக்குக் கொடுத்தார். குழந்தைகள் போட்டி போட்டுக் கொண்டு இளவரசரிடம் அப்பம் வாங்கினார்கள். பத்து, பதினைந்து அப்பங்கள் இப்படிச் செலவாயின. சர்க்கரை பொங்கலும், வெண் பொங்கலும் எடுத்துக்கொண்டதும் பானகம் குடித்தார். தட்டிலேயே கையலம்பினார். முகம் துடைத்துக் கொண்டார். சட்டென்று எழுந்தார். மறுபடியும் நீலகண்ட சிவனைத் தழுவினார்.

''நல்ல மனைவி கிடைத்திருக்கிறாள். இது பெரும் பேறு. வம்பு பேசுகிறவளாய், அடங்காதவளாய் மனைவி இருந்து விட்டால் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் வேதனை அனுபவிக்க வேண்டியிருக்கும். மனைவி கெட்டிக்காரியாக இருப்பதிலும் சில சாதக பாதகங்கள் இருக்கின்றன. நீ அபத்தங்கள் செய்ய இயலாது. உடனே கண்டிக்கப்படுவாய். செய்யாமல் இருந்தால் பாராட்டப்படுவாய். மனைவி கெட்டிக்காரியாக இருந்தால், ஒழுக்கமாய் இருந்து விடுவது உத்தமம். என்ன சொல்கிறீர்?'' என்று சற்று கேலியாகக் கேட்க, அவன் 'ஆமாம்' என்று தலையசைக்க கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

''உன் முகத்தைப் பார்த்தால் நீ வம்பு தும்புக்குப் போகிற வாலிபனாகத் தெரியவில்லை. ஒழுக்க சீலன் என்று நான் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து நல்லபடி குடித்தனம் நடத்து. உன் மனைவி சொன்னது போல, மன்னருக்கும், தேசத்துக்கும் சேவை செய்து வா. உன்னைப் போன்ற இளைஞர்களை நம்பித்தான் நான் அரியணை ஏற வேண்டியிருக்கிறது. அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கும் போது, நான்

உன்னை அழைக்க வேண்டும். தனியே ஓலை அனுப்ப வேண்டும் என்று காத்திராமல் நீயாக வந்து என்னைப் பார். இந்த வடக்குப் பகுதியில், மயிலாபுரியில் மிகச் சரியான ஒரு பாடி வீடு அமைக்கவேண்டும் என்பது என்னுடைய எண்ணம். எனவே உன் வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும். தொடர்ந்து சகல விஷயங்களையும், கவனித்துக் கொண்டு வா. உன் பார்வையிலிருந்து எதுவும் தப்பாமல் இருக்கட்டும்'' என்று சொன்னார்.

நீலகண்ட சிவன் தலையசைத்தான். ''திருவொற்றியூர் வரை வரட்டுமா'' என்று கேட்டான்.

''நான் இன்னும் ஒரு மாதம் அங்குதான் இருப்பேன். உடனே வர வேண்டாம். நடுவே வந்து பார்த்து விட்டுப் போ'' என்று காதோரம் சொன்னார். வாசலுக்கு வந்தார். குதிரைகள் கொண்டு வரப்பட்டன. ஒரு குதிரையில் தாவி ஏறினார். குதிரையில் அமர்ந்தபடி அந்தணர்களை நோக்கிக் கை கூப்பினார். அவர்கள் வேதகோஷம் எழுப்ப, 'போதும்' என்று கையசைத்தார்.

ஒரு சிறிய பொற்கிழியை இளவரசருடைய மெய்க் காப்பாளர் அந்தணர் தலைவரிடம் நீட்ட, அவர் இளவரசரைப் பார்த்தார்.

''பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று இளவரசர் கட்டளையிட, அந்தப் பொற்கிழியை வாங்கிக் கொண்டார்.

குதிரைகள் வடக்கு நோக்கி விரைவாகப் போயின. 'போய் வருகிறேன்' என்று கூட எவரிடமும் இளவரசர் விடை பெற வில்லை. அந்தணர்களின் முகங்கள் இருளடைந்திருப்பது தெரிந்தது.

''ஐயா உள்ளே வாருங்கள். என்ன தட்சிணை தரவேண்டும்?'' கேட்கப்பட்டது.

"நீங்கள் என்ன கொடுத்தாலும் வாங்கிப் போகிறோம்" என்று சொல்லப்பட, தலைக்கு ஒரு காசு வீதம் ஐம்பத்து மூன்று செப்புக்காசுகள் வெற்றிலை, பாக்கு பழத்தோடு அவர்களுக்குத் தரப்பட்டது. ஒரு கூடை நெல் அவர்கள் வந்த மாட்டு வண்டியில் ஏற்றப்பட்டது. பருப்பும், கரும்பும், வெல்லக்கட்டிகளும் அவர்களுக்குத் தரப்பட்டன. அவர்கள் அதை வாங்கி வண்டியில் வைத்துக் கொண்டார்கள். வண்டி கிளம்ப, அவர்கள் மறுபடியும் வாழ்த்தி விட்டுப் போனார்கள்.

## 4

**பி**ரம்ம தேயக் குடியிருப்பில் இருந்த அந்தணர்களின் பேச்சில் காரம் ஏறியதால், அந்தத் தளபதி மனம் வெறுத்தார்.

"நான் மறுபடி சொல்கிறேன். மிகப் பெரிய அழிவு நோக்கி நமது குலம் நகர்ந்து கொண்டிருக்கிறது. நமது ஒற்றுமையின்மை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. என் தகப்பனாரும், இவன் தகப்பனாரும் பங்காளிகள். சண்டையிட்டுக் கொள்பவர்கள் என்பதற்காகவே என்னோடு சண்டையிடுகிற நிர்மூடனை நான் என் எதிர் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு நாள் விடிந்ததும் என்னைப் பார்த்து இவன் எரிவதும், இவனைப் பார்த்து நான் சீறுவதுமாய் ஒரு வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. இது என் மனோநிலையையும், உடல் நிலையையும் எவ்வளவு பாதிக்கிறது என்பதை நான் உணர்கிறேன்.

எனக்கிருக்கும் வெஞ்சினத்தை விட, என் மகனுக்கு வெஞ்சினம் அதிகமாகி விட்டது. என் மகனின் வெஞ்சினத்தை விட பல மடங்கு வெஞ்சினம் இவன் மகனுக்கு இருக்கிறது.

அட, சண்டாளப் பாவி. நீயும், நானும் சண்டை போட்டுக் கொள்வதில் நஷ்டமடைவது நமது குலமல்லவா. இதை நானும் சிந்திக்கவில்லை. நீயும் சிந்திக்கவில்லை. இதற்கு நடுவே பதவிகள். அதிகாரங்கள். அதை நிலைநிறுத்திக் கொள்ள ஏற்பட்ட பம்மாத்துகள். எனக்கு போதும் போதுமென்று தோன்றி விட்டது. என்னுடைய அடுத்த தலைமுறை இதில் ஈடுபடக் கூடாது என்பது என் எண்ணம். எனவே, என் தளபதி பதவியை நான் இழக்கச் சித்தமாக இருக்கிறேன். அதிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள நான் சித்தமாக இருக்கிறேன். இதற்கான ஓலையை இன்று அரசருக்கு அனுப்புகிறேன்.

இளவரசருக்கும் தகவல் தெரிவிக்கிறேன்.

ஒரு கிராமத்தில் தளபதியாக இருப்பவர் நகர்ந்து கொண்டால், உப தளபதியாக இருப்பவர்தான் பதவி ஏற்க வேண்டும். அரசரால், இளவரசரால் உபதளபதி என்று அங்கீகரிக்கப்பட்ட நீலகண்ட சிவன் வேளாளர் குடியிலே பிறந்து இந்த திருவல்லிக்கேணி, மயிலாபுரி கிராமங்களைப் பராமரித்துக் கொண்டு வரட்டும். ஒரு இடைப்பட்ட நேரத்தில் இந்தப் பதவியை நான் அவனுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அப்படிக் கொடுக்கின்ற ஒரு அதிகாரம் தளபதிக்கு உண்டு.

ஒரு தளபதி நோய்வாய்ப்படும் போதோ, துறவு பெற்றுப் போகும் பொழுதோ, அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்தால் பதவி விலக முயற்சிக்கிற பொழுதோ உபதளபதிக்கு முழு அதிகாரம் கொடுக்க உரிமையுண்டு. எனவே, என் தளபதி கேயூரத்தைக் கழற்றி, உபதளபதியாகிய நீலகண்ட சிவனிடம் கொடுக்கிறேன். முறைப்படி மன்னர் தளபதி பதவியை நீலகண்ட சிவனுக்குத் தரட்டும். என்னுடைய இந்தப் பதவி விலகலுக்குக் காரணம், நம்முடைய ஒற்றுமையின்மை, இன்னொரு காரணம், வேளாளர்களின் ஒற்றுமை. இன்னுமொரு காரணம், நீலகண்ட சிவனின் உறுதி. அவன் திறமை. அவன் ஆர்வம்.

எனவே என்னை விட மிக அற்புதமான பாதுகாவலனாய் மயிலை, திருவல்லிக்கேணி கிராமங்களுக்கு அவன் இருப்பான் என்பது என் எண்ணம். இதை சபை முன்பு வைத்து உங்கள் அங்கீகாரம் கேட்பது சம்பிரதாயமானது. என் அளவில் எல்லாம் முடிந்து விட்டது. நீங்கள் ஆதரித்தாலும், மறுத்தாலும் இனி நீலகண்ட சிவனே மயிலை, திருவல்லிக்கேணியின் தளபதி''

சபை திடுக்கிட்டு மௌனமாகி இருக்க, நீலகண்ட சிவனின் நண்பன் குதிரையேறி அக்ரஹாரத்திலிருந்து செழுங்கழுநீர் ஓடை கிராமத்திற்குப்போய் பெருங்கூச்சலிட்டு ஊரைக் கூட்டி விஷயம் சொன்னான்.

ஊர் திகைத்தது. சட்டென்று ஆண்கள் மேல் துணிகளை விசிறி வானத்தில் எறிந்தார்கள். 'ஓ' வென்று கூச்சலிட்டார்கள். பெண்கள் குலவை போட்டார்கள். நடனமாடினார்கள். குழந்தைகள் எகிறி எகிறிக் குதித்தார்கள். நீலகண்ட சிவன் கேயூரங்களைக் கையிலேந்தி வருவதாக மறுபடி தகவல் கிடைத்தது. ஊர் நீர் தெளித்தது. கோலமிட்டது. பெரிய விளக்குகளை அந்தப் பகல் பொழுதில் ஏற்றினார்கள். செழுங்கழுநீர் ஓடையிலிருந்து நீரெடுத்து அதன்மீது தேங்காய் வைத்து, மாவிலைகளை இளசாகப் பரப்பி வைத்த, பூரண கலசம் தயாரித்து, நீரும் இளநீரும் சேர்த்து காந்தச் சத்துள்ள மாவிலைகளை உள்ளே வைத்து, நல்லவையை இயக்குகின்ற திறமை உடையவனாய் 'வருக' என்று ஊர் அவனை வரவேற்றது.

ஊர்ப் பெரியவர்கள் கட்டித் தழுவிக் கொண்டார்கள். பெண்கள் தலையில் கைவைத்து ஆசீர்வதித்தார்கள். வாலிபர்கள் இறுகத் தழுவிக் கொண்டார்கள். இளம் பெண்கள் நாணினார்கள். மேலே பூவைத் தூவி விட்டு ஓடினார்கள். குழந்தைகள் காலைக் கட்டிக் கொண்டு ஆடினார்கள்,

செழுங்கழுநீர் ஓடையில் விழா கொண்டாடிக் கொண்டிருக்கும் போது, அப்பா யார் காதிலோ ஏதோ ஒரு ரகசியம் சொல்லி அனுப்பினார். அனுப்பியவர் அக்ரஹாரம் போய் வியாபாரி போல் காய்கறிகளை விலை கூறி விற்க முனைந்தார். அந்தணர்கள் பேசிக் கொள்வதை, எதுவும் அறியாதவர் போல் கேட்டார்.

''என்னய்யா திடீரென்று பதவியை வேளாளர்களிடம் கொடுத்து விட்டீர். சற்று யோசித்திருந்தால் நம்மில் சிறந்தவரை இந்தப் பதவிக்கு நியமித்திருக்கலாமல்லவா. அக்ரஹாரத்தினுடைய மதிப்பே போய்விட்டதே. ஏன் அவசரப்பட்டு விட்டீர்கள்?'' என்று பழைய தளபதியைப் பிடித்து உலுக்கினார்கள்.

''உங்களுக்கு அனுபவமில்லை. அரசியலைப் பற்றி எதுவும் தெரியவில்லை. அடுத்தபடி அரசாட்சிக்கு வரப் போகிறவர் யார் என்பதைப் பொறுத்துதான் ஒரு அரசாங்க நிர்வாகியின் திறன் வெளிப்படும். நல்லது, கெட்டது செய்ய முடியும். வெகு சீக்கிரம் இளவரசர் அரசாட்சிக்கு வந்து விடுவார்.

இளவரசருக்கு இன்றைய தேதிக்கு முப்பத்து இரண்டு வயது. அரசர் திடகாத்திரமாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். இது பல்வேறு விதமான மன உளைச்சலை இளவரசருக்கு ஏற்படுத்தும். எப்போது அரச பதவிக்கு வரலாம் என்று காத்திருக்கும்படியாய் அவருக்குத் தோன்றும். அப்படித் தோன்றிப் பல வருடங்கள் ஆகிவிட்டன. விரைவில் அரசர் தன்னுடைய பதவியிலிருந்து இறங்கி விட்டு, இளவரசருக்கு அரசாள வாய்ப்புக் கொடுப்பார். அரசர் ஓய்வெடுத்துக் கொள்வார். அந்த நேரத்தில் அரசரை விட மிகத் திறமையாக நான் ஆட்சி செய்கிறேன் என்று நிரூபிக்க இளவரசருக்கு அவசியம் ஏற்பட்டு விடும்.

அரசரை விடத் திறமையானவன் என்பது மட்டுமல்ல, அரசர் செய்த எல்லாவற்றையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்கிற மெல்லிய வன்முறையும் இளவரசர் கைக்கொள்வார். அரசர் எல்லா இடத்திலும் கருப்பு வண்ணம் தீட்டச் சொன்னால், இவர் வெள்ளை வண்ணம் என்பார். அரசர் ஒரு விதமாக படையைப் பெருக்க வேண்டும் என்றால், அவர் வேறு விதமாக உத்தரவிடுவார். அரசர் குதிரைப் படையைச் சீரமைத்தால், இவர் யானைப் படையைச் சீரமைப்பார். குதிரைப் படையை ஓரம் கட்டுவார். காலகாலமாக நடந்து வருகின்ற ஒரு விஷயமென்று அர்த்த சாஸ்திரம் சொல்கிறது. வெகு சீக்கிரம் இந்த மாற்றங்கள் நிகழும்.''

''இதற்காகவா பதவியிழந்தீர். அரசரை அனுசரித்துப் போவது போல, இளவரசரை அனுசரித்துப் போவது அத்தனை கடினமா?''

''எத்தனை கடினமென்று எனக்குத்தான் தெரியும். எதுவும் தெரியாத உனக்குத் தெரியாது. இது மட்டும் காரணமில்லை. மிகப் பெரிய படையெடுப்பு வடக்கிலிருந்து நடக்கப் போகிறது. மிகப்பெரிய கலாச்சார மோதல்கள் நடைபெறப் போகின்றன. மலை கடந்தும், கடல் கடந்தும் வந்த அன்னியர்கள் உள்ளுக்குள்ளே ஊடுருவி நம்மை உலுக்கி எடுக்கப் போகிறார்கள். இனி வரும் காலம் பரதகண்டம் மிக மோசமான விஷயங்களை சந்திக்கப் போகிறது. தெற்கில் வெகு நாட்களாக அடக்கி வைக்கப்பட்டிருக்கும் பாண்டியர்கள் சீறி திருவொற்றியூர் வரை வரப் போகிறார்கள். மதுரை எங்கே இருக்கிறது. திருவொற்றியூர் எங்கே இருக்கிறது.

வழி நெடுகப் பிரளயம் போல உள்ளே நுழைந்து சர்வ நாசம் ஏற்படுத்திக் கொண்டு வருவார்கள். இங்கே வரவர நாசம் ஏற்படுத்துதல் மெல்ல குறைந்து கொண்டு வரும். இந்

இடத்தில் அப்போது தளபதி என்று ஒருவன் இருப்பானேயானால், அவன் மட்டுமே தண்டிக்கப்படுவான். ஊர் காப்பாற்றப்படும்.

குறிப்பாய் பாண்டியர்களுக்கு வைணவ சம்பிரதாயமே பிடிக்கும். கையில் வாளெடுக்காதவர்களை பிடிக்கும். புலவர்களையும் அந்தணர்களையும் பாண்டியர்கள் எதுவும் செய்வதில்லை. எனவே எவரேனும் வீட்டில் தர்ப்பைப் புல் அறுக்க கத்தி வைத்திருந்தாலும் அதையும் ஒளித்து வைத்து விட்டு கையால் தர்ப்பைப் புல்லை அறுப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.''

''இது எப்போது நடக்கும்'' அருகே உள்ள இளைஞன் கேட்க, ''இன்னும் மூன்று மாதத்தில் துவங்கும். அடுத்த பன்னிரெண்டு வருடங்கள் பரதகண்டத்தின் இந்தப் பகுதிக்கு மிகப் பெரிய வேதனை காத்திருக்கிறது. யுத்தம் மீண்டும் வரும்.''

''உங்கள் கணக்கு தவறு என்று தோன்றுகிறது.''

''எது தவறு என்று சொல்கிறாய்?''

''உங்களுடைய எதிர்பார்ப்புகள் சரி. ஆனால், காலக் கணக்கில் தவறு நேர்ந்து விட்டது. பாண்டியர்கள் இப்போதைக்கு தலை தூக்க முடியாது. அவர்கள் இன்னும் நூறு வருடங்களுக்குப் பிறகு தான் தலைதூக்க முடியும். வடக்கே இமயமலை தாண்டி அந்நியர்கள் உள்ளே நுழைந்து விட்டார்கள் என்பது உண்மை. தக்காணம் தாண்டி அவர்கள் இந்தப் பக்கம் வர இருநூறு ஆண்டுகள் ஆகும். கடல் வழியாக வெள்ளைத் தோலுள்ள வர்கள், நீலக்கண்கள் உள்ளவர்கள் இங்கே நுழைவார்கள் என்று ஏற்கனவே நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அது இப்போதைக்கு இல்லை. வெகுநாள் கழித்து பரத கண்டம் முழுவதும் அந்நியர்களால் சூறையாடப்படும் என்று நாங்களும் அறிவோம். நீங்கள் சொன்ன விஷயங்கள் சரி. காலக் கணக்கு வெகு நிச்சயம் தவறு. அடுத்த மூன்று மாதங்களில் எந்த வித

மாற்றமும் ஏற்படாது. சபையைக் கலந்தாலோசித்து விட்டு இந்த பதவியிழப்பைச் செய்திருக்கலாம். அவசரப்பட்டு விட்டீர்கள்.''

அவர்கள் கடிந்து கொண்டார்கள். தளபதியாய் இருந்த அந்த அந்தணர், துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு வீட்டிற்குப் போனார். சபை கலைந்தது. தொலை தூரத்திலிருந்து எக்காளமும், பறையும் முழங்குவது கேட்டது, அவர்கள் வேதனையோடும் பொறாமையோடும் அதைச் செவி மடுத்தார்கள்.

செழுங்கழுநீர் ஓடை சுற்றியுள்ள குடியிருப்பைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றுகூடி கைக்காசு போட்டு எக்காளமும், பறையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரே இரவில் அந்தப் பகுதி முழுவதும் தோரணம் கட்டி அலங்கரித்திருந்தார்கள். யுவதிகளைத் தனியே சந்தித்து நடுநிசியில் நீர்தெளித்து கோலம் போடச்சொன்னார்கள். அப்படி போட தாங்கள் துணைக்கு வருவதாகச் சொன்னார்கள். பனைவெல்லப் பாயசமும், கதம்ப சாதமும் ஊரிலுள்ள காளி கோயிலுக்கு நைவேத்தியம் செய்து, வீடு வீடாய் விநியோகம் செய்தார்கள், அண்ணியை அண்ணன் கைப்பிடித்த வேளை என்று பெரியவர்கள் காதுபடச் சொன்னார்கள். மிகப் பெரிய விழாவாக, நீலகண்ட சிவன் மயிலை, திருவல்லிக்கேணி பகுதிக்கு தலைமையேற்றதைக் கொண்டாடினார்கள்.

அருகேயுள்ள வயல்வெளி சூழ்ந்த சிறிய கிராமங்களுக்குச் சென்று, பரதவர் வாழும் குப்பங்களுக்குச் சென்று நைவேத்தியம் விநியோகித்து, அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் நீலகண்ட சிவனுக்குத் தெரிவிக்கச் சொன்னார்கள். அந்தணர் குடியிருப்பு தவிர, வேறு எல்லா இடங்களுக்கும் அவர்கள் போய் நீலகண்ட சிவனுக்கு ஆதரவு தேடித் தந்தார்கள்.

இதை வாலிபர்களின் துணை கொண்டு நீலகண்ட சிவனின் தம்பியும், தாய்மாமனும், தமக்கை புருஷனும்

நடத்தினார்கள். திருவல்லிக்கேணி பகுதியிலுள்ள எல்லா இனத்தாரின் குடியிருப்புக்கும் போய், வணக்கம் சொல்லி தளபதி இன்ன தேதியில் உங்களைச் சந்திக்க வருவார், இந்த இடத்தைச் சற்று அலங்கரித்து வையுங்கள் என்று சொன்னார்கள். 'நாங்கள் உதவட்டுமா' என்று முன் வந்தார்கள்.

ஊர் தடுத்தது.

''எங்கள் ஊரை நாங்கள் அலங்கரித்துக் கொள்கிறோம். தலைவரை வரச் சொல்லுங்கள். அவரிடம் பேச வேண்டிய திருக்கிறது, இந்தப் பக்கம் ஓநாய்களின் தொந்தரவு அதிகம் இருக்கிறது. நூறு, நூற்று நாற்பது ஓநாய்கள் அல்லிக்கேணியின் வட பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. பிடிக்கப் போனால் கடற்கரையோரம் முந்திரிக் காடுகளிலும், கருவேலம் புதர்களுக்கு நடுவேயும் மறைந்து கொள்கின்றன. இந்த இடத்தில் நாங்கள் கோழிகள் அதிகம் வளர்ப்பதால் அவை எளிதான உணவு என்று கருதி, ஓநாய்கள் தொலை தூரத்தி லிருந்தும் வருகின்றன.

இந்த ஒரு விஷயம் மட்டும் தலைவர் காதிலே போட்டு விட வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம்'' ஊர் மக்கள் சொன்னார்கள்.

''ஏன் இதற்கு முன்னால் இருந்த தலைவரிடம் இது பற்றி ஏதும் கேட்கவில்லையா?'' அவர்கள் கொக்கி போட்டு இழுத்தார்கள்.

'ஹூம்... வந்தால்தானே பேசுவதற்கு. விசாரித்தால் தானே சொல்வதற்கு. தலையை உயர்த்தி யார் என்று கேட்டு விட்டு, சொன்ன பிறகு ஒரு வணக்கம் கூட சொல்லாமல் திரும்பிப் போகிற போது என்ன சொல்லத் தோன்றும்'' என்று மக்கள் வேதனையாகப் பேசியதைக் குறித்துக் கொண்டார்கள்.

அன்று இரவு, நீலகண்ட சிவனைச் சந்தித்து தாங்கள் செய்தவற்றை விளக்கினார்கள். ''ஒருமுறை ஓநாய்கள்

தாக்குகின்ற அல்லிக்கேணி வடபகுதி சேற்றுப் பாக்கத்திற்குப் போய் வாருங்கள். கடலும், ஒரு காட்டாறும் கலக்கின்ற அந்த இடத்தில் சேறு அதிகமாகி திட்டுகள் நிறைந்த பூமியும், கருவேலம் புதர்களுமாக இருக்கின்றன. சேறு தாண்டி மனிதர்களால் போக முடியவில்லை. ஓநாய்கள் நுனிக்கால் ஊன்றி சேறு இடத்தைத் தாண்டி விடுகின்றன. உலர்ந்த பூமியைப் பார்த்து எது சேறு, எது பூமி என்று தெரியாமல் ஆடு, மாடுகள் மாட்டிக் கொள்ள, அப்படி மாட்டிக்கொள்ளும் ஆடு மாடுகளையும் ஓநாய்கள் கடித்துத் தின்று விடுகின்றன. ஆடு மாடுகளை அந்தப் பக்கம் போக விடாதபோது, ஓநாய்கள் ஊருக்கு வருகின்றன. கோழிகளையும் மற்ற பறவைகளையும் தாக்கித் தின்று விடுகின்றன. குழந்தைகள் துரத்தினால் ஆறேழு கூடிக் கொண்டு குழந்தைகள் மீது பாய்கின்றன. ஆறும், கடலும் கலக்கின்ற அந்த சேறான பகுதியில் நாம் ஏதேனும் செய்தாக வேண்டும்.''

அவர்கள் சொன்ன அன்றே நீலகண்ட சிவன் மாலை நேரம் அந்தக் கடற்கரைப் பகுதிக்குப் போய் பார்த்தான். தான் மட்டும் போகாமல் தன் மனைவியையும் ஒரு குதிரையில் ஏறி வரச் சொன்னான். அவர்கள் போவது தெரிந்து பெரிய வாலிபர் பட்டாளம் உடன் கிளம்பியது.

நூற்று இருபது பேர் கொண்ட அந்தப் பட்டாளம் சேற்றுப்பாக்கத்தைச் சுற்றி நின்று ஆராய்ந்தது. எந்த வழியாக கடலும், ஆறும் சந்திக்கின்ற இடத்திற்குப் போக முடியும் என்று கையிலிருக்கிற கழியால் ஆழம் பார்த்தது. சில இடங்களில் மட்டுமே தாண்ட முடியும். சில இடங்களில் தாண்ட முடியாது என்று தெரிந்ததும், அங்கே போய் அவஸ்தைப்படுவதற்குப் பதிலாக ஓநாய்களை இங்கே வரவழைத்தால் நல்லது, என்று நீலகண்ட சிவன் சொன்னான்.

''ஓநாய்களை எப்படி வெளியே வரவழைப்பது'' என்று அவர்கள் கேட்க, ஆடு வெட்டி கறி வறுக்கச் சொன்னான்.

அதேபோல, அன்று இரவே ஒரு ஆட்டை வெட்டி தோலுரித்து, கறி செய்து ஒரு குறிப்பிட்ட திட்டில் மாமிசங் களைப் பரப்பினார்கள். எந்த வழியாக ஓநாய்கள் வருமோ, அந்த இடத்திலெல்லாம் மூங்கிலால் அமைந்த வேலிகளைப் படுக்க வைத்தார்கள். அதில் கயிறு கட்டி தொலைதூரம் நின்று கொண்டார்கள். அந்த மூங்கில் வேலி முழுவதும் முட்கள் பரப்பப்பட்டிருந்தன. ஓநாய்கள் வருவதற்கு இடமிருந்தது. தீப்பந்தங்கள் எண்ணை ஊற்றி வைத்திருந்தார்கள். காற்றில் ஆடாவண்ணம் சிறிய அகல் விளக்குகளை மண்சட்டியில் வைத்திருந்தார்கள். 'இருட்டட்டும்' என்று காத்திருந்தார்கள்.

இந்த விஷயமறிந்த பொன்னி, அவர்களுக்கு களி செய்து அனுப்பினாள். தொட்டுக் கொள்ள கோழி இறைச்சி கொடுத்திருந்தாள். சில துண்டுகள் கோழி இறைச்சியும், இரண்டு உருண்டை களியும் பகல் முழுதும் செய்த வேலையின் களைப்பை உடனே தீர்த்தன. சுத்தமான குடிநீரும் மாட்டு வண்டியில் வந்திருந்தது. அங்குள்ள குடிநீரைக் குடிக்கக்கூடாது என்று கட்டளை போடப்பட்டிருந்தது.

கிழட்டு ஓநாய்கள் முதலில் வர, வாலிப ஓநாய்கள் பின்னால் வர, பெண் ஓநாய்கள் அதற்கு அடுத்து வர, குட்டிகள் வரும்வரை காத்திருந்தார்கள். வந்த ஓநாய்கள் இறைச்சியை உண்ண ஆரம்பித்தன. குட்டிகளும் வந்து அவற்றோடு கலந்து கொண்டன.

ஓநாய்கள் இறைச்சியைக் கடித்துத் தின்று பிறகு ஓய்வாக உணவுக்கு அருகே போய்படுத்து மெல்ல குதறிக் கொண்டிருக்கிற நேரத்தில் நீலகண்ட சிவன் குரல் கொடுக்க, அனைவரும் சட்டென்று எழுந்தார்கள். மூங்கில் வேலிகளை உயர்த்தினார்கள், ஓநாய்கள் ஓடிய போது, உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே விஷ அம்பு எய்து தாக்கினார்கள். குறுந்தடியால் சில ஓநாய்களை அடித்துக் கொன்றார்கள். ஈட்டியால்

குத்தினார்கள். ஓநாய்கள் எகிறித் தாக்க வரும்போது, முள்ளால் அடித்தார்கள். தீப்பந்தங்களை ஓநாய்கள் முன்பு நீட்டினார்கள்.

அரை நாழிகைப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான ஓநாய்கள் குத்திக் கொல்லப்பட்டன. எல்லா ஓநாய்களையும், வரிசையாகப் படுக்க வைத்துவிட்டு, விடியற் காலை நேரத்தில் சேறு தாண்டி உள்ளே போனார்கள். அங்கிருந்த ஓநாய்களையும் அடித்துக் கொன்றார்கள். ஒரே இரவில் பல வருடங்களாக மிகப் பெரிய தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த ஒரு விஷயம் முற்றிலுமாக தீர்க்கப்பட்டது.

சேற்றுப்பாக்கக் குடியிருப்பின் கம்மாளத் தலைவன் ஓடி வந்து காலைப் பிடித்துக் கொண்டு அழுதான்.

''சேச்சே என்ன இது, உங்கள் வயதென்ன, என் வயதென்ன. ஏன் இப்படி அபத்தம் செய்கிறீர்கள். இனிமேல் ஒருக்காலும் இவ்விதமான தவறான முறையில் நன்றி தெரிவிக்காதீர்கள். உங்களுடைய அன்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதைச் செய்ய வேண்டியது என் கடமை. என் கடமையைச் செய்வதற்கு நீங்கள் பாராட்டுகிறீர்கள். அதை கட்டித் தழுவலாக, வணக்கமாக, உங்களிடமிருந்து கிடைக்கும் ஒரு குவளை மோராக நான் எடுத்துக் கொள்கிறேன். இப்படியெல்லாம் காலில் விழுந்து வணக்கம் தெரிவிக்க வேண்டாம்'' நீலகண்ட சிவன் அந்த கம்மாளத் தலைவனைக் கண்டித்தான்.

''பிரச்சினை இப்போதைக்குத் தீர்ந்திருக்கிறது என்று தான் அர்த்தம். பரத கண்டத்தில் ஓநாய்களுக்குக் குறைவே இல்லை. இங்கு ஓநாய்கள் இல்லையென்று தெரிந்ததும், வடக்கேயிருந்து மேலும் ஓநாய்கள் வரும். கோழிகளைச் சூறையாடும். நாம் கவனமாக இருக்க வேண்டும். சேறு நிறைந்த இந்தப் பூமியில் மூங்கில்களும், பிரம்புகளும் நட முடியுமா என்று பாருங்கள். முயற்சி செய்து அவை பயிர் செய்யப்பட்டால், அவைகளி

லிருந்து மூங்கில்களும், பிரம்புகளும் எடுத்து நாம் நல்ல வேலிகளைச் செய்து கொள்ள முடியும். வேலிகளுக்குள் கோழிகளை விட்டு விட்டால் பாதுகாப்பாக இருக்கும்.

''ஐயா, எங்கள் பகுதிக்கு வாருங்கள். எங்கள் பகுதிக்கு வாருங்கள்'' பல்வேறு இடத்திலிருந்து குரல்கள் கிளம்பின.

இருபத்தாறே வயது நிரம்பிய நீலகண்ட சிவன் தலைவனாய், தன்னுடைய அந்தரங்கக் காவலர்கள் புடை சூழ எல்லா இடத்திற்கும் போனான். தனித்தனியே ஒவ்வொருவர் பெயரையும் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவர்களின் குறைகளை விசாரித்து அறிந்து கொண்டான்.

''கபாலீசுவரம் கோயில் மீது கடலலை வேகமாக மோதி மதில் சுவர்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. மிக மிக உறுதியாகக் கட்டப்பட்டாலொழிய ஒரு மோசமான புயல் காலத்தில் கபாலீசுவரம் தாக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப் படும். எனவே, அப்படி ஏதும் நிகழாமலிருக்க ஏதேனும் செய்ய வேண்டும்.'' கோயிலின் சார்பாய் விண்ணப்பம் வைக்கப்பட்டது.

''ஓநாய்களை வேட்டையாடலாம். சிறிய அளவிலே பாதை போட்டு கொடுக்கலாம். வாய்க்கால் ஒன்றை திசை மாற்றி விடலாம். கேணியைச் சுத்தப்படுத்தலாம். குளம் கூட வெட்டிக் கொடுக்கலாம். ஆனால் ஒரு கோயிலின் மதில் சுவரை சாதாரண கிராமத்துத் தலைவன் பழுது பார்த்துவிட முடியுமா? அது ஊர் கூடி செய்ய வேண்டிய காரியம். அரசரின் அனுமதி பெற்று செய்ய வேண்டிய காரியம். நமது ஊர் கல்தச்சர்களால் மட்டுமே இது முடியாது. தலைநகரிலிருந்து மந்திரிமார்கள் வந்து பார்த்து, அவர்கள் பெருந்தச்சர்களை அழைத்து வந்து இங்கு சில காலம் தங்கி அளவெடுத்து, எங்கிருந்து வர வேண்டும் என்று ஆராய்ந்து ஒரு கணக்குப் போட்டு, அதற்கு அரசரின் அனுமதி பெற்று பிறகு செய்ய வேண்டிய காரியம். ஆனால் இதைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை நான் உணர்கிறேன். அரசரை

அடுத்தபடி சந்திக்கும் பொழுது, இதுவே எனது முதல் கோரிக்கையாக இருக்கும்.''

''எப்பொழுது அரசரைச் சந்திக்கச் செல்வீர்கள்?''

''தெரியவில்லை. அரசரைச் சந்திக்க முடியவில்லையெனினும் இளவரசரையாவது சந்திக்க முடியும் என்று கருதுகிறேன்'' நீலகண்ட சிவன் பதில் சொன்னான். திரும்பத் திரும்ப கபாலீசுவரம் கோயிலைச் சுற்றி வந்தான். மதில் சுவரொன்று கடலலையைத் தடுத்துக் கொண்டிருந்தாலும், அதற்குப் பிறகு பெரிய மணற்பரப்பு இருந்தாலும், புயல் வீசும் காலங்களில் கோயில் பிராகாரங்களில் கூட கடல் நீர் வந்து விடுவதை அவனும் பார்த்திருக்கிறான். பத்து வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறைதான் புயல் வருமெனினும், ஒரே புயலால் அந்தக் கோயில் சேதமடைய வாய்ப்பிருக்கிறது. அப்படி கோயில் சேதமடைவது ஊருக்கு நல்லதல்ல. இயற்கை உபாதையால் சேதமுறா வண்ணம் கோயிலைக் கட்டியிருக்க வேண்டும். அல்லது சேதம் ஏற்படுமென்று தெரிந்தால், அதற்கான பாதுகாப்புகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். கடலுக்கு அருகே கட்டப்பட்டுள்ளதன் காரணம் தெரியவில்லை.

ஆனால், பலமான பாதுகாப்புக்கு சுற்றி ஒரு அழுத்தமான கோட்டை அவசியம். கிழக்குப் பக்கம் மதில் சுவர் எழுப்பி, கடலலையைத் தடுத்து விட்டால் மட்டும் போதாது. மேற்கும், வடக்கும், தெற்கும் கூட அந்த அரணை பெரிதுபடுத்தி விட வேண்டும். ஒருவேளை அந்நியர் படையெடுப்பு ஏதும் இருப்பின் குழந்தைகளையும், பெண்களையும் இங்கே கொண்டு வந்து பத்திரமாக வைக்கலாம்.

கிராமம் பெருத்துப் போய்க் கொண்டிருக்கிறது. மயிலை, திருவல்லிக்கேணி சுற்றி, பல கிராமங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, ஒரு கோட்டை இந்த ஊருக்கு அவசியம் என்று சிந்தித்தான்.

ஒரு பகுதி குடியிருப்புக்கு ஓநாய்களால் தொந்தரவு. இன்னொரு பகுதி குடியிருப்புக்கு தூர் வார வேண்டிய கேணிகள் பிரச்சினை. இன்னொரு பகுதி குடியிருப்புக்கு ஆற்றின் மீது பாலம் கட்ட வேண்டும். இன்னொரு பகுதியில் நிழல் தரும் மரங்கள் நடவேண்டும் என்று ஒவ்வொரு விண்ணப்பமாக வர, மக்கள் கூடி நின்று கை கூப்பி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமாறு கேட்டனர்.

வயதாலும் நல்ல குணத்தாலும் அற்புதமான சுற்றுச் சூழ்நிலையாலும் இனிமையான மனைவியாலும் கம்பீரமாகிக் கொண்டிருந்த நீலகண்ட சிவன், சொடுக்கும் நேரத்தில் எல்லாக் குறைகளையும் தீர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். சிறு பிரச்சினைகளையும் தீர்த்துவிட வேண்டும் என்று முனைப்பு காட்டினான்.

''எனது மகன் கைக்கோளர் படையிலே நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சேர்ந்தான். தலைநகருக்குப் போனான். பிறகு தலைநகரிலிருந்து வட தேசம் போனதாகத் தகவல் வந்தது, போரில் வீரர்கள் வெற்றி பெற்றுத் திரும்பி விட்டார்கள். அரசர் இந்த வழியாகத்தான் தலைநகருக்குப் போனார், ஆனால், என் மகனைப் பற்றி எந்தத் தகவலும் எனக்குத் தெரியவில்லை. யாரைக் கேட்பது என்று தெரியவில்லை.

என் ஊர் என்னைப் பராமரித்து வருகிறது. உணவுக்கோ, துணிக்கோ கஷ்டமில்லையெனினும் மகனில்லாதது ஒரு தாய்க்கு பெரிய இழப்புதானே ஐயா. ஊர் என் சிதைக்கு தீ வைத்தாலும், என் மகன் வைப்பது போல் ஆகுமா, ஒரு வேளை என் மகன் இறந்து விட்டிருந்தானென்றால் அவனுக்கு உண்டான நீத்தார் கடனைச் செய்யாமல் நான் போகலாமா, அந்தப் பாவம் என்னைச் சும்மா விடுமா. என் மகனது இருப்பை அல்லது இறப்பை நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். உங்களால் ஆன உதவியைச் செய்யுங்கள்'' என்று ஒரு தாய் கை கூப்பிக் கேட்க, நீலகண்ட சிவன் வீடு திகைத்துப் போயிற்று.

பொன்னி வெளியே ஓடி வந்து அந்தத் தாயை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். கட்டித் தழுவிக் கொண்டாள். வெகுநாள் அடக்கி வைத்திருந்த அழுகை பெரிய பிளிறலாய் அந்தத் தாயிடமிருந்து வெளிப்பட்டது.

''அப்பா நான் அழுததே போதுமய்யா. இதுவரை குமைந்து கொண்டிருந்த சோகம் சட்டென்று நீங்கி விட்டது. முடியுமானால் இந்த உதவியைச் செய்யுங்கள்.''

''ஏனம்மா, இந்த உதவியை இதற்கு முன்பு வேறு யாரிடமும் நீங்கள் கேட்கவே இல்லையா,''

''அந்தணர்களிடம் சொன்னேனய்யா. வெகு தொலைவிலேயே போய் போரிட்டவனுடைய இருப்பை, இறப்பைத் தெரிந்து கொள்வது கடினம். மறுபடியும் அந்தப் பக்கம் போர் நிகழ்ந்தாலொழிய இதைக் கண்டுபிடிக்க முடியாது என்று சொன்னார்கள். என் மகனுக்காக இன்னுமொரு போர் ஏற்பட்டு அதில் பல பேர் உயிரிழக்க வேண்டுமா. அப்படி வேண்டிக் கொள்வது பாபமல்லவா. எனவே இதை மறுபடியும் விசாரிக்கச் சொல்லி நான் வற்புறுத்தவில்லை - எல்லாப் பிரச்சினைகளையும் நன்கு தீர்க்கிறீர்கள் என்று உங்களைப் பற்றி ஊர் சொன்னதால், உங்களிடம் இந்த பிரச்சினையைக் கொண்டு வந்தேன். இது உங்களால் தீர்க்கப்பட முடியும் என்று நம்பினேன். இந்த விண்ணப்பம் தீர்க்க முடியாததாக இருந்தால் தயவுசெய்து மறந்துவிடுங்கள்'' என்று கைகூப்பினாள்.

''இல்லை. இது மறந்து விடக்கூடிய விஷயமல்ல. முழு முயற்சி செய்ய வேண்டிய ஒரு விஷயம். இதை நிச்சயம் நிறைவேற்றுவேன் என்று சொல்லக் கூடிய கர்வம் எனக்கில்லை. இறையருளால் இது நிகழக்கூடும். இந்தப் பூமி சத்தியமாய் என்னுடைய முழு முயற்சியை உங்கள் மகனைத் தேடுவதில் செலவு செய்வேன். கவலை வேண்டாம். ஒருவேளை முயற்சி செய்தும் கிடைக்கவில்லையெனில், என்னை நீங்கள் மகனாக

ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று நீலகண்ட சிவன் கைகூப்ப, வேளாளர்கள் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள்.

''எப்பேற்பட்ட வார்த்தையப்பா சொல்கிறாய்'' அவள் கண்ணீர் வடித்தாள்.

''அவள் கம்மாளப் பெண்மணி. அந்த இளைஞன் போர்க்கருவிகள் செப்பனிடுவதற்காக அரசனோடு போனவன். அவன் வகுப்பினரே அவன் வருகை பற்றி அலட்சியமாக இருந்துவிட்டபோது, ஊருக்குத் தலைவனாகி விட்ட ஒரே காரணத்தினால், அந்தத் தாயிடம் என்னை மகனாக ஏற்றுக்கொள் என்று சொல்கிறாய். உன்னை எங்கள் இனத்துப் பிள்ளையாக, இந்த இனத்தின் தலைவனாக அடைந்தது எங்கள் பாக்கியம்'' என்று அவர்கள் பாராட்டினார்கள். கட்டித் தழுவி வாழ்த்தினார்கள்.

பிரச்சினைகள் பல நூறு வந்து குவிந்தன. அந்தணர்கள் தங்களுக்கென்று தனிக் குளம் வேண்டுமென்று கேட்டார்கள். குளம் தோண்டுவதற்கு இளவரசர் கொடுத்த நிதியிலிருந்து காசு கேட்டார்கள்.

''இப்போதிருக்கிற குளத்தில் ஒரு கரை மட்டும் எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கரையிலிருந்து யாவரேனும் நீரில் குளித்து சத்தம் செய்தாலோ, உரக்கச் சிரித்தாலோ எங்கள் ஜப தபம் கலைகிறது. எனவே எங்களுக் கென்று தனியாக நான்கு படித்துறைகளுடன் கூடிய குளம் ஒன்று வேண்டும்'' என்று கேட்டார்கள்.

நீலகண்ட சிவன் ''அதற்கு நிதி இல்லை'' என்று மறுத்தான். ''இருக்கிற காசில் கேணி ஒன்று அமைத்துத் தரலாம். அது உங்களுக்கு உகந்ததாக இருக்குமா'' என்று கேட்டான்.

சில அந்தணர்கள் கோபமானார்கள். ''இளவரசர் கொடுத்த காசை எங்களுக்கு செலவழிப்பதில் உனக்கு என்ன குறை?'' என்று கேட்டார்கள்.

''இளவரசர் உங்களுக்கு செலவழிக்க மட்டும் எனக்கு காசு தரவில்லை. எது முக்கியமென்று நான் கருதுகிறேனோ, அதற்குத்தான் நிதி ஒதுக்க முடியும்.''

''ஓநாய்கள் முக்கியமா... ஓநாய்களை அழிப்பதற்கு பதினாறு கழஞ்சுகள் செலவழித்திருக்கிறாயே.''

''ஆமாம். ஓநாய்கள் உயிரோடு சம்பந்தப்பட்ட விஷயம், குளம் சுத்தத்தோடு சம்பந்தப்பட்ட விஷயம். உயிரோடு இருந்தால்தான் சுத்தமாக இருக்க முடியும். இம்மாதிரிக் கேள்விகளை, இனிமேல் நீங்கள் என்னிடம் கேட்காமல் இருப்பது நல்லது. நான் பதில் சொல்லும் போது வேகப்பட்டு விட நேரிடும்.''

''ஆ... எங்களிடம் வேகப்படுவாயா.''

''எவர் அபத்தமாகப் பேசினாலும் வேகப்படுகின்ற. ஒரு சுபாவம் எனக்குண்டு. எனவே நான் என்ன சொல்கிறேனோ அதைக் கேட்டுக் கொண்டு மௌனமாய் இருந்து விடுங்கள். மிகவும் பதட்டமாகப் பேசினால், அது பிரச்சினைகளை ஏற்படுத்தும்'' என்று கடிந்து கொண்டான்.

''இனிமேல் உன்னுடன் பேசுவதே இல்லையப்பா. போதும்'' என்று அந்தணர்கள் துண்டு உதறி எழுந்து கொண்டார்கள்.

அவர்கள் எழுந்து போன இரவு. தளபதியாய் இருந்து விலகியவர் வந்தார். ''இப்படியேதான் என்னைத் தொந்தரவு செய்வார்கள். அவர்களிடம் எது குறித்தும் பணிவாகவே பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அதற்காகவே முரட்டுத் தனம் காட்டுவார்கள். யார் தலைவனாக இருக்கிறானோ, அவர்களை ஆத்திரமூட்டிப் பார்ப்பதே அவர்களுடைய வாடிக்கை. நம்முடைய ஆத்திரத்தை ஒன்றுக்குப் பல மடங்காகப் பெருக்கி, அதை ஊரில் இழித்துப் பேசுவது இவர்களுடைய

வாடிக்கை. அக்ரஹாரம் முழுவதும் உன்னைக் கொடுமைக் காரனென்றும், சாட்டையை ஓங்கி அடிக்க வந்தாய் என்றும், பெண்களை மானபங்கப்படுத்துவேன் என்று பயமுறுத்தினா யென்றும் இப்போது அவர்களால் பரப்பப்பட்டு வருகிறது. இதை இன்னும் கண், காது, மூக்கு வைத்து அரசர், இளவரசர் அதிகாரிகளிடம் சொல்வார்கள்.

எனவே, நீ மிகமிக கவனமாக இருப்பது நல்லது. நீ எதைச் செய்ய முடியாதோ, அதைத்தான் அவர்கள் கேட்பார்கள். இதைப் பற்றி அரசரிடமோ அல்லது இளவரசரிடமோ பக்குவமாய் தெரிவித்துப் பேசிவிடுவது நல்லது. இவர்களை ஏதேனும் ஒரு வகையில் கெட்டிக்காரத்தனமாய் நீ சமாளித்துத்தான் ஆக வேண்டும்.''

நாளாக, நாளாக பிரச்சினைகள் அதிகமாயின. எந்த நேரமும் விழிப்போடு ஊர் சுற்றி வர வேண்டியிருந்தது. மக்களோடு பேச வேண்டியிருந்தது.

பொன்னி அவனுக்கு மிக உதவியாக இருந்தாள். அவனுக்கு நேரம் பார்த்து உணவிட்டாள். உடம்பு சூடு குறைய எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டினாள். அயர்ந்து தூங்கும் போது அருகே இருந்து விசிறினாள். உடல் பலத்திற்காக தகுந்த உணவோடு மருந்துகளும் கொடுத்தாள். வைத்தியரை வாரம் தோறும் வரச்சொல்லி நாடி பார்க்கச் சொன்னாள். பித்தமாய் இருந்தால் பித்தம் நீக்கவும், வாதமாக இருந்தால் வாதம் குறைக்கவும் வைத்தியர் குளிகைகள் தர, அதை வேளா வேளைக்கு ஒழுங்காகக் கொடுத்தாள்.

அவனுக்கு மட்டுமல்லாது அவனுடைய சிறு படை வீரர்களுடைய உணவுத் தேவைகளையும் கவனித்துக் கொண்டாள். விருந்தினர்கள் வருகிறபோது உடனடியாய் உணவு தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தாள். அவளுக்கென்று கொடுத்த பொற்காசுகள் எல்லாம் அரசாங்கம் நடத்துவதற் குண்டான விஷயங்களில் தான் செலவழிந்தன.

வரி வசூல் செய்து அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டிய ஒரு கடமையும் தலைவருக்கு இருந்தது. சில கிராமங்களில் சில வீடுகளிலிருந்து வரி வசூலிக்க முடியவில்லை. ஏதோ சில காரணங்களால் அவர்கள் வரி கட்ட முடியாமல் போக, அந்த வரியை தான் கட்ட வேண்டும் என்று நீலகண்ட சிவன் விரும்பி னான். காசு இருக்கிறதா என்று பொன்னியிடம் கேட்டான்.

பொன்னி நகைகளை வணிகர்களிடம் விற்றாள். காசு கொண்டு வந்து கொடுத்தாள். 'எங்கிருந்து காசு வந்தது' என்று நீலகண்ட சிவன் கேட்கவில்லை. பொன்னியும் சொல்லவில்லை.

பொன்னியும் நீலகண்ட சிவனும் சந்தோஷமாய் குடித்தனம் செய்கிறார்கள் என்று ஊர் முழுவதும் நினைத்துக் கொண்டிருந்தது. உறவுகள் எல்லாம் நம்பிக் கொண்டிருந்தன. ஆனால் பொன்னியும் நீலகண்ட சிவனும் ஒரே அறையில் உறங்கக் கூட முடியவில்லை. உறங்கினாலும் உறவு கொள்ள மனம் வரவில்லை. வேலைப் பளுவினால் அயர்ந்து தூங்கவே முடிந்தது. விழித்திருந்தாலும் அடுத்த பிரச்சினையைப் பற்றி மனம் போயிற்று. மனைவியோடு சுகித்திருப்பது பற்றிய எண்ணமே எழவில்லை.

வருடங்கள் கழிந்தன. எல்லா இளம் பெண்களையும் இளைஞர்களையும் கேட்பது போல 'விசேஷம் ஏதுமில்லையா' என்று யாராலும் இவர்களைக் கேட்க முடியவில்லை. அவர்கள் கம்பீரமாக வெளியே வந்தார்கள். வெளியே வரும்போதே அவர்களை ஊர் வணங்கிற்று. வணக்கத்திற்குரியவர்களாக அவர்கள் உயர்த்தப்படும்பொழுது என்ன ஏதேனும் நடை பெறுகிறதா, இல்லையா, என்று யாரும் அவர்களை கேலியாக விசாரிக்க முன் வரமாட்டார்கள்.

அம்மா வருத்தப்பட்டாள்.

''தயவு செய்து, இப்பொழுது பேச்சு எதுவும் துவங்கி விடாதே. அவருக்கு இருக்கின்ற கவலைகள் போதாதா, நீ வேறு

இப்படி பேசுகிறாய் என்று தெரிந்தால் அவர் ஆடிப்போவார். ஊருக்காக உழைக்கிற ஒரு மனிதரிடம் இப்படி அற்பத்தனமாக விஷயங்களைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. எங்களுக்கென்ன கிழடு தட்டி விட்டதா. இன்னும் வாலிபமாகத் தானே இருக்கிறோம். எப்பொழுது வேண்டுமானாலும் குழந்தை பெற்றுக் கொள்வோம். அவருக்கு கிடைத்திருக்கக் கூடிய பொறுப்பை, உயரிய பதவியை நாம் சரிவர காப்பாற்றி நல்லபடி நடத்தி ஊரின் செழிப்பை உயர்த்த வேண்டும் என்பது தான் என் விருப்பம்.

மரப்பாலம் கட்டியாகி விட்டது. செழுங்கழுநீர் ஓடையைத் தாண்டி எத்தனை பேர் நடந்துவருகிறார்கள் இப்போது மக்களுக்கு எவ்வளவு வசதியாக இருக்கிறது. மாட்டு வண்டி களும், யானைகளும் போகுமளவுக்கு வேறு ஒரு மரப்பாலமும் கட்ட வேண்டுமென்று அவர் தீர்மானித்திருக்கிறார். ஊருக்குள் ஓநாய்கள் வருவதேயில்லை. மிகப் பெரிய கேணிகள் மூன்று ஒரே இடத்தில் தோண்டி, அவை மூன்று இனத்தாருக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் சந்தோஷமாக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தாய்க்கு நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. அவள் மகன் உயிரோடுதான் இருக்கிறான். வடக்கே இமயமலையைப் பார்த்து விட்டுத்தான் திரும்புவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு படர்ந்த மலையை நோக்கிப் போயிருக்கிறான். திரும்பி வருவேன் என்று ஒரு ஓலை எழுதிக் கொடுத்து விட்டு அதை நம்மிடம் சேர்க்கும்படி சொல்லியிருக்கிறான். நம்முடைய ஊர் தெரியாமல் அரசருடைய கைக்கோளர்ப் படைத்தலைவர் எங்கெங்கோ ஓலை அனுப்பி, அது அவரிடமே பலமுறை திரும்பி வந்திருக்கிறது. அதில் நம் ஊர் பெயர் எழுதப் படவில்லை. மயிலை, திருவல்லிக்கேணி என்று எழுதப்

பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். வெறுமே சேற்றுப்பாக்கம் என்று எழுதியிருந்ததால் எந்த சேற்றுப்பாக்கம் என கண்டு பிடிக்க இயலவில்லை. தலைவரும் முழு முயற்சி செய்யாமல் விட்டிருக்கிறார்.

நல்ல வேளையாக இதற்காக வலை வீசித் தேடியதில், ஒவ்வொரு வீரராகப் பேசிப் பார்த்ததில் தலைவரிடம் ஏதோ ஓலை இருப்பதாகத் தெரிய வந்தது. தலைவரிடம் சென்று விசாரித்ததில், தலைவர் நான்கு வருடமாக வைத்திருந்த ஓலையை எடுத்துக் கொடுத்தார். ஓலையில் மிக அழகாக, மிகத் தெளிவாக 'நான் நிச்சயம் திரும்பி வருவேன், கவலை வேண்டாம்' என்று அவன் எழுதியிருக்கிறான். அந்தத் தாய் அன்று பட்ட ஆனந்தம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. எங்களை எப்படி வாழ்த்தினாள் தெரியுமா?

தீர்க்க சுமங்கலியாய் இரு. நெடுநாள் இந்த பூவுலகில் நிலைத்திரு. உங்களுடைய பெயரும், புகழும் இங்கு எப்போதும் இருக்கட்டும் என்று எங்கள் இருவரையும் வாழ்த்தினாள்.

கேட்கக் கேட்க வயிறு குளிர்ந்தது. பத்துப் பிள்ளைகள் பெற்று இறக்கியவள் போல் ஒரு கிழத்தனம் என்னுள் படர்ந்து விட்டிருந்தது என்றால்... நான் எவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பேன் என்று யோசனை செய்து பார்'' பொன்னி அம்மாவிடம் பேசினாள்.

அம்மாவும் கேள்வியை நிறுத்திக் கொள்ள, அவர்களுடைய இல்வாழ்க்கை பற்றிய விசாரணை, அக்கறை எவருக்குமே இல்லாது போயிற்று. பொன்னியும் வாய் திறந்து எவரிடமும் சொல்லவில்லை.

''ஊருக்காக என் புருஷனை விதித்திருக்கிற போது எனக்காக என்று எப்படி இழுத்துக் கொள்வது. ஊருக்காக

ஏற்பட்டது எப்படி இயல்பாக நடந்ததோ, அதே போல எனக்காக என் புருஷன் வருவதும் இயல்பாக நடக்கும். இறைவனுக்குத் தெரியும் எப்பொழுது எதை, எப்படி, எவருக்குத் தர வேண்டு மென்று. எனவே, எனக்குக் கொடு என்ற பிரார்த்தனை கூட இல்லை. இது இறைவன் கொடுத்த வரம் என்று நான் அமைதியாக இருப்பேன்'' பொன்னி தன் தோழியிடம் மனம் விட்டுப் பேசினாள்.

''உன்னால்தான் பொன்னி உன் புருஷனுக்குச் சிறப்பு. இந்த விவரம் ஒரு நாள் ஊருக்குத் தெரிய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்'' என்று சொன்னாள்.

''அடி போங்கடி'' அவர்களைப் புறக்கணித்து விட்டு பொன்னி தன் வேலையை ஆரம்பித்தாள்.

மயிலை, திருவல்லிக்கேணி பகுதியில் மாதம் மும்மாரி பெய்தது. நீர்நிலைகள் நிரம்பியிருந்தன. செழுங்கழுநீர் ஓடையில் நீர் பெருகி, சலசலத்து ஓடி கடலில் கலந்தது. அடர்ந்த புற்கள் முளைக்கும், மந்தைகளை மேய்க்கும் வெளிக்கு ஆடுகள் அழைத்துப் போகப்பட்டு கொழு கொழுவென வளர்க்கப்பட்டன. அந்த மந்தைவெளியில் இடையர்களுக்காக ஒரு குடியிருப்பும் கட்டித் தரப்பட்டது.

மயிலை கபாலீசுவரத்தின் கற்கோட்டை பற்றிய கவலையோடு நீலகண்ட சிவன் எப்போதும் சுற்றித் திரிந்தான். இன்னமும் பலப்படுத்த வேண்டும், இன்னமும் பலப்படுத்த வேண்டும் என்று இடையறாது எண்ணம் கொண்டிருந்தான்.

பாண்டியர்கள் சிங்களர்களோடு கூட்டுசேர்ந்து மறுபடியும் கடற்கரைப் பட்டினங்களைத் தாக்குவார்கள் என்று ஒரு செய்தி பரவ, மயிலை, திருவல்லிக் கேணியிலும் ஒரு போர்ப்படை பாடி அமைத்தது. இளவரசர் அங்கு வருவார் என்று சொல்லப்பட்டது.

# 5

இளவரசர் காஞ்சியிலிருந்து திருவொற்றியூர் வந்து, திருவொற்றியூரிலிருந்து திருமயிலைக்கு விஜயம் செய்தார். அலைகள் மோதும் கோயில் கோட்டையைப் பார்த்தார். நீலகண்ட சிவனின் தோளில் சாய்ந்து கோயிலின் அழகையும், கடலின் நீர்ப்பரப்பையும் ரசித்தார். 'எப்படி இருக்கிறது வாழ்க்கை' என்று நீலகண்ட சிவனை விசாரித்தார்.

அவருக்குப் பதில் சொல்லிவிட்டு, போர் பற்றிய கவலை யோடு நீலகண்ட சிவன் கேட்டான்.

''பெரிய போரெல்லாம் எதுவுமில்லை. சிங்களர்கள் ஒரு சிறு குழுவாகச் சேர்ந்து பாண்டியர்களைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே புதிதாக ஒரு இளவரசன் பதவியேற்றிருக்கிறான். காட்டுக்கு நடுவே கற்பாறையில் உட்கார்ந்து தன்னை இளவரசன் என்று அறிவித்துக் கொண்டிருக்கிறான். அப்படி அறிவித்ததாலேயே ஏதேனும் செய்யவேண்டிய கட்டாயம் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது, எனவே தமிழகத்தை நோக்கிப் படையெடுப்போம் என்று சூளுரைத்திருக்கிறான். வருவான், உதைப்படுவான், திரும்பிப் போவான்.

இது வழக்கமாக நடக்கின்ற ஒரு விஷயம். பதவியேற்ற தாலேயே இந்த படையெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. இது பற்றி அதிகம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

மயிலை, திருவல்லிக்கேணியை நீ செம்மையாகக் கவனித்துக் கொள்கிறாய் என்று எனக்கு பல தகவல்கள் வந்தன. வரி வசூலிப்பதில் தவறு நடந்திருப்பதாய் அந்தணக் குடியிருப்பிலிருந்து ஒரு ஓலை வந்திருக்கிறது.

கையெழுத்திடப்படாத ஓலை. நான் அதைக் கிழித்து விட்டேன். போகும் போது அந்தணர் குடியிருப்பு வழியாகப் போவேன். 'கையெழுத்துப் போட்டு குற்றச்சாட்டு தர முடிந்தால் விசாரிப்பேன். அப்படி கையெழுத்து போட்டு மனு கொடுத்தும் குற்றம் நிரூபிக்கப்படவில்லை யென்றால், மனு கொடுத்தவர் தண்டிக்கப்படுவார்' என்று சொல்லப் போகிறேன். மறுபடியும் மொட்டை ஓலை அனுப்புவதற்குக் கூட எவருக்கும் துணிவு வராது.

அந்தணர்கள் எப்போதும் இப்படித்தான். தங்களைத் தவிர வேறு யாரும் ஆட்சி செய்யக் கூடாது என்ற எண்ணமுள்ளவர்கள். எனக்கு அவர்களைக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. அவர்களைப் பற்றி அதிகம் அக்கறைப்படாமல், அதேசமயம் அவர்களை விட்டு அதிகம் விலகாமல் கவனமாக இரு. அவர்கள் ஏதேனும் செய்து என்னை திசைமாற்றக்கூடும்.

மனிதர்களாக பிறந்தவர்களிடம் குறைகள் இருக்கும். உன்னிடம் என்ன குறைகள் இருக்கிறது என்று அவர்கள் முகர்ந்து பார்த்து ஏதேனும் குறை சொல்லக்கூடும். அது பற்றியெல்லாம் கவலைப்படாதே. மயிலை, திருவல்லிக்கேணி பகுதி மேம்பாட்டிற்காக மிகப்பெரிய தொகை ஒன்றைத் தரப் போகிறேன். அந்தத் தொகையை வரியாக வசூலித்து நீ எடுத்துக் கொள்ளலாம். எனக்குத் தர வேண்டியதில்லை.

அது தவிர, அறிவிக்கப்படாமல் இன்னொரு தொகையும் உனக்குத் தந்துவிட்டுப் போகிறேன். மயிலை, திருவல்லிக்கேணி பகுதிகளில் யுத்தப் பயிற்சி செய்கின்ற பள்ளிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய். அந்தணர்கள் தவிர, மற்ற எல்லோருக்குமே கட்டாய பயிற்சி கொடு. அந்தண இளைஞர்கள் விரும்பி வந்தால், அவர்களுக்கும் பயிற்சி கொடு.

இலங்கைப் போர் முக்கியமில்லையென்றாலும் வடக்கேயிருந்து மேலைச் சாளுக்கியர்களோ, அல்லது இன்னும்

தள்ளியிருக்கின்ற அந்நியர்களோ நம்மை நோக்கி வரக்கூடும். நாம் கங்கையை நோக்கிப் போனது போல அவர்கள் தென்குமரியை நோக்கி ஒரு படையெடுத்து வரக்கூடும். கடற்கரை வழியாக வருவதுதான் எளிது. உறுதியான பயணம். அங்கு அந்நியர்கள் உள்ளே நுழையாமல் தடுப்பதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும். அவ்வப்போது உடனுக்குடன் எனக்கு தகவல்கள் அனுப்பவேண்டிய விஷயத்தையும் நீ கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னார்.

''சிங்களர்கள் கடற்கரைப் பட்டினங்களைத் தாக்குவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றதே, அது உண்மையா இளவரசே'' நீலகண்ட சிவன் கை கட்டிக் கேட்டான்.

''வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. திருமயிலை, திருவல்லிக்கேணி பக்கம் வரமாட்டார்கள். இந்தப் பக்கம் தரையிறங்குவது அவ்வளவு எளிதல்ல. ஆனால், கடல் மல்லைப் பக்கம் தரையிறங்குவதற்கு வசதிகள் இருக்கின்றன. ஒரு இடத்தில் கடல் உள்ளே வந்திருக்கிறது. அங்கு ஒரு பெரிய நதி கடலோடு கலப்பதால் அதைச் சட்டென்று தாண்டி வந்துவிட முடியும். அல்லிக்கேணி பகுதியில் இருக்கின்ற நதி வேகமாக இருப்பதால் அதை எதிர்த்துக் கொண்டு உள்ளே வர முடியாது. நதி மேலாகவும், கடல் கீழேயும் இருக்கிறது. மீறி முயற்சித்தால் படகுகள் சிக்கிக் கொள்ளும்.

ஆனால், கடல் மல்லையில் நதி கீழாகவும், கடல் மேலாகவும் இருந்து, கடல் தண்ணீர் உள்ளே வருகிறது. கடல் தண்ணீர் நதிக்குள் வருகின்ற இடத்தில் நாவாய்கள் வேகமாக உள்ளே திரும்பி கரைகளில் இறங்கக் கூடும். அதே விதமாக பலமாக துடுப்புப் போட்டு நதியிலிருந்து கடலுக்கும் போய் விட முடியும். எனவே தான் கடல் மல்லையை முக்கியமான இடமாக, காவல் வீரர்கள் இருக்கும்படியாக செய்திருக்கிறேன். கடல்

மல்லை மீது ஒரு கண் வைத்திரு. அங்கிருந்து உனக்கு வாரந்தோறும் செய்திகள் வந்து கொண்டிருக்கும். மற்றபடிக்கு உன் நிர்வாகம் எனக்கு சந்தோஷமளிக்கிறது.

சரி, திருமணமாகி ஐந்து வருடங்கள் ஆகிவிட்டனவே. 'ஏன் குழந்தை பிறக்கவில்லை.' அரசர் கேட்க, நீலகண்ட சிவன் தலை குனிந்தான். ''நான் நல்ல வைத்தியரை அனுப்பட்டுமா? எனக்கென்று தலைநகரில் ஒரு வைத்தியர் இருக்கிறார். அவர் கொடுக்கும் குளிகைகள் உனக்கு குழந்தைப் பேற்றினை கொடுக்கக்கூடும். உன் மனைவியின் நாடியைப் பிடித்தும் அவர் சோதிப்பார். இது குறித்தும் நீ கொஞ்சம் யோசனை செய்'' என்று இளவரசர் சொல்லிவிட்டுப் போனார்.

நீலகண்ட சிவன் இதைப் பொன்னியிடம் சொல்ல, பொன்னி தன் மாமியிடம் சொல்ல, மாமி மருமகளின் தாயிடம் சொல்ல, மருமகள் தாய் ஊரிடம் சொல்ல, சடேரென்று பெரியவர்கள் வேகமாக நீலகண்ட சிவனின் வீட்டை நோக்கி ஓடினார்கள்.

''ஆமாம், இது பற்றி நாம் அக்கறைப்படாதிருக்கிறோமே. இது நல்லதா. இது உடனடியாகச் சீர் செய்யப்பட வேண்டிய விஷயமல்லவா. நீலகண்ட சிவன் நம்மீது அக்கறை எடுத்துக் கொள்ள, நாம் அவர் மீது அக்கறையில்லாமல் இருக்கிறோமே'' என்று சொன்னார்கள்.

''இளவரசர் வைத்தியரை அனுப்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார் அல்லவா. இப்போதே எதற்கு இது பற்றிப் பேசுகிறீர்கள்'' என்று நீலகண்ட சிவன் சொல்ல, அவர்கள் மௌனமானார்கள்.

பொன்னியிடம் விசாரித்தார்கள்.

பொன்னி ''இந்த ஐந்து வருடத்தில் ஒரு முறை கூட தன் புருஷன் தன்னோடு கூடவில்லை'' என்று தன் தாயிடமும்,

மாமியிடமும் சொல்ல, அவர்கள் அதிர்ந்து போனார்கள். 'என்ன இது... என்ன இது' என்று பதறினார்கள்.

''இதை எப்படி என் புருஷனிடம் போய் சொல்லப் போகிறாய். யாரை விட்டு சொல்லப் போகிறாய். அவருக்கு இருக்கின்ற வேலைகளும் பொறுப்பும் உனக்குத் தெரியுமா. இதை நான் ஆரம்பித்தேன் என்று தெரிந்தால் என் மீது அவர் எவ்வளவு வருத்தப்படுவார். இதை என்னிடம் சொல்லாமல் ஏன் மாமியிடமும், தாயிடமும் சொன்னாய் என்று கேட்டால், நான் என்ன பதில் சொல்வேன். எந்தப் புருஷன் வேண்டுமென்று நான் தவம் இருந்தேனோ, கடவுள் எனக்கு அந்த புருஷனையே கொடுத்திருக்கிறார். எனக்குப் புருஷனைக் கொடுத்த கடவுளே, கபாலீஸ்வரரே, கற்பகத்தாயே, எனக்கு நல்ல மகனையும், மகளையும் தருவாள். நான் பல குழந்தைகளைப் பெறுவேன். நீங்களெல்லாம் அவசரப்பட்டு ஆடுவதால்தான் நான் இதைச் சொல்கிறேன்.

எங்களுக்குள் கூடல் நடைபெறாது போனது சண்டையால் அல்ல. அவர் என் மீது எவ்வளவு பிரியமாக இருக்கிறார். என்னை எவ்வளவு உயர்வாக மதிக்கிறார். இந்த ஊரில் வேறு எவரேனும் நான் வாழ்ந்தது போல் வாழ்கிறார்களா. உங்களில் யாரேனும் புருஷனுக்கு எதிரில் உட்கார்ந்து சாப்பிடுவீர்களா. நானும் அவரும் எதிரும் புதிருமாக உட்கார்ந்து சாப்பிடுகிறோம். ஏனென்றால் சாப்பிடுகிற நேரம் தான் நாங்கள் பேச முடிகிறது. எனவே சோற்றுப் பானையும், குழம்புச் சட்டியையும் அருகே வைத்துக் கொண்டு நாங்கள் இருவரும் எதிரெதிரே உட்கார்ந்து எல்லா விஷயங்களும் பேசிக் கொண்டே சாப்பிடுகிறோம். என் தோழிகள் இதை எவ்வளவு பொறாமையாகப் பார்க்கிறார்கள் தெரியுமா. இப்படி ஒரு புருஷன் இருப்பானா என்று வியக்கிறார்கள்.

அவருக்கு வரும் புடைவைகளையெல்லாம் எனக்குக் கொடுத்து விடுகிறார். நாற்பது புடைவைகளுக்கு மேல் நான்

வைத்திருக்கிறேன், அரசாங்க காசாக ஆயிரம் பொற்காசுகள் என் பெட்டியில் இருக்கின்றன. நான் அதிலிருந்து ஐந்து எடுத்துக் கொண்டால் கேட்பதற்கே ஆளில்லை.

எங்கள் வீட்டில் நெல்லும் நவதானியங்களும் நிரம்பிக் கிடக்கின்றன. பாலுக்கும், தயிருக்கும் குறைவே இல்லை. தங்கள் குறைகளைத் தீர்த்ததற்காக, தங்களுக்கு குடியிருப்பு கட்டிக் கொடுத்ததற்காக வேளாளர்கள், இலவசமாய் எங்கள் வீட்டிற்கு பால் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாடுகளைத் தாங்களாகவே இழுத்துக் கொண்டு போய், மேய்ச்சல் நிலத்தில் மேயவிட்டு, மீண்டும் கொண்டு வந்து கட்டுகிறார்கள். அதற்கு கைப்பிடி நெல்கூட அவர்கள் கூலியாகப் பெறுவதில்லை. அப்படிக் கூலி வாங்குவது தவறு என்று கட்டுப்பாடாக இருக்கிறார்களாம். மீறி கொடுக்க, 'எங்களால் ஆன உதவி. இதைக் கெடுத்து விடாதீர்கள்' என்று என்னைக் கெஞ்சுகிறார்கள்.

நான் எவ்வளவு கர்வத்தோடு அலைகிறேன் தெரியுமா. எவ்வளவு நிறைவோடு இருக்கிறேன் தெரியுமா. இந்த நிறைவு, இந்த கர்வம் இந்தப் பகுதியில் வேறு எந்தப் பெண்ணும் அடையவில்லை.

எனக்கு என் புருஷனிடம் பிடித்தது என்ன தெரியுமா. இளவரசருக்கு ஏழு மனைவிகள். அரசருக்கு பதிமூன்று மனைவிகள். இவர் இன்னொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. திருமணத்தன்று முதலிரவில் என்னை அணைத்துக் கொண்டு அவர் சொன்ன ஒரே ஒரு விஷயம் இதுதான்.

'பெண்களுக்கு முற்றிலும் பிடிக்காத விஷயம் தன்னுடைய புருஷன் வேறொரு பெண்ணை விரும்புவது தான் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உனக்கும் அப்படித் தானே' என்று கேட்டார். நான் 'ஆம்' என்று தலையசைத்தேன்.

'சூரிய, சந்திரர் சாட்சியாக நான் உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனதாலும் தீண்டமாட்டேன், இது சத்தியம்' என்று சொன்னார்.

நான் நெகிழ்ந்து போனேன். இந்த ஊரில் எந்த ஆணாவது தன் மனைவியிடம் முதலிரவில் இப்படி ஒரு சத்தியம் செய்திருப்பானா. நான் அவரோடு கூடலுக்குத் தகுதியானவளா. என்னால் அவருக்கு இணையாக நடந்து கொள்ள முடியுமா என்றெல்லாம் யோசிக்காது, 'நீ எனக்கு மனைவியாகிவிட்டாய். இனி எனக்கு வேறு பெண் மீது நாட்டமில்லை' என்று சொன்ன அற்புதமான மனிதர்.

இவர் எனக்கு குழந்தை கொடுக்கவில்லை, என்னோடு கூடவில்லை என்று சண்டை போடவா. எப்படி போடமுடியும். ஊரின் பிரச்சினையை தன் மீது சுமந்து தள்ளாடி நடக்கிறவரிடம் என் மீது புரண்டு படு என்று எப்படிக் கேட்க முடியும்.

நடு இரவில் வந்து படுப்பவருக்கு, கால் குடையும். நான் அவர் முகம் பார்த்தே அந்தக் குடைச்சலின் வேதனையைப் புரிந்து கொள்வேன். கால் பிடித்து விடுவேன். கால் பிடித்துவிட்ட மறுநாழிகையில் அவர் அயர்ந்து தூங்கி விடுவார். விடியும் நேரத்தில் வாசலில் ஆட்கள் வந்து விட, அந்தச் சத்தம் கேட்டதும் விழித்துக் கொள்வார். கொல்லைப்புறம் ஓடுவார். நானும் பின்னால் ஓடுவேன். பல் துலக்கி, பின்பக்கம் போய் வந்து, கை, கால், முகம் கழுவி சுடு கஞ்சியை ஆற்றிக் குடித்துவிட்டு திண்ணைக்கு வந்தாரென்றால் வெயில் நல்ல உயரத்திற்கு வரும் வரை வாசலில் ஏகப்பட்ட வழக்குகள் நடந்து கொண்டிருக்கும். பிறகு வரிவசூல், மராமத்து பணி, அல்லிக்கேணி, மயிலாபுரி எல்லைக்காவல் என்று வீட்டை விட்டுக் கிளம்பினார் என்றால்... நடுநிசியில்தான் திரும்புகிறார். இவ்வளவு கடுமையான வேலைகளுக்கிடையே என் புருஷனை சுகம் சுகிக்க திருப்புவது, ஊருக்கு செய்யும் நல்லது ஆகுமா..." தோழிகளிடம் விளக்கினாள்.

# 6

இளவரசன் சொல்லியது போல் இந்த முறை சிங்களர்கள் வடக்கே போய் கங்கநாட்டில் இறங்கி, அங்குள்ள படைகளோடு கலந்து கொண்டு, மேலைச் சாளுக்கியர்களையும் புறப்பட்டு வருமாறு தூது அனுப்பி, பாண்டியர்களைத் தயாராக இருக்கச் சொல்லி, மேற்கும் தெற்கும் வடக்குமாய் மூன்று இடங்கள் கடும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார்கள்.

ஆறு மரக்கலங்கள் நிறைய சிங்களப் படைகள் கங்க நாட்டிற்குப் போயின. அங்குள்ள கங்கர்களை மரக் கலங்களில் ஏற்றிக் கொண்டு திருவொற்றியூர் வந்து நின்றன.

திருவொற்றியூரில் கடலலைகள் ஆர்ப்பாட்டமாக இருந்ததால், இன்னும் தள்ளி சேற்றுப்பாக்கம் வந்தன. அங்கிருந்து கரைக்கு சிறுபடை அனுப்ப அந்தப் படையிலிருந்த பன்னிரெண்டு வீரர்களும், கரையோரம் ஒதுக்கப்பட்டிருந்த கட்டுமரங்களைத் தள்ளிக் கொண்டு வர, அவைகளில் பல நூறு வீரர்கள் வந்திறங்கினார்கள். கப்பல் சேறில் சிக்காமல் தொலைவிலேயே நின்றது.

இம்மாதிரியான சேற்று இடங்களில் ஓநாய்கள் இருக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் நிறைய ஓநாய் எலும்புகளை அங்கு பார்த்து விட்டு, மக்கள் ஓநாய்களை அழித்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு அந்த கருவேலம் புதர்களிலேயே பதுங்கிக் கொண்டார்கள்.

விடியும் நேரத்தில் அல்லிக்கேணிக்குப் போக வழி பார்த்தார்கள். மூங்கில் கழிகளை நட்டு ஆறு தாண்டினார்கள். குதிரைகளை பலகை போட்டு நடத்திக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்த கட்டுமரங்களை வரிசையாக்கி அதன் மீதும் குதிரைகளை நடத்தினார்கள்.

நன்கு விடிந்த போது, அல்லிக்கேணியின் தங்க மணற்பரப்பில் நாலாயிரம் வீரர்கள் அறுநூறு குதிரைகளோடு போருக்குத் தயாராக இருந்தார்கள்.

மேற்கே ஒரு மேலைச் சாளுக்கிய படை நகர்ந்து, காஞ்சி புரத்தைத் தொடாமல் உள்ளுக்குள் ஊடுருவி திருமயிலையின் வேறு பக்கம் நின்று கொண்டது. திருப்பெருந் துறையில் ஏறிய பாண்டியரின் பாய்மரப் படகுகள் கரையோர மாகவே வந்து கடல் மல்லையில் இறங்கின. பாறைகளில் பதுங்கிக் கொண்டன.

ஒரு குதிரை வீரன் தலைதெறிக்க பயணப்பட்டு, பாண்டியப் படகுகள் கடல் மல்லையில் இறங்கி விட்டதாய் சொன்னதும், மயிலையை நோக்கி ஆரவாரமாய் சிங்களப் படைகளும், கங்கர் படைகளும் நகர்ந்தன. பாண்டியப் படைகள் கடல் மல்லையைத் தாக்கி எரியூட்டி விட்டு, திருவிடந்தை, திருவான்மியூர் வழியாக விரைவாக வந்து பெரிய ஆற்றங் கரையை அடைந்தன. ஆடுகள் மேய்க்கும் மந்தைவெளிக்கு அப்பாலுள்ள அந்த ஆற்றங்கரையை அடைந்தன. ஆடுகள் மேய்க்கும் மந்தைவெளிக்கு அப்பாலுள்ள அந்த ஆற்றில் மரங்களின் மீது வீரர்கள் ஏறிக்கொண்டு, மூங்கில் கழியால் நெட்டித் தள்ளி மறுகரைக்கு வந்து இறங்கினார்கள். விசாரித்த உள்ளூர் வீரர்களை அடித்துத் துவைத்தார்கள். நாலா பக்கமும் சங்கம் ஒலித்தது. எக்காளம் முழங்கியது. கோயில் மணிகள் பலமாக அசைக்கப்பட்டன. மூன்று பக்கங்களிலிருந்தும் தாக்குதல் நெறிக்க, திருமயிலை, திருவல்லிக்கேணி தெருக்களில் கடும் யுத்தம் நிகழ்ந்தது.

சிங்கள வீரர்கள் எதிர்ப்பட்ட அத்தனை பேரையும் வெட்டினார்கள். சுதாரித்துக் கொண்டு படை திரட்டி ஒன்றாக்கி, ஏதோ ஒரு திசை நோக்கி போகும் போது, வேறொரு திசையில் கடும் சேதம் ஏற்படுவது அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

நீலகண்ட சிவன் சேற்றுப்பாக்கத்தில் குதிரையைச் செலுத்திப் போய் சிங்களர்களை கடுமையாகத் தாக்கினான்.

அவனோடு வந்த வீரர்கள், கங்கர்களை எல்லை தாண்டவிடாது கடுமையாக அடித்தார்கள். கங்கர்கள் வேகமாகப் பின் வாங்கினார்கள். பின்னாலிருந்த சிங்களர்களை என்ன செய்வது என்று கேட்டார்கள்.

கப்பல் ஓட்டுவதில் கைதேர்ந்த சிங்களர்கள், ''வடக்குப் பக்கமாய் காற்று வீசுவதால் சட்டென்று மரக்கலத்திற்குப் போய் ஏறி, கடற்கரைக் கோயிலில் இறங்கி உள்ளே போய் அங்கிருந்து திருமயிலையைத் தாக்கலாம்'' என்றார்கள்.

அவர்கள் வேகமாய்ப் பின்வாங்க, நீலகண்டசிவன் அவர்கள் ஓடிவிட்டார்கள் என்ற எண்ணத்தில் மேற்குப் பக்கம் தன்னுடைய படையைத் திருப்பினான்.

கங்கர்களும், சிங்களர்களும் மரக்கலத்தில் ஏறிக் கொண்டார்கள். எகிறி எகிறி ஆடிக் கொண்டு மரக்கலம் திருமயிலை கபாலீசுவரத்துக்கு அருகே போய் நின்றது. அங்கே கோயிலுக்கு வெகு அருகே கப்பல்களைக் கொண்டு போய், கோயில் மதில் சுவற்றிலுள்ள விளக்குக் கம்பத்தில் கப்பல் கயிற்றை இறுக்கக்கட்டி, அந்தக் கயிறுகள் மூலம் கயிற்று ஏணிகள் பரப்பி, வலைகள் விரித்து அதில் வீரர்கள் இறங்கினார்கள். மதில் சுவர் வழியாக கோயிலுக்குள் குதித்தார்கள். உள்ளுக்குள்ளே போய் கோயிலை கடுமையாகத் தாக்கினார்கள். அர்ச்சகர்களை அடித்துக் கொன்றார்கள்.

தேவதாசிகளின் உடைகளைக் களைந்தார்கள். கதறக் கதற அனுபவித்தார்கள். மூடப்பட்டிருந்த கோயில் கதவுகளைத் திறந்து கொண்டு, திருமயிலைக்குள் வேகமாக நுழைந்தார்கள்.

அக்ரஹாரத்தில் நுழைந்து வீடுகளுக்குக் கொக்கி போட்டு நிலைப்படியை இழுத்து சரித்தார்கள். அந்தணர் குடியிருப்புகள் தீயிட்டு அழிக்கப்பட்டன. அந்தணர்கள் நெஞ்சில் வாள் சொருகப்பட்டது. இளம் பிள்ளைகளும் பிரம்பால் கடுமையாக

அடிக்கப்பட்டார்கள். பெண்கள் இழுத்துக் கொண்டு போகப் பட்டார்கள். வேளாளர் குடியிருப்பில் கங்கர் படை புகுந்தது, கொழுத்த மாடுகளை வளைத்துப் பிடித்து சவுக்கால் அடித்து நடுத்தெருவில் விரட்டியதால், எவரும் தெருவில் நடமாட முடியாதபடி மாடுகள் அலைந்தன. குடியிருப்பிலிருந்த வீடுகளுக்கு கங்க வீரர்கள் எரியூட்டினார்கள். வயோதிகர்களின் தலைகளைத் துண்டித்தார்கள். இளம் பிள்ளைகளை தலைகீழாகக் கட்டித் தூக்கி சவுக்கால் அடித்தார்கள். அங்கேயும் பெண்கள் மானபங்கப்படுத்தப் பட்டார்கள்.

வேளாளர் பெண்கள் உலக்கைகளும், வாளும், கடப்பாரையும் எடுத்துக் கொண்டு தோட்டச் சுவர் அருகே பதுங்கி நின்று, கங்கர்கள் வந்ததும் அவர்கள் மேல் வெறி பிடித்தது போல் பாய்ந்து, அவர்கள் குதிரைகளை அடித்து முடமாக்கி வீரர்களைக் கீழே இறக்கி, இறங்கிய வீரர்களை ஆறேழு பெண்கள் சேர்ந்து கொண்டு தாக்கினார்கள். வெட்டுப் பட்டார்கள். அம்பால் தாக்கப்பட்டார்கள். அம்பு தாக்கிய போதும் ஓடிப் போய் அம்புவிட்டவன் காலைப்பிடித்து இழுத்து தரையில் சாய்த்தார்கள். தலையில் கல்லைப் போட்டுக் கொன்றார்கள்.

மூன்று நாழிகையில் திருமயிலை, அல்லிக்கேணி கிராமங்கள் அந்நியர் வசமாயின.

"சண்டாளப் பாவிகளா, ஓநாய்களை விரட்ட வேண்டாம் என்று அப்போதே சொன்னேன். எந்த இடத்தில் ஓநாய்களை வெட்டி நிர்மூலமாக்கினீர்களோ அந்த இடத்தில் அந்நியர்கள் வந்து ஓநாய்கள் போல் பதுங்கிக் கொண்டார்கள். ஓநாய்கள் இருந்திருந்தால் அவை அந்நியரை விரட்டியிருக்குமல்லவா, நாலு கோழிக்குஞ்சுக்கும் ஒரு ஆட்டிற்கும் பாதுகாப்புத் தருகிறேனென்று நாட்டைப் பறி கொடுத்து விட்டீர்களே பாவிகளா" என்று அந்தணர் குடியிருப்பிலிருந்து சாபக் குரல் கேட்டது.

திருமயிலை, அல்லிக்கேணி அந்நியர் வசமானதை மேற்குப் பக்கம் போன நீலகண்ட சிவன் அறிந்து கொண்டான். ஆறுபேரை தலைநகர் நோக்கி அனுப்பினான். காஞ்சிபுரத்தை நோக்கி இன்னும் நாலு பேரை அனுப்பினான். பெரும்படை வேண்டுமென்று கேட்டிருத்தான். பாடி என்றழைக்கப்படும் மேல் பாடிக்கு அருகே தன் வீரர்களை ஒன்றுசேர்த்து மறுபடியும் மயிலை நோக்கி வந்தான்.

வழியில் குற்றுயிரும், குலையுயிருமாய் ஆண்களும் பெண்களும் வந்து கொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்ததும் கை விரித்து அலறினார்கள். மிகுந்த வலிமையுள்ள தேசம் என்று நினைத்தோமே இப்படியாகி விட்டதே, என்று பதறினார்கள். 'இந்தப் படை போதாதய்யா, அவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். யார் எதிர்ப்பட்டாலும் தண்டிக்கிறார்கள். ஒரு கொள்ளைக் கும்பலைப் போல் நடந்து கொள்கிறார்கள். இது அதர்ம யுத்தமய்யா' என்று அரற்றினார்கள்.

அவனோடு வந்த படைவீரர்கள் தயங்கினார்கள். காஞ்சிபுரத்திலிருந்து உதவி வரட்டுமே என்று சொன்னார்கள்.

சிங்களப் படை மயிலை வழியே செழுங்கழுநீர் ஓடை நோக்கி வர, கங்கப்படை செழுங்கழுநீர் ஓடையைத் தரைமட்டமாக்கியது. ஆண்களையும், பெண்களையும் நடுத்திட்டில் வைத்து, 'யார் தலைவர் என்ன, ஏது' என்று விசாரித்தது. வாய் திறக்காதவர்களை பிரம்பாலும், சவுக்காலும், கண்மண் தெரியாமல் அடித்தது. அந்தணர்களை விசாரிக்க, அவர்களில் யார் தலைவர், அவருடைய வீடு எப்படி, அவருடைய வீட்டைச் சார்ந்தவர்கள் யார் என்பதையெல்லாம் படையெடுத்து வந்த வீரர்களிடம் தெளிவாகச் சொன்னார்கள். சிங்களர்களை நோக்கி, நாங்கள் அந்தணர்கள், எங்களைத் துன்புறுத்தல் தகாது என்றார்கள்.

சிங்களர்களுக்கு வர்ணாசிரம தர்மம் சிறிதும் பிடிப்பதில்லை. அந்தணர்கள் மீது அவர்களுக்கு கடும் வெறுப்பு இருந்தது. தகவல் கொடுத்த அந்தணர்களை 'உங்கள் ஆட்களையே நீங்கள் காட்டிக் கொடுக்கிறீர்களே. எங்களுக்கு எதிராக நீங்கள் என்ன செய்ய மாட்டீர்கள்' என்று கேட்டு கடுமையாய் தண்டித்தார்கள். வெட்டிக் கொலை செய்தார்கள். வேளாளர்களின் தலைவர்களைத் தேடத் துவங்கினார்கள்.

மயிலை, திருவல்லிக்கேணியில் தலைவன் நீலகண்ட சிவன் இருப்பதைத் தெரிந்து கொண்டு அவன் வீடு நோக்கிப் போய் வீட்டிலிருப்பது யார் என்று கேட்டார்கள். ஒரு கிழவியை முடியைப் பிடித்து அடித்தார்கள்.

பொன்னி தப்பித்து மேற்கு நோக்கி ஓடினாள். நடந்து காஞ்சிபுரத்திற்குப் போய்விடலாம் என்று நினைத்தாள். அதே நேரம் புருஷனும் ஊரில் இல்லாமல், தானும் ஊர் விட்டுப் போவது நல்லதில்லை என்பதால் ஊருக்குள்ளேயே எங்கேயாவது மறைந்திருக்க விரும்பினாள். அவள் புருஷன் சீர் செய்து கொடுத்த புதுக் கேணியில் இறங்கினாள்.

அது உறைகேணி. மூன்று கேணிகளுக்கு இடையே நீர்ப் போக்குவரத்து இருந்தது. அந்த நீர்ப் போக்குவரத்து நன்கு நடைபெற, பூமிக்குள்ளேயே உறை போடப்பட்டிருந்தது. கேணியில் இறங்க சுவர்ப்பக்கம் பெரிய ஓட்டை இருந்தது. அந்த ஓட்டைக்குள் பதுங்கிக் கொண்டாள். இடுப்புவரை தண்ணீர் இருந்தது. அதில் நடந்து போனால் அடுத்த கேணியை அடைந்து விடலாம். அங்கிருந்த இன்னொரு கேணிக்கும் போய் விடலாம். கேணியில் இறங்கித் தேடினாலும் தப்பித்து விடலாம் என்று நினைத்து, ஒருநாள் முழுவதும் இடுப்பு ஜலத்தில் நின்றிருந்தாள்.

கண்கள் இருண்டன. மூக்கிலிருந்து நீராகக் கொட்டியது. ஜுரவேகம் அதிகரித்தது.

அவர்கள் மக்களைத் துன்புறுத்தி, நீலகண்ட சிவனின் மனைவி எங்கிருக்கிறாளென்று கண்டுபிடித்து விட்டார்கள்.

அவர்கள் கிணற்றில் இறங்கினார்கள். தேடிப் பார்த்தார்கள். உறைக்குள் ஒரு ஆள் நுழைவதைத் தெரிந்து கொண்டார்கள். வெளியே வரச்சொல்லிக் கத்தினார்கள். அந்த உறை சந்திற்குள் போக பொன்னிக்குப் பயமாக இருந்தது. மறுபக்க கேணியிலுள்ள ஒரு உறையை ஒருவன் பலகை வைத்து இறுக்க மூடினான். இந்தப் பக்கம் உள்ள கேணியில் அந்த வீரர்கள் பாறாங்கற்களை போடத் துவங்கினார்கள். பாறைகள் விழ விழ உறையிலிருந்த நீர்மட்டம் உயர்ந்தது. அவள் கழுத்து வரை ஜலம் ஏறியது.

அவள் அழத் துவங்கினாள். மரணம் நெருங்கி விட்டது என்பதைப் புரிந்து கொண்டாள். மெல்ல மெல்ல சாகடிக்கப் போகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டாள்.

எல்லா நலனும் கொடுத்த ஈசனே, ஏன் மரணத்தை இவ்விதம் கொடுத்தாய் என்று கதறினாள்.

அழகிய புருஷன், அற்புதமான வாழ்க்கை, இணக்கமான உறவுகள், நல்ல இல்லறம். ஆனால் கூடல் மட்டும் நடைபெறவே இல்லை. ஒரு முறை கூட புருஷன் ஆசையாய் தழுவிக் கொள்ளவில்லை. அவன் பாதிநேரம் ஊருக்கு வெளியே இருந்தான். ஊருக்குள்ளே இருந்தால் பிரச்சனைகளோடு இருந்தான். ஒரு தலைவனின் மனைவியானதால் அவளும் முன்னும் பின்னும் அலைய வேண்டியிருந்தது. அவர்கள் இருவரும் தங்கள் உடம்பு சுகத்தை முற்றிலும் மறந்து ஊருக்கு உழைத்தார்கள்.

இன்று மெல்ல மெல்ல உடம்பில் நீர் ஏறி அவளை நோகடித்துக் கொண்டிருக்கும்போது, அந்த சுகத்தை உடம்பு வாங்கவே இல்லையே. அதை மனம் அனுபவிக்கவே இல்லையே அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை கிடைக்கவே இல்லையே என்ற ஏக்கம் பொங்கித் ததும்பியது.

"இதுதான் உன் விருப்பம் என்றால் கற்பகத்தாயே உன் விருப்பத்துக்கு நான் கட்டுப்படுகிறேன். ஆனாலும் என் நல்ல புருஷனை, ஆரத்தழுவி முத்தமிட்டு அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தும் செயல்பட முடியாமல் போனது வருத்தமாக இருக்கிறது. மறு ஜென்மத்திலாவது இந்தக் குறை தீர்க்கப்படவேண்டும் என்று வேண்டுகின்றேன்" என்று கோயில் இருக்கும் திசை நோக்கித் திரும்பினாள்.

இன்னும் பெரிய கற்களாகப் போட்டார்கள். நீர் ஏறியது. வாய் வரை ஜலம் வந்தது. மேலும் கற்கள் போட, மூக்கும் தாண்டி தலையும் தாண்டி நீர் ஏறியது. சில நொடிகள் மூச்சுப் பிடித்திருந்து விட்டு வேறு வழியில்லாமல் மூச்சு முழுவதும் வெளியே விட, மூக்கு வழியே நீர் வேகமாய் உள்ளே ஏறியது. நுரையீரலைத் தாக்கி வலிக்கச் செய்தது. திணறடித்தது, கழுத்து நெரித்தது. கண்கள் பிதுங்கின. வாயிலிருந்து நீர் கிளம்பியது. அடி வயிறு அழுத்தியது. மார்பு பட்டென்று வெடித்தது. அவள் இறந்து போனாள். ஜல சமாதியானாள்.

காஞ்சிபுரத்திலிருந்து பெரிய படை ஒன்று கிளம்பி திரு மயிலை நோக்கி திருமுல்லைவாயில் வழியாக வந்தது. அவன் பாடிக்கருகே அதை எதிர்கொண்டான். தன் ஊர் பாழானதைப் பதட்டத்துடன் தெரிவித்தான்.

அவர்கள் திட்டமிட்டார்கள். இரண்டு திசைகளாகப் பிரிந்தார்கள். குதிரைகளிலும் கால்நடையாகவும் கிளம்பி னார்கள். குதிரைப் படையை எல்லையில் காத்திருக்கச் சொன் னார்கள். வடக்கே பலவித வேலைகளுக்கு அனுப்பப்பட்ட திருவொற்றியூர் படையும் ஒன்றுகூட்டப் பட்டது. தெற்கே திருக்கழுக்குன்றம் அருகே அமைந்த ஒரு படையும் வந்தது. படைகள் சேரச் சேர அவர்கள் கோபம் அதிகரித்தது. அவர்கள் வெகுவேகமாய் மயிலை, திருவல்லிக்கேணியை நோக்கி ஓடி, உள்ளுக்குள் புகுந்தார்கள். வாள் உருவி எதிர்ப்பட்ட அன்னியர்களை வெட்டிச் சாய்த்தார்கள்.

அன்னியர்கள், தொலைவிலிருந்தே இவர்கள் வருகையைத் தெரிந்துகொண்டு கடற்கரை நோக்கி ஓடினார்கள். கரையிலிருந்த மரக்கலங்களுக்குத் தாவினார்கள். இவர்கள் வருவதற்குள் மரக்கலங்கள் பாய் விரித்து கடல் நோக்கி நகரத் துவங்கி விட்டன. கைக்குக் கிடைத்தவர்களை படை கதறக் கதற சித்திரவதை செய்தது. ஊரைச் சுற்றிவந்து ஓடியது. யார், யார் எங்கிருக்கிறார்கள் என்று தேடியது. காயம் பட்டவர்களுக்கு மருந்து கொடுத்தது. குழந்தைகளைத் தேற்றியது. பெண்களை அணைத்துக் கொண்டு ஆறுதல் சொல்லியது.

பொன்னி கிணற்றில் இறங்கியதும், நீரில் பாறைக் கற்கள் போடப்பட்டதும் அவர்களுக்குச் சொல்லப்பட, அவர்கள் கிணற்றை நோக்கி ஓடிவந்தார்கள். கிணற்றை எட்டிப் பார்த்தார்கள். கிணற்றில் உறி இறக்கி உறியில் பாறைகளைப் போட்டு பாறைகளை மேலே எடுக்கலாம் என்று ஒரு திட்டம் சொல்லப்பட்டது. ஆனால் அது அவ்வளவு எளிதான காரியமல்ல.

இளவரசர் காஞ்சியிலிருந்து திருவொற்றியூர் போய், திருவொற்றியூரிலிருந்து வடக்கே கங்க தேசம் போய் கடுமையாகத் தண்டிக்க விரும்புகின்றார் என்று அங்கே சொல்லப்பட, கிணற்றைச் சுற்றியிருந்த அத்தனை பேரும் அந்தக் கிணற்றை விட்டு விட்டு இளவரசர் வருகின்ற திசை நோக்கிப் போனார்கள். அந்தப் படையில் கலந்து கொள்ள விரும்பினார்கள்.

இளவரசர் கோபமாக இருந்தார். திருமயிலை, அல்லிக்கேணியின் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் சம்பந்தப்பட்ட நபர்களை அழைத்து அவர்களுடைய பாதிப்புகளைக் கேட்டு, வேண்டுமென்ற உதவிகள் செய்தார்.

‘‘வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். யுத்தமென்று வந்தால் இப்படி நாசங்கள் ஏற்படுவது சகஜம். தாங்கிக் கொள்ள

வேண்டும்'' என்று ஆறுதல் சொன்னார். அவ்விதமாகவே தலைவனாக இருந்த நீலகண்ட சிவனையும் சொல்லச் சொன்னார்.

நெஞ்சு முழுவதும் மனைவியின் நினைவை வைத்துக் கொண்டு, அவன் மற்றவருக்கு ஆறுதல் சொல்லத் துவங்கினான். வாழ்க்கையில் இழப்புகள் சகஜம் என்று ஒவ்வொருவரிடமும் சொன்னான்.

போருக்கான ஆயத்தங்கள் வேகமாக நடந்து கொண்டிருந்தபோது, அவன் இரவு நேரம் அந்தக் கிணற்றுக்கருகே போய் உட்கார்ந்து அழுது விட்டு வந்தான். சுற்றிச் சுற்றி வந்து கதறினான்.

''உன்னை ஒருமுறை கூட அள்ளி அணைத்துக் கொள்ளவில்லையே. இறுக்க முத்தமிடவில்லையே. எல்லா இடங்களையும் தொட்டுப் பார்த்து சந்தோஷபடுத்தவில்லையே. நான் ஜெயித்துவிட்டு உன்னை அடையலாம் என்று நினைத்தேனே. அதற்குள் என்னை விட்டு நகர்ந்து விட்டாயே. நான் என்ன பாவம் செய்தேன், என் மனைவிக்கு ஏன் இப்படி மெல்ல மெல்ல ஒரு கோர மரணம் ஏற்பட்டது'' என்று கதறினான்.

அவனை மெல்ல மேலே ஏற்றிக் கொண்டு வந்தார்கள். சமாதானப்படுத்தினார்கள். இளவரசர் வடக்கு நோக்கி நகர்ந்து விட்டார் என்று சொன்னார்கள். அவன் குதிரையேறி இளவரசரைப் பின்தொடர்ந்தான்.

இளவரசர் அவனை உற்றுப் பார்த்தார். அவருக்கு அவன் மனைவியின் மரணம் சொல்லப்பட்டிருந்தது. அவனை அணைத்துக் கொண்டு மெல்ல கண்ணீர் விட்டார். அவர்கள் வடக்கு நோக்கிப் போய் கங்கபாடியை எரித்து கொளுத்தி சர்வநாசம் செய்து விட்டு திரும்பினார்கள்.

காஞ்சிபுரத்தில் அரசர் அவனை எதிர்கொண்டு அழைக்க, வடக்கே இன்னும் எல்லைகளைப் பலப்படுத்த திட்டமிடப்பட்டது. அவனுக்குப் புதிய பொறுப்பும், புதிய பதவியும் கொடுக்க வேண்டுமென இளவரசர் சொல்ல, அரசர் அவனை உற்றுப் பார்த்தார்.

''ஒரு மாதம் அவனுக்கு ஓய்வு கொடு. அவன் மனைவியின் நினைவாக இருந்துவிட்டு வரட்டும்'' என்று அரசர் அவனை மெல்ல விலக்கினார். அவன் நன்றியோடு அரசரை நோக்கிக் கைகூப்பினான். மெல்ல குதிரையேறி ஊர் வந்தான்.

வீடு தற்காலிகமாய் சிறிய அளவில் எழும்பியிருந்தது. அங்கு படுத்தான், அவளுடைய உடைகளை எடுத்துத் தன் மீது போட்டுக் கொண்டான். அன்று இரவு மெல்ல அவள் இறந்த கிணற்றருகே போனான். வாளின் பிடியை கிணற்றின் சுவரில் வைத்தான். கூர்மையை நெஞ்சில் வைத்தான்.

''நீயில்லாத உலகத்தில் என்னால் இருக்க முடியவில்லை. உன்னைக் கொன்ற தேசத்தை நான் பழிவாங்கி விட்டேன். அடித்து நொறுக்கி விட்டேன். ஒரு ஊர் கூட, ஒரு சுவர் கூட இல்லாது இடித்து சிதைத்து விட்டேன். ஆனாலும் நீ இல்லாத வெறுமை போகவில்லை. நீ இருந்த இடத்தை எவராலும் நிரப்ப முடியவில்லை. என் கடமை முடிந்துவிட்டது. உன்னைக் கொன்றவனின் ஊரை நாசப்படுத்தியதோடு என் ஆத்திரம் தணிந்துவிட்டது. ஆனால், அழுகை தணியவில்லை. என்னால் தொடர்ந்து அழ முடியாது. அழுது வாழ நான் விரும்பவில்லை. நீ இருக்குமிடத்தில் நான் இருப்பதுதான் எனக்கு சந்தோஷம். எனவே நான் வருகிறேன்.

உன்னைத் தேடி வருகிறேன். அங்கே வாழ்க்கை எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து நீ வா. நான் மரணமடையும் நேரத்தில் என்னைக் கைப்பிடித்து அழைத்துப் போ'' என்று சொன்னான். பளிச்சென்று மார்பை

வாள்மீது அழுத்தினான். வாள் முதுகுப்பக்கம் வெளிவந்தது. சுருண்டு விழுந்தான். விழுந்த முப்பதாவது நொடி அவன் உயிர் பிரிந்தது.

அவள் ஓடிவந்து அவனைத் தழுவிக் கொண்டாள். இதழோடு இதழ் பொருத்தி முத்தமிட்டாள். கன்னத்தோடு கன்னம் இழைத்தாள். அவர்கள் வேகமாய் கலவியில் ஈடுபட முயற்சித்தார்கள். ஆனால், அந்தக் கலவி பூரணமாக இல்லை. அவர்கள் மனம் நிறையவில்லை.

## 7

"என்ன ஆச்சு உங்களுக்கு. திடீர்னு மந்திர ஜபம் தியானம்னு ஆரம்பிச்சுட்டீங்க. ஏதோ வேலைக்குப் போனோமா, சாயந்திரம் வந்து டி.வி. முன்னாடி உக்காந்தோமா. காபி குடிச்சுக்கிட்டே நியூஸ் கேட்டோமா. அப்புறம் டி.வி. சீரியல் அழுது அழுது பார்த்துட்டு எழுந்து மூஞ்சியை அலம்பிண்டு வத்தக்குழம்பு சாதம் சாப்பிட்டுட்டு அப்பாடான்னு படுக்க போனோமான்னு இருந்தா எவ்வளவு நன்னாருக்கும். எதுக்கு டி.வி.சீரியல் பாக்கறது. அய்யோ இந்த கொடுமையெல்லாம் நம்ம வாழ்க்கைல இல்ல. இந்த ஹீரோயின் படற மாதிரி கஷ்டம்லாம் நான் படலை. என் வீட்டுக்காரன் ரொம்ப நல்லவன். அவன் ஏழையா இருந்தாலும் உத்தமமான புருஷன் அப்படின்னு ஒரு ஆறுதல் கிடைக்கறது.

அதனால, புருஷனை இறுக்கிக் கட்டிண்டு அவன் கேட்டா சந்தோஷமா இடம் கொடுத்து அவன் சந்தோஷத்தைப் பார்த்து நான் சந்தோஷமாகி, குழந்தைங்க சந்தோஷமாகி, அதுங்களுக்கு சந்தோஷமா சாமி பூஜை பண்ணி, சந்தோஷமா

பக்கத்தாத்துக்காரா கிட்ட அரட்டை அடிச்சு, சாயந்திரம் நீங்க வரும் போது சந்தோஷமா வாங்க, வாங்கன்னு சொல்றதுலே எத்தனை சந்தோஷம் இருக்கு.'' அவன் மனைவி சரோஜா அவனிடம் இடுப்பில் கையூன்றிப் பேசினாள். அவன் அவளையே ஆவலோடு அதிசயத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இதைத் தாண்டி, எதுக்காக மந்திர ஜபம் நமக்கு, என்ன குறை உங்களுக்கு, என்ன மனக்கஷ்டம், எதுக்காக நீங்க தியானம் பண்றேள்?''

''நான் மனக்கஷ்டம்னு பண்ணலை.''

''ஆமா. வெறுத்துப் போனவா தான் தியானம் பண்ணுவா. இன்னும் வேணும் வேணும்னு கேக்கறவா தான் மந்திரம் ஜபம் பண்ணுவா. நமக்கு என்ன? உங்களுக்கு பன்னிரெண்டாயிரம் ரூபாய் சம்பளம். உங்கம்மா கொடுத்த காசுலேயும் எங்கப்பா கொடுத்த காசுலேயும் குளுகுளுன்னு காத்து வசதியோட ரெண்டாவது மாடியிலே சின்னதா ஒருபிளாட்டும் வாங்கியாச்சு. ஆணும், பொண்ணுமா இரண்டு குழந்தைகள் இருக்கு. இப்பத்துலேர்ந்தே நகை சேர்க்க ஆரம்பிச்சாக்கா, இன்னும் பதினைஞ்சு வருஷத்துல நூறு பவுன் நகை சுலபமா சேர்த்துடலாம். நம்ம வீட்ல யார் பிறந்த நாளா இருந்தாலும் வெள்ளிப் பாத்திரம் வாங்கிப் பரிசா கொடுக்கறதுன்னு முடிவு பண்ணியிருக்கோம். அதை நம்ம பொண்ணுக்கு சீரா, கொடுத்துடலாம். பதினைஞ்சு வருஷத்துல அதுவும் சேர்ந்துடும். எங்கம்மா அப்படித்தான் பாத்திரம் சேத்தா. நாம அதைவிட வேகமா சேர்த்துடலாம்.

போனஸ் வந்துதா, போய் ஒரு வெள்ளித்தட்டு வாங்கிடலாம். இன்னும் கூடுதலா காசு வந்ததா. உடனே ஒரு தங்கக்காசு வாங்கிடலாம். நாம வாங்கியிருக்கிற ஷேர் பத்து

மடங்குவிலை போச்சா, உடனே அதை வித்து எங்கேயாவது ஒரு நிலம் வாங்கலாம். இப்படி கண்கொத்திப் பாம்பா இருந்து காசு சேர்த்தா, இந்த இரண்டு குழந்தைகளையும் ரொம்ப அழகா கரையேத்திடலாம். இதை விட பெரிய கடமை உலகத்துல வேற என்ன இருக்கு.

அக்கறையா காசு சம்பாதிக்கிற புருஷன், அனுசரணையா சேர்த்து வைக்கிற பொண்டாட்டி, அறிவுள்ள இரண்டு குழந்தைகள். நமக்கு பெரிய கொடுப்பினைன்னா, இந்த மாதிரி கொடுப்பினை நிறைய பேருக்கு இல்லை. இதுக்கும் மேல வேணும்னு நீங்க என்ன கேக்கறேள்னு எனக்குப் புரியலை. மந்திர ஜபம்லாம் சரியா பண்ணலைன்னா திரும்பி மூஞ்சியிலே அடிச்சுடும். பண்ணாம இருக்கறது நல்லதுன்றது என்னுடைய அபிப்ராயம்'' அவள் இடுப்பில் கைவைத்து அதிகாரமாகச் சொன்னாள்.

அவளை அவன் வியப்போடும், வேதனையோடும் பார்த்தான்.

சில கெட்டிக்கார பெண்கள் முட்டாள்களாகத் தான் இருக்கிறார்கள். சிறிது தெரிந்தாலும் எல்லாம் தெரிந்து விட்டது என்பதாய் நினைத்துக் கொள்கிறார்கள். எல்லாவற்றையும் பற்றி எந்தத் தயக்கமும் இல்லாமல் வேகமாய் அபிப்ராயமும் சொல்கிறார்கள். இப்படி அபிப்ராயம் சொல்வதற்கு இடம், பொருள், ஏவல் பார்க்காமல் செயல்படுகிறார்கள்.

''சரோஜா, வாழ்க்கை என்பது சம்பாத்தியத்தோடும் குழந்தைகளோடும் சின்னச் சின்ன பொருட்களைச் சேகரிப்ப தோடும் நிறைந்து விடுவதில்லை. நீ சொன்னது போல நம்மைச் சுற்றி பல விஷயங்கள் மிக நேர்த்தியாக நமக்கு அமைந்து விட்டன. இது பெரிய அதிர்ஷ்டம்தான். இதற்கு நன்றி சொல்ல வேண்டாமா? இதை அளித்தது யார் என்று அறிந்து கொள்ள

வேண்டாமா? நன்றி சொல்வது என்பது, எனக்கு யார் இதைக் கொடுத்தார்கள், யாரால் இந்த ஆசீர்வாதம் வழங்கப்பட்டது என்று தேடி அவரை அறிந்து கொள்வது. கடவுளை அறிந்து கொள்வதுதான் மிகப் பெரிய ஆசீர்வாதம். கடவுளை அறிந்து கொள்ளல்தான் இல்லறம். கடவுளை அறிந்து கொள்வதற்குத் தான் காதலும், காமமும், இன்ன பிற சுகங்களும். சுகத்தின் உச்சியில் கண்மூடி இருக்கும் பொழுது, 'இறைவா நன்றி' என்று சொல்கிற போது தோன்றும் அடுத்த கேள்வி யார் இறைவன், எங்கிருக்கிற இறைவன், எப்படிப்பட்ட இறைவன் என்பதுதான். இந்தக் கேள்வி வரவில்லையெனில், உன்னுடைய நன்றி முழுமையாகவில்லை. இன்னும் சந்தோஷத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய் என்று அர்த்தம்.

வெறுமே அடுத்தடுத்து சந்தோஷத்தை மட்டும் எதிர்பார்ப்பது ஒரு நோய் மனப்பான்மை. இது தீராத பசி. எனவே இப்போது கிடைத்திருக்கிற சுகமான வாழ்க்கைக்கு நிறைவான மனதுடன் நான் நன்றி சொல்கிற போது நெகிழ்ந்து போகிறேன். உனக்கு நான் பதிலுக்கு ஏதேனும் தர வேண்டாமா என்று அவஸ்தைப் படுகிறேன். அதற்காக என் பிரார்த்தனையை உளமுருகி செய்கிறேன். இப்படி உளமுருகி செய்வதற் குண்டான வழிதான் மந்திர ஜபம். மந்திர ஜபம் என் மனதைக் கொதிக்க வைத்து, ஆவியாக்குகிறது. அந்த ஆவி ஒன்றுதிரண்டு வேறு ஒரு வேதிப் பொருளாய் மாறுகிறது. அந்த பொருள் மூலம் நான் தியானம் பயில்கிறேன். அந்த தியானத்தின் மூலம் இறைவனை நெருங்குகிறேன்.

இன்னொரு விஷயம் இருக்கிறது சரோஜா. இதைத் தவிர எனக்கு வேறு வேலைகள் எதுவுமில்லை. இதைத் தாண்டி எனக்கு பெரிய ஆசை ஏதுமில்லை. இந்த சென்னை நகரத்துக்கு தலைவனாகவோ அல்லது ஒரு பேட்டைக்கு தாதாவாகவோ

அல்லது என் அலுவலகத்தின் மேலதிகாரியாகவோ வருவதற்குக் கூட எனக்கு விருப்பமில்லை.''

சீனிவாசன் மனைவி சரோஜாவுக்கு, புருஷன் என்ன செய்ய வேண்டும் என்ற தீர்மானம் ஏதுமில்லை. என்ன செய்யக்கூடாது என்ற தெளிவும் இல்லை. ஏதோ ஒரு அதிகாரமாய் ஒரு கூவல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலேயே தன் பேச்சை முடித்துக் கொண்டாள். அவளுக்கு சீனிவாசனிடம் பேசுவதை விட மிக முக்கியமான விஷயங்கள் இருந்தன. இன்று அவள் தம்பி மனைவி அவளை கடைக்குக் கூட்டிக் கொண்டு போவதாய் சொல்லியிருக்கிறாள். மனம் அதற்குத் தாவ சீனிவாசனை அவள் வேகமாய் உதறினாள்.

சீனிவாசன் பட்டு வாத்தியார் சொல்லிக் கொடுத்த உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரத்தை மறுபடியும் நினைத்துக் கொண்டான். பாத்ரூமுக்குள் நுழைந்து ஷவர் திறந்து குளித்தான். குளிக்கும் போதே மந்திர ஜபம் அவன் மனசுக்குள் ஓடியது. தலை துவட்டி திருநீறு இட்டுக் கொண்டான். வேட்டியை அணிந்து கொண்டான். உலர்ந்த துண்டை மேலே போட்டுக் கொண்டான். எதிரே தாமிரத் தட்டும், தாமிரப் பாத்திரமும் வைத்து கங்கா தேவிக்கு வணக்கம் சொன்னான். எதிரே இருந்த வெங்கடேச பெருமாளை நமஸ்கரித்தான். தலையில் குட்டிக் கொண்டு விநாயகரை வணங்கினான். மெல்ல இடது நாசி வழியாக மூச்சிழுத்து வலது நாசி வழியாக விட்டான். பின் வலது நாசி வழியாக மூச்சிழுத்து இடது நாசி வழியாக விட்டான். நிதானமாய் மூச்சுப் பயிற்சி செய்து மனதை அமைதியாக்கினான். மன சஞ்சலம் குறையத் துவங்க குரு வணக்கம் சொன்னான். தீர்த்தத்தை உள்ளங்கையினால் வாங்கி மூன்று உளுந்தளவு குடித்து தொண்டையை ஈரமாக்கிக் கொண்டான்.

காலையில் அவன் செய்யவேண்டிய சந்தியாவந்தனம் செய்தான். இரவு நேரத்தில் நான் ஏதேனும் பாவங்கள்

செய்திருந்தால், அதை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். சூரிய பகவானே, செந்நிற ஓநாய்களிடமிருந்து என்னை நீர் காப்பாற்ற வேண்டும் என்றும், இரவு நேரக் காமம் பகல் நேரத்தில் தலை தூக்காமல் இருக்கும்படியும் மனமுருகப் பிரார்த்தித்தான். மறுபடியும் குரு வணக்கம் செய்தான்.

பட்டு வாத்தியாரை நினைத்துக் கொண்டு மானசீகமாய் அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான். மெல்ல உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரம் சொல்லத் துவங்கினான். அட்சரங்களை அழுத்தம் திருத்தமாக மனம் உச்சரித்தது. சொல்லச் சொல்ல நெற்றிப் பொட்டிற்கு அருகே கனம் ஏறியது. நடுமூளை குளுமையாகியது. பிடரி உறுதி குறைந்து தளர்வாகியது. மெல்ல ஒரு ஊசலாட்டம் கழுத்தில் ஏற்பட்டது. இடுப்பு அழுத்தமாய் பூமியில் பதிந்து உட்கார, முதுகு விறைப்பில்லாமல் நேராயிற்று. கைகள் முழங்கால்களில் படிந்து கிடந்தன. விரல்கள் எதையும் பற்றிக் கொள்ளாது வெறுமே இருந்தன. காதுகள் வெறும் புலன்களாய் சப்தங்களைக் கிரகித்து உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தன. மனம் சப்தங்களில் ஒன்றாமல் அதைக் கேட்டுக் கொண்டிருந்தது. மற்றவைகளைப் பற்றி அக்கறைப்படாமல் மனம் மந்திர ஜபத்தின் மீதே இருந்தது. இதனால் மார்புக்கு நடுவே ஒரு புளகாங்கிதம் ஏற்பட்டது. வயிற்றில் மெல்லிய குழைவு நகர்ந்தது.

மீண்டும் நெடுமூச்சு ஏற்பட அவன் மந்திர ஜபம் சொல்வதைச் சற்று நிறுத்தி, வெறுமே தன்னை வேடிக்கை பார்த்தான். மறுபடியும் குருவுக்கு வணக்கம் சொல்லி, இந்த மந்திரத்தைத் தொடர்ந்து செய்ய, நீங்கள் ஆசீர்வாதம் செய்ய வேண்டுமென்று மானசீகமாய் வேண்டினான். திரும்பவும் நிதானமாய் மந்திரம் சொல்ல ஆரம்பித்தான்.

இப்போது மந்திரத்தின் கதி வேறு விதமாக அமைந்தது. ஸ்பஷ்டமாக மந்திரத்தை மனம் உச்சரித்தது. முன்பு இருந்த

பரபரப்பு முற்றிலும் குறைந்து போய், மந்திரத்தோடு கைகோர்த்து நடக்க முடிந்தது. அந்த மந்திரம் மூன்று வயது குழந்தை போலவும், இவன் அதற்கருகே விரல் பிடித்து அதோடு நடந்து போவது போல் ஓர் அமைதியான நடை இருந்தது. அந்த நடையிலேயே மந்திரம் சொல்லிக் கொண்டு போக, ஒரு கணத்திற்கு மேல் மந்திரம் சொல்ல முடியாமல் அதே சமயம் மந்திரம் அவன் எதிரே நிற்பதுபோல் உணர்ந்தான். உதடும் உச்சரிக்க மறந்து போய், மனமும் உச்சரிக்க மறந்து போய் மந்திர சப்தமும் அவன் மனமும் எதிரெதிரே நின்றன. வெறுமே பார்த்துக் கொண்டிருந்தன.

''ஆஹா... ஆஹா'' யாரோ கூவியது சத்தமாகக் கேட்டது. அவன் காது சப்தத்தை வாங்கி மனதிற்கு அனுப்பியது. மனம் அதைப் பற்றிக் கொள்ளாமல் மந்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தது.

''நமஸ்காரம்'' இந்த முறை வேறு யாரோ அழைத்தார்கள். மனம் அந்தச் சப்தத்தை வெறுமனே வாங்கிக் கொண்டு மந்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. மந்திர சப்தம் மனதைப் பார்த்துக் கொண்டிருந்தது.

''நீங்கள் சற்று கண்விழித்து எங்களைப் பார்க்க வேண்டும்'' என்று மறுபடியும் குரல் கேட்க, அவன் மனம் மெல்ல சலனப்பட்டு இடதும் வலதும் திரும்பியது. எந்தப் பிடிப்புமின்றி பார்த்தது. எதிரே இருந்த மந்திர சப்தம் மெல்ல பின் வாங்கியது. அந்த மந்திர சப்தத்திற்கு மனம் வணக்கம் சொல்லியது. பிறகு அமைதியாய் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது. மனம் தன்னையே பார்க்கின்ற போது அவன் மிகுந்த சந்தோஷமடைந்தான். அற்புதமான ஒரு பொங்கும் உணர்வு உடம்பு முழுவதும் வழிந்து அவனைக் குளுமை யாக்கியது. அவன் மனம் மறுபடியும் சுருண்டு இயங்கத் துவங்கியது.

''யார் அழைத்தது?'' அவன் மெல்ல நிதானமாய் திருத்தமாய்க் கேட்டான். அவனுக்கு எதிரே யாரோ இருப்பது போல் தோன்றியது. இல்லாதது போலும் இருந்தது.

யாரோ அழைத்தது போல தோன்றியதே. 'ஆஹா' என்று ஆரவாரித்தது போல் தோன்றியதே. யாரது? அவன் தேடினான். சற்று பதட்டமானான். எதற்கு மந்திர ஜபத்தைக் கலைத்தார்கள், யார் குரல் அது? தரை பார்த்து யோசித்தான்.

''நமஸ்காரம்'' மறுபடியும் கேட்டது.

குரல் எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை. அந்த அறையில் வேறு எவருமில்லை. மெல்ல ஒரு கனிந்த பழத்தின் வாசனை அவன் மூக்குக்கு எட்டியது. அவன் மறுபடியும் விசாரித்தான். ஆனால் வார்த்தைகள் வெளியே வரவில்லை.

''நமஸ்காரம்'' மீண்டும் குரல் கேட்டது.

அவன் உற்றுப் பார்த்தான். தன்னுடைய சூழ்நிலையின் எல்லாப் பகுதியையும் உணரத் துவங்கினான். அவனுக்கு இடதும், வலதுமாக இரண்டு பேர் நிற்பதை உணர்ந்தான். மிக கனிவோடு அவனை இரண்டு பேர் இரண்டு பக்கமும் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து திடுக்கிட்டான். ஒருவித பயம் வயிற்றில் தாக்கியது. மறுபடியும் மந்திர ஜபத்தை உரக்கச் சொன்னான். மீண்டும் இடதும் வலதும் பார்த்தான். அவர்கள் அசையாமல் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்.

''யார் நீங்கள்?''

''நாங்கள் யட்சர்கள்'' அவர்கள் பதில் சொன்னார்கள்.

''அப்படியென்றால்.''

''மனிதருக்கு மேம்பட்டவர்கள். தேவருக்கு அடுத்த படியானவர்கள். மனிதர்களில் நல்லவர்கள் தங்கள் ஆசை

பூர்த்தியாகாதபோது இங்கே சில காலம் உயிர் வாழத் தேவையாகி விடுகிறது.''

''உடலற்று வாழ்வது எப்படி சாத்தியம்?''

''சாத்தியம்தான். நீங்கள் கனவுகளில் உடலற்றுதான் வாழ்கிறீர்கள். உங்கள் மனம் மட்டும் செயல்பட்டு உடல் அசையாமல் இருக்கிற உறக்கத்தின் போது தோன்றும் கனவில், உங்கள் உடல் பல்வேறு செயல்கள் புரிகிறதே. அது மாதிரியாக உடம்பு இருந்ததை வைத்துக் கொண்டு, அந்த உடம்பு இறக்கும்போது எப்படி இருந்ததோ அதே விதமாய், உடம்பை நினைத்துக் கொண்டு மனம் வாழ்கிறது.''

''ஓ. இங்கு ஏன் வந்திருக்கிறீர்கள்?''

''உங்களை நமஸ்கரிக்க, உதவி கேட்க.''

''என்னை ஏன் நமஸ்கரிக்க வேண்டும்?''

''நீங்கள் சொல்கிற மந்திரம் உன்னதமானது. வெகு சீக்கிரம் பலன் தரக் கூடியது. இதை நீங்கள் திருத்தமாகவும், ஆழமாகவும் சொல்கிறீர்கள். இதைக் கேலி செய்த போதும் அதைப் பற்றி நீங்கள் கவலை கொள்ளாமல் முழுமையாக அதில் நீங்கள் ஈடுபட்டீர்கள். எந்த எதிர்பார்ப்புமில்லாமல் எதுவும் வேண்டுமென்று கேட்காமல் வெறுமே மந்திரஜபம் செய்தீர்கள். அது எங்களுக்கு சௌகரியமாகப் போயிற்று. அதுவுமில்லாமல் நாங்கள் வசிக்கின்ற பகுதியிலேயே இந்த மந்திர ஜபம் நடக்க நாங்க பரவசமானோம்.''

''எது நீங்கள் வசித்த பகுதி?''

''திருமயிலை திருவல்லிக்கேணி.''

''திருமயிலை வேறு. திருவல்லிக்கேணி வேறல்லவா.''

''இப்போது வேறாக இருக்கிறது. முன்பு திருமயிலையும், அல்லிக்கேணியும் சேர்ந்து ஒரே கிராமமாகத்தான இருந்தது. இரண்டு கிராமத்திற்கும் ஒரே சபை. ஒரே தலைவர்கள்.''

''ஓஹோ. எப்போது அது?''

''ஆயிரம் வருடங்களுக்கு முன்பு.''

''ஆயிரம் வருடமாக இப்படித்தான் இருக்கிறீர்களா?''

''ஆமாம்.''

''தினமும் இப்படித்தான் தேடுகிறீர்களா?''

''இல்லை. நல்ல சப்தங்கள் கேட்டால், நல்ல விஷயங்கள் நடந்தால் அங்கு போய் நிற்கிறோம். தீய விஷயமாக இருந்தால் பதுங்கி விடுகிறோம். பார்க்காமல் போய் விடுகிறோம். நல்லவைகளோடு உண்டான சம்பந்தம் எங்களை வளப்படுத்து கிறது. உணவாகிறது.''

''எந்தவிதமான நல்லவைகள்?''

''ஹோமங்கள், பூஜைகள், தானங்கள், பெண்களின் சிரிப்பொலிகள், குழந்தைகளின் ஆனந்தக் கூவல்கள், நல்ல இசை. குறிப்பாய் புல்லாங்குழல் இசை. சாதுக்களின் பிரசங்கங்கள் போன்றவற்றை நாங்கள் அருகே இருந்து ரசிக்கிறோம். நாங்கள் இருப்பதாலேயே அந்த இடத்தின், அந்த விஷயத்தின் தன்மை பலமாகிறது.''

''சப்தமாகக் கூட இல்லை. ஒரு உணர்வாக அருகே இருக் கிறீர்கள். ஒரு உணர்வாகப் பேசுகிறீர்கள். நேரே வந்தால் என்ன?''

''அது முக்கியமில்லை சீனிவாசரே. உணர்வாகத் தான் எல்லா விஷயமும் முதலில் ஆரம்பிக்கிறது. உங்கள் தாய் மீது ஒரு உணர்வாகத்தான் பாசம் ஏற்படுகிறது. உங்கள் மனைவி மீது ஒரு உணர்வாகத்தான் காதல் ஏற்படுகிறது. வறியவர்கள் மீது ஒரு உணர்வாகத்தான் அன்பும் கருணையும் பொங்குகின்றன. அந்த உணர்வின் ஆரம்ப நிலை தான் எங்கள் நிலை.

அந்த உணர்வாக இருக்கின்ற விஷயத்தைப் பேசினால் வார்த்தை. செய்தால் செய்கை. எனவே நல்ல விஷயங்கள் எங்கு

ஆரம்பிக்கின்றனவோ, அந்த இடத்தை நாங்கள் கைப்பற்றிக் கொண்டு, அந்த விதமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உணர்வுக்கு உடம்பு இல்லை. வடிவம் இல்லை. ஆனால் உணர்வில்லாமல் உலகத்தில் எதுவுமில்லை. உணர்வு ஒரு வடிவத்தின் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. உங்கள் உடம்பின் மூலம் தங்கள் விருப்பத்தை, வெறுப்பை வெளியே காட்டுகிறது. அதனால்தான் உங்களுக்குக் கோபம் என்றால் பற்களைக் கடிக்கிறீர்கள். சந்தோஷமென்றால் இதழ் விரியச் சிரிக்கிறீர்கள்'' யட்சர்கள் சொல்ல, சீனிவாசன் கேட்டுக் கொண்டான். அதற்கு பதில் கேள்வி கேட்டான்.

''இங்கு ஏன் வந்திருக்கிறீர்கள், நான் மந்திர ஜபம் சொல்வதை வேடிக்கை பார்க்கவா?''

''இல்லை. நீங்கள் மந்திர ஜபம் சொன்னது எங்களை ஈர்த்தது. நல்ல இசை இருக்கின்ற இடத்தில் நாங்கள் உட்கார்ந் திருப்போம். எங்கேயாவது அன்னதானம் என்றால், நாங்கள் வரிசையில் பலமுறை நகர்ந்து வருவோம்.''

''அப்படி நகர்ந்து வந்து என்ன செய்வீர்கள்?''

''வெறுமே கைவழியே சிந்துகின்ற கரண்டியிலிருந்து உதறுகின்ற பருக்கைகளைத் தாங்கிக் கொள்வோம். ருசித்துப் பார்க்க முயற்சி செய்வோம். ஆனால் முடியாது. ஆனால் மற்றவர்கள் அதை ருசிக்கும் போது அந்த உணர்வை எங்கள் உணர்வால் விழுங்கி நாங்களே உண்டது போல ஒரு சந்தோஷத்தை அடைகிறோம்.''

''ஆச்சயமாக இருக்கிறதே.''

''ஆமாம். பூமியில் உண்டு உண்டு பழக்கப்பட்டு விட்டோமல்லவா, எங்கள் மனம் உண்பதற்கு ஏங்குகிறது அல்லவா, அந்த ஏக்கத்தை எங்கு அன்னதானம் நடக்கிறதோ அங்கு போய் தீர்த்துக் கொள்வோம்.

அதே போல் ஒரு நல்ல சத்சங்கம். அங்கு பல பேர் கூடி இறைவன் புகழைப் பாடுகிறீர்கள். திரும்பத் திரும்ப அவரின் நாமாவைச் சொல்கிறீர்கள் என்றால், நாங்கள் அங்கு போய் அமைதியாக உட்கார்ந்து விடுகிறோம். உங்களுக்கு வெகு அருகே அமர்ந்து நீங்கள் நாமா அனுபவிப்பதை நாங்கள் அனுபவிக்கிறோம். நீங்கள் கடவுள் பெயர் சொல்லி உள்ளே கசிந்துருகுவதை நாங்களும் உணர்கிறோம்.''

''போர் நிகழுகின்ற இடத்தில் நீங்கள் இருப்பதில்லையா?''

''இல்லை. போர் நிகழுகின்ற இடத்தில், தூற்றுகின்ற வார்த்தைகள் உள்ள இடத்தில், உணவு திருடப்படும் இடத்தில், கொலை, களவு, நடக்கும் இடத்தில், விபச்சாரம் செய்யும் இடத்தில், பொய் பேசும் இடத்தில், புறம் கூறுகின்ற இடத்தில், இன்னொருவன் ஆத்திரமாக கவிழ்க்க முயற்சி செய்கின்ற இடத்தில் நாங்கள் இருப்பதில்லை. நாங்கள் ஒரு இடத்திலிருந்து அகன்று விட்டால் அந்த இடத்தில் தீய சக்திகள் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. அநேகமாக வரவும் செய்கின்றன.''

''புரியவில்லையே இதைத்தெளிவாகச் சொல்லுங்களேன்.''

''உங்களுக்கு கொலை செய்யும் ஒரு எண்ணம் வந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உங்களிட மிருந்து நாங்கள் விலகி விடுகிறோம். உடனே அந்த இடத்தில் ஒரு சுகமற்ற தன்மை பரவி விடுகிறது. ஒரு எரிச்சலான சூழ்நிலை, சூடான சுற்றுப்புறம் பரவி விடுகிறது. அந்த இடத்தில் நாற்றமாய் தீய சக்திகள் வந்து உட்கார்ந்து கொள்கின்றன. 'கொலை செய், கொலை செய், விடாதே கொல்லு' என்று அவை உங்களைத் தூண்டுகின்றன. எங்களைப் போலவே தீய சக்திகளும், நீங்கள் ஒருவரைக் குத்திக்கொல்கிறபோது தானே துடிக்கக் கொல்வதாய் நினைத்துக் கொள்கின்றன. அது தன்னுடைய ஆத்திரத்தை, தன் மனதில் பதிந்த அந்த வேகத்தை மனிதர்களைத் தூண்டுவதின் மூலம் நிகழ்த்திக் கொள்கின்றன. அந்த சக்திக்கு பைசாசங்கள் என்று பெயர்.''

''ஆக, உலகில் நடக்கிற நல்லதுக்கும் கெட்டதுக்கும் நல்ல சக்திகளும், தீய சக்திகளும் தான் காரணமா?''

''ஆமாம், ஓரளவு அவர்களும் காரணம். நீங்கள் விதைத்தால் நாங்கள் வேகமாக அதை வளர்க்கிறோம். நீங்கள் ஒரு கங்கு நெருப்பு வைத்தால் அதைத் தீபமாகவோ, தீயாகவோ நாங்கள் மாற்றுகிறோம்.''

''சரி எனக்கு கொல்லுகிற ஆத்திரம் ஏற்படும் போது நீங்கள் அருகே வந்து, 'வேண்டாம். இவ்விதம் செய்யாதே' என்று சொல்ல முற்படக்கூடாதா?''

''நிச்சயம் சொல்வோம். ஆனால் அப்படிச் சொல்வதற்கு உங்களுக்கும் எனக்கும் ஏதாவது பந்தம் இருக்க வேண்டும். சீனிவாசரே, நீங்கள் மந்திர ஜபம் செய்பவராகவோ, இடைவிடாது கடவுள் நாமம் சொல்பவராகவோ, தான தர்மங்களில் சிறந்தவராகவோ, இரக்க குணமுள்ளவராகவோ இருந்து, நீங்கள் ஒரு தவறு செய்யப் போகிறீர்கள் என்றால், உங்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட பந்தத்தால் உங்களை நான் நிச்சயம் தடுக்க முயற்சி செய்வேன். அப்படி பலரை நாங்கள் தடுத்திருக்கிறோம். தீயசக்திகள் அவர்கள் அருகே ஒட்டாது விலக்கியிருக்கிறோம்.''

''இதைச் சொல்லவா சீனிவாசனை நோக்கி வந்திருக்கிறீர்கள்.''

''இல்லை சீனிவாசரே. எங்களுக்கு ஒரு குறை இருக்கிறது. நாங்கள் வாழ்கிற போது எங்கள் வாழ்க்கையில் ஒரு விஷயம் முழுமையடையாமல் விடுபட்டுப் போய்விட்டது. அது முழுமையடைவதற்காகத் தவித்துக் கொண்டு இருக்கிறோம்.

நானும் என் மனைவியும் இந்தப் பகுதியின் வளர்ச்சிக்காக பாடுபட்டிருக்கிறோம். அப்படி உழைக்கும் போது எங்களைப் பற்றி அக்கறை கொள்ளாது, ஒரு முறை கூட கூடலில் ஈடுபடாது, ஐந்து வருடங்கள் கணவன், மனைவியாக இருந்து விட்டோம். இன்று இல்லை நாளை... நாளை இல்லை, நாளை மறுநாள் என்று

ஒவ்வொரு நாளாகத் தள்ளிக் கொண்டே போய் எங்களையும் மீறி எந்தச் சண்டையுமில்லாமல், எந்தக் கோபமுமில்லாமல் சற்று கூட காதல் குறையாமல் ஒரு இடைவெளி ஏற்பட்டு விட்டது. மரணத்தின் தறுவாயில் என் மனைவி இதற்காக ஏங்கி யிருக்கிறாள். என் மனைவிக்கு சிறிய அளவு கூட சுகம் கொடுக்க முடியவில்லையே என்று நான் என்னை மாய்த்துக் கொள்ளும் போது எண்ணினேன்.''

''உங்களை மாய்த்துக் கொண்ட பிறகு நீங்கள் எப்படி நல்ல சக்தியாக இருக்கிறீர்கள், தற்கொலை செய்தவர்கள் தீய சக்தியாகவல்லவா போவார்கள்.''

''இல்லை. நான் அதிகம் நல்லது செய்திருக்கிறேன். என்னைப் பற்றி முற்றிலும் மறந்துவிட்டு இந்த மயிலை, திருவல்லிக்கேணி பகுதியை மலர வைத்திருக்கிறேன். இங்கு பல பேர் வாழ்க்கை நல்லபடியாக வாழ காரணமாக இருந்திருக்கிறேன். பலபேர் என்னை வாழ்த்தியிருக்கிறார்கள். அந்த வாழ்த்துக்கள் எங்களைத் தீய சக்தியாக மாறவிடாமல் தடுத்து விட்டன. பிரிவாற்றாமைதான் எங்களுக்கு மிகப் பெரிய இடைஞ்சலாக வந்துவிட்டது. இந்தப் பிரிவு தாங்காமல் தான் நாங்கள் பூமியிலேயே தவித்துக் கொண்டிருக்கிறோம். ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு இந்த மயிலை, திருவல்லிக் கேணியையே சுற்றிச் சுற்றி வருகிறோம்.

ஒவ்வொரு முறை கபாலீசுவரர் கற்பகாம்பாள் உற்சவம் நடக்கும்போதும், அதன் எல்லா விசேஷங்களிலும் நாங்கள் கலந்து கொள்கிறோம்.

கோயிலின் அபிஷேகத்தின்போது கை கூப்புகிறோம். பிரதோஷத்தின் போது முன்னால் வந்து நமஸ்கரிக்கிறோம். நாயன்மார்களைச் சுமந்து வரும்போது தீவட்டி பிடித்து வருவார்கள். அந்த தீவட்டிகள் கொழுந்து விட்டெறிய நாங்கள் காரணமாக இருந்திருக்கிறோம். அப்படி விசேஷங்கள் எதுவுமில்லையென்றால், அந்தக் கொடிமரத்தின் உச்சியில்

நின்று அந்த அரசிலை மணிகளை ஆட்டிக் கொண்டிருக்கிறோம். மயிலையின் எல்லாப் பகுதிக்கும் சென்று, குறிப்பாய் இந்த செழுங்கழுநீர் ஓடை அருகிலுள்ள பிள்ளையார் கோயிலில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.''

''செழுங்கழுநீர் ஓடை என்று ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறதே தவிர, ஓடை இல்லையே.''

''ஒரு நூறு வருடம் முன்பு கூட இங்கு ஓடை இருந்தது சீனிவாசரே. இப்பொழுதுதான் மழை தவறி ஓடை தூர்ந்து விட்டது. ஓடையில் நீர் ஓடாததால் குளமும் வற்றிப்போய் விட்டது. அப்பொழுதெல்லாம் சீனிவாசரே, காடுகள் அதிகமிருக்கும். காடுகள் அதிகமிருந்ததால் நன்கு மழை பொழியும். நன்கு மழை பொழிந்ததால் ஓடைகளும், ஆறுகளும், குளங்களும் நிரம்பி வழிந்தன. பருவமழை, பெய்ய ஆரம்பித்தால் பத்து நாட்கள் வெளியில் தலை காட்ட முடியாது. இடைவிடாது மழை பெய்யும். அப்படி மழை பெய்து வெகு நாட்களாகிவிட்டன. காரணம் மரங்களே இல்லை. காடுகளே இல்லை. மேகங்கள் தனது சக்தியை வெறுமே கடலில்தான் வீசிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பகுதி வெப்பமாகிக் கொண்டே வருகிறது. எங்களுக்குக் கவலையாக இருக்கிறது சீனிவாசரே.''

''நல்லது. நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. இங்கு ஓடை இருந்திருக்கக்கூடும். சரி. நான் என்ன செய்ய வேண்டும். உங்களுக்கு இன்னும் அதிகமாக மந்திர ஜபம் செய்யட்டுமா?''

''இல்லை. நீங்கள் செய்கின்ற மந்திர ஜபம் உங்களுக்குத் தான் பலிதமாகும். எங்களுக்கு வந்து சேராது. ஆனால் எங்களுக்கு நீங்கள் ஒரு உதவி செய்யமுடியும்.''

''சொல்லுங்கள். என்ன உதவி.''

''உங்கள் மனைவியோடு கூடி கொஞ்சிக் களிக்க உங்களால் முடியுமல்லவா.''

''இது என்ன கேள்வி, செய்ய முடியுமே. செய்து கொண்டு இருக்கிறேனே.''

''அதை எங்களுக்காக தத்தம் செய்ய முடியுமா?''

''புரியவில்லையே. கூடலை எப்படி தத்தம் செய்வது?''

''சற்றுமுன் சொன்னீர்களே. உங்களுக்காக மந்திர ஜபம் செய்ய முடியும்போது எங்களுக்காக கூடலை நடத்த முடியாதா.''

''எனக்குப் புரியும்படி சொல்லுங்கள். நான் அதிகம் சூட்சுமமான விஷயங்களைப் படித்தவன் அல்ல.''

''படிப்பில் இது வராது சீனிவாசரே. அனுபவத்தால் தான் ஏற்படும். நாங்கள் சொல்லிக் கொடுத்தால்தான் இது புரியும். நானும், என் மனைவியும் கூடிகளித்து இன்புறாமல் போனதால், அவ்வப்போது இங்குள்ள மனிதர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் அருகே போய் நின்று, அவர்களைக் கூடிகளிக்க முடியுமா என்று கேட்டு, அவர்கள் கூடிகளித்த பிறகு அந்த அனுபவத்தை நாங்கள் ஏற்று, மெல்ல மெல்ல பூரணமாகிக் கொண்டு வருகிறோம். எங்களுடைய மனம் நிறைந்து கொண்டு வருகிறது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக பலபேர் கூடுவதை நாங்கள் உணர்ந்து நாங்களே கூடுவது போல் சந்தோஷப் பட்டிருக்கிறோம். சில சமயம் பெண்களிடம் போய் கேட்டிருக் கிறோம். இது என் முறை. நான் உங்களிடம் கேட்டு, நீங்களும் உங்கள் மனைவியும் கூட, உங்களுக்கு அருகே இருந்து நாங்கள் அதை அனுபவிப்பது, போல் உணர்ந்து நிறைவெய்துவோம்.''

''நான் உங்கள் எதிரே கூட வேண்டுமா?'' சீனிவாசன் கேட்டான்.

''எதிரே என்பது இங்கு பிரச்சினையே இல்லை. உங்கள் கண்ணுக்கு நாங்கள் தெரிந்தால்தானே எதிரே இருப்பதாக அர்த்தம். நீங்கள் உணரத்தான் போகிறீர்கள்.''

''என் மனைவி, இந்த உணர்ச்சியைக் கூட வெறுப்பாளே. பிடிக்கவில்லை என்று மறுப்பாளே.''

"அது புரிகிறது. உங்கள் மனைவி இதைப் பற்றி அறியாதவர். சொன்னாலும் புரிந்து கொள்ளாதவர். ஆனால் உங்கள் மீது அவர் மிகுந்த அன்போடும் காதலோடும் இருக்கிறாள். உங்களைப் பற்றி ஊர் உலகத்தில் எல்லோரிடமும் மிக கர்வமாக சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஆனால் உங்களிடம் மட்டும் சற்று கடுமையாக அவ்வப்போது நடந்து கொள்கிறாள். உங்கள் மீது அவளுக்குள்ள காதலை நாங்கள் நன்கு அறிவோம். நீங்கள் அவளைக் கூடலுக்கு அழைத்து, அவளோடு சந்தோஷமாக இருந்தீர்களென்றால் நாங்கள் அதை உணர்வோம். உங்கள் மனைவிக்கு இது தெரிய வேண்டிய அவசியமே இல்லை."

"எப்போது நாங்கள் இதைச் செய்ய வேண்டும்?"

"உங்களுக்கு இது சம்மதமா சீனிவாசரே?"

"யாருக்கோ இது பயன்படப் போகிறது என்றால், எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. இதனால் எனக்கு தீது எதுவும் வராதே."

"நெல் முனையளவும் எவருக்கும் தீது செய்யாதவர்கள் தான் யட்சர்கள். தீங்கு செய்ய முடியாதவர்கள்தான் யட்சர்கள். எங்களால் நன்மை மட்டுமே செய்ய முடியும் சீனிவாசரே. சிறிதும் பயம் வேண்டாம். நீங்கள் கூடலில் ஈடுபடுகிறபோது, இது எப்போதோ இறந்த இரண்டு உயிர்களுக்கு, எங்கோ அலைந்து கொண்டிருக்கின்ற யட்சனுக்கும், யட்சினிக்கும் என்று நினைத்துக் கொண்டே சேர்ந்தால் நாங்கள் அதை முழுமையாக உணரத் தலைப்பட்டு விடுவோம். நமக்கு ஒருவர் தத்தம் செய்கிறாரென்றால் நாங்கள் வெட்கமின்றி இதை விரும்பி ஏற்போம். உங்களுக்கு இது சம்மதமா சீனிவாசரே."

"ஆஹா. சம்மதம். நீங்கள் யார், உங்கள் பெயரென்ன, உங்கள் வாழ்க்கையென்ன என்று எனக்குச் சொன்னால் நான் சந்தோஷமாகக் கேட்பேன். உங்களைப் பற்றி எனக்கு விவரமாகச் சொல்லுங்களேன்."

"நிச்சயம் சொல்கிறேன். இன்று நீங்கள் கபாலி கோயில் வசந்த மண்டபத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டீர்கள் என்றால், உங்களுக்கு அருகே உட்கார்ந்து சொல்ல விரும்புகின்றேன்."

சீனிவாசன் அன்று இரவு கபாலி கோயில் வசந்த மண்டபத்திற்குப் போய் உட்கார்ந்து கொண்டான். உச்சிஷ்ட மஹாகணபதி மந்திரம் சொன்னான். யட்சனும் யட்சினியும் அவனுக்கு அருகே வந்து உட்கார்ந்து கொண்டதை உணர்ந்தான். வருக என்று கை கூப்பினான். சீனிவாசனுக்கு எதிரே நடந்து போனவர் அவரைத்தான் வணங்குவதாக நினைத்து கை கூப்பினார். யட்சினியும் யட்சனும் சிரித்தார்கள்.

"இது கபாலி கோயிலே அல்ல. கபாலீசுவரம் கடற்கரை ஓரம் இருந்தது. நடுவே இயற்கையால் பாதிக்கப்பட்டு சற்று சிதிலமடைய, கப்பலில் வந்த அந்நியர்கள் வருகையால் அது இடிக்கப்பட்டு கோட்டை உயர்த்திக் கட்டப்பட்டது. உள்ளுக்குள் குடியிருப்புகளும் அந்த மதத்தினரின் தேவாலயங்களும் வந்து விட்டன. கற்கள் பெயர்த்து வந்து இங்கே கோயில் கட்டி இருக்கிறார்கள். கோயில் கட்டிய வெகு நாளைக்குப் பிறகுதான் குளமும் கட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் கோயில் கட்டி முந்நூற்று ஐம்பது ஆண்டுகள் தான் ஆகியிருக்கின்றன. ஆயினும் அன்றைய கபாலீசுவரத்தின் தன்மை சிறிதும் மறையாமல் மிக அமைதியாய் அற்புதமாய் இந்தக் கோயில் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இப்போது எங்களுடைய வாழ்க்கையைச் சொல்கிறேன் கேளுங்கள். அதற்கு முன்பு நாங்கள் எப்படியிருந்தோம் என்பதை உங்களுக்குக் காட்ட விரும்புகின்றோம். கண்களை மூடிக் கொண்டு பாருங்கள்."

"ஆஹா, கண்களை மூடிக் கொண்டு பார்க்க வேண்டுமா."

"ஆமாம் சீனிவாசரே. கண்களை மூடிக் கொண்டு உங்களைப் பார்த்தால், உங்கள் மனதிற்குள் இரண்டு உருவம்

தோன்றும். அவைகளே நாங்கள்.'' சீனிவாசன் தன் மனதைப் பார்க்க ஆணும் பெண்ணுமாய் இரண்டு உருவங்கள் தோன்றின. நல்ல கருப்பு. திடகாத்திரமான உடம்பு. சிறிய அளவு உடை. விநோதமான நகைகள். அவர்கள் அவனைப் பார்த்துக் கை கூப்பினார்கள். சீனிவாசன் கண்கள் மூடி உள்ளுக்குள் கை கூப்பினான்.

இந்த முறை நடந்து போனவன் விநோதமாய்ப் பார்த்தான். 'பைத்தியம்லாம் வந்து கோயிலுக்குள்ள உட்கார்ந்திருக்கு' என்று உரக்கச் சொல்லிக் கொண்டு போனான்.

சீனிவாசன் காதில் அது விழவில்லை. சீனிவாசன் தனக்குள் முழுகிக் கிடந்தான். அவர்களைத் தொட்டும் பார்த்தான். கட்டிக் கொண்டான். யட்சினியின் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டான். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உன் முகத்தில் தேஜஸ் மின்னுகிறது. எவ்வளவு பெரிய கண்கள் உனக்கு, எத்தனை அழகான முத்து வரிசைப்பல் என்று வியந்தான்.

அவர்கள் அவனைத் தடவிக் கொடுத்தார்கள். காது மடல்களை நீவிவிட்டார்கள். விரல்களைச் சொடுக்கெடுத் தார்கள். முதுகை வருடினார்கள். இதுதான் எங்கள் வாழ்க்கை என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அடுத்த ஒரு மணி நேரத்திற்கு சிறிதும் அசையாமல் தூணோடு தூணாய் சீனிவாசன் அமர்ந்திருந்தான். அவர்கள் வாழ்க்கை பல்வேறு விதமாய் அவனுக்குச் சொல்லப்பட்டது. அவர்கள் வாழ்ந்த இடங்கள் காட்டப்பட்டன. அவர்கள் நின்ற இடமும், நடந்த இடமும், குடித்தனம் செய்த வீடும், விழுந்த கிணறும், நெஞ்சு பிளந்த பாறையும் காட்டப்பட்டன.

''என்னை கிணற்றில் போட்டு மூடிய இடத்தில் ஒரு நடுகல் நட்டார்கள். அதற்குத் தினந்தோறும் பூஜை செய்தார்கள். எங்களுக்கு காவல் இரு தாயே, காவல் இரு ஐயா என்று கேட்டார்கள். நாங்கள் இன்றளவும் காவல் இருக்கிறோம். இன்னமும் இருப்போம்.

சீனிவாசரே, எங்களுடைய கோரிக்கையை ஏற்றதற்கு நன்றி. இன்றிரவு உங்கள் மனைவியோடு சந்தோஷமாக இருப்பீர்கள் அல்லவா.''

''நிச்சயம் இருப்பேன். போய் வாருங்கள்'' சீனிவாசன் அவர்களுக்கு விடை கொடுத்தான்.

அவர்கள் போனார்கள். சீனிவாசன் எழுந்து கோயிலை வலம் வந்தான். அவன் முகம் பளீரென்று இருப்பதைப் பார்த்து பலர் ஆச்சரியப்பட்டார்கள்.

''இன்னைக்கு கடுமையான தியானமா'' என்று ஒரு நண்பர் கேட்க, ''ஆமாம்'' என்று சொன்னான்.

''அடடா, அதான் முகமே பேசறதே. தியானம் பண்றது ரொம்ப அற்புதமான விஷயம். ஆழ்ந்து பண்ணா முகமே மாறி பளபளப்பு கூடிடுது. அதுக்கு நீங்க ஒரு சாட்சி'' அந்த நண்பர் சொல்ல, அவன் பதிலேதும் சொல்லாமல் வீட்டிற்குப் போனான். வீட்டிற்குப் போகும் முன் பூ வாங்கிக் கொண்டான். தேங்காய் போளி வாங்கிக் கொண்டான். வீட்டிற்குள் நுழைய அவன் மனைவி அழுது கொண்டிருந்தாள். அவன் பதறிப் போனான்.

''என்ன ஆயிற்று சரோஜா?'' என்று தோளைப் பிடித்து உலுக்கினான்.

''ஒரு வீட்டுக்கு வந்த மாட்டுப் பொண்ணை பளீர் பளீர்னு மாமியார் அடிக்கிறா. எனக்கு உடம்பே ஆடிப் போயிடுத்து.''

''யாரு, எங்க அடிக்கறா?'' அவன் அடுத்த வீட்டை எட்டிப் பார்த்தான்.

''எங்கயும் இல்லைன்னா டி.வி.யில?''

''டி.வி. யிலயா?''

''டி.வி.யில ஒரு சீரியல். ஒரு பொண்ணை எத்தனைப் பேர் எத்தனை விதமா கொடுமைப்படுத்தறாங்க தெரியுமா. ஆம்படையான் நாசமாப் போறவன் அவளுடைய பழைய

காதலைச் சொல்லிச் சொல்லி இடிச்சுக் காட்டறான். மாமியார் பளீர், பளீர்னு தலையில் அடிக்கறா. அந்தப் பொண்ணு அத்தனையும் வாங்கிட்டு குடித்தனம் பண்ணிக்கிட்டிருக்கு. நானா இருந்தா அரிவாளை எடுத்து ஒரே போடு போட்டுடுவேன்.''

''ஏன் இந்த மாதிரி சீரியல்லாம் பாக்கறே.''

''நல்லாருக்குண்ணா. இந்த மாதிரி பாக்கறபோது தான் நான் எவ்வளவு சந்தோஷமா சுதந்தரமா இருக்கேன்னு தெரியறது. உங்கம்மா எவ்வளவு நல்லவங்க. எங்கப்பா பதினாறு பவுன் போடுறேன்னு சொல்லிட்டு பதினாலுதான் போட்டா. உங்கம்மா கேட்டதுக்கு, இல்ல நான் பதினாலுதான் சொன்னேன். நீங்க தப்பா நினைச்சுட்டேள்னு சொல்லிட்டார். உங்கம்மா ஒரு நிமிஷம் யோசனை பண்ணிட்டு, கல்யாணம் ஆயிடிச்சு. ரெண்டு பவுன்ல எதுவும் குறைஞ்சு போயிடலை. அந்த ரெண்டு பவுனை என் மாட்டுப் பொண்ணுக்கு நான் போட்டுக்கறேன். அன்னைக்கு சாயந்திரமே ஒவ்வொரு பவுன்ல ரெண்டு வளையல் வாங்கிக் கொடுத்தா. போட்டுக்கோடி, பதினாறுதான் நல்ல நம்பர். பதினாலு இல்ல அப்படின்னு சொன்னா. 'நம்பருக்காகத்தான் கேட்டேளா மாமி'ன்னு கேட்டேன். 'ஆமாண்டி நீ கொண்டு வந்து என்ன இங்க நிறையப் போறது. என்கிட்ட இல்லாத நகையா, ஏதோ உனக்கு சௌகரியமா கொண்டு வரணுமேன்னு நினைச்சேன். உங்கப்பா பதினாலுன்னு சொன்னதை பதினாறுன்னு நினைச்சுண்டேன்னா'. 'இல்ல மாமி எங்கப்பா பொய் சொல்றாரு'ன்னு நான் சொல்ல, 'அவரு நினைச்சதைவிட அதிகமா செலவாயிடுது, அதனால நகைல ரெண்டு பவுன் குறைஞ்சு போச்சு. இன்னும் ரெண்டு மாசத்துல அவருக்கு எங்கிருந்தாவது காசு கிடைக்கும். அப்ப தானா கொண்டு வந்து ரெண்டு பவுன் போடுவாரு பாரு. இதைப் போய் பெரிசு பண்ணுவானேன்னு' உங்கம்மா சாதாரணமா சொன்னா. நான் அழுதுட்டேன். எங்கப்பாவுக்காக உங்கம்மாகிட்ட மன்னிப்பு கேட்டேன். ஆஹா, எவ்வளவு அருமையான பொம்மனாட்டி.

எவ்வளவு அன்பான ஒரு அம்மா. இந்த சந்தோஷமெல்லாம் உங்க பக்கம்தான் திரும்பித்து. உங்களை இன்னும் கொண்டாடணும்னு தோணித்து. நான் இன்னிக்கு வரைக்கும் உங்களைக் கொண்டாடறதுக்கு காரணம் ஆரம்பத்துல உங்க அம்மாதான். அவ காட்டின பிரியம்தான்.''

''சரி, இன்னைக்கு உண்டா?''

''உண்டு.''

''என்ன திடீர்னு வேகமா பதில் வருது.''

''அந்தப் பொண்ணோட ஆம்படையான் வேணும்னே மோட்டார் பைக்கை நிறுத்திட்டு, 'வண்டி நின்னு போச்சு. அதோ அங்க உன் லவ்வர் நிக்கறானே. அவனைப் போய் கூட்டிண்டு வா. வந்து வண்டியை ரிப்பேர் பண்ணச் சொல்லு'ங்கறான். அவ கூட்டிக் கிட்டு வந்தவுடனே உன் லவ்வரைப் பார்த்ததுமே உனக்கு ஜிவ்வுங்கறதான்னு அசிங்கமா பேசறான்.

ஹப்பா என்ன விதமான கொடுமைகள். எவ்வளவு மோசமான மனிதர்கள்? என்னைக்காவது ஒரு நாள் இந்த மாதிரி நீங்கள் நடந்திருக்கேளா. இப்படி செய்யணும்னு உங்களுக்குத் தோணுமோ. எவ்ளோ இன்னொசண்ட்டா இருக்கேள். உங்களை நான் ஏமாத்தியிருக்கேண்ணா. இன்னைக்கு தலைவலி, அதனால சமைக்கலை அப்படின்னு சொல்லியிருக்கேன். உடனே எந்தக் கேள்வியும் கேக்காம, 'அப்படியா வேண்டாம் வேண்டாம். நான் வெளிய பாத்துக்கறேன்' அப்படின்னு போயிடுவேள். உங்க பையிலேர்ந்து அப்பப்ப அஞ்சுரூபா, பத்து ரூபாய எடுத்து சேர்த்து வைச்சு முந்நூத்தி ஐம்பது ரூபாய்க்கு புடவை வாங்கியிருக்கேன். நீங்க கேட்டதுக்கு எங்க அண்ணா கொடுத்தார்னு சொல்லியிருக்கேன். நீங்க அஞ்சு ரூபா குறையுதுன்னும் கேக்க மாட்டேள். அண்ணா கொடுத் தாரான்னும் விசாரிக்க மாட்டேள்.

சில சமயம் நான் ரொம்ப தப்பு பண்றேனோன்னு எனக்கு பயமா இருக்கும். வருத்தமா இருக்கும். ஆனாலும் அப்படி

உங்களை ஏமாத்தறது, சின்ன சின்னதா பொய் சொல்றது எனக்கு பிடிச்சிருக்குண்ணா. இன்னிக்கு அந்த டி.வி. கடங்காரன் பொண்டாட்டியை அப்படி சித்திரவதை பண்றதைப் பார்க்கும் போது உங்களை வந்து கட்டிண்டு முத்தம் கொடுக்கணும்போல தோணித்து. இன்னிக்கு வரேளா அப்படின்னு கேக்கணும்னு தோணித்து. நீங்களா வந்து கேக்கறேள், சாப்பிட வாங்கோ.'' அவள் அவனைக் கைப்பிடித்து உள்ளுக்குள்ளே அழைத்துக் கொண்டு போனாள். அவன் வாங்கிக்கொடுத்த பூவை ஆசையாக தலையிலே வைத்துக் கொண்டாள்.

''காத்தாலே ஆறுமணிக்கு எழுந்து மனப்பாடப் பகுதியைப் படிக்கணும். இப்பவே படுத்தாதான் காலையிலே எழுந்திருக்க முடியும். டி.வி. பாக்கறேன், டி.வி. பாக்கறேன்னு பதினொன்றரை மணிவரைக்கும் டி.வி. பார்த்துட்டிருந்தா காலையில் எட்டு மணிக்குத்தான் எழுந்திருப்பீங்க. டப்புன்னு கண்ணை மூடணும். தூங்கணும்'' என்று சரோஜா குழந்தைகளை விரட்டினாள். குழந்தைகளை சீனிவாசனுடனே அமர்த்தி, அவர்கள் திணறத் திணற சாப்பிட வைத்தாள். குழந்தைகளுக்கு படுக்கை தயார் செய்து படுக்க வைத்தாள்.

முகம் கழுவிக் கொண்டாள். ஈரத்துண்டால் உடம் பெல்லாம் துடைத்துக் கொண்டாள். வாசனை பவுடரைப் பூசிக் கொண்டாள். குழந்தைகளுக்கு அருகே போய் உட்கார்ந்து அதன் முதுகைத் தடவ ஆரம்பித்தாள். பாட்டுப் பாடினாள். குழந்தைகள் தூங்க ஆரம்பித்தன.

யட்சனும், யட்சினியும் அந்த வீட்டிற்குள் புகுந்தார்கள். ஒரு நறுமணம் வீட்டிற்குள் பரவியது.

''அம்மா உன் பவுடர் வாசனை இன்னைக்கு தூக்கலா இருக்கு. என்ன விசேஷம்'' பெண் குழந்தை கேட்டது.

''வேர்க்கறதேன்னு போட்டுண்டிருக்கேன். எப்பப் பார்த்தாலும் தூக்கத்துல கூட ஒரே பவுடர், ஸ்நோ, கண்மைன்னு

மேக்கப் சாமான்களைப் பத்தியே நினைச்சுக்கிட்டிருக்கே'' சரோஜா லேசாக கடிந்து கொண்டு, பின் குழந்தையைக் கட்டிக் கொண்டாள். குழந்தை அம்மாவை இறுக்க அணைத்துக் கொண்டு முத்தமிட்டது. பையன் முதலில் தூங்கினான். பிறகு மகளும் தூங்கிப் போனாள்.

அவள் எழுந்தாள். சீனிவாசன் படுத்துக் கொண்டிருந்த கட்டிலுக்கு அருகே தன் ஜாக்கெட்டை உருவி எறிந்து விட்டு அவனுக்கருகே படுத்துக் கொண்டாள். யட்சனும், யட்சினியும் ஆசைதீர அனுபவித்தார்கள்.

''மிகுந்த சந்தோஷம் சீனிவாசரே'' அவன் விடியற் காலை எழுந்து பல்தேய்த்துக் கொண்டிருக்கும் போது குரல் கேட்டது.

''உங்களுக்கு நிறைவாக இருந்ததா'' சீனிவாசன் கேட்டான்.

''மிக்க நிறைவு.''

''உங்களுக்கு நான் வேறு ஏதேனும் செய்ய வேண்டுமா?''

''இன்று இரவும் கூடலுக்கு முயற்சி செய்தால் நன்றாக இருக்கும்.''

''பலமுறைகள் நான் இதில் ஈடுபட வேண்டுமா'' வழக்கமாய் எப்போதேனும் ஒருமுறைதான் நான் இதில் ஈடுபடுவேன். இப்போது அவசரப்பட்டால் என் மனைவி சந்தேகப்படுவாள்.''

''அவசரப்பட வேண்டிய தேவையில்லை. உங்கள் மனைவி உங்களை அழைக்கின்ற சில உத்திகளை நாங்கள் கையாளுவோம். நீங்கள் எங்களுக்குத் தத்தம் கொடுக்கின்ற ஒரு மனோபாவத்தில் இருந்தால் மட்டும் போதும்.''

''எனக்கென்ன, இதில் எந்த வலியும் இல்லையே. உங்கள் வாழ்க்கையை மறுபடியும் யோசித்துப் பார்த்த போது, இதற்கு மேலும் உங்களுக்கு ஏதேனும் செய்ய முடியுமா என்று

தோன்றியது. உங்களுக்காக பூஜையோ, ஹோமமோ செய்தால் நலமாக இருக்குமா?''

''நீங்கள் வேறு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் சீனிவாசரே. நீங்கள் செய்வது ஒருவித ஹோமம். உங்களையே அதில் நெய்யாக ஊற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் மிக சந்தோஷத்துடன் அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். மெல்ல மெல்ல ஒரு நிறைவு நோக்கி நாங்கள் நகர்ந்து கொண்டு இருக்கிறோம். அதிகம் போனால் பத்து முறைகளுக்கு மேல் நாங்கள் உங்களை இதில் ஈடுபடச் சொல்ல மாட்டோம். என் மனைவி தனது சக்திகளை பிரயோகம் செய்து உங்கள் மனைவி இன்றைக்கும் உங்களை அழைக்குமாறு ஏற்பாடு செய்வாள். நீங்கள் அவளைச் சந்தோஷப்படுத்துகிற போது எங்களுக்கு தத்தம் செய்தால் போதும்.''

''நிச்சயம் செய்கிறேன்'' சீனிவாசன் சொன்னான். குளித்துவிட்டு உடுத்திக் கொண்டு ஆபீஸ் போனான்.

''என்னய்யா, என்ன பவுடர் போடறே.''

''ஏன் சார்?''

''முகம் வெள்ளைவெளே ர்னு இருக்கு.''

''பவுடரே போடலை சார்.''

''அப்படியா முகம் புதுசா மாறியிருக்கு.''

''தெரியலை சார்.''

''சில பேருக்கு வயசானா அழகு கூடும். நீ அந்த ஜாதிப்பா. உனக்கு மனசுக்குள்ள போறும்னு ஒரு நிறைவு வந்திடுச்சு. அதனால முகத்துல அழகு அதிகமாயிண்டே போறது. நான் சொல்றது சரியா?'' மேனேஜர் கேட்டார்.

''ஆமாம் சார். அப்படித்தான் ஒரு நிறைவு வருது.''

''எல்லோருக்கும் வராதுப்பா. சிலருக்குத்தான் அந்த புத்தி வரும். நீ கொடுத்து வைச்சவன்'' அவன் கையைத் தொட்டுக்

கண்களில் ஒற்றிக் கொண்டார். சில வேலைகளைச் செய்யும்படி அவனுக்கு கட்டளையிட்டார். அவன் சந்தோஷமாக வேலை செய்ய நகர்ந்தான்.

மாலை வீடு நோக்கி வந்தான். சரோஜா தன்னை இன்று அழைப்பாள் என்று நினைத்து அவளுக்குப் பிடித்த முல்லைப் பூ வாங்கிக் கொண்டான். வேறு பக்கம் ஸ்கூட்டரைத் திருப்பி பால்களி என்கிற தின்பண்டத்தை ஒரு சிறு மெஸ்ஸில் வாங்கினான். குழந்தைகளுக்கு சாக்லேட்டுகளும், பிஸ்கெட்டு களும் வாங்கிக் கொண்டான்.

வீட்டிற்குப் போனான். குழந்தைகளிடம் பொட்டலங் களை நீட்டினான். அவளுக்கு இனிப்பும் பூவும் கொடுத்தான்.

''என்ன நேத்திக்கும் வாங்கிண்டு வந்தேள். இன்னைக்கும் வாங்கிண்டு வரேள்.''

''சும்மா தோணித்து.''

''ஏய் திருடு. நீ எதுக்கோ அடிபோடுறே.''

''ஒண்ணுமே இல்ல. கையில கூடுதலா ஒரு நூறுரூபா இருந்தது. என்ன பண்ணலாம்னு யோசிச்சு தின்பண்டம் வாங்கி வந்தேன். உனக்கு பிடிச்ச பால்களி. குழந்தைகளுக்கும் பிடிச்ச பிஸ்கெட், சாக்லேட். பூ நீயும் வைச்சுக்கலாம். குழந்தைக்கும், கொடுக்கலாம். சாமி படத்துக்கும் போடலாம். முல்லைச்சரம் நிறைய வாங்கிண்டு வந்திருக்கேன். வாசற் படியில இருக்கிற மகாலட்சுமிக்குப் போடு'' அவன் சொல்ல, அவள் வாசற்படியில் உள்ள மகாலட்சுமி படத்திற்கு நீண்ட முல்லைச்சரம் போட்டு அலங்கரித்தாள்.

''வாசற்படிக்கும் போட்டா ரொம்ப அழகா இருக்கே.''

''தினம் கூட வேண்டாம். எப்பல்லாம் பூவாங்கறமோ அப்பல்லாம் வாசற்படிக்குன்னு ஒரு நாலு முழம் சேத்து வாங்கிக்க. வாசற்படியிலே பூ போட்டா உள்ளே வரவாளுக்கு சந்தோஷமா இருக்கும்.''

''நம்ம வீட்டுக்கு யார் வரப்போறா?''

''யாரு வேணா வரலாம். எப்படி வேணா வரலாம்'' சீனிவாசன் பதில் சொன்னான்.

சீனிவாசன் சொல்லி முடிந்த மூன்றாவது நிமிடம் சரோஜாவின் பள்ளித் தோழி படியேறி உள்ளுக்குள் வந்தாள்.

''என்னடி இது. ரெண்டாம் மாடி வாங்கிண்டிருக்கே. என்னால் முடியவே இல்லை போ'' என்று குப்பென்று உட்கார்ந்தாள்.

ஒரு வருடம் கழித்து வருகின்ற சிநேகிதியைப் பார்த்து சரோஜா பரவசமானாள். ''புது வீட்டுக்கு இப்பத்தான் வர்றே இல்லே'' என்று ஓடிப்போய் அவளுக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள். குழந்தைகளை விசிறச் சொன்னாள். சீனிவாசன் ஒரு டம்ளரில் ஐஸ்வாட்டர் நிரப்பி சிநேகிதியிடம் நீட்ட, அவள் வெட்கத்துடன் வாங்கிக் கொண்டாள். சரோஜாவும், அவளும் பழைய கதைகள் பேச ஆரம்பித்தார்கள்.

''வீடு நல்லா பெரிசா இருக்குடி. காத்தும் வெளிச்சமுமா இருக்கு. ஆனா ரெண்டாவது மாடியா இருக்கு, எப்படி ஏறுறே?''

''நீ குண்டாயிட்டே. அதான் உன்னால முடியலை.''

''நீ ரொம்ப அழகாயிட்டேடி'' சிநேகிதி சரோஜாவைச் சொல்ல, சரோஜா குனிந்து பார்த்துக் கொண்டாள். காபி கொண்டு வருவதாகச் சொல்லி சமயலறைக்குப் போய் அங்குள்ள பெரிய கண்ணாடியில் பலமுறை தன்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டாள். புடவையை இறக்கி விண்ணென்று இருக்கும் மார்பகங்களை உற்றுக் கவனித்தாள். புன்னகை செய்தாள். குலுக்கலுடன் போய் காபி போட்டாள். திரும்ப வந்து சிநேகிதிக்குக் கொடுத்தாள்.

அவர்கள் கதையைத் தொடர்ந்தார்கள். யார் யார் நன்றாக இருக்கிறார்கள், யார் யார் நன்றாக இல்லை என்று பட்டியல் போட்டார்கள். ஒரு மணி நேரம் பேசிய பிறகு சிநேகிதி

விடைபெற்றுப் போக சரோஜா டி.வி. பார்த்துக் கொண்டிருந்த சீனிவாசனுக்கு அருகே வந்து, அவன் தோளைத் தொட்டாள். 'இன்னிக்கும் வரேளா' என்றாள். சீனிவாசன் 'சரி' என்றான். யட்சனை நினைத்துக் கொண்டான்.

''சீனிவாசரே'' குரல் கேட்டது.

''சொல்லுங்கள் நீலகண்ட சிவரே'' சீனிவாசன் மனதுக்குள் கைக் கூப்பினான்.

''வாசலில் பூ போட்டது மிக அழகாக இருக்கிறது. இன்னொரு விஷயமும் நீங்கள் செய்யலாம்.''

''சொல்லுங்கள்.''

''வீட்டிற்குள் சாம்பிராணி புகை போடுவது நல்லது. தீய சக்திகளுக்கு சாம்பிராணி புகை ஆகவே ஆகாது.''

''அப்படியா. இப்பொழுதே செய்து விடுகிறேன்.''

''இன்று வேண்டாம். நாளை செய்யுங்கள். நாளை வெள்ளிக்கிழமை. வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை இரண்டு நாட்களிலும் வீடு முழுவதும் எல்லா இடங்களிலும் சாம்பிராணி புகை போடுவது நல்லது.'' என்று யட்சன் சொல்ல, யட்சினி அதை ஆமோதித்தாள்.

''சரி இனி நீங்கள் அனுபவித்துக் கொள்ளலாம்.'' சீனிவாசன் சொல்ல, அவர்கள் கை கூப்பினார்கள்.

குழந்தைகள் தூங்கிய பிறகு சீனிவாசன் சமையலறையில் பாத்திரங்கள் அலம்பிக் கொண்டிருந்த மனைவிக்கு பின்பக்கம் போய் அவளை இறுகத் தழுவிக் கொண்டான். விஷமங்கள் செய்தான்.

அவள் ''இதோ முடித்து விட்டு வருகிறேன்'' என்று சொல்ல, ''இருக்கிற பாத்திரங்களைப் பார்த்தா, நீ வர்றதுக்கு அரை மணிநேரம் ஆகும் போலிருக்கு. அலம்பின பாத்திரங்களைக் கொண்டா. நான் துடைச்சு வைக்கறேன்'' என்று

சொன்னான். கழுவிய பாத்திரங்களை ஈரம் போக துடைத்து அலமாரியில் அடுக்கினான். அவள் தரை துடைக்க, நீர் ஊற்றினான். மெல்லிய வாசனை கொண்ட பெனாயிலை அவன் தெளிக்க சமையலறை மணமாயிற்று.

''நான் குளிச்சிடட்டுமா. பெனாயில் நாத்தம் உடம்புல வர்ற மாதிரி இருக்கு.''

''அப்படின்னா நானும்தான் குளிக்கணும்.''

''குளிச்சிடுங்களேன்'' அவள் சொல்ல, அவன் உள்ளே போய் குளிக்க ஆரம்பித்தான். அவள் குழந்தைகள் தூங்கி விட்டார்களா என்று பார்த்து விட்டு பாவாடையோடு அவனுக்கு அருகே வந்தாள். அவனுக்கு முதுகு தேய்த்து விட்டாள். அவள் குளிக்க அவனும் அவளுக்கு முதுகு தேய்த்து விட்டான். இருவரும் குளித்துவிட்டு வெளியே வந்தார்கள். தலை துவட்டிக் கொண்டார்கள். திருநீறிட்டு, குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டார்கள். பவுடரும் வாசனை திரவியங்களும் பூசிக் கொண்டார்கள். பிறகு உட்கார்ந்து நிதானமாகச் சாப்பிட்டார்கள். டி.வி.யில் சீனிவாசன் கால்பந்து போட்டியை சுவாரஸ்யமாய் பார்க்க, சரோஜா அவனுக்கு அருகே உட்கார்ந்து அவனைச் சந்தோஷப்படுத்தினாள். அவர்கள் அந்த ஹாலிலேயே படுத்துக் கூட, யட்சர்கள் களிப்பானார்கள்.

''சீனிவாசரே.''

''சொல்லுங்கள் நீலகண்ட சிவரே?''

''உங்கள் மனைவியின் வைர மூக்குத்தி காணாமல் போய் விட்டதா?''

''ஆமாம். இந்த வீடு வாங்கி வந்ததும் எங்களுக்கு ஏற்பட்ட முதல் இழப்பு அது.''

''இல்லை. அந்த வைர மூக்குத்தி இங்குதான் கிடக்கிறது. ஒரு அலமாரியின் அடிப்பகுதியில் ஒட்டடையோடு ஒட்டடையாக ஒட்டிக் கொண்டிருக்கிறது.''

"அப்படியா இடம் காண்பியுங்கள்."

யட்சன் இடம் காண்பிக்க, அவன் அலமாரியை நகர்த்தி, அந்த வைர மூக்குத்தியை எடுத்தான். "ஆனால் சீனிவாசரே இந்த வைர மூக்குத்தியை விற்று விடுங்கள். இது நல்லதல்ல. தீயசக்தி. உங்களுக்கு வேண்டிய மூதாதையர் உங்களிடம் இது இருக்க வேண்டாம் என்று பறித்து வீசியிருக்கிறார். இப்போதே இதை ஒரு துணியில் சுற்றி, தனியாக உங்களுடையது இல்லை என்பது போல் வைத்து விடுங்கள்."

"அப்படியா இதை விற்பானேன்?"

"ஏன் நீங்களே வைத்துக்கொள்ளப் போகிறீர்களா?"

"விற்றால் வேறொருவருக்கு இந்த தீவினை போகுமல்லவா. எனவே, இதை கடலில் வீசி எறிந்து விடவா."

"வேண்டாம், இதற்கு ஒரு மதிப்பிருக்கிறது. எனவே, யாருக்கும் இது வேண்டாம் என்று நீங்கள் தீர்மானித்தால், இதை ஒரு மஞ்சள் துணியில் சுற்றி வேங்கடேச பெருமாளுக்கென்று வைத்து விடுங்கள். அப்போது இதன் சக்தியெல்லாம் குறைந்து அமைதியாகி விடும். எந்த தொந்தரவும் இல்லாது போகும்."

"நல்லது. அவ்விதமே செய்கிறேன்."

மனைவியிடம் சீனிவாசன் வைர மூக்குத்தியைக் காட்டினான். அவள், "இப்பொழுதே போட்டுக் கொள்கிறேன்" என்றாள்.

"இல்லை. இது தொலைந்தது தொலைந்ததாகவே இருக்கட்டும். இந்த வைர மூக்குத்தி நல்லதாக எனக்குப் படவில்லை. இதைத் தொடுகிற போது எனக்கு கெடுதலான எண்ணங்கள் வருகின்றன. எனவே, இந்த வைர மூக்குத்தியை வேங்கடேச பெருமாளுக்குக் கொடுத்து விடுவோம்."

"கிட்டதட்ட நாலாயிரம் ரூபாய் பெறுமானமாயிற்றே."

"அதனாலென்ன, நாம் கொடுத்தால் நமக்கு ஏதேனும் அவர் கொடுக்க மாட்டாரா?"

அவன் மஞ்சள் துணியில் அதை வைக்கச் சொல்லி, அவளையே முடிச்சுப் போடச் சொல்லி பூஜை அலமாரியில் வைக்க, அந்த தீயசக்தி சட்டென்று தன் தீய சக்தியைக் குறைத்துக் கொள்கிறது.

வெள்ளிக்கிழமை சாம்பிராணி புகை வீடு முழுவதும் போடப்பட்டது. ''மணியடியுங்கள் சீனிவாசரே. தூபமும் மணியும் தீயசக்தியை விரட்டுகிற விஷயங்கள். தூபம் காட்டி மணி அடித்த படி வாசல்படிக்குப் போங்கள். சமையலறைக்குப் போங்கள். கொல்லைப்புறம் போங்கள். படுக்கையறை, வீட்டின் மற்ற எல்லா இடங்களுக்கும் போங்கள். வீட்டின் எல்லா இடத்திலும் மணி ஒலியும் வாசனையும் இருக்கட்டும்.''

யட்சன் சொன்னபடி சீனிவாசன் செய்ய, அந்த வீடு இன்னும் பளீரென்று ஆயிற்று.

''சீனிவாசரே, உங்கள் குடல் பகுதியில் மெல்லிய புண்கள் இருக்கின்றன. அவை பிற்பாடு உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடியவை. நான் சொல்கிற கீரைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். கீரைகள் அந்தக் குறைகளை வெகு விரைவிலேயே நீக்கிவிடும். நீங்கள் முழு ஆரோக்கியம் பெற்றவராய் நெடுநாள் வாழ்வீர்கள்.

சீனிவாசரே, உங்கள் மனைவி நுரையீரலைச் சரியாகப் பயன்படுத்தாததால் அவளின் நுரையீரலின் நடுப்பகுதிகள் நீர்கோர்த்து கெட்டிப்பட்டு கிடக்கின்றன. அவள் இறக்கும் தருவாயில் இது மிகுந்த வேதனையை அவளுக்குக் கொடுக்கக்கூடும். எனவே, இப்போதிலிருந்து தினமும் துளசிச்சாறு எடுக்கச் சொல்லுங்கள். வெந்நீரிலேயே குளிக்கச் சொல்லுங்கள். குளுமையான பதார்த்தங்களை ஒதுக்கச் சொல்லுங்கள். அவள் மூச்சுப் பயிற்சி செய்வது நல்லது. மூச்சுப் பயிற்சி செய்வதற்குண்டான மனநிலையை நாங்கள் மெல்ல மெல்ல அவளுக்குத் தருகிறோம். நீங்களும் மூச்சுப் பயிற்சி செய்யும்படி அவளை உற்சாகப்படுத்துங்கள். குழந்தைகளுக்குத்

தானாகவே இந்தப் பயிற்சி வந்துவிடும். உங்கள் குடும்பம் முழு ஆரோக்கியத்துடன் திகழும்'' நீலகண்ட சிவன் சொல்ல, சீனிவாசன் கை கூப்பினான்.

''சீனிவாசா, நீ என்ன செண்ட் யூஸ் பண்றே?''

''ஒரு செண்ட்டும் யூஸ் பண்றதில்லையே.''

''பாடி ஸ்ப்ரே.''

''அப்படி ஒண்ணு வாங்கினதே இல்லையே.''

''உன் உடம்புலேர்ந்து ஒரு வாசனை வருதேப்பா.''

''இன்னிக்கு சனிக்கிழமை. வீடு முழுக்க சாம்பிராணி போட்டோம். ஒரு வேளை அந்த வாசனை என் மேலேயும் இருக்கலாம்.''

''சாம்பிராணி வாசனை மாதிரி இல்லை, வேற ஏதோ நல்ல வாசனையா இருக்கு. உட்காருப்பா, இங்க கொஞ்சம் வேலை இருக்கு. எனக்கு உதவி செய்.''

மேனேஜர் அவனைத் தன்னோடு இருத்திக் கொண்டார். ரகசியமான ஒரு வேலையை அவனோடு பகிர்ந்து கொண்டார். அலுவலகத்தில் சீனிவாசனின் மதிப்பு உயர்ந்தது. சீனிவாசன் யட்சர்களுக்கு நன்றி சொன்னான்.

வீட்டிலிருந்த பூச்சிகளும், பூரான்களும் வீட்டை விட்டு விலகின. பெண்களின் தலையிலிருந்த பேன்கள் அறவே அகன்றன. குழந்தைகள் ஆரோக்கியமானார்கள். அவர்களுடைய பதட்டமான குறும்புத் தனங்கள் குறைந்தன. பறவைகளை, வானத்தை, மேகத்தை, மரங்களின் அசைவுகளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள்.

சீனிவாசன் ஏழாவது முறை மனைவியோடு கூடும் போது அவர்கள் வெகு நெருக்கமாய் நின்றார்கள். முழுவதுமாக அந்தக் கூடலை அனுபவித்தார்கள். சீனிவாசன் அவளைக் கொண் டாடினான். அவள் விருப்பமென்ன என்று கேட்டு அவ்வித

மாகவே இயங்கினான். அவள் சந்தோஷமானாள். இப்படி புருஷன் உண்டா என்று கட்டித் தழுவிக் கொண்டாள். கண்களில் நீர் வழிய அவனை அணைத்துக் கொண்டாள்.

யட்சினி அசையாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். யட்சன், யட்சினியை அணைத்துக் கொண்டிருந்தான்.

கூடல் முடிந்து அவர்கள் பிரிந்ததும் யட்சனும், யட்சினியும் சீனிவாசனையும், அவர்கள் மனைவியையும் ஆசீர்வதித்தார்கள்.

''ஏழு முறையில் இந்த முறைதான் உன்னதமாய் அமைந்தது. இது எங்களுக்குப் போதும். இன்னும் சில நாட்கள் நாங்கள் பூமியில் இருக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் கேட்டதைப் புரிந்து கொண்டு, அதே விதமாக மனைவியை நேசித்து, அவளையும் சந்தோஷப்படுத்தி நீங்களும் சந்தோஷமானீர்களே. இது மிக அற்புதமான விஷயம். நீங்கள் இதைப் புரிந்துகொண்டு செய்ததால், நாங்கள் இதை நன்கு அனுபவிக்க முடிந்தது. உங்களுக்கு என் நன்றியாய் ஒன்றுதர விரும்புகிறேன் சீனிவாசரே'' யட்சினி முதன்முறையாய் அவனிடம் பேசினாள். அவள் நெற்றியில் விரல் வைத்தாள்.

''என் புருஷனைவிட என் பலம் அதிகம். என் புருஷன் தற்கொலை செய்து கொண்டதால் அவருக்கு என் அளவிற்கு பலமில்லை. ஆனால், நான் கடவுளை நினைத்தபடியே மெல்ல மெல்ல இறந்ததால் என் ஆன்ம பலம், மிக கெட்டிப் பட்டிருக்கிறது. எனவே என் பலம் மொத்தமும் சேர்த்து உங்கள் நெற்றிக்குள் செலுத்துகிறேன். இதே உத்திஷ்ட மஹா கணபதி மந்திரத்தை இடையறாது பலநாட்கள் செய்து வர வேண்டும். நீங்கள் உங்கள் வேலையைக் கூட விட்டு விடலாம்.

முழு நேரமும் ஜபம் செய்யலாம். நீங்கள் யாரையேனும் தடவி, நோய் நீங்கு என்று சொன்னால் நோய் நீங்கும். நல்லது நடக்கும் என்று சொன்னால் நல்லது நடக்கும். வெற்றி

கிடைக்கும் என்று சொன்னால் அந்த வாக்கு பலிக்கும். உங்கள் மந்திர சக்தி உங்களை முற்றிலும் சுற்றிக் கொண்டு உங்கள் வாக்கை, மனதை வழி நடத்தும். உங்கள் மந்திரசக்தி உங்களை அரணாகப் பாதுகாத்து, உங்களை இன்னும் அதிக செல்வந்த னாய், அதிக வலிவுள்ளவனாய், அதிகம் தெளிவுள்ளவனாய் உங்களைச் சேவிக்கும். இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்தக் கூலி உத்தியோகத்தை உதறி நிர்வாக உத்தியோகத்தை விடுவித்து விட்டு தனியே மந்திரஜபம் செய்வது மட்டும் உங்கள் வேலையாக தைரியமாக உட்கார்ந்து கொள்ளலாம். உங்கள் மனைவி கலவரப்பட்டால், நான் பல்வேறு விதமாய் அவளை சமாதானம் செய்து விடுவேன்.

முதலில் மூன்று மாதம் விடுப்பிலே இருந்து ஜபம் செய்யுங்கள். அது உங்கள் வாழ்க்கையைச் சீராக்கிவிடும். அந்த மூன்று மாதத்தில் உங்கள் மனைவியின் மனம் திசைமாறும். மந்திர ஜபம் செய்து ஆசீர்வதிப்பதிலேயே நல்ல வருமானம் வரும் என்பதை அவள் தெரிந்து கொள்வாள். நிம்மதியாவாள்.

இந்த வீடு பலபேர் வருகையால் நிரம்பப் போகிறது. நீங்கள் ஊருக்கு வெளியே உள்ள இடத்தில் நிலம் வாங்கி நல்ல ஆஸ்ரமம் எழுப்பி நல்லபடியாய் வாழ்வீர்கள். எந்நேரம் நீங்கள் எங்களை அழைத்தாலும் நாங்கள் வருவோம். எப்படி எங்களுக்கு நீங்கள் எந்தப் பிரதிபலனும் பாராது உதவி செய்தீர்களோ, அதே போல மற்றவர்களுக்கும் உதவி செய்யுங்கள்.

பிரதிபலன் பாராது நீங்கள் உதவி செய்யச் செய்ய உங்களுக்கு வேண்டிய அனைத்தும் நீங்கள் கேட்பதைவிட அதிகமாகவே உங்களுக்குக் கிடைக்கும். இது எல்லாம் வல்ல இறை சக்தியின் மீது ஆணை. இதை நீங்கள் உடனடியாக சோதித்துப் பார்த்துக் கொள்ளலாம். நாங்கள் விடை பெறுகிறோம். ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் நீங்கள் செய்கிற பூஜையில் நாங்கள் தவறாது கலந்து கொள்கிறோம்.'' அவர்கள் வணங்கினார்கள். வேறு இடம் தேடிப்போனார்கள்.

சீனிவாசன் திகைத்து நின்றான். காலையில் எழுந்து குளித்து விட்டு கபாலி கோயிலுக்குப் போனான். கோயிலைச் சுற்றி வரும் போது அவன் மானேஜர் தூணைப் பிடித்து நின்று கெண்டிருந்தார். அவன் போய் ஆறுதலாய் முதுகு தொட்டான். ''என்ன?'' என்று கேட்டான்.

''நெஞ்சு வலிக்குதுய்யா. என்னன்னு தெரியலை. பயமா இருக்கு. ராத்திரி இருந்தது. காத்தால எழுந்த பிறகு இல்லை. இப்ப கோயிலைச் சுத்தி வரும் போது நெஞ்சு ரொம்ப அழுத்தமா வலிக்குது. கண்ணு சொருகுகிறது. பயமா இருக்கு சீனிவாசா. யாருமே இல்லைன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். நல்ல வேளை நீ வந்துட்டே. என்னை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிகிட்டு போறியா?''

சீனிவாசன் அவர் நெஞ்சில் கை வைத்தான். துடிப்புகள் வித்தியாசமாக இருந்தன. இன்னும் அழுத்தி கை வைத்தான். உள்ளே ஏதோ ஒரு பகுதி தவறாக இருப்பது தெரிந்தது. அவன் யட்சனை நினைத்தான். யட்சினியை நினைத்தான். அவர்கள் அருகே வந்தார்கள்.

''தெருவிலே ஒருவர் காரில் வருகிறார். நாங்கள் அவரை திசைமாற்றி, இந்தத் திசையில் அனுப்புகிறோம். கை நீட்டி, காரை நிறுத்து, இவரை அந்தக் காரில் ஏற்றி மருத்துவமனைக்குக் கொண்டு போ. உன்னைத் தொட்டதால் இவர் பிழைத்துக் கொண்டார். ஆனால், இவர் வேதனைப்பட வேண்டிய நேரம் என்பதால், இவருக்கு அறுவை சிகிச்சை நடத்தப்படும். எனவே கவலைப்படாமல், பதட்டப்படாமல் திறமையுடன் இயங்கி இவரை நாங்கள் சொல்கிற மருத்துவமனைக்கு எடுத்துக் கொண்டு போ'' யட்சினி சொன்னாள்.

அவன் அவரை உட்கார வைத்து விட்டு வாசலுக்கு வந்தான். எதிரே வந்த காரை மறித்து கை நீட்டினான். ஒரு வியாபாரி வண்டியை நிறுத்தினார். சீனிவாசன் விஷயம் சொல்ல,

மானேஜரை அள்ளிப் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினார்கள்.

யட்சனும், யட்சினியும் கூடவே வருவது தெரிந்தது. வியாபாரி செல்போன் மூலமாகத் தொடர்பு கொண்டு அந்த ஆஸ்பத்திரி வாசலில் ஸ்ட்ரெச்சர் வைக்கச் சொன்னார். மருத்துவமனையை அடைந்ததும், வாசலிலுள்ள ஸ்ட்ரெச்சரில் அவரைப் படுக்க வைத்து முகத்தில் ஆக்ஸிஜன் பொருத்தி உடனடியாய் அவசர சிகிச்சை பிரிவுக்கு எடுத்துப் போனார்கள். டாக்டர்கள் சூழ்ந்து கொண்டு அவருக்கு சிகிச்சையைத் துவங்கினார்கள். முதலுதவி சரியான நேரத்தில் கிடைத்ததால் அவர் ஆழ்ந்து தூங்கத் தொடங்கினார். ஆறாம் நாள் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தார்.

''ஒரு அடைப்பு இருந்தது, பலூன்ல எடுத்துட்டா. மறுபடியும் அடைப்பு வரலாம். அதனால ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்றா. என்னோட வாழ்க்கை முறையே மாறப் போறது. குடிச்சிண்டிருந்தேன். உரக்க சத்தம் போட்டுட் டிருந்தேன். எல்லாம் விட்டுடப் போறேன். என்னைக் காப்பாத்தினது தெய்வம் இல்ல, சீனிவாசன். உனக்கு நான் என்ன உதவி பண்ணனும்னு சொல்லு. காசா நகையா வேணும்னாலும் கேளு தரேன்.''

அவரை அவன் வீட்டுக்கு வரவழைத்திருந்தான்.

''எனக்கு மூணு மாசம் லீவு வேணும் சார். அப்புறம் வேலையை விடப் போறேன் சார். அப்படி விட்டுட்டா எனக்குச் சேரவேண்டிய எல்லா சலுகைகளும் நீங்க வாங்கித் தரணும் சார்.''

''வேலையை விட்டுட்டு என்ன பண்ணப் போறே சீனிவாசா?''

''நிறைய மந்திர ஜபம் செய்யப் போறேன் சார். உங்களுக்கு உதவி பண்ணா மாதிரி, மத்தவாளுக்கு உதவி பண்ணப் போறேன் சார்.''

''வருமானம் வருமா?''

''நீங்கதான் சொன்னேளே. காசா தரட்டுமா பணமா தரட்டுமான்னு. நூத்தியோரு ரூபா கொடுங்க சார். அது போதும். ஒரே ஒரு வெள்ளிக் காசும் அதில் வெச்சு கொடுங்க. நூத்தி ஒண்ணு எனக்கு. வெள்ளிக்காசு என் பொண்டாட்டிக்கு. எங்க ரெண்டு பேருக்கும், வேட்டி துணிமணியும், புடவையும் எடுத்துக் கொடுங்க சார். அந்த மரியாதை போதும். உங்ககிட்டேயிருந்து ஆரம்பிக்கறேன் சார். நீங்கதான் எனக்குத் தெரிஞ்ச முதல் அன்பர். உங்களை குணமாக்கி உங்ககிட்டேயிருந்து நான் சின்ன உதவியை வாங்கியிருக்கேன். அதே மாதிரி மத்தவாளும் எனக்கு பண்ணுவா சார்.''

அவன் சொன்னது உடனடியாக நிறைவேற்றப்பட்டது. அவன் முயற்சிக்கு சகல உதவிகளும் செய்வதாய் மேனேஜர் சொல்ல, அவன் சரோஜாவிடம் விஷயம் சொன்னான்.

''என்ன தைரியத்துலே இப்படி நடந்துண்டேள்?'' சரோஜா இடுப்பில் கை வைத்து அவனை மிரட்டினாள்.

''யட்சினி நீ இருக்க என்ன பயம்'' சீனிவாசன் சரோஜாவைப் பார்த்துச் சொன்னான்.

சரோஜாவிற்குப் பின்னால் யட்சினி சிரித்துக் கொண் டிருந்தாள். யட்சினிக்குப் பின்னால் யட்சன் சிரித்துக் கொண்டிருந்தான்.

''நான் என்ன யட்சினியா, உங்களைப் பாடா படுத்துறேனா?''

''சேச்சே யட்சினி பாடாபடுத்துவாங்கன்னு யார் சொன்னா. யட்சினிகள் இனிமையானவர்கள். நீ என் இனிய யட்சினி'' அவன் எட்டி மனைவியின் மடியைப் பிடித்து இழுத்தான்.

அவள் உள்ளம் குளிர்ந்தாள். ''நாம ஜெயிப்போமா. வேலையை விட்டுட்டா காசு பணம் வருமா'' அவனைக் கட்டிக் கொண்டு கேட்டாள்.

''நா இருக்கறபோது எதுக்கு கவலைப்படற. உனக்கு லேசா கர்புர்ன்னு இழுக்கறதில்ல, தடவி விடறேன். அந்த வேதனை இருக்கான்னு பாரு'' அவள் மார்புகளையும் விலா பகுதிகளையும் நீவிவிட்டான். ஐந்து நிமிடம் அவளை ஒரு இடத்தில் அமரச் செய்தான். ''இப்போது இருக்கிறதா'' என்று கேட்டான்.

அவள் தன்னை உற்றுப் பார்த்தாள். ''இல்லை'' என்று சொன்னாள். ''எப்படி முடிந்தது?'' என்று உரக்கக் கேட்டாள்.

''யட்சினி நீ இருக்க எனக்கு என்ன கொறைச்சல். உன்ன மாதிரி பொண்டாட்டி எனக்கு கெடைக்கறவரைக்கும் நான் எது பண்ணாலும் நல்லாத்தான் இருக்கும். சரியாதான் முடியும். நீ இருக்கிற தைரியத்துனாலதான் நான் வேலையை விடறேன்.''

அவள் சந்தோஷமாய் எழுந்து புருஷனின் காலில் விழுந்து வணங்கி, ''நான் இருக்கிறேன், நான் இருக்கிறேன்'' என்று கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

அவன் அவளை அணைத்துக் கொண்டான். ''நீ என்னை நமஸ்காரம் பண்ணா மாதிரி உன்னையும் நான் நமஸ்காரம் பண்ணனும் உட்கார்'' அவளை கிழக்கு பார்த்து உட்காரவைத்து நீண்ட நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வ்ணங்கினான்.

''ஏய்... என்னைப் போய் 'நீ யட்சினி' என்று சொன்னாய்.''

அவன் மனைவிக்குப் பின்னால் யட்சினி சிரித்துக் கொண்டிருந்தாள்.

யட்சினிக்குப் பின்னால் யட்சன் நின்று கொண்டிருந்தான்.

''நான் இனிய யட்சினியா.''

''ஆமாம் இனிய யட்சினி.''

''என்ன நீங்க யட்சினி யட்சினின்னு சொல்ற போதெல்லாமே. உடம்பு முழுக்க ஒரு பரபரப்பா இருந்தது. உங்களோட கட்டி கொஞ்சி சந்தோஷமாயிருக்கணும்னு தோணறது.''

''இரேன்'' அவன் அவளையே உற்றுப் பார்த்தான். அவள் அருகே வந்து அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள்.

''கூடல் பண்ணனும்னுகூட அவசியமில்லண்ணா. பகல்வேளையில் மனசு நெனச்சபோதெல்லாம், இப்படி புருஷன கொஞ்சிண்டேயிருந்தாக் கூட பரம திருப்தியா இருக்கு. உள்ள நெறைஞ்சு வழியறது. மனசுல ஒரு திருப்தியிருந்துண்டே இருக்கு. இது எதனால?'' அவள் ஆச்சரியமாகக் கேட்டாள்.

''நம்மள சுத்தி எப்பவும் நல்லவாயிருக்கிறதால, நமக்கு சித்தியும், சௌகரியமும் தொடர்ந்து இருக்கும்.'' சீனிவாசன் பதில் சொன்னான்.

அந்தப் பதிலின் சூட்சுமம் அவனுக்கு மட்டும் புரிந்தது. யாரோ வாசற்கதவைத் தட்டினார்கள்.

''உங்க ஆபீஸ் மானேஜர் சொன்னார். எங்க அப்பாவுக்கு உடம்பு முடியல. ரொம்ப இருமறார். நெஞ்செல்லாம் எரியுதுன்னு கத்தறார். நீங்க எங்க வீட்டுக்கு வரமுடியுமா. நீங்க தடவினா சரியாயிடுமாமே. நீங்க தலையில கை வச்சா சூடு கொறைஞ்சுடு மாமே. அவர் ரொம்ப சொல்றார். நா கார் எடுத்துட்டு வந்திருக்கேன். சித்த வரேளா'' அவன் கைகட்டி பேசினான்.

''சரோஜா வா... போய்ட்டு வந்துரலாம்'' சீனிவாசன் சரோஜா நோக்கித் திரும்பினான். சரோஜா அவனை நோக்கித் திரும்பினாள்.

அவர்கள் வாழ்க்கை வேறு திசை நோக்கித் திரும்பியது.

முற்றும்

# பூந்தோட்டம்

## 1

வெளியே மழை அடித்துப் பெய்து கொண்டிருந்தது. நடுநடுவில் இடியின் முனகல்களும் கேட்டுக் கொண்டிருந்தன. வெகு தூரத்தில் எங்கேயோ மின்னியதால் அதன் லேசான வெளிச்சம்.

வானத்தை உற்றுக் கவனிக்கும்போது தெரிந்தது. தரை நான்கு நாள் மழையில் குளிர்ந்து போய், இதற்கு மேலும் நீர் பிடிக்க முடியாமல் சேறாய் திணறிக் கொண்டிருந்தது. மரங்கள், நன்கு பாலருந்தித் தூங்கும் குழந்தைகள் போல அசையாது கிடந்தன. புற்கள் மிகவும் முயற்சி செய்து தேங்கிய தண்ணீருக்கு மேல் தலையை நீட்டி நீருக்குச் சமமாய் நின்று வெளிச்சத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தன.

மழை நின்றால் மிகவும் சந்தோஷமாக இருக்கும். ஆனால் மழை நிற்குமா என்று தெரியவில்லை. வானத்தில் மேகங்கள் அடர்ந்திருப்பதைப் பார்த்தால் இன்று முழுவதும் மழை விடாது பெய்யும் என்றுதான் தோன்றுகிறது. அந்தப் பகுதியில் இப்படி ஒரு மழை அபூர்வம். ஆனால் இந்த வருடம் மழை அதிகம் பெய்யும் என்றும், சமுத்திரத்தில் கால் பங்கும், மலையகத்தில் கால் பங்கும், நாடு நகரம் வயல்வெளிகளில் அரைப் பங்கும் பெய்யுமென்று பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டிருந்தது.

இந்திரனுடைய நேரடிப் பார்வையில் மேகங்கள் பூமியைத் தாக்கும் என்றும் ஒரு குறிப்பு இருந்தது. இமய மலையிலிருந்து குமரிமுனை வரை மிக அதிகமான மழையும், மழையால் சேதமும் இருக்கும் என்று சொல்லப்பட்டிருந்தது. மலைகளில் நிலச்சரிவும் ஏற்படும் என்றும் சொல்லப்பட்டிருந்தது.

திண்ணையில் உட்கார்ந்தபடி பிரபாகரன் அந்தத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். பூமி சரளைக்கல் மிகுந்து அந்தப் பிரதேசத்தில் காணப்பட்டது. சற்று செம்மண் அதிகமாக இருந்தது. செம்மண் இருந்த போதிலும் மழைநீர் சிகப்பாக நகராமல் பழுப்பாக மிதந்து நகர்ந்தது. மழை பெய்து, பெய்து செம்மண்ணின் நிறம் முழுவதும் மாற்றப்பட்டு, இப்பொழுது பழுப்பு நிறமே மண்ணின் நிறமாகப் போய்விட்டது. ஆனால் சரளைக்கற்கள் சிகப்பாக இருந்தன. அந்தத் தோட்டத்து நீர் மட்டுமல்லாது பிரபாகரன் வரும் வழியிலே உள்ள குளங்களைக் கவனித்தபோது அவைகளிலும் நீர் பழுப்பாகவே இருந்தன. நீரை விலக்கிப் பார்த்தாலும் அடியிலிருந்து பழுப்பு மண் மேலே கிளம்பியது. ஆனால் ஜனங்கள் நீர்மொண்டு கொண்டுபோய் குளித்தபடியும், துணிகள் துவைத்தபடியும் இருந்தார்கள்.

இந்த நீரில் எப்படி குளிக்கிறீர்கள் என்று கேட்டபோது, ‘இந்தப் பக்கத்தில் எல்லா குளங்களிலும் இப்படி பழுப்பு ஜலம்தான் இருக்கும். இதற்கு பால் குளம் என்று பெயர்’ என்று பதில் சொன்னார்கள்.

பிரபாகரன் சிரித்துக் கொண்டான். மண்ணும் நீரும் கலந்து சேறாக இருப்பதை மக்கள் ஏற்றுக்கொண்டு வேறு வழியில்லாமல் உபயோகப்படுத்தி, ஏன் இதைப் போய் உபயோகப்படுத்துகிறீர்கள் என்று கேட்டால், இது பால் என்று சொல்லும் பக்குவத்துக்கு வந்துவிட்டதைப் புரிந்து கொண்டான்.

இந்தக் குளத்தை விட்டால், எங்களுக்கு வேறு கதியில்லை. வேறு நீரில்லை என்று சொல்வதற்கு அவர்களுக்கு

மனமில்லை. இது பால் குளம். பால் குளத்துக்கு அருகே இருக்கும் விநாயகர் பால்குள வினாயகர் என்று சேறை மக்கள் பாலாக்கிவிட்டார்கள்.

ஊரில் பல பகுதிகளில் கருவேலம் செடிகள்தான் அதிகம் முளைத்திருந்தன. பனை மரங்களும் பயிரிடப் பட்டிருந்தன. பூச்செடிகள் சுமாராக வளர்ந்திருந்தன. மற்றபடிக்கு வயல் என்றும், நிலம் என்றும் எதுவுமில்லை. பால் குளத்துக்கு அருகில் ஆழ்துளைக் கிணறு போட்டு நீரேற்றி பழத்தோட்டம் ஒன்றிருந்தது. ஆனால் எந்த கொய்யாப் பழங்களும் ஒரு நெல்லிக்காயின் அளவுக்கு மேல் வளரவில்லை. ருசியான ருசி என்று அந்த கொய்யாப் பழங்களை மக்கள் பாராட்டினார்கள்.

இந்தப் பகுதி மக்கள் இயற்கையின் வஞ்சனையால் வறுமையில் சிக்கித் தவித்து, அந்த வறுமையை செம்மையாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

சேற்று நீரைப் பால்குளம் என்றும், சிறிய கொய்யாவை மிகுந்த ருசி என்றும் சமாதானமாய் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். இந்த ஊர் வேளாளர்கள் ஊர் அல்ல. ஆனால் தன வைசியர்கள் அதிகமிருக்கிற ஊர். ஊருக்குள் இறங்கி காம்பவுண்ட் சுவரே இல்லாத ரயில்வே ஸ்டேஷனைத் தாண்டி மழை பெய்த ஈரத்தில் தூறல்களுக்கு நடுவே பிரபாகரன் நடந்து கொண்டிருந்தபோது, ஒரு நாற்பது வயது பெண்மணியும் பதினைந்து வயது சிறுவனும் கருவேலஞ்செடியைக் கஷ்டப்பட்டு வெட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கையிலிருந்த வீச்சரிவாள் முனை மழுங்கிப் போயிருந்தது. அவர்கள் வெட்டும் பலமில்லாமல் இருந்தது. ஆனால் அந்தக் கருவேலமரம் மிக உறுதியாய் ஒவ்வொரு வெட்டையும் தாண்டி ஆடிக்கொண்டிருந்தது. நாற்பது ஐம்பது வெட்டுகள் இல்லாமல் அந்த மரத்தைச் சாய்க்க முடியுமென்று தோன்றவில்லை. அரிவாளைத் தீட்டிக் கொள்ளலாம். அல்லது உடம்பில் வலுவேறக் காத்திருந்து பிறகு ஓங்கி சரியானபடி வெட்டலாம்.

ஆனால் அவர்கள் பிரக்ஞை இல்லாமல் அதே அரிவாளால் மாறி மாறி வெட்டிக் கொண்டிருந்தார்கள். வெட்டு ஒரே இடத்தில் விழாமல் பல இடங்களில் மரத்தைச் சிதைத்துக் கொண்டிருந்தது.

''நான் வெட்டட்டுமா?'' என்று பிரபாகரன் ஆவல் தாங்காமல் போய் கேட்டான்.

அவர்கள் அவனை வெறித்துப் பார்த்தார்கள்.

''நீ ஏன் தேவையில்லாம தலையிடற'' என்பது போல் அந்தப் பார்வை இருந்தது.

''கொடுங்க. நான் வெட்றேன்.'' தோளிலிருந்த பையை ஒரு கருங்கல் பாறை மீது வைத்துவிட்டு, அவர்களிடம் அரிவாளை வாங்கி அந்தக் கருங்கல்லில் அழுத்தித் தீட்டினான்.

''தேஞ்சுறப் போவுது'' அந்தப் பெண்மணி அதட்டலாய் குரல் கொடுத்தாள்.

அரிவாள் தேயாமல் மரத்தை வெட்டவேண்டுமென்பது அவர்கள் குறிக்கோளாய் இருந்தது.

தேய்ப்பதை நிறுத்திவிட்டு பிரபாகரன் அந்த மரத்தை சரியான இடம் பார்த்து சாய்வான நிலையில் ஆறேழு முறை வெட்டினான்.

மரம் பாதி வெட்டுப்பட்டது. தள்ள முறிந்து விழுந்தது.

''எதுக்கு இந்த மரத்தை வெட்றீங்க?'' வெட்டிய பிறகு பிரபாகரன் அவர்களைக் கேட்டான்.

''சும்மாத்தான்'' அந்தப் பெண்மணி பதில் சொன்னாள்.

பிரபாகரனுக்கு அந்தப் பதில் புரியவில்லை. சும்மா ஒரு மரத்தை வெட்டுவானேன். அவன் அந்தப் பெண்மணியைக் கூர்மையாகப் பார்த்தான்.

அந்தப் பெண்மணி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அந்தப் பையனும் பிரபாகரனிடமிருந்து அரிவாளை வாங்கி சிறிய கிளைகளை செதுக்கத் துவங்கினான்.

இது தேவையில்லாத கேள்வி. இதுக்கு தேவையில்லாத பதில் ஏன் என்ற அலட்சியம் அவர்களிடமிருந்தது.

ஆனால் பிரபாகரன் விடுவதாயில்லை. ''என்னாத்துக்கு இந்த மரம் உபயோகம்?'' என்று மறுபடி கேட்டான்.

''எதுனா உபயோகம் இருக்கும். அதான் வெட்றோம்.''

இந்த பதிலும் வேடிக்கையாக இருந்தது.

''என்ன உபயோகம்னு தெரியாதயே வெட்றீங்களா.''

''அட, எங்களுக்கு வேற ஒண்ணும் வேலையில்ல. இந்த மரம் வெட்டி, கழிச்சு, கட்டா கொண்டு போய் வச்சா யார்னா கேட்டாலும் கேப்பாங்க. வித்தாலும் விக்கலாம். விக்கலையா காயப்போட்டு நல்லா காஞ்ச பெறகு வூட்டுக்கு வெறகா வச்சுக்கலாம். அவ்ளதான்.'' அந்தப் பெண்மணி அலுப்போடு பதில் சொன்னாள்.

பிரபாகரனுக்கு அவர்கள் நிலைமை புரிந்தது. அன்றைக்கு அவர்கள் செய்வதற்கு வேலை எதுவுமில்லை. எனவே அவர்களாய் இந்த மரம் வெட்டும் வேலையைத் தேடிக் கொண்டார்கள். கட்டுக் கட்டி வீட்டு வாசலில் வைத்து யாரேனும் விறகு வேண்டுமென்று கேட்டால், அப்போது இது விலையாகும். இல்லாவிட்டால் வீட்டுக்கு உபயோகமாகும். எனவே இது வெட்டப்படுகிறது என்று புரிந்து கொண்டான்.

இவர்களுக்கு சாப்பாட்டுக்கு என்ன வழி என்று யோசித்தான். கேட்டால் கோபித்துக் கொள்வார்களோ என்று பயந்தான்.

''இங்கே டீக்கடை எதனா இருக்குங்களா?'' என்று கேட்டான்.

அந்தப் பையன் சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்தான். ''ரொம்ப தூரம் போகணும்''

''வந்து வழி காட்றியா'' அந்தப் பையனை அவன் ஆவலோடு அழைத்தான்.

அந்தப் பையன் தாயாரைப் பார்த்தான்.

''நீ போய்ட்டு வாடா'' அந்தப் பெண்மணி அவனை மட்டும் அனுமதித்தாள். தான் வருவதற்கில்லை என்று சொன்னாள்.

''இங்க இருந்து என்ன பண்ணப் போறாங்க. இவங்க உன் அம்மா தானே. இவங்களையும் கூட்டிக்கிட்டு வாயேன்'' பிரபாகரன் சொன்னான்.

அவர்கள் பேசாதிருந்தார்கள்.

''ஒருவேளை இது கட்டு கட்டி தலையிலே தூக்கிக்கிட்டு வந்தீங்கன்னா, டீக்கடைக்காரன் கூட கேப்பான் இல்ல'' என்று பிரபாகரன் சொல்ல, அவர்கள் மறுபடியும் அவநம்பிக்கையோடு அவனைப் பார்த்தார்கள்.

அந்தப் பையன் வேகமாக கிளைகளை வெட்டத் துவங்கினான். அடிமரம் நான்கு அங்குல அகலம் இருந்தது. அரை அங்குலமும், ஒரு அங்குலம் விட்டத்தில் இருந்தன. மடமடவென்று கிளைகளைக் கழித்து சிறுதுண்டுகளாக்கி, அவன் இடுப்பில் வைத்திருந்த கயிறால் இறுக்கிக் கட்ட பத்து நிமிடங்களே ஆயின.

அவன் டீக்கடை வருவதற்காகவே வேகமாய் வேலை செய்தான் என்று பிரபாகரனுக்குத் தோன்றியது. அவன் சுமையைத் தூக்க முற்பட அந்தப் பையனைத் தடுத்து, அந்தத் தாய் விறகு தூக்கிக்கொண்டாள். பையன் முன்னே நடக்க, பிரபாகரன் பின்னே நடக்க, அவள் சற்று இடைவெளிவிட்டு பிரபாகரனுக்கும் அவளுக்கும் சம்பந்தமில்லை என்ற அமைதி ஏற்பட்டவுடன் பின்தொடர்ந்தாள். அந்த இடைவெளி அவர்களைப் பிரித்துத்தான் காட்டுமே தவிர, எந்தச் சம்பந்தமும் தராது.

அரைகிலோ மீட்டர் தாண்டி ஒரு சிறிய நகரம் ஆரம்பித்தது. நகரத்தின் ஆரம்பத்தில் ஒரு டீக்கடை இருந்தது.

டீக்கடைக்குள் பலகாரங்கள் வைக்கப்பட்டிருந்தன. கண்ணாடி ஜாடிகளுக்குள் பிஸ்கெட்டுகள் இருந்தன. வெளி பெஞ்ச் ஈரமாக இருந்ததால், உள்ளே புகையில் இருமிக்கொண்டு சிலர் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் மட்டும் சுவரோரம் நின்று டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர்களைப் பார்த்தவுடன் கைகளைப் பின்பக்க லுங்கியில் தடவிகொண்டு என்ன என்பதுபோல் டீக்கடைக்காரர் பார்த்தார்.

''மூணு டீ'' என்று பிரபாகரன் உரக்கச் சொல்ல,

''ஐயே. எனக்கு டீல்லாம் வேணாம்'' என்று பையன் மறுதலித்தான். ஆனால், அந்த இடத்தைவிட்டு போகாமல் இருந்தான்.

''இவ்வளவு தூரம் வந்துவிட்டு சாப்பிடலைன்னா எப்படி? உங்கம்மாவையும் கூப்பிடு'' பிரபாகரன் குரல் கொடுக்க, அவன் தொலைவிலே வரும் அம்மாவைப் பார்த்தான்.

தனக்கும் சேர்த்து டீ சொல்வார்கள் என்று அந்தப் பெண்மணி நினைத்திருக்கக்கூடும். அவள் தலைச்சுமையை டீக்கடைக்கு வெகுதொலைவே இறக்கி வைத்துவிட்டு அங்கேயே நின்றாள்.

''பரவாயில்ல. வரச்சொல்லு'' என்று பிரபாகரன் கூப்பிட, அவன் உரக்க கையசைத்துக் கூப்பிட்டான். அவள் முகம் திருப்பிக் கொண்டாள்.

''மூணு டீ போடுங்க'' அவன் சொல்ல, டீக்கடைக்காரன் வேகமாக செயலில் இறங்கினான்.

பிரபாகரன் டப்பாவைத் திறந்து, தட்டு நிறைய பிஸ்கெட்டுகள் எடுத்து பையனிடம் நீட்டினான். பிரபாகரனுக்கு பசியாக இருந்தபடியால் சரக்கென்று ஒரு பிஸ்கெட்டைக் கடித்துத் தின்றான். பிரபாகரன் தின்ற வேகத்தைப் பார்த்துவிட்டு அந்தப் பையனும் ஒரு பிஸ்கட் எடுத்துக்கொண்டான். எடுத்த பிஸ்கட்டை வாயில் அதக்கிக் கொண்டு, இன்னும் இரண்டு

பிஸ்கட்டுகள் கையில் எடுத்து தாயிடம் ஓடினான். அங்கே கொண்டுபோய் பிஸ்கட்டுகள் கொடுத்தான். அவள் மறுத்துவிட்டு வாங்கிக் கொண்டாள்.

வாங்கியவள், ஏன் மறுக்க வேண்டும். மறுத்தபிறகு ஏன் வாங்கிக் கொள்ள வேண்டும். பிரபாகரனுக்கு அவர்களுடைய செயல்கள் விசித்திரமாய் இருந்தன. ஒரு குழப்பமான மக்கள் என்பதாய் அவனுக்குத் தோன்றியது.

பையன் மறுபடியும் ஓடிவந்து நிற்க, ஒரு கண்ணாடி டம்ளர் நிறைய சூடான டீ அவனுக்குத் தரப்பட்டது. ''அட கப் டீயா'' என்று ஆவலோடு அந்தப் பையன் கூவினான். ஒரு டீ டம்ளரை எடுத்துக் கொண்டு அம்மாவை நோக்கிப் போனான். பிறகு வேகமாக ஓடிவந்தான். இன்னொரு டீ டம்ளரைத் தான் எடுத்துக்கொண்டான். டீயை உறிஞ்சிக் குடிக்கின்ற பிரபாகரனுக்கு அருகே போய் நின்று கொண்டு முதன் முதலாய் சினேகமாகச் சிரித்தான்.

அது விவசாயிகளின் பிரகாரம் வானம் பார்த்த பூமி. பூகோளக்காரர்கள் பிரகாரம் மழை மறைவுப் பிரதேசம். ஆன்மிக ஆற்றல் பிரகாரம் அரக்கர்கள் முதன்முதலாய் ராமரால் வதைக்கப்பட்டு ரத்தமயமான இடம். கை, கால்கள் இல்லாமல் வெறும் வாயும் வயிறும் மட்டுமே இருந்த ஒரு அரக்கன் வாழ்ந்த இடம். தன வைசியர்களின் பிரகாரம் அது சக்தி பூமி. உக்கிரமான கிராமத்துத் தேவதைகள் உலாவும் ஊர். அரசாங்க நிர்வாகத்தின் அபிப்பிராயப்படி வளமற்ற பாலை நிலம். தன வைசியர்களின் பரத கண்டத்தின் வரைபடம் பிரகாரம் ஊருக்கு கோவிலூர் என்று பெயர்.

கோவிலூர் இன்னும் உள்ளடங்கி இருந்தது. இன்னும் இரண்டு கிராமங்கள் தாண்டிப் போக வேண்டியிருந்தது. இருந்தாலும், இந்தக் கிராமங்களை கோவிலூர் என்றே அழைத்தார்கள்.

சிறுவன் இன்னும் நான்கு பிஸ்கட்டுகள் எடுத்துக் கொண்டான். டீயை முழுவதும் குடித்துவிட்டு சின்னதாக ஏப்பம் விட்டான், சிரித்தான்.

''காலைலேர்ந்து ஒண்ணுமே சாப்பிடலைங்க. டீ ரொம்ப நல்லாருந்தது.''

சட்டென்று குனிந்து பிரபாகரன் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

பிரபாகரன் அவனை இடக் கையால் அணைத்து வலக்கையிலிருந்த டீ முழுவதும் டம்ளரைச் சாய்த்துக் குடித்தான்.

''உன் பேரென்ன?''

''பஞ்சாட்சரம்'' அந்தப் பையன் பதில் சொன்னான்.

''அது உங்க தாயாரா...''

''ஆமா...''

''உங்க அப்பா எங்க?''

''அவரு இல்ல. எங்களை விட்டுட்டுப் போயிட்டாரு.''

''அப்ப சாப்பாட்டுக்கு என்ன பண்றீங்க?''

''ஏதாவது வேலை பண்ணுவோம்.''

''ஏதாவது வேலைன்னா?''

''வெறகு வெட்டுவோம். சாக்கடை அள்ளுவோம். கல்லு சொமப்போம். கட்டட வேலைக்குப் போவோம். எங்கனா கல்யாணம் நடந்தா பாத்திரம் தேய்ப்போம். எடுபிடி வேலை செய்வோம். எந்த வேலை கொடுத்தாலும் செய்துட்டிருப்போம். இங்க எதுனா வேலை இருக்கும். வேலை இல்லாதபோது வெறகு வெட்டுவோம்.''

''எப்படி இங்க எதுனா வேலை கிடைக்கும்னு சொல்றே?'' பிரபாகரன் ஆவலோடு விசாரித்தான்.

பையனிடம் பேசுகையில், அந்த ஊர் பற்றின விபரம் அவன் படித்தது போலவே இருந்தது.

செட்டியார்கள் எனப்படும் தன வைசியர்கள் வெகுகாலம் முன்பு நீரும், வளமான நிலமும் கொண்ட ஊர்களை விட்டு அரச விரோதத்தால் வெளியேறி வறட்சியான ஒரு பிரதேசத்தில் ஒன்றுகூடி, அந்த வறட்சியான பிரதேசத்தைப் பல கிராமங்களாகப் பிரித்து அவர்களில் பல குடிகள், பல கிராமங்களுக்குக் குடியேறினார்கள்.

இந்தக் காடுகளற்ற திறந்த வெளியான செம்மண் பூமியில் பெரிய சுவர்களோடு ஓடுகளும், தளமும் வேய்ந்த வீடுகள் கட்டிக்கொண்டு தங்கள் மனைவி, குழந்தைகளை அங்கே குடிவைத்துவிட்டு, அவர்களுக்குக் காவலாக ஒரு சிறுபடை வைத்துவிட்டு குதிரைகளும், கழுதைகளும், மாட்டு வண்டிகளும் ஓட்டிக்கொண்டு துறைமுகங்களுக்குப் போய், துறைமுகத்திலிருந்து வேறு கப்பலேறி பல ஊர்களுக்குப் போய் நாலாவிதமான பொருள்கள் சேகரித்து வந்து நிலமும் நீரும் கொண்ட சோழதேசத்தில் அவைகளை விற்றுவிட்டு, பிறகு மழைக் காலத்தில் அவர்கள் சொந்த ஊருக்கு வந்துவிடுவார்கள். மனைவி, மக்களோடு மழைக்காலம் முழுவதும் சந்தோஷமாக இருப்பார்கள். குளிர் துவங்கும் மார்கழியில் பயண வேலைகளை ஆரம்பிப்பார்கள். மார்கழி முடிந்து தை துவங்க சங்கராந்தி கொண்டாடிவிட்டு மறுபடியும் பயணப்படுவார்கள்.

தேவகோட்டை, காரைக்குடி, கோவிலூர், வலங்கைமான் என்று பல ஊர்களில் இவ்வித தன வைசியர்கள் குடும்பம் குடும்பமாக வசித்து, அவர்கள் குல வழக்கப்படி அங்கங்கே கோயில்கள் ஸ்தாபித்து அந்தக் கோயில்களை நன்கு பராமரித்து, அந்த தெய்வங்களின் துணையோடே பயணப்பட்டு வணிகம் செய்தார்கள். வளமாக வாழ்ந்தார்கள். ஊருக்கு வரும்போது சோழ தேசத்தின் தரமான நெல்லைக் கொண்டு வந்தார்கள். நல்ல தானியங்களைக் கூடையில் போட்டுமூடி, அதன் மீது ஓலை வேய்ந்து ஊரில் இறக்கினார்கள்.

இறங்கிய நேரம் எல்லோரையும் அழைத்து விருந்து வைத்தார்கள். ஊரில் விவசாயம் இல்லையே தவிர, தானியங்களும் காய்கறிகளும் அண்டை ஊர்களிலிருந்து வரவழைக்கப்பட்டன. திருநெல்வேலியிலிருந்தும், திருச்சிராப்பள்ளியிலிருந்தும் மேற்கே கேரளத்திலிருந்தும் கூட பொருள்கள் இங்கு வந்து விற்பனையாயின. வணிகர்கள் ஏதேனும் ஒரு சாக்கிட்டு விருந்து வைத்து ஊர் முழுவதும் பரிமாறினார்கள். ஆண்டு நிறைவு என்றார்கள். அறுபதாம் கல்யாணம் என்றார்கள். திருமணம் என்றார்கள். மணம் முடித்த முதல் வருடம் என்றார்கள். வளைகாப்பு என்றார்கள். இறந்தபிறகு நினைவுநாள் என்றார்கள். அவர்கள் வருடம் முழுவதும் ஏதேனும் ஊருக்கு சோறு போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி சோறு போடுவதில் மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள். இப்படி தன வைசியர்கள் சோறு போடுவதால் தான், ஊர்மக்கள் அனைவரும் அவர்களை ஒட்டி செழிப்பாக வாழ்ந்து வந்தார்கள்.

தனவைசியர்கள் வளர்த்த இன்னொரு விஷயம் சைவ சமயம். எல்லா ஊரிலும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து, இறைவனுடைய திருவுருவம் அமைத்து அழகிய கோயில்களும், மடங்களும் இருந்தன. கோயில்களைவிட மடங்களுக்கு மிகப்பெரிய மதிப்பு இருந்தது. அந்த மடங்கள் பொதுக்கூட்டம் நடத்துகின்ற இடமாகவும், தனியார் குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நியாய ஸ்தலமாகவும் விளங்கி வந்தன.

அந்த மடங்களை நிர்வகித்தவர்கள் ஞானவான்களாக இருந்தார்கள். தன வைசியர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டார்கள். அதை அனுசரித்து, நீதி வழங்கினார்கள். இறைவன்பால் முழு பிடிப்போடும், அது குறித்த தெளிவோடும் இருந்தார்கள். அதை அவர்களால் எடுத்துச் சொல்ல முடிந்தது. எல்லாவற்றையும் விட இம்மாதிரி மடங்களில் உள்ளவர்கள் ஒழுக்கசீலர்களாய், தவவலிமை மிக்கவர்களாய் இருந்தார்கள். அந்த வறண்ட பிரதேசத்தில், பல ஞானிகள் தோன்றி, வாழ்ந்து

வந்து தனவைசியர்களின் குடும்பங்களைப் பேணிக் காத்து, அவர்களை இன்னும் உயர்நிலைக்கு அழைத்துப் போனார்கள். பூமிதான் வறட்சியே தவிர, அந்த செம்மண் பூமி மனிதர்கள் செழிப்பாக இருந்தார்கள்.

அந்த செழிப்பைத் தேடித்தான் பிரபாகரன் ஊருக்குள் நுழைந்தான். அந்த மண்ணை மிதித்தவுடனேயே வாரி வழங்கும் குணம் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. மரம் வெட்டிக் கொண்டிருந்த தாயையும், மகனையும் அழைத்து தேநீரும், பிஸ்கட்டுகளும் வாங்கிக்கொடுக்க, அவர்கள் முகம் மலர்வது தெரிந்தது. அருகே போய் பேசினால் தாய் வெட்கப்படுவாள் என்பதால், தொலைவிலிருந்தே இருகரம் கூப்பி அவன் அந்தத் தாயைக் கும்பிட்டான். அவள் வெட்கப்பட்டு பாதி கும்பிடு போட்டாள். மகனை வா என்று அழைத்தாள். மகன் அருகே ஓட அவனை இழுத்து அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பிலும் பிரபாகரனுக்கு நன்றி தெரிந்தது, அவன் புன்சிரிப்போடு திரும்பி கோவிலூரை நோக்கி நடக்கத் துவங்கினான்.

கோவிலூரில் உள்ள ஞான தேசிகசபை என்கிற மடத்தை விசாரித்துக் கொண்டு போய் தோட்டக் கதவைத் திறந்து, இரண்டு நாய்கள் வரவேற்க, சாமந்திச் செடிகளுக்கு நடுவே நடந்து படியேறி பையிலிருந்து துண்டு எடுத்து தலை துவட்டிக்கொண்டு "ஐயா" என்று குரல் கொடுத்தான். காவலாளி போல் ஒருவர் வெளியே வர தன்னுடைய பெயரைச் சொல்லி, இங்கு குருவாக இருப்பவரைப் பார்க்க வந்திருக்கிறேன் என்று சொன்னான். அவர் காவலாளி, "சற்று இருங்கள். குரு பூஜையில் இருக்கிறார்" என்று சொல்லிவிட்டு உள்ளே போக, திண்ணையில் அமர்ந்து மழையை வேடிக்கை பார்த்தான். அவனுக்குக் குடிக்க சுக்கு காபி கொடுக்கப்பட்டது. காபியில் லேசாக பால் விட்டிருந்தார்கள், அதனால் காபி கனமாக இருந்தது. மணமாக இருந்தது. காபி குடித்தவுடன் லேசாய் வயிற்றில் ஒரு காரம் இறங்கிற்று. வெகு சீக்கிரம் வயிறு சுத்தப்படுத்தப்படும்

என்பதை உணர முடிந்தது. மறுபடியும் மழை பார்க்கத் துவங்க, இரண்டு வாழைப்பழங்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. வாழைப்பழங்களை உரித்துத் தின்று, தோலை வெகு தூரம் வீசி எறிந்தான். மறுபடியும் திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

குரு கூப்பிடுவதாக காவலாளி சொல்ல, அவன் உள்ளே போய் பெரிய கூடத்திற்குள் நுழைந்தான். சாய்மானமான ஒரு மர நாற்காலியில் பிரம்பு முடைந்திருக்க, காலுக்குண்டான கட்டை குறுக்கே இருக்க, குரு அந்த காலைப் பொழுதில் அதில் சாய்ந்து அமர்ந்திருந்தார். விடியலிலேயே எழுந்து ஜபதபங்கள் முடித்து, எட்டு மணிக்கு நன்றாக சிற்றுண்டி அருந்திய பிறகு சிறிது தூங்கலாம் என்ற எண்ணத்தில் இருப்பது போல கண்களில் கிறக்கத்தோடு தெரிந்தார்.

''எந்த ஊர்?'' அவர் குரல் மென்மையாக இருந்தது. அவர் வழுக்கைத் தலையராகவும், தலையில் ருத்ராட்ச மாலை அணிந்தவராகவும், கழுத்தில் மிகப் பெரிய உருத்திராட்ச மாலையும், சிவலிங்கப் பெட்டி உள்ளவராகவும், கையில் தங்க வளையங்கள் அணிந்து கொண்டு, நவரத்தின மோதிரம் அணிந்து கொண்டும், சிறிய தொந்தியோடும், இடுப்பில் சுற்றிய நாலு முழ வேட்டியோடும், மேலே ஒரு காவித்துணியோடும், உடம்பு முழுவதும் திருநீறோடும் இருந்தார்.

''சென்னை'' என்று பிரபாகரன் கை கூப்பினான். விழுந்து வணங்கினான்.

''என்ன பெயர்?'' எழுந்தவனைப் பார்த்து மடாதிபதி கேட்டார்.

''பிரபாகரன்.''

''ஏது காரியம்?''

''உங்களைப் பார்ப்பதற்கு வந்தேன்.''

''என்ன விசேஷம்.''

''இங்கு சிறிதுநாள் தங்க வேண்டுமென்ற எண்ணம்.''

''இங்கா எதற்கு?''

''ஞான வாசிஷ்டம் கற்கவேண்டுமென்று ஆசை.''

குரு சாய்ந்திருந்தவர் நிமிர்ந்து பார்த்தார்.

''என்ன சொன்னீர்கள்?''

''ஞான வாசிஷ்டம் உங்களிடம் பாடம் கேட்க வேண்டுமென்று ஆசை.''

குரு மௌனமாக இருந்தார்.

''எதுவரை படித்திருக்கிறீர்கள்?''

''எம்.ஏ. ஆங்கில இலக்கியம்.''

''பிறகு ஏன் ஞானவாசிஷ்டம்?'' குரு அதே மிருதுவான குரலில் கேட்டார்.

''இதுதான் சரியான படிப்பு என்று தோன்றியது. எனவே இங்கு வந்திருக்கிறேன். இங்கு தங்கி உங்களுக்கு அருகே இருந்து நிறைய தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை.'' பையைத் தூக்கி ஜிப்பை இழுத்து திறந்து பைக்குள் கைவிட்டு ஒரு கனமான காக்கி கவர் எடுத்து, அதிலிருந்து பத்தாயிரம் ரூபாய் கட்டு ஒன்றை எடுத்து அவர் சாய்வு நாற்காலியில் வைத்து மறுபடி வணங்கினான்.

''இது என்ன?''

''சிறிதளவு பொருள். நான் இங்கு தங்குவதற்குண்டான செலவும், என் காணிக்கையும் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.''

குரு சிரித்தார்.

''முதலில் போய் குளித்துவிட்டு, சிற்றுண்டி சாப்பிடுங்கள். இதை சாய்வு நாற்காலியில் வைத்ததாலேயே உங்களை நான் அனுமதித்து விடவில்லை. சிறிதளவு செலவும் சிறிதளவு காணிக்கையும் என்று சொன்னீர்களே அதை நான் ரசித்தேன். 'ஞான வாசிஷ்டம்' என்று சொன்னீர்களே, அதுபற்றி

உங்களுக்கு என்ன தெரியும் என்ற ஆவலும், என்ன தெரியவேண்டும் என்ற கேள்வியும் எனக்குள் இருக்கின்றன. எனவே வந்தவரைப் பசியோடு இருக்க விருப்பமில்லாது அனுமதிக்கிறேன். குளிர்நீரில் குளிக்கவேண்டாம். வெந்நீரில் குளியுங்கள். குடிப்பதும் வெந்நீராகவே இருக்கட்டும். இது பருவமழை, புதிய மழை. பூச்சிகள் அதிகம் இருக்கும். எனவே, முடிந்தளவுக்கு வெந்நீர் அருந்துவதும், வெந்நீரில் குளிப்பதும் வகையாகக் கொள்ளுங்கள். வெந்நீர் மடத்தில் எப்போதும் கிடைக்கும்'' என்று சொன்னார்.

''வெள்ளையப்பா'' என்று யாரையோ கூப்பிட்டார்.

அந்த காவலாளி வரவே, அவனைப் பார்த்து அவனிடம் பிரபாகரனைச் சுட்டிக்காட்டினார். பிரபாகரன் பின்பக்கம் போனான். கருவேலங்குச்சிகள் எரிந்துகொண்டிருந்தன. அவனுக்கு அந்தப் பெண்மணியும், பையனும் ஞாபகத்திற்கு வந்தார்கள். வெந்நீர் கொதித்துக் கொண்டிருந்தது. சுடுநீரும், குளிர்நீரும் கலந்து வளாவி வைக்கப்பட்டன.

அவன் கையில் சோப்புக் கட்டியும், பல்தேய்க்கும் பிரஷ்ஷும் எடுத்துக்கொண்டு போய் படியில் உட்கார்ந்து பல் தேய்த்த பிறகு அண்டர்வேரோடு நின்று வெந்நீரில் குளித்தான். உடம்பு முழுவதும் சோப்புப் போட்டுக் கொண்டு கால்விரல்கள் அழுக்கு போகத் தேய்த்து நன்கு நீராடினான். உடம்பிலிருந்து லேசாக வியர்வையும், ஆவியும் பொங்க படியேறி சமையலறைக்கு வந்தான்.

'பூஜை முடித்து சிற்றுண்டியா, சிற்றுண்டி முடித்து பூஜையா'' என்று சமையல்காரன் கேட்க.

''பூஜை செய்கிற வழக்கமே இல்லை. சிற்றுண்டி தான் முதலில். அதிகம் பசிக்கிறது'' என்று சொன்னான்.

சமையல்காரன் வாய்விட்டுச் சிரிக்க, பிரபாகரனும் சிரித்தான். சமையல்காரன் கைகாட்ட, இலைக்கு முன்

உட்கார்ந்து கொண்டான். ஆறு இட்லியும், சிறிய தோசைகள் நான்கும் பரிமாறப்பட்டன. தேங்காய் சட்னியும், மிளகாய்த் துவையலும், நேற்றைய குழம்பை ஏதோ மாவுவிட்டு கிளறி கூட்டாகச் செய்தும் பரிமாறப்பட்டன. அவைகளைத் தொட்டுக்கொண்டு சாப்பிட சுவையாக இருந்தது. சற்று வெந்நீரான காபி தரப்பட்டது. சாப்பிட்டு முடித்துவிட்டு முகம் துடைத்தபடி கூடத்துக்கு வர, குரு மின்விசிறியின் கீழ் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். முற்றத்தில் காக்கைகள் உட்கார்ந்து அரிசிப் பருக்கைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தன. அவனுக்கு மறுபடியும் திண்ணையில் இடம் தரப்பட்டது. ஒரு பாயும், தலைக்கு மரக்கட்டையும் தரப்பட்டன. அவன் மெள்ள சாய்ந்தான். மழை வலுத்துப் பெய்தது. பிரபாகரன் அந்த மழையின் சப்தத்தில் அயர்ந்து தூங்கினான்.

ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்க, சட்டென்று விழித்துக் கொண்டான். ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாகத் தூங்கியிருப்பது தெரிந்தது. அவனைத் தாண்டி, ஆறேழு பேர்கள் உள்ளே நுழைந்தார்கள். எல்லோரும் தனவைசியர்கள் போல் தோற்றமளித்தார்கள். வெள்ளைச் சட்டையும் வெள்ளை வேட்டியுமாய் உள்ளே போனார்கள். கால்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு, வேலியைத் தாண்டும்போது இடுப்பில் அங்கவஸ்திரத்தை இறுக்கிக் கொண்டு குருவிடம் நோக்கிப் பணிவாகப் போனார்கள். குருவின் குரல் சென்னைக்குக் கேட்டது. பிரபாகரன் தன் பையை எடுத்துக்கொண்டு அந்தக் கூடத்திற்குள் நுழைந்தான்.

குருவைச் சுற்றி பதினைந்து பேர்கள் அமர்ந்திருந்தார்கள். பிரபாகரன் சுவரோரம் வைத்துவிட்டு மேல்துண்டை சட்டைமீது போட்டபடி உட்கார்ந்து கொண்டான். வேட்டியில் சம்மணமிட்டு உட்காருவது பிரபாகரனுக்கு சற்று சிரமமாக இருந்தது.

குரு எதிரே உள்ளவர்களிடம் மிகக் குளுமையாகப் பேசிக் கொண்டிருந்தார். எதிரே உள்ளவர்களும் அவருக்கு அருகே நெருக்கமாய் உட்கார்ந்து கொண்டு அவரிடம் பல காலம்

பழகியவர்கள் போல் பயமின்றி அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''போன நூற்றாண்டில் கூட இந்த மடத்தில் ஒரு விநோதமான பழக்கம் ஒன்று உண்டு. என்ன தெரியுமா அது? இப்போது நான் தூங்கிக்கொண்டிருந்தேன். நீ வந்து எழுப்பினாய், என்ன தூங்கிக் கொண்டு இருந்தீர்களா என்று கேட்டாய். நான் 'ஆமாம்' என்று சொன்னேன். போன நூற்றாண்டில் உள்ள குரு அவ்விதம் சொல்லமாட்டார். நான் சிவதியானம் செய்து கொண்டிருந்தேன் என்று சொல்வார். குரு சாப்பிட்டுக் கொண்டிருப்பார். யாரேனும் வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டால், குரு சிவதியானம் செய்து கொண்டு இருந்தேன் என்று சொல்வார். அதாவது, என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று எப்போது, யார் கேட்டாலும் இவர்களோடு சிவதியானம் செய்து கொண்டிருக்கிறேன். சாப்பிட்டபடி சிவதியானம் செய்து கொண்டிருக்கிறேன். பூஜை செய்தபடி சிவதியானம் செய்து கொண்டிருக்கிறேன். ஓலைச்சுவடி படித்துக் கொண்டு சிவதியானம் செய்து கொண்டு இருக்கிறேன். சுக்குகாபி குடித்தபடி சிவதியானம் செய்துகொண்டு இருக்கிறேன். உலவியபடி சிவதியானம் செய்துகொண்டிருக்கிறேன் என்று, எந்தத் தொழில் செய்தாலும், அந்தத் தொழிலைச் சொல்லி சிவதியானம் செய்துகொண்டு இருந்தேன் என்று சொல்வார்கள். அதாவது அவர்கள் சிவதியானம் இடையறாது செய்து கொண்டிருந்தார்கள். எந்தத் தொழில் செய்தாலும் உள்ளுக்குள் சிவன் நாமம் ஓடிக்கொண்டிருக்கும். எனவே அதை மறைக்காமல் இப்படிச் சொல்வதைப் பழக்கமாக்கிக் கொண்டார்கள். இன்னும் அழுத்திக் கேட்டால், நான் கொல்லைப்புறம் போய் சிவதியானம் செய்து கொண்டிருந்தேன் என்றும் சொல்வார்கள்'' என்று குரு சொல்ல, அங்கிருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''இது உண்மை, மலம் கழிக்கும் நேரமும் அவர்கள் இறைவழிபாடு செய்து கொண்டிருந்தார்கள் என்பது மிகப்பெரிய

உண்மை. அப்படி இந்தக் கட்டத்தில் செய்ய முடியவில்லை. செய்யாததைச் சொல்ல முடியவில்லை. மிக அற்புதமான மடமய்யா இது. ஞானிகள் வாழ்ந்த மடம். இந்த மடத்தின் ஆதி கர்த்தாவைப் பற்றி இங்கு வந்திருக்கிற ஒரு புதிய நபருக்குச் சொல்வதன் மூலம் உங்களுக்கும் அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்த மடத்தினுடைய மூல புருஷர் ஒரு சித்தர். சோழ தேசத்தின் வளமான ஒரு கிராமத்தில் ஒரு கோயில் வாசலிலே அவர் குடியிருந்தார். மன்னனும், அரசியும் தினமும் கோயிலுக்கு வருவார்கள். சித்தரோ எழுந்திருக்க மாட்டார். அவர் பாட்டுக்கு உட்கார்ந்து கொண்டிருப்பார். எந்த உலக நினைப்புமின்றி, தனக்குத்தானே பேசியபடி பித்தனைப் போல எந்தச் செயலும் செய்யாது உள்ளார்ந்து கிடப்பார். மன்னன் சற்றுக் கோபப்பட்ட போது மந்திரிமார்கள் அவரைத் தொந்தரவு செய்யவேண்டாம் என்று தடுத்துவிட்டார்கள்.

ஆனால், மன்னனால் தொந்தரவு செய்யாமல் இருக்க முடியவில்லை. தான் மட்டும் வேலை செய்கிறோம். மற்றவர்கள் எல்லாம் சும்மா இருக்கிறார்கள் என்று அவன் போன்ற மூடர்களுக்கு ஒரு நினைப்பு. வெற்றி பெற்ற மனிதர்கள் நிறைய பேர் தான் மட்டுமே உழைப்பதாகக் கருதிக் கொள்கிறார்கள். உழைப்பது என்பது முன்னும் பின்னும் அலைவது என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

எனவே, அப்படிப்பட்ட எண்ணம் கொண்ட அந்த சோழமன்னனும் இவர் சும்மா இருக்கிறார் என்ற கருத்திலே இருந்தான். வேறு எங்கோ ஓர் இடத்தில் லயித்துக் கிடக்கிறார் என்று மற்றவர் சொல்ல, அதைப் பற்றி முழுவதும் புரிந்து கொள்ளாமல் இவரை எவராவது உலக விஷயங்களில் ஈடுபடுத்தினால் அவருக்கு நிறைய சன்மானம் தருவேன் என்று அறிவித்தான். மக்களில் எவருக்கும் அவரை உலக விஷயங்களில் ஈடுபடுத்தத் துணிவில்லை.

''எவருக்குமே துணிவில்லையா? எவராலும் இவரை உலக விஷயங்களில் ஈடுபடுத்த முடியாதா?'' என்று கேட்க, ஒரு தாசி முன்வந்து, ''நான் செய்கிறேன்'' என்று சொன்னாள்.

உலகத்தில் வெற்றி பெற்றவருக்கு எவ்வளவு மமதை உண்டோ, அத்தனை மமதை அழகாக இருக்கின்றவர்களுக்கும் உண்டு. அழகிய பெண்களும், போர்வீரர்களும் தங்களால் சாதிக்க முடியாத விஷயம் எதுவுமில்லை என்று கருதுவார்கள். இறை விஷயத்திலிருந்து தள்ளி நிற்பார்கள்.

அந்த தாசி அவரை உற்றுக் கவனித்து வந்தாள். அந்த சித்த புருஷர் அந்தக் கோயில் மரத்தடியில் விழுகின்ற சருகுகளைப் புசித்து வாழ்ந்து வந்தார். அந்த தாசி, சருகுகள் போலவே உளுந்து மாவில் உப்பிட்டு ஒரு பதார்த்தம் செய்துகொண்டு வந்து, அதை அவருக்கு பிக்ஷையாகப் போட்டு, 'சருகுகள் கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுங்கள்' என்று சொல்ல, அந்த சித்த புருஷர் அதை ஆராயாமல் சாப்பிடத் துவங்கினார். நாலைந்து நாட்கள் உளுந்துமாவு உள்ளே போனதும் உடம்பில் உரம் அதிகரித்துவிட்டது. உளுந்தும், மாமிசமும் ஒன்று. அதனால்தான் பல ஞானிகள் உளுந்து உண்பதை அறவே மறுத்து வந்தார்கள்.

உப்பு சுவை ஏறியதும், உடம்பில் உற்சாகம் ஏற்பட்டது. தாசியின் அழைப்புக்கிணங்க அந்த சித்தர், நமது மூலகுரு அவளுடைய இல்லத்திற்குப் போனார்.

தாசி மிகுந்த கெட்டிக்காரி. முதன்முதலில் வந்திருக்கிறீர்களே ஏதேனும் உணவு வகைகள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல, அவர் அதை மறுத்துவிட்டதேனும், கரும்புச்சாறும் வெல்லமும் கரைத்த பானகத்தை வாசனை விஷயங்கள் போட்டு அவருக்கு 'இந்தக் குளிர் நீராவது அருந்துங்கள்' என்று கொடுக்க, இனிப்பு உள்ளே போக இன்னும் உற்சாகம் பீறிட்டது. வாசனைப் பொருள்களைக் கரைத்துள்ளதால் மனதில் குதூகலம் அதிகரித்தது. எனவே வீடு சுற்றிப் பார்க்க, அவளுடைய தோழி அரிப்பு ஏற்படும் வண்ணம் சில

கோடுகளை அவர் அறியாமல் பூச, அவர் சொரிந்துகொள்ள உடம்பில் எண்ணெய் பசையே இல்லை. நான் எண்ணெய் தேய்த்து விடுகிறேன் என்று தாசி சொல்ல, அவரும் அரிப்புத் தாங்காமல் சரி என்று சொல்ல, முற்றத்தில் உட்கார வைத்து கொல்லைக் கதவையும் வாசல்கதவையும் தாழிட்டு அவருக்கு உச்சி முதல் உள்ளங்கால்வரை எண்ணெய் தேய்த்து உடம்பினுடைய பசையை அதிகரிக்க, அவர் தாசியின்கண் வசப்பட்டார்.

தாசி சில நாட்கள் கழித்து கோயிலுக்கு நடனமாடப் போக, அவரும் தாசியைப் பிரிய ஒட்டாமல் பின்னாலேயே சென்றார். தாசி மேடை ஏறி ஒரு கால் சலங்கையை நழுவவிட, அரசன் எதிரே அமர்ந்தபடி தாசியைப் பார்த்துக் கொண்டிருக்க, அவர் மக்களுக்கு நடுவே சித்த புருஷர் எழுந்து போய் தாசியின் காலை தன் தொடைமீது வைத்து அவளுக்கு கால்சலங்கை கட்டி விட்டார். ஊர் முழுவதும் வாய்விட்டுச் சிரித்தது. மன்னன் கை கொட்டிச் சிரித்தான். அந்த சித்த புருஷரும் சிரித்தார். செய்கின்ற உடம்பு வெளியே இருக்கிறது. எதுவும் செய்யாத மனம் உள்ளே இருக்கிறது. ஏதேனும் செய்யவேண்டும் என்று நீ ஆசைப் பட்டால், உன் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக நான் ஏதேனும் செய்து கொண்டிருக்கிறேனே ஒழிய, உள்ளுக்குள் என் மனம் எதுவும் செய்யாதிருக்கிறது. வேண்டுமென்றால் தாசியின் வீட்டு திண்ணையில் போய் பார் என்று சித்த புருஷர் சொல்ல, அரசன் ஏதோ ஓர் சக்தியினால் உந்தப்பட்டவனாய் குதிரையிலேறி வேகமாய் தாசிவீட்டுக்குப் போக, அந்த தாசி வீட்டுத் திண்ணையில் சித்தபுருஷர் அமர்ந்து தனக்குத்தானே, பேசிக்கொண்டு பித்தனைப் போல் இருந்தார். குதிரையைத் திருப்பி மறுபடியும் கோயிலுக்கு வர, அங்கே தாசியோடு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். அரசன் எங்கே போய் காலில் விழுவது என்று தெரியாமல் இருந்தான்.

''எங்கு விழுந்தாலும் ஒன்றே'' என்று சித்த புருஷர் சொல்ல,

கோயிலில் அந்த சித்த புருஷர் காலடியில் விழுந்து கதறினான். அவருக்கு மடம் ஏற்படுத்திக் கொடுத்தான்.

''சோழநாட்டிலே ஏற்பட்ட மடம் தனவைசியர்களின் அன்பால், ஆதரவால் இந்தப் பக்கம் குடிபெயர்ந்து விட்டது. அரசர்களுக்கும், தன வைசியர்களுக்கும் நடுவே அபிப்ராய பேதம் எழுந்து, அவர்கள் பிரியும்போது இந்த மடம் தனவைசியர்களுக்குப் பக்கத்திலே தருமம் இருக்கிறது என்று தெரிந்து அவர்களோடு கோவிலூருக்கு வந்துவிட்டது'' என்று சொல்ல கூடியிருந்தவர்கள் கைதட்டி ஆர்ப்பரித்து குருவைக் கொண்டாடினார்கள். இது மடத்தின் கதை. மடம் ஆரம்பித்த கதை என்று குரு சொல்ல, அங்கு கூடியிருந்தவர்கள் பிரபாகரனைத் திரும்பிப் பார்த்தார்கள். பிரபாகரன் குருவை நோக்கி கை கூப்பினான்.

''அந்த இளைஞர் சென்னையிலிருந்து வந்திருக்கிறார். பிரபாகரன் என்று பெயர். ஞானவாசிஷ்டம் பாடம் கேட்க வேண்டுமாம். இந்த மடம் பற்றிக் கேள்விபட்டாராம். இந்த மடத்துக்குப் போக வேண்டுமென்று ஒரு உந்துதல் இடையறாது இருந்ததாம். இங்கே சில நாட்கள் தங்கவேண்டுமென்று வந்திருக்கிறார். அப்படித் தானே அய்யா?'' குரு, பிரபாகரனைப் பார்த்துக் கேட்டார்.

''இறையருள் இருப்பின் நிரந்தரமாக இங்கு தங்கவும் நான் விரும்புகிறேன்'' பிரபாகரன் பதட்டமில்லாமல் சொன்னான்.

கூடியிருந்தவர்கள் திகைத்துப் போய் பார்த்தார்கள்.

''இறையருள் அப்படி இருப்பின் அதுவும் நடக்கும். தடுக்க நான் யார்? நீங்கள் வந்தபொழுது, நல்ல பொழுது. நிமித்தங்கள் நன்றாக இருந்தன. சகுனங்கள் சரியாகத் தோன்றின. நீங்கள் பெரிய காரியம் பொருட்டு இங்கே வந்திருக்கிறீர்கள் என்பது எனக்கு உள்ளுணர்வில் தெரிந்துபோயிற்று. இருப்பதும் வேறு இடம் போவதும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு நாம் பேசத் துவங்குவோம் என்றார்.

வந்தவர்கள் ஒவ்வொருவராய் சிறிய விண்ணப்பங்கள் தனித்தனியே குருவிடம் சொல்லி சமாதானங்கள் கேட்டுக் கொண்டு வெளியேறினார்கள்.

வந்தவர்களுக்கு பால் தரப்பட்டது. முறுக்கும் சீடையும் யாரோ கொண்டுவர அவை விநியோகிக்கப்பட்டன.

வெளியூரிலிருந்து வந்த சிலர் மடத்திலேயே பகல்பொழுது உணவு எடுத்துக்கொள்ள பிரபாகரனும் அவர்களோடு உட்கார்ந்தான்.

மறுபடியும் திண்ணைக்கு வந்து சுவரில் சாய்ந்து கண்மூடி அமர்ந்திருந்தான். மாலைநேரம் தோட்டத்தில் தூறலுக்கு நடுவே உலாவினான். வேட்டியை மடித்து கட்டிக்கொண்டு சாய்ந்திருந்த தக்காளிச் செடிகளையும், கீரைத் தண்டுகளையும் சிறிய குச்சிகள் நட்டு கயிறில் பிணைத்துக் நேராக்கினான்.

மறுபடியும் வானம் கருக்கத் துவங்கியது. மழை அதிகமாகும்போல் தெரிந்தது. வந்தவர்கள் அனைவரும் விடைபெற்றுப் போக, மடத்தின் காவலாளியும், சமையல் காரரும், பாத்திரம் அலம்புகிறவர்களும், பெருக்குகிறவர்களும், குருவும், அவர்கள் சீடர் இருவரும் பிரபாகரனும் தனித்துவிடப் பட்டார்கள். குழல் விளக்குகள் எரியத் துவங்கின. மழை மறுபடியும் பலத்துப் பெய்தது.

## 2

வெளிச்சம் மங்கவும் மணி அதிகரிக்கவும் சரியாக இருந்தது. மாலைநேரம் வெயில் சரியும்போது பெய்யும் மழை வெகுநேரம் நீடிக்கும். அந்த மழை பூமியில் கடுமையாகத் தாக்கி, நாலா பக்கமும் ஓடையில் பெருக்கெடுத்து ஓடி, எதிர்பக்க மைதானத்தின் மீது விழுந்து இருட்டுகிற போது அங்கங்கே

வெளிச்ச சிதறல்கள்தான் தெரிந்ததே தவிர, வீடுகளிலிருந்து தோன்றும் வெளிச்சம் மழைநீரால் பெரிதாக்கிக் காட்டப்பட்டதே தவிர, வேறு எந்தச் சலனமும் இல்லை. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்ததால் மக்கள் ஊருக்குள் அடங்கி இருந்தார்கள்.

லாரி ஒன்று மிகுந்த கவனத்துடன் இரைச்சலுடன் ஊருக்குள் போயிற்று. மடம் அமைதியாக இருந்தது. குரு கூடத்தின் நடுவே முன்னும் பின்னும் உலவினார். கை கால்களை அசைத்தார். பஞ்சாட்சர மந்திரத்தைச் சொல்லியபடியே எல்லா திசைகளையும் வணங்கினார். திருநீறு இட்டுக் கொண்டார். தேவார, திருவாசகங்கள் படித்தார். தொலைவிலிருந்து அவரைப் பார்த்துக் கொண்டிருந்த பிரபாகரனை அருகே அழைத்து பாய் போட்டு உட்காரச் சொன்னார். நாற்காலியில் அவர் உட்கார்ந்து கொண்டார்.

''என்ன வேண்டும் சொல்லுங்கள்?'' என்று மறுபடி கேட்டார்.

''இந்த மடத்தில் இருக்க வேண்டும் என்பது என் மனதுக்குள் தோன்றிய ஒரு விஷயம். தங்க வைப்பதும் வெளியேற வைப்பதும் உங்கள் விருப்பம்.''

''எதனால் இந்த மடம் பற்றி உங்களுக்கு அப்படித் தோன்றியது?''

''இந்த மடத்திற்கும் எனக்கும் எங்கோ ஒரு தொடர்பு இருப்பதுபோல, போன ஜென்மத்திலிருந்து ஒரு பிடிப்பு இருப்பதுபோல ஓர் உணர்வு. சிறிய புத்தகத்தில் இந்த மடம் பற்றிப் படித்தவுடனேயே இது இவ்விதம்தான் இருக்கும் என்று மனதுக்குள் ஒரு ஓவியம் போட்டுக் கொண்டேன். அநேகமாய் அதுபோலவே இந்த மடம் இருக்கிறது. ஆனால் இங்குத் தங்குவதற்கு அது காரணமல்ல. எனக்கு என் வாழ்க்கையில் நடந்த சில விஷயங்கள் காரணம்.''

''சரி அப்படி உன் வாழ்க்கையில் என்ன விஷயம் நடந்தது?''

''என் தாயார் வனிதாதேவி நாற்பத்தேழு வயதில், அவர் என் தகப்பனாரை விட்டுவிட்டு வேறு ஒருவரை திருமணம் செய்துகொண்டு போய்விட்டார். அவருக்கு மகனாகிய நான் முக்கியமில்லை என்று சொல்லிவிட்டார். என் பொருட்டு பல துன்பங்களை இதுவரை சகித்ததாகவும், இனி அவருடைய வாழ்க்கையை அவர் வாழ விரும்புவதாகவும், வளர்ந்த என்னை விட்டுப்பிரிவதில் அவர் நிம்மதி அடைவதாகவும் சொன்னார். நான் அவரைப் பார்க்க முயன்றும், வாழ்க்கையைப் பற்றி ஆழ்ந்து யோசித்தும் இனி இங்கு இல்லறம் நடத்துவது அபத்தமான விஷயம் என்பதைப் புரிந்துகொண்டு என் வாழ்க்கையை வேறுபக்கம் திசை திருப்ப முடிவு செய்து இங்கு வந்திருக்கிறேன்.''

''உன் தாய் வனிதாதேவி உன் தகப்பனாரை விட்டுப் பிரிய காரணம் என்ன?'' குரு செந்தமிழில் பேசினார்.

''அது பெரிய கதை'' பிரபாகரன் பதில் சொன்னான்.

பையைத் திறந்து, ஒரு பிளாஸ்டிக் கவர் எடுத்து துழாவி ஒரு படம் காட்டினான். கருப்பு வெள்ளை படத்தில் பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு பெண் இருந்தாள். ரெட்டைப் பின்னலும் கட்டுமஸ்தான் உடம்பும் கொண்ட அந்தப் பெண்ணுடைய சிரிப்பு மிக இயல்பாக ஒரு பூவைப்போன்று இருந்தது.

''இதுதான் அம்மா வனிதாதேவி. இந்தப் படம் எடுக்கிறபோது அவருக்கு வயது பத்தொன்பது. இந்தப் படம் எடுத்த பதினைந்து நாளில் என் தகப்பனாரை அவர் திருமணம் செய்துகொண்டார். என் தகப்பனாரை என்று நான் குறிப்பிடுவது என்னை வளர்த்தவரை அல்ல. எனக்கு உரு கொடுத்தவரை, அந்தத் தகப்பனார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அம்மா அவரோடு வாழ்ந்து என்னை கருவுற்று பெற்ற பிறகு, என்னைப் பெற்ற இரண்டாவது வருடம் அவரைப் பிரிந்து தனியே வந்துவிட்டார். அவருடைய தாயும் தகப்பனாரும்

அவருக்கு வேறொரு திருமணம் செய்துவைத்தார்கள். அப்படி திருமணம் செய்து கொண்டவரைத்தான் நான் அப்பா என்று அழைத்தேன். அந்த அப்பாவையும் அம்மா பிரிந்து விட்டார்.

குரு திகைப்போடு, அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். பின்பு அந்தப் படத்தைத் தடவி, 'சிவாய நமஹ' என்று பலமுறை சொன்னார். படத்தைத் திருப்பி பிரபாகரனிடம் கொடுத்தார். பிரபாகரன் பேசத் துவங்கினான்.

**செ**ன்னையிலிருந்து தெற்கே போகும் ரயில் சாலையில் அந்தக் கிராமம் இருந்தது. அங்கே ஸ்டேஷன் வரவேண்டுமென்று மத்திய அரசுக்கு அங்கே குடியிருப்பவர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்டேஷன் அங்கு வருமா இல்லை சற்று தள்ளிப்போய் விமானநிலையம் அருகே வருமா என்று ஒரு சந்தேகம் அவர்களுக்கு இருந்தது. அந்தக் கிராமம் ஒரு குன்றின்கீழ் இருந்தது. அந்தக் குன்று மேற்பரப்பில் சரளைக்கற்களால் மூடப்பட்டாலும் அடியில் கனமான கருநீல பாறைகளால் ஆனது. அந்த இடம் ஒரு உஷ்ணமான இடம். அந்த வீட்டு உணவு உஷ்ணமான உணவு. அந்த வீட்டுப் பெண்கள் உஷ்ணமான பெண்கள். எல்லாம் மேம்போக்காக பார்ப்பவர்களுக்குப் புரியாது. வாழ்க்கையை ஆழ்ந்து கவனிப்பவர்களுக்குப் புரியும்.

''வெறும் குழம்புசாதம் மட்டும் சாப்பிட்டுப் போகாதே. அது உடம்புக்கு நல்லதில்ல. கொஞ்சம் மோராவது குடி.'' அம்மா வற்புறுத்துவாள். ஆனால் வனிதாவுக்கு மோர் பிடிப்பதில்லை. மோரின் புளிப்பு அவளுக்கு உடனே குமட்டலைக் கொடுத்து விடும். மோரை முகர்ந்து பார்க்கும் போது தலை சுற்றுகிறது. பால்கூட தேவையில்லாத பொருள்தான். ஆனால் பாலையாவது சகித்துக் கொள்ளலாம். மோர் என்கிற இந்த ஒரு விஷயத்தை அவளால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

வனிதாவுக்கு பிடித்த விஷயம் காரம்.

புளியில் காரமும் கலந்து, பத்து முருங்கைக்காயைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, குழம்பில் போட்டு முருங்கைக்காய் மண்டி என்று அம்மா ஒன்று செய்வாள். வாசற்படியிலிருந்து அந்த வாசனை தூக்கும். நிறைய சோறு போட்டுக் கொண்டு இரண்டு கரண்டி குழம்பு ஊற்றி பிறகு முருங்கைக் காயை சோறு முழுவதும் பரப்பி, பிசைந்து பிசைந்து சாப்பிடலாம். ஒவ்வொரு முருங்கைக் காயையும் பிளந்து விரலால் வழித்து உறிஞ்சி சக்கையைக் கடித்து சாறெடுக்கலாம். வயிறு நிறைய சாப்பிட்டு எழுந்ததும் கை அலம்பிவிடலாம். கை அலம்பி ஒரு மணி நேரம் கழித்தும் குழம்பு வாசனை கையில் அப்படியே இருக்கும். வாயில் அந்த சுவை நீங்காது நிற்கும். அந்தக் குழம்புக்குத் தொட்டுக் கொள்ள அம்மா வெங்காய வடகம் வறுத்துப் போடுவாள். வெங்காய வடகத்தில் சுள்ளென்று பச்சை மிளகாய் காரமிருக்கும்.

வனிதா தன் தாய்மாமன் வீட்டில் வசித்து வந்தாள். தாய்மாமன் அவளைவிட இருபது வயது பெரியவர். அவருடைய மனைவி அடிக்கடி நோய்படுபவள். எனவே, வனிதாவினுடைய அம்மாவின் உதவி அவளுடைய தாய்மாமனுக்குத் தேவையாக இருந்தது. சகோதரியினுடைய சமையல் அவருக்குப் பிடித் திருந்தது. சகோதரியின் கணவன் அவளைப் புறக்கணித்து விட்டுப் போனதும், பெண் குழந்தையைக் கொடுத்துவிட்டுப் போனதும், அவர் அவர்களைத் தன்வீட்டிற்கு வரவழைத்துக் கொண்டார்.

அவரிடம் இருந்த காசுக்கு, இந்த மலையடிவாரத்தில் நிலம் வாங்கினார்கள். தனக்கென்று ஒரு ஓட்டு வீடு கட்டிக் கொண்டார். ஒரு மூன்று கிலோமீட்டர் தூரம் வெட்ட வெளியில் நடந்துபோய் பிறகு மின்வண்டி ஏறி தாம்பரத்திற்குப் போய் வனிதா படித்துவந்தாள். இருட்டுவதற்கு முன்பு வீடு வந்துவிட வேண்டும். இல்லையெனில் வீடு எந்தத் திசையில் இருக்கிறதென்று அந்த வெட்டவெளியில் கண்டுபிடிக்க முடியாது.

வனிதாவின் தாய்மாமனும் தான் செய்துகொண்டிருந்த வேலையை உதறிவிட்டு, அந்த இடத்தில் நிலம் வாங்கிப் போட்டு எப்போது மின்சாரம் வரும் என்று காத்திருந்தார்.

ஸ்டேஷனுக்கு மனுக்கள் எழுதிப்போட்டது போல, அந்த கிராமத்தில் உள்ளவர்கள் மின்சாரத்திற்கு மனு எழுதிப் போட்டார்கள்.

வனிதா ஆறாவது படிக்கும்போது மின்சாரம் வந்தது. எட்டாவது படிக்கும்போது ரயில்வே ஸ்டேஷன் வந்தது. ஒன்பதாவது படிக்கும்போது ஊர் பெரிதாயிற்று. பத்தாவது படிக்கும்போது தாய்மாமன் நிறைய நில வியாபாரம் செய்தார். அவர் வீட்டை தளமாக்கினார், எதிர்பக்கம் நிலம் வாங்கி காலனிபோல் அமைத்து ஒரு ஹால், ஒரு ரூம், ஒரு கிச்சன் என்று தொடர்ச்சியாய் பதினைந்து வீடுகள் கட்டினார்.

வனிதாதேவி பத்தாவது படிக்கும்போது அவருடைய நிலைமை மிகவும் உயர்ந்தது.

அந்த இடத்திற்கு திருப்பூர் குமரன் நகர் என்று பெயரிடப்பட்டது. பிறகு திருப்பூர் என்பது மறைந்து போய் வெறும் குமரன் நகர் என்று பெயர் மட்டுமே நின்றது.

ரயில் நிலையத்திலிருந்து சாலை போடப்பட்டது. சாலைக்கு விளக்குகள் போடப்பட்டன. சாலையின் இருபுறங் களிலும் இருந்த நிலங்கள் நல்ல விலை போயின. கடைகள் எழுந்தன. திருவல்லிக்கேணியிலும் மயிலாப்பூரிலும் ஒண்டு வீட்டிலிருந்த மத்தியதர வர்க்கத்தினர் நகைகளை அடகு வைத்தும், கடன் வாங்கியும், சிக்கனமாகச் சேமித்தும் இங்கு நிலங்கள் வாங்கி வீடு கட்டினார்கள்.

நிலங்கள் வாங்கி விற்பது மட்டுமில்லாமல் அனுபவத்தினால் வனிதாதேவியின் தாய்மாமன் கட்டிடங்களும் கட்டிக் கொடுத்தார். அதிலும் கணிசமான பணம் சம்பாதித்தார்.

இம்மாதிரியான வேலைகளுக்கு வனிதா தேவி மிகவும் துணை இருந்தாள். கணக்கு வழக்குகளைக் கச்சிதமாக கவனித்துக் கொண்டாள். பல இடங்களில் பல வீடுகளைக் கவனித்துவிட்டு நிறைய ஆலோசனைகள் சொன்னாள்.

அது மலையின் அடிவாரம். மலையில் பெய்த மழையெல்லாம் சரிந்து, அந்தப் பகுதி பள்ளத்தில் நிரம்பி பூமிக்குள் புதைந்து கிடந்தது. யார் வீட்டில் ஆழ்துளைக் கிணறு போட்டு பம்பு வைத்தாலும் நீர் பீய்ச்சி அடித்தது. குடிக்கும்போது லேசான கடுப்பு இருந்தாலும், குளிப்பதற்கும் துணி துவைப்பதற்கும் ஏற்றவாறு இருந்தது. எனவே அந்தப் பகுதியில் வீடு வாங்கிய அத்தனை பேரும் தோட்டம் வைத்தார்கள். தென்னங்கன்றுகள் வைத்தார்கள். சிலர் அதிக பிரயாசை எடுத்துக்கொண்டு வாழைமரங்கள் நட்டார்கள்.

வனிதாதேவி தொலைதூரம் தாம்பரத்திற்கு பஸ் ஏறிப்போய் பூச்செடிகள் வாங்கி வந்தாள். திருவண்ணா மலைக்குப் போய் வருகையில் காய்கறி விதைகளும், பூ விதைகளும் வாங்கி வந்தாள். அவர்களது தோட்டத்திலும் அடுத்த நிலத்திலும் மண்வெட்டியால் கொத்தி விதைகள் நட்டாள். மாட்டுவண்டியில் சாண உரம் கொண்டுவந்து வீட்டின் கொல்லைப்புறம் குவித்து, கூடை கூடையாக செடிகளுக்குப் போட்டு, காலையும், மாலையும் சொதசொதவென்று நீர் பாய்ச்சினாள். செடிகள் கிளைவிட்டு எழுந்தன. வெயிலை வாங்கி நீரை உறிஞ்சி வெகு சீக்கிரம் பூக்களைச் சொரிந்தன.

நல்ல காய்கள் கிடைக்கத் துவங்கின. அக்கம்பக்கம் உள்ளவர்கள் வனிதாதேவியின் தோட்டத்தை நின்று பார்த்து விட்டுப் போனார்கள். அவளிடம் ஆலோசனை கேட்டுவிட்டுப் போனார்கள்.

வனிதாதேவிக்கு பூரட்டாதி நட்சத்திரம். பிறர் பாராட்டினால் கண்மண் தெரியாமல் போகும். எல்லா பாராட்டுக்களும் மிக உண்மை, தான் அதற்குத் தகுதியானவள்

என்ற எண்ணம் உடனே வந்துவிடும். இன்னும் பாராட்டு, இன்னும் பாராட்டு என்று மனம் அலையும். அதற்காகவே செய்கைகள் ஏற்படும். மற்றவர்களை அழைத்து தன்னுடைய கைவண்ணத்தைக் காண்பிக்கின்ற பெருமையும் கர்வமும் இடைவிடாது தோன்றும். பாராட்டவில்லையென்றால் சோர்ந்து போகும்.

நிலம் வாங்கி நிலம் விற்று காசு பார்க்க ஆரம்பித்த பிறகு பிறரிடம் காசு வாங்கி கட்டிடம் எழுப்ப கற்றுக் கொண்ட பிறகு, வனிதாதேவியின் தாய்மாமனின் போக்கு வேறு விதமாயிற்று.

நிலம் விற்கிற வியாபாரி சிரிக்கக்கூடாது. மிகவும் இழையக்கூடாது. வாங்கினால் வாங்கு. வாங்காவிட்டால் போ என்கிற விட்டேர்த்திதான் அந்த வியாபாரியின் இயல்பாக இருக்கவேண்டும். உங்கள் பெயரென்ன என்று கேட்டால் பெயர் மட்டும் சொல்லிவிட்டு முகம் திருப்பிக் கொள்ளவேண்டும். அடுத்த கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டும். இல்லையெனில் உனக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்பது போலவே நடந்துகொள்ள வேண்டும். இப்படி நடந்து கொண்டால்தான் நட்பு வளராமலிருக்கும். நட்பு வளராமல் இருந்தால்தான் காசு பழுதில்லாமல் வியாபாரம் செய்யமுடியும். எனவே, சாதாரணமாய் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த வனிதா தேவியின் மாமா, நிலம் விற்கவும் வாங்கவும் ஆரம்பித்த பிறகு, உம்மணா மூஞ்சியாய் மாறினார். வீட்டிலே சந்தோஷமாக இருக்கின்ற முகத்தை சில சமயம் வெளியே சிதறிவிட வியாபார நஷ்டம் ஏற்படுவதை உணர்ந்து, அவ்விதம் ஏற்படாமலிருக்க வீட்டிலும் அழுத்தம் திருத்தமாகப் பேச ஆரம்பித்தார். அளவுக்கு அதிகமாக அமைதி காட்டினார். பழித்தும் கூறாமல், பாராட்டவும் செய்யாமல் வீட்டிலுள்ள மனிதர்களிடமிருந்து விலகியே இருந்தார்.

''உங்களுக்குத் தேவையானது காசு. மேலே - கூரை, உடுக்க புடவை, உண்ண உணவு. இவை கிடைக்கும்'' என்ற ரீதியில் நடந்துகொண்டார்.

சிரித்துக் கொண்டிருந்த தம்பி வியாபார ரீதியால் விறைப்பானதும் அம்மாவுக்கு வெறுத்துப்போனது. 'மயிலாப்பூர் சந்துல இருந்தபோது சந்தோஷமா இருந்தோம். இந்த மலைக்காட்டுக்கு வந்து குரங்கு மாதிரி மூஞ்சிய தூக்கிக்கிட்டு அலையறோம்' என்று சொல்வாள்.

அவளுக்கு புருஷன் இல்லாது போனாலும் கபாலி கோயிலும், கபாலி கோயிலுக்கு வந்துபோகின்ற மத்திய வயது பெண்களும் மிக ஆதரவாக இருந்தார்கள். குறைந்தபட்சம் அவளது குறைகளைக் காதுகொடுத்துக் கேட்க கல் நந்தியாவது அங்கு இருந்தது. ஆனால் இந்த இடத்தில் மனிதர்களும் இல்லை. கோயிலும் இல்லை. வெறும் கற்பாறைகளும், மலைகளும் மட்டுமே இருந்தன. எனவே, கொல்லைப் புறத்தில் உட்கார்ந்து பின்பக்கம் தெரியும் அந்த குன்றத்தை நோக்கித்தான் இடைவிடாது அவள் அம்மா பேசத் துவங்கினாள்.

மாமாவும் பேசாமல், அம்மாவும் பேசாமல் இருந்த அந்த வீட்டில் வனிதா மனம் பாராட்டுக்கு ஏங்கியது.

சரியாக வரவில்லை. வீடு பாராட்டாததால், சகோதரனும் சகோதரியும் பாராட்டாததால் எதிர்பக்க வீட்டிலிருந்து எவரேனும் வந்து பாராட்டினால் அவளுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

'நல்லா இருக்கே. இவ்ளோ பெரிய அடுக்கு செம்பருத்தி, எங்கிருந்து கொண்டாந்தே கண்ணு' என்று கேட்பவருக்கு அரைமணிநேரம் பதில் சொல்வாள்.

'செண்பகம் செடிவளர ரெண்டு வருஷம் ஆகும்ல. சரக்கொன்றை ஒன்றரை வருஷத்துக்குள்ள வந்துருமாமே. பவளவல்லி ஒரு வருஷத்துல பூக்கத் தொடங்குமா' என்று பார்த்துக் கேட்டார்கள்.

எல்லார் வீட்டிலும் தோட்டம் கிளம்பியது. எல்லார் வீட்டுக்கும் எரு தேவைப்பட்டது. எல்லார் வீட்டிலும் விதைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

எதிர்பக்கம் வனிதா தேவியின் மாமா கட்டிய பனிரெண்டு போர்ஷன்களில் வெகுசிலரே குடித்தனம் வந்தார்கள். முதலில் திருமணம் செய்து குடும்பமாக இருப்பவர்களுக்குத்தான் வாடகைக்கு விடப்படும் என்று கண்டிப்புடன் இருந்த வனிதாதேவியின் மாமா, அதற்கு ஆட்கள் வராது போகவே பட்டணத்தில் வேலை செய்யும் பிரம்மச்சாரிகளுக்கு வாடகைக்கு விட்டார். அவர்கள் நல்ல வேலையில் இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொண்டு, வாடகை கொடுக்க முடியுமா என்பதைச் சோதித்துப் பார்த்துக்கொண்டு, கொஞ்சம் கூடுதலாக வாடகை உயர்த்தி அவர்களை இருக்க வைத்தார். முன்பணம் அதிகமாக வாங்கினார்.

ஒரு சைக்கிளில் ஐந்து நிமிடநேரத்தில் ரயில்வே ஸ்டேஷனை அடையமுடியும். ரயில் ஏறினால் அரைமணி நேரத்தில் சென்னை நகரின் கோட்டைப் பகுதியைத் தொட்டு விட முடியும். கோட்டை ஸ்டேஷனில் இறங்கினால் நான்கு நிமிட நடையில் அலுவலகம் போய்விட முடியும் என்று தெரிந்த இளைஞர்கள் இந்தப் பகுதிக்கு வாடகைக்கு வந்தார்கள்.

சனியும், ஞாயிறும் அவர்களுக்கு விடுமுறை. ஆதலால் துணிகள் துவைத்து, காயப்போட்டு, சினிமா பாட்டுக் கேட்டு, சீட்டாடி ரம்மியமாக பொழுதைக் கழித்தார்கள். அக்கம்பக்கம் குடித்தனம் செய்கிறவர்கள் இருப்பதால் அதிகம் வம்பு செய்யாமல், ‘எனக்கு வீட்டில் திருமணத்திற்கு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்’ என்று சொல்லி தாய், தந்தையை இங்கு வரவழைத்து அடுத்த வீட்டுக்காரர்களை அறிமுகப்படுத்தி தங்களைக் கௌரவப்படுத்திக் கொண்டார்கள். ‘தங்கச்சி கல்யாணம் முடிந்த பிறகு எனக்கு’ என்ற பிரம்மச்சாரிக்குக்கூட அந்த போர்ஷனில் மதிப்பு இருந்தது.

‘‘அவுங்க பாட்டுக்கு அவுங்க இருக்காங்க. நாங்க பாட்டுக்கு நாங்க இருக்கோம். அவங்களால ஒரு தொந்தரவும் இல்லே. உண்மையச் சொல்லணும்னா அவாளால நல்ல உதவி. வரும்போது ஒரு கிலோ காபிபொடி வாங்கிட்டு வான்னு

சொன்னேன். அழகா வாங்கி வந்து காபிபொடி கொடுத்தா. என்ன மதிப்பு, என்ன மரியாதை.''

''கல்யாணம் ஆகாதவா கெட்டவள்னு சொன்னா, அது தப்பான அபிப்ராயம். நல்லவா எல்லா எடத்துலயும் இருக்கா.''

'கல்யாணம் ஆனவா கெட்டவளா இல்லியா' என்ன என்று, அந்த பிரம்மச்சாரிகளுக்கு குடும்பப் பெண்கள் வக்காலத்து வாங்கினார்கள்.

அந்த எதிர்போர்ஷனுக்கு நண்பர்கள் மூலம் அவன் குடிவந்தான்.

ஏற்கெனவே இருக்கின்ற பிரம்மச்சாரிகள், அவனிடம் புழங்கும் காசு பார்த்துவிட்டு, அந்த இடத்தில் அவனுக்கு இடம் கொடுத்தார்கள். திருநெல்வேலியைச் சேர்ந்த பையனுக்கு அந்த வீட்டின் மொத்த வாடகையும் கொடுக்க முடியவில்லை. இவன் முக்கால் பங்கு வாடகை கொடுப்பதாக ஒத்துக்கொண்டவுடன் தன்னுடைய அலுவலகத்தைச் சேர்ந்தவனென்று பொய் சொல்லி, அவனை உள்ளுக்குள்ளே கொண்டு வந்தான். ஆனால், அவன் அலுவலகமும், இவன் அலுவலகமும் சம்பந்தமே இல்லாதவை.

அவன் பெயர் சைலேந்திரபாபு. ஆந்திராவில் கரும்பு பயிர் செய்துகொண்டிருந்தான். அவன் குடும்பம் முழுவதும் அதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. விவசாயத்தைவிட வெளியூருக்குப் போய் சிலகாலம் வேலை செய்யலாம் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. அவனுடைய ஆங்கில பலமும், பட்டப்படிப்பும் எளிதில் அவனுக்கு வேலை வாங்கிக்கொடுத்தன. அவன் சென்னையிலுள்ள இனிப்பு கம்பெனிக்கு விண்ணப்பம் போட்டான். கரும்பு பற்றி நேர்முகத் தேர்வில் அவனிடம் கேள்வி கேட்டபோது, அது பற்றிய அத்தனை விவரங்களையும் எடுத்து வீசினான். அவர்கள் அவனுடைய பேச்சை மறுத்தபோது, மிகத் தெளிவாய் அந்த மறுப்பை முறியடித்தான்.

''நீங்கள் படித்துவிட்டுப் பேசுகிறீர்கள். நான் கரும்பைப் பயிர்செய்துவிட்டுப் பேசுகிறேன். நம் இருவருக்கும் வித்தியாசம் இருக்கிறது. கரும்பைப் பற்றி எனக்குத் தெரிந்ததைப்போல் உங்களுக்கு நிச்சயம் தெரியாது'' என்று அவன் சொன்ன வேகத்தைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவனுக்கு வேலை கொடுத்தார்கள்.

பி.எஸ்.ஸி. ரசாயனம் படித்த அவனுக்கு இனிப்புக் கம்பெனி ஆராய்ச்சிக் கூடத்தில் வேலை கிடைத்தது.

ஆராய்ச்சிக் கூடம் எப்படி இனிப்பு செய்வது என்கிற சிறிய ஒரு குழுவை சென்னையில் வைத்து வாரத்திற்கு ஒருமுறை ஆந்திராவிற்கும், தமிழ்நாட்டிற்கும் எல்லையிலுள்ள இடத்திற்குப் போய் அங்குள்ள தொழிற்சாலையை, அதைச் செய்வோரைப் பார்த்துவிட்டு வந்தது. பயிற்சியினால் வெகு விரைவில் தொழில் கற்றுக் கொண்டான். அவன் கெட்டிக்காரத் தனத்தால் புதிய வகை இனிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கேழ்வரகு மாவும், வெல்லப்பாகும் கலந்து தங்கள் வீட்டில் ஒரு இனிப்பு செய்யப்படும் என்பதை அவன் செய்துகாட்டிய போது, அந்த இனிப்பு அவர்களை அதிகம் கவர்ந்தது. அதை அதே விஷயத்தை இன்னும் பக்குவமாக அவர்கள் செய்து புதிய பெயரிட்டு மார்க்கெட்டுக்கு அனுப்ப, அது பற்றிக்கொண்டது.

கேழ்வரகு என்று அதைச் சொல்லாமல் விற்றதால், அது இறக்குமதி சாக்லெட்டைப் போல உயர்வாகப் பேசப்பட்டது.

அந்தக் கம்பெனி இதேமாதிரி பல வகைகளைக் காட்டும்படி அவனைத் தூண்டியது.

அவனும் இடைவிடாது யோசித்து வந்தான். இரண்டு பதவி உயர்வு பெற்றான், ஊருக்குப்போய் தனது பெருமைகளை அவர்களோடு பேசினான். என்ன இருந்தாலும் இங்கு வேலை செய்வது போல ஆகுமாடா. வேலை செய்தது போதும், கண்ணுக்கெட்டிய தூரம் வயல் இருக்கிறது. கரும்புப் பயிரிடலாம் வா என்று வீடு அழைத்தது.

இன்னும் ஒரு வருடத்திற்குப் பிறகு நான் திருமணம் செய்து கொள்கிறேன். இப்போதைக்கு அங்குபோய் நல்ல வேலை கற்றுக்கொண்டு வருகிறேன். நாமே ஒரு இனிப்பு தொழிற்சாலை இங்கு ஆரம்பிக்கலாம். நாமே பாகு காய்ச்சலாம். இந்த விஷயங்களைக் கற்றுக் கொண்டு வருகிறேன் என்று சொல்ல, அவன் வீடும் தாய்மாமன் போன்ற உறவுகளும் அதைப் பாராட்டி ஆதரித்தார்கள்.

'இன்னும் கூட ஒருவருடம் இரு. இரண்டு வருடங்கள் கழித்து திருமணம் செய்துகொள்' என்று சொன்னார்கள்.

'ஆனால் வயதாகிவிட்டதே?'

அவனுடைய அம்மாவும், சித்தியும் கவலைப்பட்டார்கள்.

'ஆணுக்கு வயதென்ன முக்கியம்' என்று ஆண்கள் அவர்களை அடக்கினார்கள்.

பட்டணத்தில் விஷயங்களைப் பரிமாறிக் கொள்ளவும் பர்மாபஜார் பொருள்களை வாங்கி அனுப்பவும் அவனுக்கு தாய்மாமன்கள் அன்புக் கட்டளை இட்டார்கள். அவன் வாங்கி வந்து நிரப்பியதும், பதிலுக்கு ஏதாவது நன்றி செய்யவேண்டு மென்று நினைத்தார்கள். குடிக்க அழைத்தார்கள். குடித்துவிட்டு உன்னைக் கட்டிக் கொண்டு தூங்கவா அல்லது உன்னோடு சண்டை போடவா? நான் சரியான தோழர்கள் கிடைக்காமல் குடிப்பதில்லை என்று சொன்னான். அவர்கள் என்னவித தோழர்கள் என்று கேட்டபோது கண் சிமிட்டினான். அவர்கள் அவனை ஊரிலிருந்து காரில் ஏற்றி வெகு தூரத்திலுள்ள வேறொரு ஊருக்குக் கொண்டு போனார்கள். அந்த ஊரில் தெருவெல்லாம் பூச்செடிகள் போல ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பெண்கள் நின்றிருந்தார்கள்.

வாடகைக்கான அந்தப் பெண்களோடு அவன் குடித்து சந்தோஷமாக இருந்தான். அந்த சுகமான அனுபவம். மூன்று நாட்கள் அங்குத் தங்கி விதவிதமான பெண்களோடு

படுத்தெழுந்த சுகம் அவன் மனதில் நிரந்தரமாகத் தங்கியது. திரும்ப சென்னைக்கு வரும்போதும், அந்தப் பெண்களின் உறவுக் கனவே அதிகமிருந்தது.

அவன் அடுத்தமுறை போகும்போது இன்னும் அதிகம் செலவு செய்யவேண்டும். அப்படி அதிகம் செலவு செய்ய வேண்டுமென்றால், அதிகம் காசு சம்பாதிக்க வேண்டும். அதிகம் காசு சம்பாதிக்க வேண்டுமென்றால், கடுமையாக உழைக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தான்.

வேலையில் மும்முரமானான். இன்னொரு புதிய மிட்டாயைக் கண்டுபிடித்தான். அது வெறும் வேர்க்கடலை பர்பி.

வேர்க்கடலை வெல்லத்திற்கு பதில் பொடிப் பொடியாக நறுக்கி, அதை சாக்லெட்டில் புரட்டி எடுத்தபோது வேறு சுவை கொடுத்தது. வாயில் வெகுநேரம் அரைப்பட்டது. இதில் சூட்சுமம் வேர்க்கடலைதான். சாக்லெட் மாறாத விஷயம்.

வேர்க்கடலை எண்ணெய் உள்ள முரட்டு வேர்க்கடலையாக இருக்க வேண்டும். அது அதிகம் வறுபடாமல் கொஞ்சம் கால்வாசி வறுபடலாக இருக்கவேண்டும். அதை கடித்து வருகின்ற பாகும், சாக்லெட்டும் கலக்கும் போதுதான் ருசி அதிகமாகிறது. எனவே, அந்தப் பதமும் நறுக்கப்பட்ட துணுக்குகளும் மிக மிக முக்கியம். மிகப் பொடிதாகவும் இல்லாமல் மிகப் பெரிதாகவும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் போகாது, அளவுக்கு கீழ் குறையாது இதை நறுக்கினால் இந்தக் கலவை மிக அற்புதமாகத் தேறும் என்று அவன் எழுதிக்கொடுத்தான்.

பல்வேறுவித ஆராய்ச்சிகளுக்குப் பிறகு இந்த வேர்க்கடலை மட்டுமல்லாது, பத்து வேர்க்கடலை ஒரு பாதாம் பருப்பு என்று வைக்கப்பட்டு அந்த வேர்க்கடலை துணுக்கு களுக்கு நடுவே பாதாம் துணுக்குகளும் பரிமாறப் பட்டன.

சாக்லெட் ருசி அள்ளிக்கொண்டு போயிற்று.

சென்னை ஆராய்ச்சிக்கூடத்தில் கைப்பதமாய் பண்ணிக் கொண்டு தொழிற்சாலைக்குக் கொண்டுபோய் விநியோகம் செய்ய, எல்லோரும் அரைத்து, அரைத்து உண்டுவிட்டு பாராட்டினார்கள்.

மூன்று நாட்கள் தொழிற்சாலையில் தங்கி அவன் ஒரு பத்தாயிரம் சாக்லெட்டுகள் தயார் செய்ய, அங்குள்ள தொழிலாளர்கள் அவனுடைய திட்டத்தின்படி வேலை செய்தார்கள். சாக்லெட் உருண்டுவந்து, அந்த நறுக்கப்பட்ட பருப்புகளை மூடியது. பலகை நகர்ந்து குளிரூட்டும் இடத்திற்குப் போயிற்று. குளிர்ந்தபிறகு சாக்லெட் விழ அடியில் இன்னொரு சாக்லெட் தடவப்பட்டது. சிறிது நேரம் காயவைக்கப்பட்டது. முதல் சாக்லெட்டை தொழிற்சாலையின் சொந்தக்காரர் விண்டு வாயில் போட்டுக் கொண்டுவிட்டு,

'தேவாமிர்தம்... தேவாமிர்தம்' என்று கொண்டாடினார்.

''எஸென்ஸ் அதிகம், கொஞ்சம் குறைத்துவிடு'' என்று சொன்னார்.

எல்லாத் தொழிலாளர்களும் வாயில் போட்டுக் கொண்டார்கள். அவனைப் பாராட்டினார்கள்.

அவனுக்கு மறுபடியும் பதவி உயர்வு கிடைத்தது. இந்த முறை பாராட்டாக ஒரு போனஸும் கிடைத்தது. அவன் நான்கு நாட்கள் லீவு வேண்டுமென்று சொல்லி, உடனே பஸ் பிடித்து ஊருக்குப் போனான். தாய்மாமன்களிடம் காசு காட்டினான். பர்மாபஜார் பொருட்களைக் கொடுத்தான். அவர்கள் காரேறி அந்த வாடகைப் பெண்கள் நகருக்குப் போனார்கள். வேறொரு வீட்டில் வேறுசில பெண்களோடு மூன்று நாட்கள் தங்கிவிட்டு ஊர் திரும்பினார்கள்.

பெண் உடம்பு என்பதை மறந்துவிட்டு, அவனால் ஒருகணம் கூட இருக்கமுடியவில்லை. வெளிப்பார்வைக்கு

கெட்டிக்காரனாக இருந்தாலும், உள்ளுக்குள்ளே பெரும் பெண் பித்தனாக இருந்தான்.

அவன் கெட்டிக்காரத்தனத்தை, பெண் பற்றிய சிந்தனை மெல்ல மெல்லத் தின்று கொண்டிருந்தது.

வாடகைக்கு வந்த பெண்களை மனதில் பதியவைத்துக் கொண்டதால், எந்தப் பெண்களைப் பார்க்கும்போதும் வாடகைக்கு வந்த பெண்களாகவே அவனுக்குத் தோன்றியது.

காமத்தைச் சுற்றிய ஆண்களும் பெண்களும் தந்திரசாலிகளாகி விடுகிறார்கள். அவர்கள் கெட்டிக்காரர்களாக இருந்தால், இன்னும் அதிக தந்திரசாலிகளாக மாறிவிடுகிறார்கள். யாரை எங்கே எவ்விதம் எப்படி உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று திட்டமிடுகிறார்கள். மனதுக்குள் இடைவிடாது கூடுதலுக்குண்டான ஆசை கூடுகிறபோது, அதை நிறைவேற்றிக் கொள்ள சகல உபாயங்களையும் கையாள்கிறார்கள். ஏகப்பட்ட பொய்கள் சொல்கிறார்கள். சத்தியம் செய்கிறார்கள். அவர்களுடைய நோக்கம் கடைசியில் கூடிப்பிரிவதாகவே இருக்கிறது.

வெறும் கூடல் மட்டுமே சந்தோஷம் என்று வந்தவனுக்கு தன்னைத் தவிர எவர்மீதும் தாபமே இருந்ததில்லை. அந்த தான் என்பதையும் தன் மனம் என்பதாக கருதாது, தான் என்பதை தன் உடலாக, தன வலிவாக, தன் அழகாக, தன் புத்தியாக கருதுகிறவனை, தன்னைக் காதலிப்பதாக அர்த்தம் கொள்ளக் கூடாது. அது வெறும் மயக்கம்.

சைலேந்திரபாபு அந்த மிகப்பெரிய மயக்கத்திலிருந்தான்.

வெற்றிபெற்று, ஓய்வெடுத்து, மறுபடியும் இந்த இடத்திற்கு வேலை நிமித்தம் வந்து, மல்லாந்து இந்த மலையடிவார போர்ஷனில் படுத்தபோது, அந்த மலையின் உஷ்ணம் அவனையும் தாக்கியது.

புத்தியும் உஷ்ணமாக இருந்து, உடம்பும் உஷ்ணமாக இருந்தபோது அவனுக்கு பெண்துணை தேவைப்பட்டது.

அவன் தாங்கமுடியாமல் வெளியே அலைந்தான். அடுத்த போர்ஷன்களை மேயவிட்டான். திருமணமான பெண்கள் அவனைக் கவரவில்லை. அவர்களுடைய அலுப்பும் சலிப்பும் அவனுக்கு வெறுப்பாக இருந்தன. அவர்கள் உடுத்திக் கலைத்த விதம் அவனுக்குக் கோபம் ஏற்படுத்தியது.

முறுக்கிய வீணைத் தந்தியாய் திண்ணென்று இருக்கும் இளம் பெண்களை அவன் தேடி அலைந்தான்.

ஆந்திராவிலுள்ள கட்டிளம் பெண்கள் அவனுக்கு சென்னையில் தென்படவில்லை.

ஒருநாள் விடியற்காலையில் டீக் கடைக்குப் போய் திரும்புகிறபோது, சுவர் கட்டையில் ஏறி நின்று ஒரு முல்லைக் கொடியைப் படரவிட்டுக் கொண்டிருக்கும் வனிதாதேவியை வியப்போடு பார்த்தான்.

கொடிக்கு இணையாக அவள் குனிந்து திரும்பி ஒரு பப்பாளி மரத்தை பிடித்திருந்த விதம், மிகக் கவர்ச்சியாக இருந்தது. உடம்பில் தசை வடிவங்களெல்லாம் முழுதும் மறைக்கும் சுடிதார் போட்ட பிறகும் திண்ணென்று தெரிந்தன.

காமம் அதிகமாகவும், கெட்டிக்காரத்தனம் கூர்மையாகவும் உள்ளவர்கள் உடனே போரில் இறங்கிவிடுகிறார்கள். வேட்டைக்கு சொடுக்கு நேரத்தில் தயாராகிறார்கள்.

''விழுந்திடப் போறீங்க ஜாக்கிரதை'' அவளைத் தாண்டும்போது பதட்டத்தோடு சைலேந்திரபாபு கத்தினான். அவன் முகம் முழுவதும் கவலை அப்பிக்கிடந்தது.

''நான் ஏன் விழறேன்?'' வனிதாதேவி அலட்சியத்தோடு அவனைப் பார்த்தாள்.

அவள் நிமிர்ந்து திரும்பியபோது, அவள் அழகுகள் அவனைத் தாக்கின. அவள் அலட்சியம் பிடித்திருந்தது.

''பப்பாளி மரம் முழுக்க எறும்பு. எதுனா ஒரு எறும்பு வெடுக்குனு கடிக்க கையை ஒதறுவீங்க. ஒதறினா கால் பெசகும்.

கால் பெசகுனா இந்தப் பக்கம் இருக்கிறது சாக்கடை. அந்தப் பக்கம் இருக்கிறது என்னான்னு எனக்குத் தெரியலே. அதுனாலே பயந்து போய் கத்தினேன். நீங்க என்ன வேணா பண்ணுங்க எனக்கென்ன'' சைலேந்திரபாபு அசையாது நின்றான்.

''இந்த எறும்பு கடிக்காது. இது சாதாரண கறுப்பெறும்பு. செகப்பெறும்புதான் கடிக்கும்.''

தேவை இல்லாமல் வனிதாதேவி அவனுக்கு எறும்புகள் பற்றி பாடம் நடத்தினாள்.

மான் மருண்டு நின்றால் போதும். வேடன் எளிதாய் பிடித்துவிடுவான். பெண் நட்பாகப் பேசத் துவங்கினால் போதும். நிச்சயம் கெட்டிக்காரன் மடக்கிவிடுவான்.

''அதென்ன முல்லைக் கொடியா? அவ்ளோ ஒயரம் வந்திருக்கு.''

''ஆமா, ஜாதி முல்லை.''

''முல்லைய உயரமா படரவிடமாட்டாங்களே. பந்தலே இடுப்பு உயரந்தான் இருக்கும். அப்பத்தானே பூ பறிக்கலாம். நீங்க பாட்டுக்கு பப்பாளி மரத்துல சுத்தினா, அது எங்கோ இல்ல போய் நிக்கும். அப்புறம் எப்படி பூப்பறிக்கிறது?''

''இந்தக் கொடியில பூப்பறிக்க வாணான்னு விட்டுட்டோம்.''

''ஏங்க கொடி வளர்க்கறது பூ பறிக்கதானே? வாணான்னு விட்டுட்டா...''

''இல்ல... தெருவுல போறவங்களுக்கு வாசமா இருக்கட்டும்னு இந்தக் கொடில பூப்பறிக்காது பப்பாளி மரத்துல படரவிட்டுர்றேன். உள்ளுக்குள்ள ஆறுகொடி இருக்கு. அந்த ஆறு கொடியும் நல்லா பூக்குது. அதுலேருந்து பூ எடுத்துக்குறோம்.''

''ஆறு முல்லைக் கொடியா. நீங்க நர்சரி நடத்தறீங்களா.''

''சும்மா எங்க வீட்டுக்குன்னு போடறோம். நீங்க யாரு?''

''என்னஙக இப்படி கேக்கறீங்க. உங்க அப்பா வாடகைக்கு விட்டிருக்காரே, அங்கதான் நான் இருக்கேன். ஆப்பிள் கன்பெக்ஷனரியில ஒர்க் பண்றேன்.''

''என்னஙக?''

''ஆப்பிள் மிட்டாய் கம்பெனி.''

''ஆமா டவுன்ல இருக்கு.''

''அங்கதான் வேலை செய்யறேங்க.''

தான் வேலை செய்கிற இடத்தைச் சொன்னாலே தன்னை எல்லோரும் மரியாதையாகப் பார்க்கிறார்கள் என்பது தெரிந்த ஒன்று. அதே அஸ்திரத்தையே இங்கேயும் போட்டான்.

''எந்த நம்பர்ல இருக்கீங்க?''

''எட்டாம் நம்பர்ங்க.''

''அங்க ஒரு திருநெல்வேலி ஐயர் இருக்காரே?''

''அவரோட நானும் இருக்கேன்.''

''ஆப்பிள் மிட்டாய் கம்பெனின்னா தினம்... ஸ்வீட் சாப்பிடலாம்ல.''

''வ்வே...'' அவன் நடித்தான்.

''யாரு தினம் ஸ்வீட் சாப்பிடறது. சாப்ட்டு, சாப்ட்டு அலுத்துப் போச்சு. பார்த்தாலே மூஞ்சியைத் திருப்பிக்கணும்னு தோணுது.''

அவன் தொடர்ந்து அவளுடைய எல்லா அவயங்களையும் உற்றுப் பார்த்துக்கொண்டு பேசினான். அவள் அவன் உற்றுப் பார்ப்பதைக் கவனிக்கிறபோது, அவன் அவள் கண்களைச் சந்தித்தான்.

''அங்க என்னவா இருக்கீங்க. கிளார்க்கா?''

''இல்லீங்க. கிளார்க் போஸ்ட்தான் கேட்டேன். வேற வேலை குடுத்துட்டாங்க.''

''பியூனா.''

''இல்லீங்க, கெமிஸ்ட்.''

''அப்படின்னா?''

''மிட்டாய் புதுசு புதுசா கண்டுபிடிக்கிற வேலை.''

''ஹ...ய் இது பெரிய வேலையில்லே...''

அவள் ப்ளஸ்டூவுக்கே உண்டான குழந்தைத் தனத்துடன் பேசினாள்.

''எவ்வளவு சர்க்கரை, எத்தனை சதவீதம் இருக்கணும். மற்ற மூலக்கூறுகள் எத்தனை சதவீதம் இருக்கணும். எவ்வளவு நெய் இருக்கணும். அந்த மாதிரியெல்லாம் எங்களுடைய சோதனைச்சாலையில் துளித் துளியா போட்டு ஆராய்ச்சி பண்ணி அதுக்கப்புறம்தான் பெரிய பெரிய சாக்லெட் வேலைகள். சாக்லெட்டுடைய தரம், மணம் அதெல்லாங்கூட நாங்க சோதனை பண்ணணும்.''

''இதுக்கும் தனியா படிப்பிருக்கா?''

''இல்லீங்க. கெமிஸ்ட்ரி படிச்சா இது தெரிஞ்சிக்கலாம்.''

''நீங்க கெமிஸ்ட்ரில என்ன படிச்சீங்க?''

''எம்.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரீங்க'' பொய் சொன்னான்.

அவள் மிக மரியாதையுடன் பார்த்தாள்.

அந்த மரியாதை அவனுக்குப் பிடித்திருந்தது.

''உங்க பேர் சொல்லலீங்களே?''

''சைலேந்திரபாபு'' அவன் மிக ஆவலோடு தன் பெயரைச் சொன்னான்.

''உள்ள வரட்டுங்களா'' என்று தொடர்ந்து கேட்டான்.

''வாங்களேன்.''

''உங்க செடியெல்லாம் பார்க்கலாங்களா?''

அவள் அந்தப் பக்கம் பப்பாளி மரத்தைப் பிடித்துக் கொண்டு கீழே குதித்தாள்.

''உங்க அப்பா... உங்க வீட்ல எதுவும் சொல்ல மாட்டாங்களா?''

''ஒண்ணும் சொல்லமாட்டாங்க. நீங்க எங்க வீட்ல தானே குடியிருக்கீங்க. யார் யாரோ வந்து பார்க்கறாங்க. நீங்க பார்க்கிறதுக்கென்ன?''

''இவ்வளவு அழகா இருக்கிறதை இப்பதாங்க பார்த்தேன்.''

அவன் மறைபொருளாய்ச் சொன்னான். அவள் தோட்டம் என்று எடுத்துக் கொண்டாள்.

''பவளமல்லிக்கு நாய் அடிச்சிப்போட்டா நல்லா வரும்.''

''என்னாது?'' அவள் திகைப்போடு வினவினாள்.

''உங்களுக்குத் தெரியாதா?''

''நீங்க சொல்றது புரியலையே''

''பவளமல்லி பக்கத்துல ஒரு ரெண்டடி தள்ளி ஒரு குழிவெட்டி அதுல செத்த நாயப் போட்டா பவளமல்லி நல்ல வரும்.''

''ச்சீ... நாத்தம் எடுக்காதா?''

''பொதச்சிடறமில்ல, பொதச்சா என்ன நாத்தம் வரும்.''

''இதுக்காக நாயக் கொல்லுவாங்களா?''

''இதுக்காக நாயக் கொல்லமாட்டாங்க. எங்கனா செத்த நாய் கிடந்தா அதக் கொண்டாந்து இங்க பொதைப்பாங்க. நல்லா வரும். ஒரு பதினஞ்சி நாள்ல பூ பிச்சிக்கிட்டு கொட்டும். நாய் உரம் செடிகளுக்கு அவ்வளவு நல்லது.''

''கடவுளே, அதுக்காக யாராவது நாயை வாங்கி வருவாங்களா. நாங்க வெறும் சாண உரந்தான் போடறோம்.'' அவள் தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்தாள். அவன் ஆவலோடு பல கேள்விகள் கேட்டான். வீட்டுக்குள்ளிருந்து அம்மா வந்து ''யார்'' என்று அவளைக் கேட்க, அவன் தன்னை கைகூப்பி அறிமுகப்படுத்திக் கொண்டான்.

மறுபடியும் அங்கேயும் மிட்டாய் கம்பெனியைச் சொன்னான். தம்பியும் தங்கையும் "ஹா..." என்று வாய் பிளந்தார்கள்.

"நான் ஒருத்தன் இங்க இருக்கிறதே உங்க யாருக்கும் தெரியாதா?"

"தெரியாதுங்களே" அவள் அம்மா வெட்கத்துடன் பின்னடைந்தாள்.

"சரியா போச்சு போங்க. உங்ககிட்ட கொடுக்கச் சொல்லி என் ஃப்ரண்டுகிட்ட ஒரு பேக் ஸ்வீட் கொடுத்தேனே?"

"நல்லா கொடுத்தாரு அவரு. ஒண்ணும் கொடுக்கலே."

"சரி இருங்க வர்றேன்."

அவன் லுங்கியை மடித்துக்கொண்டு விறுவிறு என்று வெளியே போனான்.

"ஏங்க கடைக்கெல்லாம் போகாதீங்க?"

"எதுக்கு நான் கடைக்குப் போகணும். கடையில இருக்கிறவன் எங்கிட்ட மிட்டாய் வாங்கிறான். நான் போய் கடையில மிட்டாய் வாங்குவேனா. இருங்க எதுனா வச்சிருப்பேன்."

ஊருக்கு எடுத்துப் போவதற்காக அவன் தேங்காய் மிட்டாய்கள் ஒரு பை வைத்திருந்தான். உள்ளே போனான். பாதி கொடுக்கலாமா, மொத்தமும் கொடுக்கலாமா என்று யோசித்தான். பெட்டியிலிருந்து அதை எடுத்து பேப்பரில் சுற்றினான். வெளியே வந்தான். அவர்கள் அவனுக்காகவும் அவன் தரப்போகும் மிட்டாய்க்காகவும் ஆவலோடு காத்திருந்தார்கள். இனிப்பு என்பது வயது வித்தியாசமில்லாமல் எவரையும் கவரக் கூடியது. அவர்களின் காத்திருப்பு அவனுக்குப் பிடித்திருந்தது. தொடர்ந்து வேகமாக அஸ்திரங்களை வீசி சாய்த்துவிட வேண்டும் என்று தீர்மானித்தான். இந்தப் போரே

அவனுக்கு சந்தோஷமாக இருந்தது. மேலே போய் அவர்கள் எதிரே நின்றான்.

''வழக்கமாக அஞ்சு கிலோ, ஆறு கிலோ வச்சிருப்பேன். உங்கள பாக்கிறபோது ஒரு கிலோ பாக்கெட்தான் இருக்கு, இந்தாங்க...'' என்று பேப்பரில் மடித்த பொட்டலத்தை வனிதா தேவியின் கையில் கொடுத்தான்.

வனிதாதேவி அவசரமாய்ப் பிரித்தாள்.

''ஹையா தேங்காய் மிட்டாய்'' என்று அவளுடைய சகோதரனும், சகோதரியும் கூறினார்கள். உடனே பிரிக்க அலைந்தார்கள்.

''ச்சு அப்படியெல்லாம் செய்யக்கூடாது'' வனிதா தேவி மற்றவர்கள் எதிரே நாகரீகமாக நடந்துகொள்ள வேண்டும் என்று முயற்சித்தாள். ஆனால், அவள் முகம் அவளுடைய பேராசையைக் காட்டிக்கொடுத்தது.

''அட சும்மா இருங்க. பிரிச்சாத்தான் என்ன? சாப்பிட்டு எப்படி இருக்குன்னு சொல்லுங்க. இது என்னோட புது புராடக்ட். வீட்டுக்கு எடுத்துட்டுப் போகணும்னு வச்சிருந்தேன்.''

''அப்போ உங்க வீட்டுக்கு?''

''அட நான் நெனச்சா தினம் ரெண்டு கிலோ கொண்டுவர முடியும், பிரிச்சு சாப்பிடுங்களேன்.''

அவன் மேலுறையைப் பிரித்துக் கொடுத்தான். அவர்கள் ஆளுக்கு நாலைந்து எடுத்துக்கொண்டார்கள். வேகமாக சலஃபன் பேப்பரைப் பிரித்தார்கள். வாயில் போட்டுக் கொண்டார்கள். அவள் அம்மாவும் ஒன்றுக்கு இரண்டு சாக்லெட்டாக வாயில் போட்டுக்கொண்டாள், மென்றார்கள், அவனையே பார்த்தார்கள்.

''சூப்பரோ சூப்பர்'' அவளுடைய தங்கை கத்தினாள். பையன் ஏதோ சொன்னான். அது வெறும் உளறலாக இருந்தது.

அந்த உளறல் எல்லோருக்கும் சிரிப்பைக் கொடுத்தது.

''புரியுது, நல்லாருக்குனு சொல்றே அதானே'' என்று அவள் தம்பியை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''என்ன வனிதாதேவி சொல்லவே இல்லையே''

''இந்த மாதிரி ஸ்வீட் நான் சாப்பிட்டதே இல்ல. இதுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம். இதைக் கண்டுபிடிச்சது நீங்களா?''

''நானுன்னு என்னை மட்டும் கொண்டாடிக்க முடியாது. என்ன மாதிரி பதினாறு பேரு அங்க வேலை செய்றாங்க. எனக்கு ரெண்டு தடவ புது ஸ்வீட் கண்டுபிடிச்சதுக்காக அவார்டு கொடுத்திருக்காங்க. இந்த தேங்காய் ஸ்வீட் கண்டுபிடிச்சது நான் இல்ல. வேறு ஒரு ஐயரு. ஆனா, இந்த தேங்கய் ஸ்வீட்டுக்கு மேல் முத்து முத்தா இந்த மாதிரி ஷேப் கண்டுபிடிச்சது நான். எந்த மாதிரி தேங்காய் இருக்கணும்னு அவங்களுக்கு தேங்காய் கண்டுபிடிச்சுக் கொடுத்தது நான்.''

''ஒரு தேங்கா எப்படி இருக்கணும் கண்டுபிடிப்பீங்க?''

''நூறு தேங்காய் வாங்குவோம். வெவ்வேறு இடங்கள்ல இருந்து வாங்குவோம். தேங்காய் மேல எங்கேயிருந்து வாங்குன தேங்காய் அப்படின்னு எழுதி ஒட்டி உடைச்சி, அந்த தேங்காயில் இருக்கிற மூலப் பொருள்கள் அதாவது அதுல எண்ணெய்ப் பசை எவ்வளவு இருக்கு, தித்திப்பு எவ்வளவு இருக்கு, புரோட்டீன் எவ்வளவு இருக்கு அப்படீன்னு நாங்கள் அடுத்து கெமிக்கல்ல போட்டு கண்டுபிடிப்போம்.

இந்த தித்திப்புக்கு எவ்ளோ வெல்லப் பாகு ஊத்தணும், வெல்லப்பாகோட நெய் எவ்ளோ கலக்கணும், என்ன மாதிரி நெய் கலக்கணும், வெஜீடபிள் நெய்யா அல்லது பசு நெய்யா அப்படின்னு தீர்மானம் பண்ணுவோம். விதவிதமா சாம்பிள் பார்ப்போம். ஒரு ஸ்வீட்டு தயாராகிறதுக்குள்ள ஒரு இருபத்தஞ்சி விதமான மாற்றம் அந்த ஸ்வீட்டுக்கு நடக்கும்.''

அவர்கள் ஆவலோடு அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இதுக்குன்னு படிப்பு இருக்குங்களா" அவள் அம்மாவும் வியப்போடு கேட்டாள்.

"இல்லீங்க. ரசாயனம் படிச்சேன். ரசாயனம் படிக்கும்போது இந்தக் கம்பெனிலே சேர்ந்தேன். இவங்க எனக்கு ட்ரெயினிங் கொடுத்தாங்க. இப்போ நான் சீனியர் கெமிஸ்ட்."

"என்ன சம்பளம் வரும் தம்பி?"

"பன்னெண்டாயிரத்தி நானூறு ரூபா."

அவர்கள் அனைவருக்கும் 'டக்'கென்று மூச்சடைத்துப் போயிற்று.

'இவ்வளவு இளம்வயதில் இத்தனை பெரிய சம்பளமா' என்று எல்லோர் முகத்திலும் வியப்புத் தெரிந்தது.

"சைலேந்திரபாபுன்னா நீங்க என்ன நாயுடுவா?"

"அந்த மாதிரிதான் வச்சுக்குங்களேன். எங்களுக்கு ஆந்திரா பக்கம். பெரிய கரும்புத்தோட்டம், நெல்லுவயலு எல்லாம் இருக்கு. நான் வேலை செய்யவேண்டிய அவசியமே இல்ல. தோட்டத்தைக் கவனிச்சிக்கிறதுக்கு, நெல்லு கவனிச்சுக்கிறதுக்கு, கரும்பு கவனிச்சிக்கிறதுக்கு அண்ணா தம்பின்னு நெறையப்பேர் இருக்காங்க. நான் படிச்சுட்டு இந்தப் பக்கம் வந்துட்டேன். எனக்கும் தோட்டம்னா ரொம்ப பிடிக்கும். அதனாலதான் உங்க தோட்டத்தை நின்னு பார்த்துட்டுப் போவேன். இன்னிக்குத் தான் வனிதா வேலை செய்றத கவனிச்சேன். என்ன பண்றீங்கன்னு கேட்டேன்."

"ஏம்மா பவளமல்லிக்கு நாய அடிச்சுப் போடச் சொல்றாரும்மா. அநியாயமா இல்ல."

"தப்பா சொல்லாதீங்க. நாய் அடிச்சிப் போடச் சொல்லல. செத்தநாய பவளமல்லிக்கு அருகில் பொதைச்சா நல்லா வரும்னு சொன்னேன்."

''கடவுளே. பொதச்சா நல்லாத்தான் இருக்கும். யார் பொதைக்கிறது?''

''வேணும்னா நா கொண்டாறேன்.''

அவர்கள் மூன்றுபேரும் 'ஐயோ' என்று கத்தினார்கள்.

''இங்க பாருங்க. நாய் பிடிக்கிறதுக்குன்னு கார்ப்பரேஷன்ல ஒரு இடம் இருக்கு. அவுங்க இந்த மாதிரி நாய் பிடிச்சி ஊசிபோட்டு கொன்னுடுவாங்க. கொன்னுட்ட நாய கோணியில சுத்திக்கொண்டாந்து நாம எங்க சொல்றோமோ அங்க பொதைப்பாங்க. இதுக்கு நான் ஏற்பாடு பண்ண முடியும். நீங்க நாயைக் கண்ணாலயே பார்க்கவேணாம். பவளமல்லியாண்ட நாய் பொதைக்கலாமா சொல்லுங்க. மூணு நாள்ல நான் ஏற்பாடு பண்றேன்.''

''ஐயய்யோ அதெல்லாம் வேணாம். உரம் போட்டா தானா வருது.''

''எப்ப உரம் போட்டு எப்ப வரும்?''

''வெளிய நிக்க வச்சி பேசிக்கிட்டிருக்கியேடி. உள்ள வாங்க. ஒரு வா காப்பி குடிக்கலாம்'' அவள் அம்மா வற்புறுத்தினாள்.

ஒரு கிலோ சாக்லெட் நாப்பது ரூபாயாவது இருக்காதா, என்று மனதிற்குள் கணக்குப் போட்டாள்.

''காபியா, ஆளவிடுங்க. ஆபீஸ் லேட்டாச்சு. நான் சாயந்திரம் பார்க்கறேன்.'' அவன் பளிச்சென்று அறுத்துக் கொண்டு வாசல்பக்கம் ஓடினான்.

''நான் ஆபீஸ் கிளம்பறதுக்கு முன்னாடி இந்த நாய் பத்தி சொன்னிங்கன்னா, அதுக்கு ஏத்தாப்ல பண்ணிட்டு போறேன்.''

அவன் மறுபடியும் வாசலிலிருந்து கத்த, அவர்கள் திகைத்துப்போய் நின்றார்கள்.

அவன் தன்னுடைய போர்ஷனுக்குள் புகுந்து கொண்டான். சந்தோஷமாக குளித்தான். அவளுடைய சுடிதார் உடம்பை நினைத்துக் கொண்டான். உள்ளே எப்படி இருக்கும் என்று கற்பனை செய்தான். வேட்டை நாய், முயல் போகும் தடத்தை முகர்ந்து வந்துவிட்டது. இனி முயல் எங்கிருந்தாலும் எப்படி இருந்தாலும் கடிக்காமல் விடாது.

## 3

ஒரு பெண்ணின் பலவீனம் என்ன என்பதை வெகு எளிதாக கண்டுவிடலாம். அந்தப் பெண்ணுக்கு எதில் ஆசை இருக்கிறதோ அதுவே அவள் பலவீனம்.

ஒரு பெண்ணுக்கு உடை மீது ஆசையிருப்பின் உடைகளை வைத்து அவளைக் கவிழ்த்துவிட முடியும். ஒரு பெண்ணுக்கு நகைகள் ஆசையிருப்பின் தங்க நகையை வைத்து வசப்படுத்திவிட முடியும். ஒரு பெண்ணுக்கு அன்பு செய்யவேண்டும் என்ற ஏக்கம் இருப்பின் மிக வேகமாய் அன்பு செய்து அவளை நிலைகுலையச் செய்ய முடியும்.

வனிதாதேவிக்கு அன்பு செய்ய ஆளில்லை என்பதை சைலேந்திரபாபு புரிந்து கொண்டான். ''நான் செடிகளோடு பேசுவேன். செடிங்க என்கூட பேசும்'' என்று அவள் சொல்ல, உள்ளுக்குள் சிரித்துக்கொண்டான்.

அடி என் மாதுளஞ்செடியே உன்னை என் பசிக்கு புசிப்பேனடி என்று தெலுங்கிலே வசனம் சொன்னான். வசனத்திற்கு முடிவில் ஹ...ஹ...ஹ... என்று சிரித்துக் கொண்டான். கால்களைப் பரப்பி அவளை நோக்கி நிதானமாக அடியெடுத்து வைத்தான். சட்டென்று வாரி இறுக்கிக் கொண்டான். கன்னத்தை

இழைத்தான். முதுகு முழுவதும் படர்ந்தான். எல்லா இடங்களை யும் தொட்டான், மனதுக் குள்ளேயே அனுபவித்தான். வெளியே அப்பாவியாய் முகம் வைத்துக்கொண்டான்.

''என்ன சொன்னீங்க. செடிகளோடு பேசறதா, ஏன் பேசணும் செடிகளோட. அதுக பேசுதா, என்னங்க விளையாடறீங்க. ஏதோ நாய், பூனை பேசுதுன்னா நம்பலாம். செடிங்க எப்படிப் பேசும்?''

''நான் கிட்ட வந்தா ஒருமாதிரி உதறி வேகமா ஆடும்.''

''சும்மா டூப்படிக்காதீங்க.''

''நெசம்மா'' அவள் விழிஉயரச் சொன்னாள்.

''ஒரு செடி நீங்க கிட்ட வந்தவுடனே தடதடன்னு ஆடணும். அப்படி ஆடற செடி ஒண்ணு காமிங்க'' என்று அவன் சொல்ல, அவள் இடுப்பு உயரம் வளர்ந்திருந்த ஒரு அடுக்கு நந்தியாவட்டை அருகே போனாள். காற்றில் அந்தச் செடி ஆடியது.

''பாருங்க ஆடுது'' என்று அவள் சொல்ல, அவன் விழிகள் வியப்பில் உயர்ந்தன.

''ஆமாங்க. இதுவரைக்கும் ஆடல. நீங்க பக்கத்துல வந்தவுடனே ஆடுது. எப்படி அது. காத்துல ஆடலியா'' என்று இழுத்தாற்போல் பேசினான்.

''காத்து எல்லா இடத்திலயும்தான் இருக்கு. அங்க செடி காத்துல ஆடுதா. இங்க காத்துல ஆடுற செடி அங்க ஆடாது எப்படி இருக்கும்.''

''ஆமா இப்ப நீங்க அங்க போனீங்கள்னா ஆடுமா?''

''ஆமா ஆடும்'' அவள் மிகுந்த நம்பிக்கையுடன் பேசினாள். வேகமாக நடந்தாள். அந்த செடிக்கு அருகே போனாள். அது துளசிச் செடி. சற்று மௌனமாக இருந்தது.

''ஆடலீங்களே.''

''கொஞ்சம் இருங்க. ஏதோ கோவத்துல இருக்கு. இப்ப ஆடும்'' என்று சொன்னாள்.

காற்றடித்தது, செடி ஆடியது.

''இப்பப் பாருங்க ஆடுது'' என்று அவள் கூவினாள்.

அவன் நம்புவதாக நடித்தான். இந்த நடிப்பை அவள் உண்மை என்ற நம்பினாள்.

''நீங்க சொல்றது நிஜந்தாங்க. செடிகள் உங்ககிட்ட பேசுது. நீங்க என்ன பேசுவீங்க செடிகிட்ட?''

''ஏய் நல்லா இருக்கியா?''

''ஏய்னா கூப்பிடுவீங்க. அது மரியாதையா இல்லையே''

''நாங்கெல்லாம் ஃப்ரண்ட்ஸ்தானே. அதனால ஏய்னுதான் கூப்பிடுவேன்.''

''அப்ப என்னையும் ஏய்னு கூப்பிடுவீங்களா?''

''சேச்சே உங்களப்போயி எப்படி ஏய்னு கூப்பிடறது. நீங்க ஃப்ரண்டா என்ன.''

''நான் அந்நியமா'' அவன் மிகவும் கவலையோடு கேட்டான்.

''அந்நியமெல்லாம் இல்ல. நீங்க பெரியவங்க இல்லியா.''

''பெரியவங்கள்னா ஏய்னு கூப்பிடப்படதா. பரவாயில்ல. நீங்க செடிய ஏய்னு கூப்பிடுறீங்க இல்ல... என்னையும் ஏய்னே கூப்பிடுங்க.''

''அதெல்லாம் தப்புங்க.''

''அப்ப என்னை எப்படிதான் கூப்பிடுவீங்க?''

''பாபுன்னு கூப்பிடுவேன்.''

''நல்லாருக்குங்க. நாய் பத்தி ஒண்ணுமே சொல்லலீங்களே'' பாபு தொடர்ந்து பேசினான்.

''அது மாமாகிட்ட கேக்கணும். நீயா எதுவும் முடிவு பண்ணி மாமாகிட்ட டோஸ் வாங்காதேன்னாங்க.''

''ஏங்க உங்க மாமா ரொம்பத் திட்டுவாரா?''

''கோபம் வந்தா கன்னாபின்னானு கத்துவாரு. கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறார்ல.''

''அதுக்காக கத்தணுமா. உங்க மாமாகிட்டே கேட்டுச் சொல்றீங்களா?''

''எப்படி கேட்கிறதுன்னு தெரியல?''

''நான் கேக்கட்டுங்களா.''

''அய்யோ வாணாங்க. சாக்லெட் வாங்கினதுக்கே ஏன் குடித்தனக்காரங்க கிட்டயெல்லாம் சாக்லெட் வாங்கறே அப்படின்னார்.''

''நான் என்ன காசு கொடுத்தா வாங்கினேன். நான் உங்க மாமாகிட்ட பேசறேன். நீங்க கவலைப்படாதீங்க.''

''ஐயோ. ஏதாவது ஒண்ணு கெடக்க ஒண்ணு, ஆகப்போவுது'' அவள் மிகவும் பயந்தாள். அவள் பயத்தை, அவன் குறித்து வைத்துக்கொண்டான்.

வீட்டுக்கு பயப்படுகிற பெண்களிடம் ஆசை காட்டிப் பேசுகிறபோது, அவர்கள் மிகவும் மிருதுவாகப் போய் விடுகிறார்கள். அதிகம் பலஹீனமாய் மாறிவிடுகிறார்கள்.

வேலி இல்லாத செடியை தெருவோடு போகிற ஆடுகள் மேயும். வீட்டில் அன்பு என்கிற வேலி போட்டு பத்திரப்படுத்தாத பெண்களை தெருவோடு போகும் ஆண்கள் எளிதில் ஏமாற்றுவார்கள்.

காசு சம்பாதிக்கும் ஆர்வம் ஏற்பட்டு அதற்கான வழியும் தெரிந்து சம்பாதிப்பதில் வெற்றியும் பெற்றுவிட்டால், அந்த ஆண்களுக்கு தன்னைவிட மிக உயர்வான ஒரு ஆள் உலகத்தில் எவருமே இல்லை என்று தோன்றி விடுகிறது.

வனிதாதேவியின் மாமா அந்தமாதிரி அகம்பாவத்திற்கு ஆளாகி, தன்னைத் தவிர வேறு எவருமே மனிதப் பிறவி இல்லை என்பதுபோல் நடந்து கொண்டார். அந்த அலட்சியத்தை வீட்டில்தான் அதிகம் காட்டினார்.

மனைவியிடம் கூடை, கூடையாய் தன் கர்வத்தைக் கொட்டினார். மாமாவின் கர்வத்தால் அம்மா படுகிற அவஸ்தை வனிதாவைப் பாதித்தது.

உலகத்துல அன்பான ஆம்பளைங்களே இல்லையா என்று ஏங்க வைத்தது. இருக்கிறார்களா என்று தேட வைத்தது. அப்படித் தேடுகிறபோது விதி வசத்தால், கிரகக் கோளாறால் அன்பான ஆண்பிள்ளையாய் நடிக்கின்ற எவனோ ஒருவனை சில பெண்கள் சந்திக்க நேர்கிறது. முற்றிலுமாய் ஏமாற்றம் அடையும் படியாய் நேர்ந்துவிடுகிறது. உலகத்தில் மிகவும் பாவபட்டவர்கள் தந்தையால் புறக்கணிக்கப்பட்டவர்கள், புருஷனால் வஞ்சிக்கப்பட்டவர்கள், பிள்ளையால் வெறுத்து ஒதுக்கப்பட்ட பெண்கள் தான். இந்த மூன்றுபேரும் வெறுத்து ஒதுக்கிய பெண்களுக்கு மனோநிலை சரியாக இருப்பதில்லை.

கடவுள் என்கிற விஷயத்தைக் கெட்டியாய் பிடித்துக் கொள்வதைத் தவிர வேறு எதனாலும் அவர்களைக் காப்பாற்ற முடியாது. இந்த மூன்று ஏமாற்றங்களிலிருந்தும் மீண்டு எழுந்து சுயமாய் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு இனி ஏமாற மாட்டேன் என்று வாளுயர்த்திப் பிடிக்க வெகு சில பெண்களுக்கே முடியும்.

வனிதாதேவி மாமாவின் கொடுமை அம்மாவின் மீது அமிலமாய் விழுவது கண்டு பொறுக்காமல் உள்ளுக்குள் அன்பான ஆண்பிள்ளைக்கு ஏங்கி, அந்த ஆண் இவனோ, இவனோ என்று தேடிப்பார்த்து சைலேந்திர பாபுவை இவன்தான் என்ற முடிவுக்கு வந்தாள்.

"நீங்களும் உங்க தம்பியுமா சேர்ந்து ரெண்டடி ஆழத்துக்கு ஒரு நான்கடி அகலத்துக்கு பவளமல்லி பக்கத்துல ஒரு பள்ளம் தோண்டி வையுங்க."

"ஏன் என்ன பண்ணப் போறீங்க பாபு?"

"தயவு செய்து பள்ளந்தோண்டி வைங்க. வேற எதுவும் கேட்காதீங்க."

''நாய் கொண்டாரப் போறீங்களா?''

''என்னா கொண்டாறேன்னு உங்களுக்கு என்னாத்துக்கு. நான் சொல்றத தயவு செஞ்சி கேளுங்க. நீங்க எதையும் கண்ணால பார்க்க வேணாம். பள்ளந்தோண்டி வைங்க. இல்ல முடியலியா, நான் தோண்டறேன்'' என்று சொன்னான்.

ஆனால், அக்காவும் தம்பியும் சேர்ந்து பவளமல்லிக்கு அருகே ஒரு பள்ளம் தோண்டி வைத்தார்கள். விடிகாலை ஆறு மணிக்கு சைலேந்திரபாபு மோட்டார் சைக்கிளில் எங்கோ போனான். ஒரு ஆளோடு ஆறரை மணிக்கு திரும்பி வந்தான்.

வனிதாதேவியின் வீட்டுக் கதவைத் திறந்தான். கோணியில் சுற்றப்பட்டிருந்த ஒரு நாயின் உடம்பை பூமிக்குள் போட்டான். மடமடவென்று மண்போட்டு மூடினான். அதன்மீது கற்கள் வைத்தான்.

''ஏன் கல்லு வைக்கறீங்க?''

''இந்த வாசனை பன்றிகளுக்கும், வேற நாய்களுக்கும் தெரிஞ்சிருக்கும். அதனால உள்ளுக்குள்ள நுழைஞ்சி கடிச்சுத்திங்க ஆரம்பிச்சி வெளிய குதறிப் போட்டுடும். உள்ளுக்குள் இருக்கிறத வெளிய எடுக்காம இருக்கிறதுக்கு மேல கல்லுபோட்டு மூடணும்.

பெரிய பலகைக் கல் இருக்கா. அது இருந்தாக்கூட நல்லாருக்கும். அழுத்தி வச்சிரலாம்.'' அவர்கள் பழைய கருங்கல் பலகைக் கல்லை எடுத்து அதன்மீது மூடி வைத்தார்கள்.

நன்றி சொல்லக்கூட வனிதாதேவியால் முடியவில்லை. நன்றி சொல் என்று கூட பாபு சொல்லவில்லை. அவன் நகர்ந்து போய்விட்டான். மறுபடியும் ஒருவாரம் அவர்கள் சந்தித்துக் கொள்ளவில்லை.

சைலேந்திரபாபு, வீட்டுக்காரர் பெண்ணான வனிதாதேவியிடம் நன்றாகப் பேசிப் பழகுவது கண்டு, அடுத்த

போர்ஷன் திருமணமான முப்பது வயது பெண்மணி லேசாய் பொறாமைப்பட்டாள்.

''என்ன பெரிய தோட்டம். ரெண்டு பூ கொடுடீன்னு கேட்டாக்கா, அதெல்லாம் முடியாது அப்படினு மூஞ்சியைத் தூக்கறா'' என்று சைலேந்திரபாபுவிடம் நொந்து கொண்டாள்.

''நீங்க ஏன் மாமி அவங்ககிட்டபோய் பூ கேக்கறீங்க, நீங்களா பூ வளர்க்க வேண்டியதுதானே.''

''வாடகைக்குத்தானே இருக்கோம்.''

''வாடகைக்கு இருந்தா பூ போடக்கூடாதுன்னு இருக்கா. நேர் எதிரே காலிமனைதானே இருக்கு.''

''நாலடி அகலத்துக்கு காலியா விட்டிருக்காங்களே, அந்த இடத்துல பூச்செடி நடலாம்'' என்று சொல்லி, அந்த இடத்தை குத்தி உடனே பூக்கின்ற பால்ஸம் செடிகளை நட்டான். அவளை நீர் ஊற்றச் செய்தான். அவள் குனிந்து நீர் ஊற்றும் போது அவளையே பல கோணங்களில் ரசித்தான். சிலசமயம் காபிக்கும் மற்றவற்றுக்கும் அந்தப் பெண் உதவியாக இருந்தாள்.

''ஒரு பத்து ரூபா கைமாத்தா தரமுடியுமா?'' என்று கேட்டபோது,

''எப்படி பத்துரூபா போதும், இந்தாங்க'' என்று ஐம்பது ரூபாய் கொடுத்தான்.

''நாம வாசபக்கமா நின்னு ஜாஸ்தி பேசவேண்டாம். யாராவது கதை கட்டிவிட்டுடுவா. கொல்லப் பக்கமா நின்னு பேசுவோம்'' என்று, அந்தப் பெண்மணி திட்டம் கொடுக்க அவர்கள் இருவரும் காலையில் பல் தேய்த்துக் கொண்டோ அல்லது காபி டம்ளர் பரிமாறிக் கொண்டோ கொல்லைப்பக்கம் நின்று பேசினார்கள். அவள் துவைக்கும்போதும், பத்துப்பாத்திரம் தேய்க்கும்பொழுதும் நின்று வேடிக்கை பார்ப்பது சைலேந்திர பாபுவின் இன்னொரு பொழுது போக்காக இருந்தது.

''பவளமல்லி பார்த்தேளா பூத்துக் குலுங்கறது. நீங்கதான் ஏதோ உரம் வாங்கிப் போட்டேளாமே. அவ யார்ட்டயோ சொல்லிண்டிருந்தா கேட்டேன்.'' அந்த பக்கத்துப் வீட்டுப் பெண்மணி அவனிடம் பேசினாள்.

பவளமல்லி வாசனை தெரு முழுவதும் வீசியது.

''உங்களுக்கென்ன பவளமல்லிதானே வேணும். லைனா நடறேன்'' என்று சொல்லி அவன் பவளமல்லி நான்கு வாங்கி வந்தான். நல்ல இடைவெளிவிட்டு அந்த போர்ஷனில் நாலு பவளமல்லி நட்டான். அந்த செடிகள் மெல்லிய கொம்பில் பிணைக்கப்பட்டு தலை வணங்கி காற்றில் ஆடின. இன்னும் ஒன்றரை வருஷத்துல பெரிய செடியாயிடும் என்று அவன் அவளுக்கு விவரம் சொன்னான். அங்கே பவளமல்லி நட்டது வனிதாதேவிக்குத் தெரிந்தது. யார் நட்டது என்று ஆவலுடன் கேட்க சைலேந்திரபாபு நான்தான் நட்டேன் என்று சொன்னான்.

''ஐயோ ரொம்ப நல்லா இருக்கே. எனக்கும் இன்னும் பவளமல்லி வேணுமே'' என்று கேட்க, அடுத்த நாள் மோட்டார் சைக்கிளின் பின்னே பதினைந்து பவளமல்லிகளைக் கட்டிக் கொண்டு வந்தான்.

அவர்களுக்கு அடுத்தமனை காலியாக இருந்தது. அந்த மனையில் சுற்றிலும் வேலிபோட பதினைந்து பவளமல்லி களையும் நடச்சொல்லிக் கொடுத்தான்.

நூறு பால்ஸம் கன்றுகள் வாங்கிவந்தான். அவைகளும் மோட்டார் சைக்கிளிலேயே வந்தன.

வனிதாதேவி தலைகால் தெரியாமல் அவனைப் புகழ்ந்தாள். பாபு பாபு என்று கொஞ்சினாள். பக்கத்து வீட்டுப் பெண்மணி தகப்பனாருக்கு உடம்பு சரியில்லை என்று போயிருந்தாள். சாவியை இவனிடம் கொடுத்து, ''எங்க அண்ணன் வந்தா வருவாரு. அவருகிட்ட இந்தச் சாவியைக் கொடுத்துடுங்க. அவர் ரெண்டு நாள் தங்கிட்டுப் போவாரு'' என்று சொன்னாள்.

அந்த சாவியை கையில் வாங்கியவுடனேயே வனிதா தேவியை அங்கே அழைத்துக்கொள்ள வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது.

அந்தமுறை மழைக்காலம் முன்னதாகவே ஆரம்பித்தது. மேகங்கள் திரண்டு, மூன்று நாட்கள் நகரத்தை குளுமையாய் வைத்திருந்தன. கடற்பக்கக் காற்று சட்டென்று ஒரு நாள் நின்று போய் புழுக்கத்தை அதிகரித்துக் கொடுத்தது. ஒருநாள் முழுவதும் புழுக்கத்தில் தவித்த நகரத்தை, மறுநாள் ஒரு சிறிய சூறைக்காற்று வேகமாய் தாக்கியது. சாலையோர மரங்களைக் குலைத்தது. மரங்கள் குலைந்துபோன மறுநாள் மழை கனத்துப் பெய்தது. மூன்று நாட்கள் இடைவிடாது பெய்த மழையால் மலைப்பக்கத்திலிருந்து ஜலம் பொங்கிப் பெருகி இவர்கள் குடியிருப்புப் பகுதி நோக்கி ஆறாகப் பெருகி, சாலைக்குள் திரும்பி வீடுகளைத் தீவுகளாக மாற்றியது. பாதை அறவே அழிந்து போயிற்று. லாரி மட்டுமே அந்தப் பக்கம் வரமுடியும். அதுவும் கவனம் பிசகினால் தலை குப்புற கவிழும் என்ற நிலைமை ஏற்பட்டது.

மறுநாளும் மழை தொடர்ந்தால் வீடுகள் மூழ்கும் நிலை. மின்சாரம் நின்றுவிட்டது. பால் கிடைக்கவில்லை. மருந்துகள் கொண்டுவர இயலாது. என்ன செய்வது என்று அந்த குடியிருப்பில் இருந்தவர்கள் இடுப்புத் தண்ணீரில் நின்றுகொண்டு விவாதித்தார்கள். என்ன செய்வீர்களோ, ஏது செய்வீர்களோ தெரியாது. நாற்பது குடும்பங்களுக்கு நிச்சயம் பால் வேண்டும் அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று அடிவயிற்றிலிருந்து பெண்கள் கத்தினார்கள். உடனடியாக பாலும், தலைவலி மாத்திரைகளும், ஜுர மாத்திரைகளும், நோய்த் தடுப்பு மாத்திரைகளும் கொண்டுவருவது என்று முடிவாயிற்று.

சைலேந்திரபாபு வாழைமரங்களை வெட்டி, அடியில் உருளையான டின்னைக் கட்டி மிதவைகள் செய்தான். துணைக்கு ஆட்களைக் கூப்பிட்டான். ஸ்டேஷன் போறதுக்

குள்ளே நூறு பாம்பாவது நம்மைக் கொத்தும் என்று ஒருவர் பயமுறுத்த மற்றவர்கள் பின்வாங்கினார்கள்.

''சரி நான் மட்டுமே போகிறேன்'' என்று மிதவையை ஸ்டேஷன் நோக்கி அவன் தள்ளிக்கொண்டு போனான். உதவிக்கு வேறு எவரும் போகாததால் வனிதாதேவியின் மாமா அரைக்கால் நிக்கர் போட்டுக் கொண்டு ரெயின்கோட் அணிந்துகொண்டு தலைப்பாகை கட்டிக்கொண்டு கையில் கோலோடு அவனோடு போனார்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வயர்லெஸ்ஸில் நாற்பது குடும்பங்கள் நீரில் சூழப்பட்டுவிட்டன என்று தீயணைப்புப் படைக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக பால் வேண்டு மென்று சொல்லப்பட்டது.

தாம்பரத்திலிருந்து இரண்டு கேன்கள் தரப்பட்டன. அந்தக் கேன்களை கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொண்டு, மிதவையில் வைத்து இருமல் மருந்துகளும், தலைவலி மருந்துகளும், ஜலதோஷ மருந்துகளும், பூச்சிக் கொல்லி மருந்துகளுமாய் அவர்கள் நீரை எதிர்த்து நகருக்கு வந்தார்கள். குடியிருப்புப் பகுதிக்கு வருவதற்குள் முதுகெலும்பு கழன்று விட்டது. இன்னும் நான்கு பேர்கள் இருந்தால் இந்த மிதவையை, சுலபமாக குடியிருப்புப் பகுதிகளுக்கு இழுத்துப் போயிருக்க முடியும்.

இரண்டுபேர் மட்டுமே பளுவோடு நீரை எதிர்த்துப் போவது என்பது பெரிய காரியமாகவும், வேதனை தரக் கூடியதாகவும் இருந்தது.

பாம்புக்குப் பயந்தும் தள்ளமுடியாமல் முதுகுவலியில் தவித்தும், கைகளைக் காயமாக்கிக் கொண்டும் கோபமான வனிதாதேவியின் மாமா கெட்ட கெட்ட வார்த்தைகளால் குடியிருப்பில் இருக்கின்ற அத்தனை ஆண்களையும் திட்டினார்.

''அவன் அவன் வெள்ளையும், சொள்ளையுமா சட்டை போட்டுக்கினு இங்லீஷ்ல பேசினு அலையிறானுவளே தவிர, ஆபத்துன்னா அத்தினி நாயும் ஒளிஞ்சினு கெடக்குது.

உனக்கு தெரியாது தம்பி, கடன் குடுக்க முடியாதவனெல்லாம் பொண்டாட்டிய அடமானம் வெச்சு கடன் வாங்குனது எனக்குத் தெரியும்.

பாலு வாங்க வர்றவனெல்லாம் சினேக்கிருக்கு சினேக்கிருக்குன்றான். நமக்கில்லையா சினேக்கு.''

இதற்குமேல் அவர் பேசிய கெட்ட வார்த்தைகள்ளை வேறு எவருக்கும் சொல்ல முடியாது. ஆனால் சைலேந்திரபாபு அவரை முழுமையாக ரசித்தான். அவருடைய கோபம்தான் அவருடைய பலஹீனம் என்று தெரிந்துகொண்டான்.

எப்பொழுது வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும், எவர்மீது வேண்டுமானாலும் இவரை திசை திருப்பி குரைக்க வைக்கமுடியும் என்று புரிந்து கொண்டான்.

கோபப்படுகிறவர்களை புத்திசாலிகள் வெகு சுலபமாக ஏமாற்றுவார்கள்.

ஆனால், அந்த குடியிருப்புப் பகுதி முழுவதும் அவருடைய வார்த்தைகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் சைலேந்திரபாபுவைப் பாராட்டியது. கஷ்டப்பட்டு நெஞ்சுக்கூடு வலிக்க மிதவையை நீரில் தள்ளி வந்துவிட்டு வனிதாதேவியின் மாமா கெட்ட பெயர் வாங்கிக் கொண்டார்.

சைலேந்திரபாபு நல்ல பெயர் வாங்கிக்கொண்டான்.

''நாளைக்குப் பாலுக்கும் யாராவது போகணுமோன்னோ?'' பக்கத்து வீட்டுப் பெண்மணி மறுபடி கேட்க, சைலேந்திரபாபு திடுக்கிட்டான்.

''நான் மட்டும் போக முடியாதுங்க, கூட யாராவது வரணும். வனிதாதேவி அவுங்க மாமாவைக் கூட்டிக்கிட்டு போறதுக்கு

போகாமலே இருக்கலாம். பாதி நேரத்துல கவுத்து விட்ருவாருன்ற பயத்திலேயே நான் ஒருத்தனா இழுத்துக்கிட்டு வந்தேன்'' என்று அடிக்குரலில் தெரிவித்தான்.

''ஆனா அவரு வீட்டு ஓனரா போயிட்டாரு. நம்மால எதுத்து எதுவும் சொல்லமுடியாது. நாம குடித்தனகாரங்களா போயிட்டோம். அதனால அவர கலக்காம நாம எப்படியாவது நாளைக்கும் பாலுக்கு ஏற்பாடு பண்ணணும்.'' பக்கத்து வீட்டு பெண் கூவினாள்.

யார் நாளைக்கு சைலேந்திர பாபுவோட, பாலுக்கு போறது. அந்தப் பெண்மணி முன்னும் பின்னும் அலைந்து எல்லா ஆண்களோடும் பேசி சைலேந்திர பாபுவுக்காக இரண்டுபேரை தயார் செய்தாள். அவள் புருஷனுக்கு ஆஸ்துமா என்று, அப்போது அவனுக்குத் தெரிந்தது. ரெண்டுநாள் ஆபீஸுக்குப் போகலே. இன்னிக்கு அவர் ஆபீஸ போயே ஆகணும். அவரை நீங்க கட்டியிருக்கிற அந்த தெப்பத்துல வெச்சு ஸ்டேஷன்ல விட்டுர்றேளா. பக்கத்து வீட்டு திருமணமான பெண் கேட்க, அவன் சரியென்று ஒத்துக்கொண்டான். ''நீங்க நாலஞ்சு நாள் சிட்டியிலே இருந்துட்டு வாங்க. ஒண்ணும் அவசரப்பட வேண்டாம். இங்க எல்லாம் சுத்தி நல்ல மனுஷால்லாம் இருக்கா. பாலுக்கு ஏற்பாடு பண்ணியாயிடுத்து. நீங்க வந்து அவஸ்தை படவேண்டாம். நீங்க தம்பி வீட்லயே தங்கியிருங்கோ'' என்று புருஷனை அவள் நகரத்துக்கு அனுப்புவதிலேயே குறியாக இருந்தாள்.

சைலேந்திர பாபுவுக்கு உள்ளுக்குள்ளே பொறி தட்டிது.

மூன்றாம் நாள் இரவு முழுவதும் மழை. இப்பொழுது நீர்மட்டம் அதிகமாக இருந்தது. ரயில்கள் நின்று போயிருந்தன. பக்கத்திலிருந்து பல்லாவரம் வரை லாரி போக்குவரத்து நடந்தது. பல்லாவரத்திலிருந்து சிறிது தூரம் அரிப்பு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டு, சென்னையிலிருந்து பரங்கி மலைவரை போக்குவரத்து இருந்தது. தீயணைப்புப் படையினர்

ராணுவ ரப்பர் போட்டில் வந்தார்கள். சுற்றிப்பார்த்து போட்டோ எடுத்துக்கொண்டார்கள்.

''இம்மாதிரி இடத்துலயெல்லாம் வீடு கட்டணும்னு எவன் சார் சொல்லிக் கொடுத்தான் உங்களுக்கு எங்கனா நெலம் கெடச்சா வீடு கட்டிடறீங்க. தண்ணி போக்குவரத்தெல்லாம் தெரியாத இப்ப வந்து மாட்டிக்கிறீங்க. தண்ணி இறங்கினாதான், எதுனா ஹெல்ப் பண்ண முடியும்'' என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள்.

'அவரை போட்டோ எடுங்க சார். அவரை போட்டோ எடுங்க சார்.' யாரோ அந்த ரப்பர் போட்டை போட்டோ எடுத்தார்கள். 'தைரியம் இருந்தா உன் பேர் சொல்லுடா, நீ சொன்னத நான் இப்பவே பத்திரிகைக்கு அனுப்பறேன்' என்று அங்குள்ள குடித்தனக்காரர்கள் கத்த, குடியிருக்கும் எல்லா ஆட்களும் அவரை நோக்கி சத்தம் போட்டார்கள். ஆனால், அந்த அதிகாரி எந்த அக்கறையுமில்லாமல் மோட்டார் போட்டை ஸ்டேஷனுக்குச் செலுத்திக் கொண்டு போனான்.

சைலேந்திரபாபுவின் பொறுப்பு அதிகமாகியது. இப்பொழுது நான்கு பேர்கள்கூட சேர்ந்து கொண்டார்கள்.

பால் அதிகம் கிடைக்கவில்லை. அரை டின்தான் கிடைத்தது. ஆவின்பால் பவுடர் மூன்று வாங்கிவந்தான். காம்ப்ளான், ஹார்லிக்ஸ் போன்றவை அதிக விலை கொடுத்து கொண்டு வந்தான்.

வனிதாதேவியின் மாமாவுக்கு ஜுரம் வந்துவிட்டது. பாம்பு கடித்துவிட்டது என்கிற பயம் வந்துவிட்டது. எப்படி பக்கத்து வீட்டு பெண்மணியின் புருஷனை, ஆஸ்துமா ஆளை மிதவையில் வைத்து ஸ்டேஷனில் கொண்டு போய் விட்டானோ, அதேபோல அவரையும் விட்டால் நல்லது என்று தாக்கீது வந்தது. அவன் சளைக்காமல் அவரையும் வைத்துக் கொண்டு இன்னொரு ஆளை துணைக்கு வைத்துக்கொண்டு

தள்ளிக்கொண்டு போனான். ஸ்டேஷனில் இறக்கிவிட்டான். வனிதா தேவியின் அம்மாவும், தம்பியும், தங்கையும் வனிதா தேவியும் வீட்டில் தனியாக இருந்தார்கள். ''நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அவன் அவருக்கு உத்தரவாதம் கொடுத்தான்.

பக்கத்து வீட்டுப் பெண்மணி ஹார்லிக்ஸ் பாட்டில் வாங்கிக்கொண்டாள். சைலேந்திர பாபுவுக்கு உணவு பரிமாறினாள்... பேசினாள், சிரித்தாள். ஜோக்கடித்தாள். ''உங்களுக்குப் பிடித்த சினிமாப் பாடல்கள் எது?'' என்று கேட்டு வரிசைப்படுத்தினாள். இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து விவிதபாரதி கேட்டார்கள். மழை மீண்டும் மீண்டும் அடித்துப் பெய்ய, அருகருகே நின்று மழையை வேடிக்கை பார்த்தார்கள். அவள் குழந்தை தூங்கியதும் சைலேந்திர பாபுவின் போர்ஷனுக்கு வந்தாள்.

''உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுனே தெரியலே'' என்று வெட்கப்பட்டு பேச்சை ஆரம்பித்தாள். ''கெட்டியாக ஹார்லிக்ஸ் கரைச்சி வச்சிருக்கேன். வந்து சாப்ட்டு போங்களேன்'' என்று அழைத்தாள். கை உயர்த்தி ஹார்லிக்ஸ் ஆற்றினாள். சைலேந்திர பாபுவுக்கு சகலமும் புரிந்து விட்டது. ஆற்றிக் கொடுத்த ஹார்லிக்ஸைக் கைதொட்டு வாங்கினான். இடக்கையை இழுத்துக் கோர்த்துக் கொண்டான். குடித்துவிட்டு, பாதி அவளிடம் நீட்டினான். அவள் குடித்துவிட்டுக் கொடுக்க, மறுபடியும் குடித்தான்.

காதல்தான் சிக்கல் மிகுந்தது. காமம்தான் பரிமாற்ற மெனில் வெகு வேகமாக, வெகு தெளிவாக, வெகு இயல்பாக அது நிகழ்ந்துவிடுகிறது. காமம் வெறும் காமத்தை மட்டுமே எதிர்பார்க்காது. அது காசையும் எதிர்பார்க்கும். அந்த எதிர்பார்ப்பு அடுத்த வீட்டுப் பெண்மணிக்கு இருப்பது தெரிந்ததும், அவன் தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவள் கையில் போட்டான்.

ஐயோ இது முக்காபவுனு இருக்கும் போலயிருக்கே. அவள் மிக அதிகம் என்பதுபோல் துடித்தாள். ஆனால் ஆவலாய் புரட்டிப் பார்த்தாள்.

''இருக்கட்டும். எனக்கொரு உதவி வேணும்.'' அவன் தங்கமோதிரத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, மிகப்பெரிய வலையை அவள் முன்பு பரப்பினான்.

''என்ன வேணும். நான்தான் என்னையே கொடுத்துட்டேனே'' அவள் வசனம் பேசினாள்.

''அது ஒரு பக்கம் இருக்கட்டும். எனக்கு வேற ஒரு உதவி செய்யணும்.''

அவன் வனிதாதேவியைப் பற்றிச் சொன்னான்.

அவள் யோசித்தாள்.

''இதனால உனக்கொரு பாதிப்பும் இல்ல. நீயும், நானும் எங்கயாவது ஓட முடியுமா, எங்கயும் ஓட முடியாது. உனக்கும் எனக்கும் எட்டு வயசு வித்தியாசம். அதனால அது நல்லா இருக்காது. அதேநேரம் நீ இந்த உதவிய எனக்குப் பண்ணினாக்கா, உனக்கு நான் மூணு பவுனுக்கு நகை பண்ணிப் போடறேன்'' என்று சத்தியம் செய்தான்.

அவள் அதிர்ந்து போனாள். அவளிடம் மொத்தம் நாலரை பவுன்தான் இருந்தது. இன்னொரு மூன்று பவுன் கிடைக்கிறது என்பதற்காக, அவள் எந்தக் கொலையும் செய்யத் தயாராக இருந்தாள்.

''வனிதாதேவி வேணும் அவ்வளவுதானே. நான் கொண்டு வந்து தர்றேன். இங்கேயே சாப்டுட்டுப் தூக்கிப் போட்ருவியா, இல்ல பார்சல் கட்டிண்டு ராஜமுந்திரி போவியா'' அவள் கேலியாகக் கேட்டாள்.

''பார்சல் கட்டிட்டு ராஜமுந்திரி போவேன். அங்க கொண்டுபோயி பத்திரமா வச்சிட்டு மறுபடியும் இங்க வந்துருவேன்'' அவன் கண் சிமிட்டினான்.

ஏமாற்றுவதுதான் வாழ்க்கை என்று ஆகிவிட்ட பிறகு பொய் சொல்வதில் என்ன வஞ்சனை.

இருவரும் மாற்றி மாற்றி பொய் சொல்லிக் கொண்டார்கள். எந்தப் பாவமும் அறியாத வனிதா தேவியைக் கூட்டு வேட்டை ஆடினார்கள்.

''பக்கோடா பண்ணப் போறேன் வர்றியா?''

வனிதா தேவியை அடுத்தவீட்டுப் பெண்மணி கூப்பிட்டாள். தாவணியை இழுத்துக் கொண்டு, பாவாடையை முழங்காலுக்கு மேல் வழித்துக் கொண்டு சாலையில் ஓடும் நீர்தாண்டி வனிதா இந்த போர்ஷனுக்கு வந்தாள்.

ஓடிவந்து குழந்தையைக் கொஞ்சினாள். வெங்காயம் நறுக்கிக் கொடுத்தாள். அவளும் மாவு பிசைந்தாள். பக்கோடா போட்டு எடுத்தாள். ட்ரான்சிஸ்டரில் பாட்டுக் கேட்டாள். சைலேந்திர பாபு வர அவர்கள் சிரித்துப் பேசினார்கள். ஒருவரை ஒருவர் கேலி செய்துகொண்டார்கள்.

''பரணுக்குமேல ஒழுகுது. உங்க அப்பாகிட்ட சொல்லி அங்க கொஞ்சம் சிமெண்ட் போடச் சொல்லணும்.''

''நீ ஏறிப்பாரேன்'' அந்தப் பெண்மணி சொல்ல, வனிதாதேவி ஏறிப் பார்க்க முயற்சித்தாள். சைலேந்திர பாபு உதவினான். அவள் ஸ்டூலில் ஏறி பரண் பிடித்து எகிறி பரணுக்குள் போனபோது, ''அடேங்கப்பா என்ன ஸ்ட்ரெங்த்'' என்று வியந்தான். சூப்பர் ஃபிகரில்ல என்று அந்தப் பெண்மணியிடம் பாராட்டினான்.

வனிதாதேவி மிரண்டு போய் பார்த்தாள்.

''தோட்ட வேலை செய்றா. காலைல அஞ்சு மணிக்கு எழுந்தாக்கா மத்தியானம் வரைக்கும் மாங்கு மாங்குனு வேலை செய்றா. நல்ல வயசு. மனசில கள்ளமில்ல, அதனால உடம்பு இருக்கு''

''ஆனா லேசா தொப்பை இருக்கு'' சைலேந்திரபாபு சொன்னான்.

''அது அரிசி சாப்பிடற எல்லாருக்கும் கொஞ்சம் லேசா தொப்பை வரும். அதுதவிர மத்தியானம் வனிதா தேவி கொஞ்சம் தூங்கறான்னு நினைக்கிறேன். மத்தியானம் தூங்கினாலும் லேசா தொப்பை வரும்.''

''இல்லீங்க மத்தியானம் தூங்கறதில்ல, இருந்தாலும் வருது. எப்படி போக்கறதுனே தெரியலே?''

வனிதாதேவி அவர்கள் சாதாரணமாகப் பேசுவது கண்டு தானும் அந்தப் பேச்சில் கலந்து கொண்டாள்.

வெளியே மழை கொட்டிக் கொண்டிருக்க, அவன் பெரிய மனைபோட்டு அவளுக்கு ஏரோபிக்ஸ் சொல்லிக் கொடுத்தான். சைலேந்திரபாபு விரைவாய் நகர்வது போலவே அவளும் மனைமீது ஏறி இறங்கி உடற்பயிற்சிகள் செய்தாள். உடற் பயிற்சிகள் செய்வதற்காக தாவணியை இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.

''அடடா பார் முன்னால என்ன ஒரு சூப்பர் ஃபிகர்.''

அந்தப் பெண்மணி எதிரிலேயே அவன் அவளை வர்ணித்தான். அவள் வெட்கப்பட்டாள். ஆனால் தொடர்ந்து உடற்பயிற்சிகள் செய்தாள்.

''சைலேந்திரபாபு நான் பாத்ரூம் போய் துணி துவைச்சிட்டு வர்றேன். ஒரே பாத்திரமா வேற கெடக்கு'' துணிகளை வாரிக்கொண்டு அந்தப் பெண்மணி சைலேந்திரபாபுவின் வீட்டுக்குப் போக சைலேந்திரபாபு வனிதாதேவியை நிறுத்தி, அவளுடைய நாடித் துடிப்பைப் பார்த்தான். கைக்குள் கை வைத்து சூடு பார்த்தான். நெஞ்சின் மேல்பகுதியில் விரல்கள் வைத்து மார்பு துடிப்பு பார்த்தான்.

''நல்லா பவர்ஃபுல்லா இருக்கீங்க. ஒண்ணும் கவலையே இல்ல'' என்று அவள் தோள்மீது கை வைத்தான். அவள் அவனையே ஒரு கிறக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான் ஏரோஃபிக்ஸ் செய்தேன். பாடி வந்து புவர்ஃபுல்லா வெச்சிருக்கேன். எவ்ளோ கட்ஸ் இருக்கு பார்த்தீங்களா.'' சட்டையை அவிழ்த்து அவளுக்கு மூச்சுப் பிடித்துக் காட்டினான்.

''தொட்டுப் பாருங்க இங்க'' என்று மார்பின் மேல் பகுதியை விரைப்பாக்கினான்.

அவள் தொட்டுப் பார்த்துவிட்டு இரும்பு போல இருக்கிறது என்று சொன்னாள்.

''அப்பா ரொம்ப அழகு'' அவள் முகத்தைக் கைகளில் தூக்கிக்கொண்டு வியந்தான்.

அவள் மெல்ல பின்னடைந்தாள். 'நான் தொடக் கூடாதா' என்று கேட்டு, அவள் அருகே போய் நின்று கொண்டான். அவள் சுவரோரம் ஒட்டிக்கொண்டாள். இவனும் இரண்டு பக்கங் களிலும் அவளை மறிப்பது போல் நின்று, அவளது கன்னங்களில் முத்தமிட்டான். முகத்தைத் தூக்கி இதழ்களில் பொருத்தினான்.

அவள் பயந்து வாசல் பார்த்தாள்.

''ஐ லவ் யூ'' என்று காதோரம் கிசுகிசுத்தான். தலையை வருடிக்கொடுத்தான். இடுப்பைச் சுற்றி கை போட்டு மெல்ல இறுக்கிக் கொண்டான். கைவிரல்களைக் கோர்த்துக் கொண்டான்.

அதிகம் வற்புறுத்தாமலும், அதேசமயம் விலகாமலும் அவன் செய்த விஷமங்கள் அவளைக் கவிழ்த்துப் போட்டன.

நிறைய ஆண்களுக்கு பெண்களை வசீகரிக்கத் தெரியவில்லை. மிக முரட்டுத்தனமாய் தன் பலத்தை பெண்களிடம் காட்டுகிற பொழுது அவர்களுக்கு வெறுப்பேற் பட்டுவிடுகிறது.

விலகி நின்று வெறும் பேச்சுதான் என்று சிலர் முயற்சி செய்கிறபோது, போடா பயந்தாங்கொள்ளி என்கிற கோபம் வருகிறது. வேகம் காட்டாது, அதே சமயம் மிக நிதானமாய் ஒரு

பந்தய குதிரையைப் பழக்குவது போன்ற மென்மையோடு அவளை அணுகி அங்கங்கே தொட, அவள் கிறங்கிப் போகிறாள். சற்றுநேரம் அவளைத் தொட்டுவிட்டு அவனாகவே விலகினான். விலகி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு 'நேற்றுவரை நீ யாரோ நான் யாரோ' என்று பாட்டுப் பாடினான். அந்நேரம் அந்தப் பாட்டு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அந்தப் பெண்மணி முறுக்கிப் பிழிந்த துணிகளோடு உள்ளே நுழைந்தாள். வராண்டாவில் உலர்த்தினாள்.

''சைலேந்திரபாபு அந்தப் பக்கம் திரும்பிக்க'' என்று அவள் அவனை சுவர்ப்பக்கம் திரும்ப வைத்துவிட்டு இடுப்புப் புடவையை அவிழ்த்து தரையில் எறிந்து, வேறு புடவை உடுத்திக்கொண்டு இப்ப திரும்பலாம் என்று சொன்னாள்.

அந்த நேரம் வரை சைலேந்திரபாபு திரும்பவே இல்லை.

மிக உண்மையான, அமைதியான, கம்பீரமான ஒரு ஆண்போல் தலை கவிழ்ந்து உட்கார்ந்து இருந்தான்.

''பாபு அரிசியும் கெரசினும் தர்றாங்களாம் ரேஷன் கடையிலே. புதுசா வந்திருக்காம்.'' யாரோ வேறு ஒரு பகுதியிலிருந்து குரல் கொடுக்க, அவனும் இன்னும் சிலரும் மிதவையைத் தள்ளிக்கொண்டு நீரில் இறங்கினார்கள். இழுத்துக்கொண்டு போனார்கள். எல்லார் வீட்டிலிருந்தும் டின்னும் அரிசிக்கான பையும் வாங்கிக்கொண்டார்கள். மேலே போட பிளாஸ்டிக் ஷீட் எடுத்துக் கொண்டார்கள்.

பதினாறு பேர் குடும்பக் கார்டை வாங்கிக் கொண்டு அவர்கள் ரேஷன் கடை நோக்கிப் போனார்கள்.

சைலேந்திர பாபுவினுடைய உற்சாகம் மற்றவர்களுக்கும் சுற்றிக்கொள்ள இன்னும் சில ஆட்களும் சேர்ந்து கொண்டார்கள்.

''இந்த ஒரு பையன் மட்டும் இந்த குடித்தனத்துல இல்லையின்னாக்கா மொத்தம் இடமும் நாறிட்டிருக்கும்.

துணிச்சலா அவன் கீழ இறங்கி நின்னு செய்தான். எல்லாரும் பின்னாடிப் போறாக" அந்தப் பெண்மணி பாராட்டினாள்.

"அவரு என்னை லவ் பண்றதா சொன்னாரு" அடிக்குரலில் அந்தப் பெண்மணியிடம் வனிதாதேவி சொன்னாள்.

"எங்கிட்டக் கூட சொன்னான். வனிதாதேவியை ரொம்ப புடிச்சிருக்குன்னு. நான் கல்யாணம் கட்டினா வனிதா தேவியத்தான் கல்யாணம் கட்டுவேன் அப்படீன்னு சொன்னான்."

"பெரிய குடும்பத்துப் புள்ள. ஆந்திராவுல நெலம் நீச்செல்லாம் இருக்கு. அவனுக்கு கல்யாணத்துக்கு பார்த்துக் கிட்டிருக்காங்க. ஆனாலும் அவனுக்கு ஆந்திரா பிடிக்கல.

இங்கதான் லைஃப். இங்கதான் ஆபீஸ் உத்யோகம் பார்க்கமுடியும். ஆந்திராவுல இருந்தா விவசாயந்தான். எனக்கு விவசாயத்துல இஷ்டமில்ல. ஆபீஸ் வேலைல பெரிய ஆளா வரணும்னு நெனக்கிறேன் அப்படீன்னு சொல்றான்.

தமிழ்ப் பொண்ணு பார்க்கணும்னு ஆசைப்படறான். அவனுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. உங்கிட்ட கேட்டு சொல்லச் சொன்னான்."

"நான் என்ன சொல்றது. எங்க வீட்லயில்ல கேட்கணும்?"

"நீ சரின்னு சொன்னாதானே வீட்ல போய் பேச முடியும். உங்க வீட்ல போய் பேசிட்டு நீ வாணான்ட்டா எங்கபோயி மூஞ்சிய வச்சிக்கிறது."

"நீங்க என்ன நெனக்கிறீங்க பாபுவைப் பத்தி?" வனிதாதேவி கேட்டாள்.

"ரொம்ப நல்ல பையன். பன்னண்டாயிரத்து நானூத்தறுவது ரூபாய் சம்பளம். நான் போன மாசம் கூட சம்பளக் கவர் பார்த்தேன். இத்தன படிப்பு, இத்தன காசுக்கு ஒவ்வொருத் தன் தலைவிரிச்சி ஆடுவான்.

இவன் இடுப்புல கயிறு கட்டிக்கிட்டு ரேஷன் கடைக்கு எல்லாருக்காகவும் போயிட்ருக்கான். யார் போவாங்க சொல்லு. இப்படி ஒரு ஆம்பளை உனக்கு புருஷனா வந்தா தலைல வச்சி தாங்குவான். உனக்குத்தான் என்ன குறைச்சல். நெலம் நீச்சு எல்லாம் இருக்கு.

உங்க அப்பாவுக்கு நீ ஒரே பொண்ணு. பொறுப்பான தாய் மாமன். சுமாரா ஒரு கல்யாணம் நடத்துனாக்கூட இங்கியே வேறொரு கட்டடம் கட்டிக்கிட்டு, நீங்க தனிக் குடித்தனம் போயிடலாம். எனக்கென்னமோ நல்லதா படுது.

அதுக்கு முன்னாடி நீங்க ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துப் பேசி புரிஞ்சுக்கங்க. அப்புறம் வீட்ல போயி சொல்லுங்க.''

''எங்க பாக்கறது?''

''ஏன்... என் வீடு இல்லையா? என்னை பார்க்கற மாதிரி வா. இங்க உக்காந்து பேசு'' என்று அந்தப் பெண்மணி எடுத்துக் கொடுத்தாள்.

ரேஷன் கார்டுக்கு பொருள்கள் வாங்கிக்கொண்டு அவரவர்க்கு கொண்டு போய் பொருள்களைக் கொடுத்து விட்டு, நனைந்த பேண்ட்டை பிழிந்து கொடியில் போட்டுவிட்டு இடுப்பில் துண்டும் வெற்று மார்புமாய் சைலேந்திரபாபு உள்ளே நுழைந்தான்.

''நான் வாசல்ல இருக்கேன். நீங்கபோய் கொல்லைப் புறமா போய் உட்கார்ந்து பேசுங்க'' என்று அந்தப் பெண்மணி வாசலில் காய் நறுக்க உட்கார்ந்து கொண்டாள்.

சைலேந்திரபாபு கொல்லைப்புறம் போய் படியில் உட்கார்ந்து கொண்டான். வனிதாதேவி தயங்கினாள். எட்டி தன் வீடு பார்த்தாள். பிறகு மெல்ல நடந்து அந்தப் படியில் அவனுக்கு அருகே போய் உட்கார்ந்து கொண்டாள்.

உட்கார்ந்த மறுவினாடியே சைலேந்திரபாபு அவளை இழுத்து தன்னோடு இறுக்கிக்கொண்டான். அவள் வாசலில் காய்நறுக்கும் பெண்மணியைப் பார்த்து வெட்கப்பட்டாள்.

சைலேந்திரபாபு கொல்லைக் கதவை மெல்ல ஒருக்களித்துச் சாத்தினான். அந்தக் கதவின் மறைப்பு அவளுக்கு சௌகரியமாக இருந்தது. வெட்கத்தை நழுவ வைத்தது. அவன் கைகள் எல்லா இடத்திலும் படர அவள் கிளர்ந்தாள்.

''என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று முட்டாள்தனமாய் கேள்வி கேட்டாள்.

அன்று இரவு, அந்தப் பெண்மணி சைலேந்திர பாபுவைத் தழுவிக்கொண்டு, அவன் ஆட்டங்களுக்கு ஈடு கொடுத்தபடியே அவனிடம் பேசினாள்.

''அவ, லவ் யூன்னு சொன்ன பிறகு எனக்கு மூணு பவுனு குடுத்துருவேல்ல. இல்லே கல்யாணம் வரைக்கும் காத்திருக்கணுமா'' என்று கேட்டாள்.

''எப்ப அவ எனக்கு சொந்தமாயிட்டாளோ, அப்ப உனக்கு மூணு பவுன்'' என்று சைலேந்திரபாபு அவளுக்கு முத்தம் கொடுத்தபடி சத்தியம் செய்தான். .

''ஒரு பவுன் அட்வான்சா குடுக்கறது.'' அவள் அவனை இறுக்கிக்கொண்டு கொஞ்சினாள்.

''ஒன்றரை பவுன் அட்வான்சா குடுக்கறேன்'' அவன் கழுத்துச் சங்கிலியைக் கழற்றி அவள் கழுத்தில் போட்டான்.

அவள் திக்குமுக்காடிப் போனாள்.

உடனே போய் வனிதாதேவியைத் தடதடவென்று இழுத்து வந்து அவனுக்கு முன்னே நிறுத்தவேண்டுமென்று ஆத்திரப்பட்டாள். பெண்ணுக்குப் பெண் துரோகம் செய்வாளா என்று, வழக்கமாய் உலகத்தில் உள்ளோர் கேள்வி கேட்பார்கள்.

ஆணுக்கு ஆண் துரோகம் செய்கிறபோது, பெண்ணுக்குப் பெண் துரோகம் செய்யமாட்டாளா? துரோகம் எங்கு வேண்டு மானாலும், எப்போது வேண்டுமானாலும், எவரால் வேண்டு மானாலும் நடக்கும்.

அடுத்த நாளிலிருந்து வானம் வெளிறி மழை நின்றது. ஆனால் வனிதாதேவி சைலேந்திரபாபு காதல் வளர்ந்தது.

"அவன் தெலுங்கு பேசற கம்மார நாயுடு. ராஜமுந்திரி பையன். முரட்டு விவசாயி. அவன் குடும்பத்துக்கும் நம்ம குடும்பத்துக்கும் எப்படி ஒட்டும். திடும்னு வந்து லவ் பண்றேன்னா என்ன அர்த்தம். பைத்தியமா பிடிச்சிருக்கு உனக்கு. என்னமோ மழை பெஞ்ச அன்னிக்கு கையப்புடிச்சி கூட்டினு போனாங்கிறதுக்காக வீட்டுக்குள்ள பொண்ணைத் தூக்கிட்டுப் போக முடியுமா?

தோட்டம் தோட்டம்னு நாலு பேரோட நீ பேசற போதே நான் நெனச்சேன். இது எங்கியோ குப்புற கவுரப்போவுதுன்னு. அதே மாதிரி ஆயிப்போச்சுப்பா. கொஞ்சம் அசந்து தூங்கினா எவனாவது உள்ளுக்குள் பூந்துர்றானுங்க.

கூப்பிடு அந்தப் பையனை. நான் சொல்றேன்" மாமா அதட்டினார்.

வனிதாதேவி சுவரோடு ஒட்டிக்கொண்டு நின்றாள். அம்மா என்ன செய்வதென்று தெரியாமல் அவளை வெறித்துப் பார்த்தாள். மாமாவின் மகனும் மகளும் பயந்தார்கள்.

"கல்யாணமெல்லாம் பண்ணிக் கொடுக்க முடியாதுப்பா. அவளுக்கு வேற எதுனாச்சும் ஏற்பாடு பண்ணப் போறேன். ஏதோ ஒருத்தருக்கொருத்தர் புடிச்சிருக்கலாம். பழகியிருக்கலாம். பேசியிருக்கலாம். ஃபிரண்ட் ஷிப்பா நெனச்சி விட்ருங்க. தேவையில்லாம அதிகமாக எதுவும் வளர்த்துக்காதீங்க. அப்பறம் நான் ரொம்பப் பொல்லாதவனா இருப்பேன். கேட்பார் இல்லேன்னு நினைச்சுக்கினியா? நீ உங்க பக்கத்து போர்ஷன் பொண்ணோடு கட்டிப் புடிச்சிக்கிட்டு பேசறேன்னு எனக்கு கம்ப்ளைண்ட் வருது. என்னடா பண்றதுன்னு நினைச்சுட்டுருக் கேன். கடைசில எங்க வீட்டு பொண்ணுமேல கை வைக்கிறியே நல்லாவா இருக்கு. ஜாக்கிரதை.

படிச்ச பையன்கிறதுனால மொதலும் கடைசியுமா இப்ப சொல்றேன்.''

''இல்லீங்க. நான் உங்க மகளை உண்மையாவே லவ் பண்றேன்.'' சைலேந்திரபாபு சொன்னான்.

''டேய், அடிபடப்போறே. மரியாதையா போயிடு'' வனிதாதேவி மாமா அவனை எட்டித்தள்ளினார்.

அவன் கோபமானான்.

இரண்டு நாள்கள் காணாமல் போனான். மூன்றாம் நாள் பக்கத்துப் போர்ஷன் பெண்மணியின் மூலம் வனிதாதேவிக்குச் செய்தி அனுப்பினான்.

சில துணிமணிகளுடன் புறப்படத் தயாராக இருக்கச் சொன்னான்.

''இன்னொரு ஒன்றரை பவுன் கொடுத்திட்டீன்னா, நான் அவளை அழகா உங்கூட அனுப்பி வைக்கிறேன்'' அந்தப் பெண்மணி அவனிடம் மிருதுவான குரலில் பேரம் பேசினாள்.

பெட்டியைத் திறந்து இருபது கிராம் ஃப்ரேஸ்லெட் எடுத்து அவளிடம் கொடுத்தான். ''ஒன்றரை கேட்டே, ரெண்டுக்கு மேல் தர்றேன். அவள் என்கூட எப்படியாவது அனுப்பிவை. நாங்க ராஜமுந்திரி போய்ட்டோம்னு சொல்லு. ஆனா நாங்க ராஜமுந்திரி உடனே போமாட்டோம். மதுரை, திருச்சி பக்கம் போய்ட்டுத்தான் போவோம்'' என்று அவன் விளக்கினான். வனிதாதேவிக்கு அவள் செய்தி சொன்னாள். அவன் தயாராக இருப்பதாக விவரம் சொன்னாள்.

''அவங்கூடப்போ. அதான் உனக்கு நல்லது'' என்று எடுத்துரைத்தாள்.

உள்ளாடைகளை, பத்துப்பனிரெண்டு புடவைகளை எடுத்துக்கொண்டு வனிதாதேவி தயாராக இருக்க, அவன் பிரைவேட் டாக்ஸி கொண்டுவந்து அவளை ஏற்றிக் கொண்டு

தெற்கு நோக்கிப் போனான். திருச்சியில் இரண்டு நாட்கள் தங்கி அவளை ஒரு சிறிய பிள்ளையார் கோயிலில் தாலி கட்டி திருமணம் செய்து கொண்டான். மனைவியாக்கி அனுபவித் தான். மதுரைக்கு அழைத்துப் போனான். மதுரையிலிருந்து கர்நாடகாவுக்குள் நுழைந்தான். கர்நாடகாவிலிருந்து ஆந்திராவிற்குப் போனான். ஆந்திராவிலிருந்து ஒன்பதுநாள் கழித்து ராஜமுந்திரிக்குள் நுழைந்தான். ராஜமுந்திரியிலும் அவன் அவளை அவன் வீட்டிற்கு அழைத்துப் போகவில்லை.

கொத்துக்கொத்தாய் தெருவில் நிற்கின்ற பெண்கள் வசிக்கின்ற பேட்டைக்கு அழைத்துப்போய், அங்கு ஒரு வீட்டில் ஒரு அறை வாடகைக்கு எடுத்து, இவளைத் தங்க வைத்து, அங்கிருக்கிறவர்களை அவளுக்கு சாப்பாடு போடச்சொல்லி, தன் ஊருக்கு அதே டாக்ஸியில் போய் வந்து, அந்த வீட்டில் பதினைந்து பதினாறு நாட்கள் தங்க, போலீஸ் அடிக்கடி தேடி வருகிறது என்று அந்த வீட்டார் சொல்ல, அவன் அவளோடு அவனுடைய கிராமத்திற்குப் போனான். போலீஸில் சரணடைந்தான்.

''நாங்கள் இரண்டுபேருமே வயதுக்கு வந்தவர்கள். ஒருவரை ஒருவர் மனதாரக் காதலிக்கிறோம். இந்தக் கோயிலில் திருமணம் செய்துகொண்டேன். இது என் வீடு. என் வீட்டில்தான் இருக்கப் போகிறாள்'' என்று சொல்ல, ஆந்திரா போலீஸ் தமிழக போலீஸின் தேடல் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

அவனுடைய வீடு அவளை எடுத்துக்கொள்ளவில்லை. இருபத்தி ஆறு நாட்கள் கழித்து மறுபடியும் சென்னைக்கு வந்து, வட சென்னையின் ஓரத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பில் அவளைக் குடிவைத்தான்.

வேலைக்குப் போய் தனக்கு நேர்ந்ததைச் சொல்லி இருபத்தோரு நாட்கள் விடுப்பு என்று அறிவித்து, அதை சமன்செய்ய சனி, ஞாயிறு கூட வேலைக்கு ஓடினான். மெல்ல, மெல்ல சாமான்கள் வாங்கிப்போட்டான். இந்த சமையல் செய்,

அந்த சமையல் செய் என்று அதட்டினான். இரவு மட்டும் கொஞ்சினான். வேகமாக இயங்கினான்.

அவள் எதிர்பார்த்த அன்பு, அவள் எதிர்பார்த்த மரியாதை, அவள் எதிர்பார்த்த கவனிப்பு அவனிடம் கிடைக்கவில்லை. வெறும் அடிமைபோல் வாழ்ந்தாள். சமையல் செய்துவிட்டு காத்திருப்பாள். சாப்பிட்ட பிறகு அவனோடு படுக்கைக்குப் போய் அவன் என்னவெல்லாம் சொன்னானோ அதையெல்லாம் செய்துகாட்டி, அதை, இதைச் செய்கின்ற எடுபிடிப் பெண்ணாய் மாறினாள்.

ஒரே ஒரு தொட்டிகூட அந்த வீட்டில் வைக்க முடிய வில்லை. மிகப்பெரிய தோட்டத்திற்கு நடுவே வாழ்ந்துவிட்டு, தினம் தினம் இதமான பூக்களை முகர்ந்துவிட்டு, மரங்களோடும் செடிகளோடும் வாழ்ந்து விட்டு இப்படி நாலு சுவருக்கு நடுவே சிறையில் இருப்பதுபோல இருக்க அவளால் முடியவில்லை.

ஒரு பிற்பகல் அம்மா தேடிவந்தபோது, அவள் வாய் விட்டு அலறினாள். தான் உண்டாகி இருப்பதைச் சொன்னாள்.

அம்மாவின் உறவினர்கள் வந்து பார்த்துவிட்டு மாமாவைச் சமாதானப்படுத்தி, அவளை அந்தக் குடியிருப்பிற்கு கூட்டிக் கொண்டு போனார்கள். எதிரே குடியிருந்த தனி போர்ஷனில் அவளையும் அவள் புருஷனையும் தனியாக குடித்தனம் வைத்தார்கள். நகைகள் போட்டு, புடவைத் துணிமணிகள் எடுத்துக்கொடுத்து, பாத்திரம் பண்டங்கள் வாங்கி தனிக் குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். முன்பு அங்கிருந்த பெண்மணி வேறொருவனோடு தொடர்பு வைத்துக்கொண்டு புருஷனை விட்டுவிட்டு குழந்தையோடு வேறு ஊருக்குப் போய் விட்டாள்.

புருஷன் ஒழிந்தது பீடை என்று, அதே வீட்டில் சிறிதளவும் வெட்கமின்றி தொடர்ந்து வாழ்ந்துவந்தான்.

“எம் பொண்டாட்டி விஷப் பாம்புன்னு நான் தாலி கட்டின மறுவாரமே எனக்குத் தெரிஞ்சு போச்சு. உன் புருஷனைப் பத்தி

உனக்கு ஏதாவது தெரியுமாம்மா. நான் இப்ப சொல்றேன் கேட்டுக்க.

இவன் ஒண்ணா நம்பர் அயோக்கியன். பெரிய திருடன். எப்படியாவது இவனை கைக்குள்ள போட்டு ஒழுங்கா குடித்தனம் பண்ணு. எப்பவேணா அறுத்துட்டு போய்டுவான். இவன் வீடு எந்தக் காரணம் கொண்டும் உன்னை ஏத்துக்காது.

ஒருவேளை இவன் உன்னை விட்டுட்டு ஓடிப் போய்ட்டான்னு வச்சிக்கோ. என்னை மாதிரியே நீயும் விட்டுது பீடைன்னு நெனச்சிக்கிட்டு நிம்மதியா இரு. இவன் பின்னாடி தேடிட்டு ஓடாதே. உன் வாழ்க்கை மொத்தமும் பாழாயிடும்.

உடம்பொறந்த சகோதரனா சொல்றேன். வக்கில்லாதவன் கூட வாழ்ந்துடலாம். கெட்டிக்காரங்களும், அயோக்கியனுமா இருக்கிற ஆட்களோட வாழறது ரொம்ப ரொம்பக் கஷ்டம். நிம்மதியா தூங்கவிடமாட்டானுங்கம்மா. நிறைவா சாப்பிடவிட மாட்டானுங்கம்மா. வாய்விட்டு சிரிக்க விடமாட்டானுங்கம்மா.

மறுபடி சொல்றேன். இவன் வேணாம்போடி அப்படின்னு சொல்லிட்டா, பெட்டிப் படுக்கையைத் தூக்கிட்டு உங்க வீட்டுக்குப் போயிடு. இதை ஏந்தெரியுமா சொல்றேன். நீ உண்டாகி இருக்கேன்னு உங்க அம்மா சொன்னா. அந்த குழந்தைக்காக சொல்றேன். இவன் விட்டுட்டா பீடைவிட்டுது, சனி விட்டுது அப்படின்னு இரு'' என்று உபதேசித்தான். வனிதாதேவி வயிறு கலங்கினாள்.

இவள் கொடுத்த அவமானத்தால் மாமா புறக்கணிக்க, அம்மா கரித்துக்கொட்ட, மாமாவின் குழந்தைகள் முகம் தூக்கிக்கொண்டு புறம்போக, புருஷன் இரவு கூடலுக்கு மட்டுமே அழைக்க, அக்கம் பக்கத்தோர் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் பார்க்க, வாழ்க்கை முழுவதும் தனிமையில் தேவையற்ற ஒரு கலவரத்தில் இடைவிடாத படபடப்பில் வனிதாதேவி கழித்தாள்.

மிகப்பெரிய தவறு செய்துவிட்டோமோ என்று பயந்தாள். காதலித்து கல்யாணம் செய்துகொண்ட எல்லோருமே

இப்படித்தான் தனிமையை அனுபவிப்பார்களா. எல்லோருமே இப்படித்தான் ஏடாகூடமாய் பிறர் பார்க்க வாழ்வார்களா. எல்லோரும் எவரோடும் ஒட்டாமல் புருஷன் காலை மட்டுமே கெட்டியாய் பிடித்துக் கொண்டு வேறு கதியின்றி சுருண்டு கிடப்பார்களா என்று யோசிக்க முற்பட்டாள்.

உடல் வேதனை வாட்டி எடுத்தது. கரு வளரவளர புரட்டி எடுத்தது. கரு வளர்வது வேதனையான விஷயம்தான். அந்த வேதனை மற்றவர்களால் பாராட்டப்படுகிறபோதுதான் சந்தோஷமாகிறது.

''என்னாடி அவசரம் உடனே வயித்துல வாங்கிக்கிட்டே, உன் புருஷன் என்ன சொன்னான், அவனுக்கு நீ இல்லேன்னாக்கா வேற எங்கனா போயிடப் போறாண்டி எடுத்திர்றியா'' அம்மா கேட்ட போது அழுகை வந்தது.

எதற்காக இப்படிப் பெண்ணாய்ப் பிறந்தோம் என்று புரியாமல் போயிற்று. வேறு வழியின்றி அவள் வீட்டு தோட்டத்திற்குப் போய் மறுபடியும் செடிகளோடும் மரங்களோடும் புற்களோடும் பேசத் துவங்கினாள்.

தனிமையில் தாவரங்களோடு பேசுவது, அவளை அன்புக்கு ஏங்குவதை அதிகப்படுத்தியது. மனிதர்கள் செய்யாத அன்பை, தாவரங்கள் செய்வதாக கற்பனை செய்து கொண்டாலும் உண்மையில் மனிதர்கள் அன்பு செய்ய வேண்டுமென்ற ஆசைதான் அதிகமாக இருந்தது.

யாரேனும் தலைதடவி கொஞ்ச மாட்டார்களா? எவர் மடியிலும் சுருண்டு படுத்துக்கொள்ள மாட்டோமா? எவராவது வாய்நிறைய வனிதா, வனிதா என்று கூப்பிடமாட்டார்களா? யாராவது செல்லமாய் கோபித்துக் கொள்ள மாட்டார்களா? யாராவது தூங்கும்போது கால்பிடித்து விரல்சொடுக்கு எடுக்கமாட்டார்களா? யாராவது குளிப்பாட்டிவிட மாட்டார்களா? யாராவது முதுகு தேய்த்துவிட மாட்டார்களா? யாராவது உடை

உடுத்தி வெளியே வரும்போது கைதட்டி பரவசப்பட மாட்டார்களா என்று பல்வேறுவிதமாய் ஏங்கினாள்.

ஒருநாள் முழுவதும் சின்னச்சின்ன விஷயங்களுக்காய் ஏங்கிக் கொண்டேயிருந்தாள். அதிகமாக அவனிடமிருந்து விலகத் தொடங்கினாள்.

சைலேந்திர பாபுவும் தன்னுடைய குறிக்கோளை திசைமாற்றினான். இன்னும் அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

மாண்டியாவின் வேர்க்கடலையும், கரும்பும், உளுத்தம் பருப்பும் மைசூருக்கு வியாபாரத்திற்காக வந்தன. மைசூரில் மிகப்பெரிய மிட்டாய் தொழிற்சாலை புதிதாய் ஆரம்பிக்கப்பட்டு மகத்தான வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தது. அதனுடைய தலைமையகம் பெங்களூரில் இருந்தது. ஒரு பிற்பகல் பொழுது போகாமல் அதற்கு விண்ணப்பம் போட, மறுவாரமே அவனை நேர்முகத் தேர்வுக்கு வரச்சொல்லி கூப்பிட்டிருந்தார்கள்.

உறவினரைப் பார்க்கப் போவதாய் சொல்லிவிட்டு நேர்முகத் தேர்விற்குப் போய் அங்கு அவர்கள் கேட்ட கேள்விக் கெல்லாம் சைலேந்திரபாபு தெளிவாகப் பதில் சொன்னான்.

இப்பொழுதே மாண்டியா போகலாம் வருகிறீர்களா என்று கேட்க, அவர்களோடு மாண்டியாவிற்குப் போய் கரும்புத் தோட்டம் பார்த்து, கரும்புத் தோட்டத்தில் வளர்ச்சியை கவனித்து, பிறகு மைசூருக்கு வந்து அந்த தொழிற்சாலையில் யந்திரங்களைப் பரிசோதித்து, பரிசோதனைச் சாலையின் தரத்தைக் கண்டுகொண்டு தான் அங்குசேர விருப்பம் இருப்பதாக மனதார தெரிவித்தான்.

சம்பளம் நல்லபடியாக இருந்தால் சந்தோஷமாக இருக்கும் என்று தெரிவித்தான். கிட்டத்தட்ட இரண்டு மடங்கு சம்பளம் அவனுக்குத் தருவதாக அவர்கள் வாக்களித்தார்கள்.

இது அவனைப் பொறுத்தவரையில் அசுரப்பாய்ச்சல். ராட்சஷ வளர்ச்சி. அவனுக்கு மிகப்பெரிய பதவியும் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தார்கள்.

பரிசோதனைச் சாலையை ஆறாகப் பிரித்து அதில் ஒரு பரிசோதனைச் சாலையை முழுக்க அவன் பொறுப்பிலேயே விடுவதாகவும், ரிசர்ச் அன்டு டெவலப்மெண்ட் என்கிற மூன்றாவது பிரிவிற்கு அவனை தலைமையாக நியமிப்பதாகவும், ஒரு வருடத்திற்கு மூன்றுவிதமான மிட்டாய்களைக் கண்டுபிடிப்பது அவனுடைய பொறுப்பு என்றும் அவனிடம் சொன்னார்கள்.

அவன் உடனே அந்த வேலையை ஏற்றுக் கொண்டான். ஒருமாதம் அவகாசம் கேட்டான். சென்னைக்கு வந்து தான் வேலையை விடப்போவதாக விவரம் சொன்னான். அவர்கள் அவனைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சித்தார்கள். கூட இரண்டாயிரம் சம்பளம் மூவாயிரம் சம்பளம் என்று பேசினார்கள். தனி குவார்ட்டர்ஸ் என்று சலுகைகள் சொன்னார்கள். அவனுக்கு சென்னையைவிட பெங்களூர் சுகமான இடம் என்று பட்டது. அங்கு போவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் அவன் செய்யத் துவங்கினான்.

வனிதாதேவியின் வீடு சைலேந்திரபாபுவை ஏற்கவில்லை. அதேசமயம் வனிதாதேவியின் புருஷன் என்கிற மரியாதையை மட்டும் கொடுத்து வந்தது. சைலேந்திர பாபுவுக்கு இந்த மரியாதை தேவையாகவும் இருக்கவில்லை. அதற்கு ஆசைப்படவும் இல்லை.

இரவுநேரம் வனிதாதேவியை உபயோகப்படுத்துகின்ற இடைவிடாத வெறியே அவனிடம் இருந்தது.

ஒரு முறை ஏதோ உணவுப் பண்டம் எடுத்து வனிதா தேவியின் மாமன் மகள் வந்தபோது, சட்டென்று அவள் ஜாக்கெட்டுக்குள் கைவிட்டு அசிங்கம் பண்ணுகின்ற ஆபாசம் தான் அவன் வெளிப்படுத்தினான்.

அவள் அந்த வீட்டிற்கு வருவதையே நிறுத்தினாள்.

இப்படிச் செய்தீர்களே... என்று கேட்டபோது வனிதாதேவி பளீரென்று அடிவாங்கினாள்.

''உன்னையும்தான் பண்ணினேன். நீ பேசாம பார்த்துக் கிட்டு நிக்கலே. அவ என்னமோ கத்தறாளே... பத்தினிமாதிரி. அவளையும் காட்டச் சொல்லு'' என்று கோபமாகப் பேசினான்.

வனிதாதேவிக்கு தன் தவறு தெரிந்தது.

''நீ என்ன பெரிய பத்தினியா? கூப்டவுடனே வந்த நாய்தானே நீ. மழை தூறப்போ தாங்காம ஆம்பளைய விரட்டினவதான நீ.'' என்று காதலை அசிங்கப் படுத்தினான்.

''போன மழைக்கு நான் கூப்ட்ட உடனே வந்துட்டே. அதுக்கு முந்தின மழைக்கு எவன்கூட போனியோ.'' என்று மேலும் இழிசொற்கள் சொல்ல, தலைகுனிந்து கேட்டுக் கொண்டிருந்தாள். மெல்ல மெல்ல சைலேந்திர பாபு அவளுக்கு வெறுத்துப் போனான்.

''எனக்கு வேற வேலை கிடச்சிருக்கு, பார் எவ்ளோ சம்பளம்.'' அவன் காகிதத்தை நீட்டினான். இருபத்தோராயிரத்துச் சொச்சம் என்று படித்தபோது அவள் அதிர்ந்து போனாள்.

''பெங்களூர்ல வேலை. மைசூர்ல ஃபேக்டரி. மாண்டியாவுக்கு அடிக்கடி போகவேண்டியிருக்கும். நா அங்க போயி உன்னை கூப்டுக்கிறேன். நீ அதுவரைக்கும் இங்கே இருந்து புள்ள பெத்து உடம்பை சரியா கிக்குனு வச்சுக்க. எனக்கு அப்பப்ப பொம்பள வேணும். சும்மா, சும்மா கொழந்தை பெத்து உடம்பைக் கெடுத்துக்காதே. இந்த ஒரு புள்ளை போதும். ஆபரேஷன் பண்ணிக்கோ'' என்று அறிவுறுத்தினான்.

விதம் விதமாய் சட்டைகளும், பேன்ட்டுகளும், காலணிகளும் வாங்கிக்கொண்டு ஊருக்குக் கிளம்பத் தயாரானான்.

''இவ்ளோ பெரிய விஷயம். வேறொரு வேலை கிடைச்சிருக்கு. எனக்கு ஒரு புடவை வாங்கிக் கொடுத்தீங்களா. ஒரு நகை வாங்கிக் கொடுத்தீங்களா. ஒரு முழ பூவாவது வாங்கிக் கொடுத்தீங்களா.''

"எதுக்கு வாங்கித் தரணும், நீ என்ன சீரும் செனத்தியுமாவா வந்தே. எங்க வீட்டுக்கு வர்றதா இருந்தா, நீ நூத்தி நாப்பது பவுனு போட்டுக்கிட்டு வந்திருக்கணும். உன்னைக் கல்யாணம் பண்ணுனதுனால எங்க வீட்டுக்கு நான் போக முடியல. நூத்திநாப்பது பவுன்போட்டு எங்க வீட்டுக்கு வா. நான் உனக்கு பண்றேன்.

கல்யாணந்தான் சரியா பண்ணல. ரெண்டரை லட்சம் செலவு பண்ணி மெட்ராஸ்ல சீமந்தம் பண்ணுங்க. எங்க வீட்டு ஆளுங்களையெல்லாம் கூப்பிட்றேன். அதுக்கப்புறம் உனக்கு செய்யறேன்" என்று எகத்தாளமாகப் பேசினான்.

போய் வருகிறேன் என்றுகூட சொல்லாமல், வனிதா தேவியின் அப்பாவிடம் விடைபெறாமல், அம்மாவிடமும் சொல்லாமல் பெட்டியை எடுத்துக்கொண்டு விலகுவது போல் பெங்களூருக்குப் போனான்.

வனிதாதேவி தொடர்ந்து பலநாட்கள் அழுது கொண்டே இருந்தாள். உடம்பு இளைத்தாள். ஒருநாள் ஏழுமாத வயிறைத் தூக்கிக்கொண்டு தோட்டத்தில் மெள்ள நடந்து உலவிக் கொண்டிருந்தபோது, ஓடிப்போன அந்த பெண்மணியின் புருஷன் அவளை நோக்கி வந்தான். கைகூப்பினான். உட்காரு என்று சிமெண்ட் பெஞ்சைக் காட்டினான். சிமெண்ட் பெஞ்சின் மறுமுனையில் அவன் உட்கார்ந்து கொண்டான்.

"உங்க அப்பாகிட்ட இருந்து உன் ஜாதகத்தை வாங்கி எனக்குத் தெரிஞ்ச ஒரு ஜோசியன் தாம்பரத்துல இருக்கான். அவங்கிட்ட கொண்டுபோயி காட்டினேன். உனக்கு மறுபடியும் கல்யாணம் ஆகும்னு சொன்னான்.

அந்த மாதிரி பொண்ணு இல்லையேன்னு சொன்னேன். எந்த மாதிரிப் பொண்ணா இருந்தா எனக்கென்ன? இந்தப் பொண்ணுக்கு மறுபடியும் கல்யாணம் ஆகும்னு திரும்பத் திரும்ப சொன்னார். அந்தக் கல்யாணம் ரொம்ப நல்லாருக்கும். இந்தப் பெண் ரொம்ப சந்தோஷமா இருக்கும்னு சொன்னார்.

இதை உங்கிட்ட சொல்றதுக்கு மட்டுமே வரலே, இதுக்கு நீ தயாரா இருன்னு சொல்றதுக்காக வந்தேன்.

வயித்துல குழந்தய வச்சிக்கிட்டு இப்படி எதையோ பறிகொடுத்த மாதிரி நடந்தா, அந்தக் கொழந்தைக்கு அல்லவா நஷ்டம், அப்படி நடக்காதே.

தோட்டத்தில் இருக்கிற மரத்தோடயும், செடியோடயும் பேசறாப்போல உள்ளுக்குள்ள இருக்கிற குழந்தையோட பேசு. வயித்துக்குள்ள இருக்கிற கொழந்தையோட பேசலாம். அப்படிங்கிறதுக்கு நம்ம புராணங்கள்ல நெறைய கதை இருக்கு.

பகவான் கிருஷ்ணர் அந்த மாதிரி அம்மா வயித்துக்குள்ள இருக்கிற அபிமன்யூவோட பேசியிருக்கார். அவனுக்கு யுத்தம் சொல்லிக் கொடுத்திருக்கார். அந்த மாதிரி உங்க குழந்தைக்கு நல்ல புத்தியைச் சொல்லிக்கொடு. இப்ப சொல்லிக் கொடு. இப்பவே சொல்லிக்கொடு.

என்னடா எதிர்போர்ஷன்ல வந்து ஏதோ குடித்தனம் வந்தவன் இத்தன பேசறானேன்னு பார்க்கறியா?

உன்னைப் பார்க்கிற போதெல்லாம் எம் பொண்டாட்டி எனக்கு பண்ணின துரோகம் எனக்கு ஞாபகம் வருது. நான் எம்பொண்டாட்டி வயித்துல இருக்கிற என் குழந்தையோட எவ்வளவு பேசியிருக்கேன் தெரியுமா. எத்தனை கதை சொல்லியிருக்கேன் தெரியுமா.

என் குழந்தை, அந்தப் பெண் குழந்தை எம் பொண்டாட்டி கிட்டே எத்தனை அவஸ்தைப்படுதோ, இப்ப நெனச்சாலும் எனக்கு மனசு பதறுது.

அந்தக் குழந்தை நல்லபடியா வளரணும். அந்தக் குழந்தை வேற எங்கயாவது ஒரு நல்ல இடத்துக்குப் போய் நிக்கணும். அந்தக் குழந்தை அம்மா மாதிரி இல்லாம சுபிட்சமா இருக்கணுங் கிறதுக்காக, அவ பண்ணுன பாவம் எங் குழந்தையைத் தொடக்கூடாதுங்கறதுக்காக நான் உனக்கு கதை சொல்றதா நெனச்சுக்காதே.

எனக்கு அம்பத்தி ஆறு வயசாச்சு. ரொம்ப தாமதமா இளமையான பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு எத்தனை அவமானப்படணுமோ அத்தனையும் அவமானப் பட்டாச்சு. இந்த அவமானத்தை தினம் ஜெபம் பண்ணி சுத்தமா தொடச்சு எடுத்திட்டேன்.

உனக்கு நடந்த இந்தக் கொடுமையை நான் எடுக்கணும். அப்பத்தான் எங்குழந்தை நல்லாருப்பா, அப்படீன்னு எனக்கு தோணுது. எங்குழந்தை ஞாபகமாகவே இருக்கு.

வனிதாதேவி ஏதோ எனக்குத் தெரிஞ்ச கதை சொல்றேன்.

பத்துமணி அரசாங்க உத்தியோகம். ஒன்பது மணிக்கு வண்டி ஏறி ஒம்பதே முக்காலுக்கு ஆபீஸ், ஆபீஸ்லே உத்தியோகம், அஞ்சரை மணிக்கு வண்டி பிடிச்சு ஆறரை மணிக்கு வீட்டுக்கு வந்துருவேன். ஒரே வேளை சமையல். வெளில டீ குடிப்பேன். இத்தோட முடிஞ்சு போச்சு. வேற எந்த லட்சியமும் இல்ல. எந்தப் பிடிப்பும் இல்ல.

வனிதாதேவி நான் உனக்கு கதை சொல்லட்டுமா. நிறைய கதைகள் இருக்கு. மகான்களுடைய சரிதமா சொல்லிட்டு வர்றேன். உனக்கு வயித்துக்குள்ள இருக்கிற குழந்தை சைலேந்திர பாபுவா இல்லாம சத்தியசந்தனா பொறக்கட்டும். அவன இப்ப மாத்துவோம். இன்னிக்கு மாத்துவோம். இன்னிலேர்ந்து மாத்துவோம். நான் சொல்றது உனக்குப் புரியுதா தாயே?''

அவன் கேட்கக் கேட்க, மறுபடியும் வனிதாதேவி அழுதாள்.

''இப்ப கேரளா அப்படீன்னு சொல்ற கேரளத்துக்குப் பக்கத்துல காலடின்னு ஒரு கிராமம். அந்த கிராமத்துல வயதான பிராமண தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள்.

கிருஷ்ணனுடைய அனுக்கிரஹத்தால அவாளுடைய தவத்தால, வேண்டுகோளால அவாளுக்கு ஒரு குழந்தை பொறந்தது. அந்தக் கொழந்தைக்கு அவர்கள் சங்கரன்னு பெயர்

வச்சாங்க.'' முதலில் அசிரத்தையாக கேட்கத் துவங்கிய வனிதாதேவி, மெல்ல மெல்ல அதன் பால் ஈடுபாடு கொண்டாள். அவள் மட்டும் இல்லாது அவளுடைய அம்மாவும் மாமன் மகனும் மகளும் சில சமயம் மாமாவும் அவரை வராண்டாவில் உட்கார வைத்து பாய்விரித்து கதை கேட்டார்கள்.

கடும் வெயிலுக்கு நடுவே இருட்டிக்கொண்டு வந்தது போல, மேகமூட்டம் போல, குளிர்காற்று வீசியது போல அந்தப் பெண்மணியின் கணவன் எதிர்போர்ஷன் வயசாளி அவளுக்குப் பல கதைகள் சொன்னார். பல மகான்களை அறிமுகப் படுத்தினார். அவள் ஆர்வமாகக் கேட்டாள். வயிற்றுக்குள் உள்ள குழந்தைக்குப் புரிய வேண்டும் என்பதாகக் கேட்டாள். கேட்கக் கேட்க அவளது மனம் பக்குவமாயிற்று. பரபரப்பு குறைந்தது. முகத்தில் மெல்லிய அமைதி படர்ந்தது. அந்த அமைதி வளர்ந்து அழகு கூடியது.

சைலேந்திரபாபு போன் பண்ணி பெங்களூருக்கு வருகிறாயா என்று கேட்டபோது, அவள் வருவதற்கில்லை என்று மறுத்துவிட்டாள்.

அவனும் வற்புறுத்தாமல் விட்டுவிட்டான்.

இருபத்தோராயிரம் ரூபாய் சம்பளம். தனிக் காரு. குவார்ட்டர்ஸ். பெங்களூர் வாசம். எதுக்குடா தமிழச்சி. நான் உனக்கு பொண்ணு பார்க்கிறேன். தாய்மாமன்கள் ஓடிவந்தார்கள்.

வேண்டாம் இது போலீஸ் கேஸாகிவிடும் என்று பயந்தபோது, இந்த மாதிரி எத்தினி போலீஸை நாங்க பார்த்திருக்கோம். நம்ம குடும்பம் பண்ணாத அக்கிரமமா, அடப்போடா என்று அவன் அப்பாவையும், அம்மாவையும் அழைத்து வந்தார்கள்.

அவர்கள் அவனைப் பிய்த்தெடுக்க, உருமாற்ற, அவன் சரியென்று தலையசைத்தான். தெறித்துவிடுவது போல சதைக் கோளமாக இருந்த பெண்ணை அவனுக்குக் காட்டி அவன் சம்மதத்தைப் பெற்றார்கள். இருநூற்றுப் பத்து சவரன்

சொன்னார்கள். எந்த ஊரில் இருந்தாலும் அந்த ஊரில் வீடு வாங்கித் தருவேன் என்று சத்தியம் செய்யப்பட்டது.

அவன் வனிதாதேவியை முற்றிலும் மறந்துபோனான். அதேநேரம் அவளிடமிருந்து வம்பு வராமலிருக்க என்ன செய்வது என்று யோசித்தான்.

''கூட்டிட்டு வந்து தலையில் அட்றா, தானா போய்டுவா'' என்று தாய்மாமன்கள் சதி சொல்லிக் கொடுத்தார்கள். ''தொந்தரவு பண்ணு, மிரட்டு, எங்கூட படுத்தா போறாது, எங்க மாமாவோடும் படுத்துக்கணும்னு சொல்லு. தானா ஓடிப்போய்டுவா.''

''சரின்னு படுத்துக்கிட்டா என்ன பண்ணுவே?''

''ஓரமா அவளையும் வச்சிக்கிட்டு போறது. என்ன தப்பு?''

வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''நீ எங்க மாமாகூட படுத்தேல்ல, நான் இவகூட படுத்துக்கறேன் அப்படீன்னு இந்தப் பொண்ணைக் கொண்டாந்துடு.''

மறுபடியும் குலுங்கிக் குலுங்கி சிரித்தார்கள்.

வனிதாதேவி தாம்பரம் ஹிண்டுமிஷன் ஆஸ்பத்திரியில் குழந்தை பெற்றாள். தாயும் சேயும் நலமாய் இருந்தார்கள். சுகமாய் வளர்ந்தார்கள். பிள்ளை பிறந்தது அவனுக்குத் தெரிவிக்கப் பட்டது.

அவன் வந்து பார்த்துவிட்டுப் போனான்.

அப்பொழுதும் அவளுடைய தங்கையை பின்பக்கம் போய் இழுத்து அணைத்துக்கொண்டு முத்தமிட முயற்சி செய்தான். அவள் அலறி எட்டி உதைத்தாள்.

''இங்க எனக்கு சரியா வரல. நான் கிளம்பறேன்'' என்று அன்று இரவே பெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பிப் போய்விட்டான்.

வனிதாதேவி மறுபடியும் கவலையானாள். அவளுக்கு ஆனந்த ராமாயணம் கதையாகச் சொல்லப்பட்டது. ஆனந்த ராமாயணம் எங்கு எவர் படித்தாலும் அவர் வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிக்கும் என்று சொல்லியே, அவளுக்கு அந்தக் கதை சொல்லப்பட்டது.

ஒருக்களித்து படுத்துக்கொண்டு அமைதியாய் அவள் ஆனந்த ராமாயணம் கேட்டாள். குழந்தையை அந்த வீட்டு எதிர் போர்ஷனில் உள்ள மக்கள் கொஞ்சினார்கள்.

அந்த முறையும் பலத்த மழை பெய்தது. அதனால் சாலை உயரமாக போட்டிருந்தபடியால், போட்ட சாலை தார்ச்சாலையாக இருந்தபடியால், விளக்குக் கம்பங்களுக்கு தனித்த மின்சாரம் இணைப்பு கொடுத்தபடியால் ஊர் இருளடையாமல் பளிச்சென்றிருந்தது.

போன முறை பெய்த மழையிலேயே பூமியினுடைய கடுப்பான ஈரம் கீழிறங்கி மேலே தெளிந்த தண்ணீர் ருசிகரமானதாயிற்று. ருசியான தண்ணீரும் போக்குவரத்து வசதியும் அதிகமானதால் நிலங்கள் போட்டிபோட்டு வாங்கப் பட்டன. அந்த நகரம் அந்த குடியிருப்புப் பகுதி பெரிதாயிற்று.

அஸ்திவாரம் தோண்டி செங்கலடுக்கி ஒன்றன்பின் ஒன்றாக அறைகள் கட்டி, வீடு எழுப்பும் பழையமுறை ஒழிந்துபோயிற்று. வனிதாதேவியின் மாமாவுக்கு படிப்பில்லாத அனுபவ வேலைதான் தெரியும். நகரம் வளர்ச்சி அடைய, அங்கே வீடு கட்டுகின்ற தொழிலாளர்கள் வந்து புறம்போக்கு நிலத்தில் குடியிருந்தார்கள்.

தென் திசையிலுள்ள வியாபாரிகள் இரும்பும், செங்கல்லும், சிமெண்ட்டும் இன்னும் பிறகருவிகளும் எடுத்துக் கொண்டு வந்து பெரிய கடைகள் போட்டார்கள். இங்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சகலமும் விற்கப்படும் என்று பலகை போட்டார்கள். வீடு கட்டுகின்ற வெறி அதிகமான கால கட்டத்தில் நிலங்கள் வேகமாக வாங்கப்பட்டன.

வனிதாதேவியின் மாமா ஐந்தாயிரம் ரூபாய்க்கு வாங்கிய கிரவுண்டெல்லாம் ஐந்து லட்சத்திற்குப் போயிற்று.

மழை பெய்தால் நீர் தேங்கும். அந்த நீர் வெளியேற ஒரு வாரமாகும் என்று சொல்லப்பட்ட நிலம்கூட வாங்கப்பட்டது.

நீர்த்தேங்கும் அவ்வளவுதானே கட்டடத்தை உயர்த்திக் கட்டினால் போயிற்று என்று சொல்லி, நகரத்திலிருந்து இஞ்சினீயர்களைக் கொண்டு வந்தார்கள். இஞ்சினீயர்கள் இங்கு கட்டிடம் கட்டும் வேகத்தைப் பார்த்துவிட்டு, நகரத்திலிருந்து தினம் வந்து போவதற்குப் பதிலாக இங்கேயே வாடகை வீடெடுத்து குடியிருந்தார்கள். முன்பக்கம் அலுவலகமும், பின் பக்கம் வீடுமாய் மாற்றிக்கொண்டார்கள்.

இருநூற்று ஐம்பது ரூபாய்க்குக் கிடைத்த எதிர்பக்க வீடெல்லாம், அறுநூறு ரூபாய்க்குக் கிடைப்பது பெரிய காரியமாக இருந்தது.

இஞ்சினீயர்கள் வந்ததும் கட்டிடக் கலை வேறுவிதமாக உருவெடுத்தது. மண்ணை பரிசோதனை செய்து எவ்வளவு ஆழம் போகலாம் என்று பார்த்து நீர் அதிகம் இருப்பதால், இரும்புத் தூண்கள் இறக்கி நடுவே கான்கிரீட் போட்டு உயரமான, உறுதியான சதுரவடிவ கால்கள் எழுப்பி அதற்குக் குறுக்கே அதே கான்கிரீட்டில் சட்டம்போட்டு, சட்டத்தின் மீது தளம்போட்டு பிறகு சுவர் எழுப்பினார்கள். இரண்டடுக்கு வீடுகள் பக்கத்துக்கு ஆறாய் பனிரெண்டு கட்டினார்கள். கீழ்ப்பகுதி கார் நிற்கவும், முதல்மாடி, இரண்டாம் மாடி, மூன்றாம் மாடி குடியிருக்கவும் என்று தீர்மானித்தார்கள்.

அழகான முகப்போடு பெரிய பங்களாக்கள் கட்டினார்கள். அகலமான கூடம், கூடத்தை ஒட்டி நறுவிசான சமையல் அறை, இடதும் வலதும் பெரிய படுக்கை அறைகள், ஸ்டோர் ரூம் என்று பார்த்துப் பார்த்து கட்டினார்கள்.

பட்டணத்தினுடைய நெரிசலில் அலுத்துப் போனவர்கள் இந்தப் பக்கம் குடிவந்தார்கள்.

''சார் ஏர்போர்ட் பெருசானாக்கா நெறைய பேருக்கு வேலை. நெறையப் பேருக்கு வேலைனா நெறைய குடியிருப்பு. இனிமே குடியிருப்புனா நீங்க கட்டினா மாதிரி சந்துல கூடம், சமையலறை, கொல்லப்புறம்னு கட்டமுடியாது. மாடர்னா கட்டணும். பார்வையா கட்டணும். ரொம்ப உபயோகமா கட்டணும். ரொம்ப நிச்சயமா தரைக்கு மொசைக் போடணும். இன்னும் உங்ககிட்ட எத்தனை கிரவுண்ட் இருக்கு. விக்காதீங்க. மூணுவருஷம் பொறுத்து இப்ப விக்கறதைவிட ரெண்டு மடங்கு அதிகமா விற்கும்.'' ஒரு இஞ்சினீயர் வனிதாதேவியின் மாமாவிடம் விளக்கிச் சொன்னார். அவரிடம் ஒரு கிரவுண்ட் தனக்கென்று வாங்கிக்கொண்டார்.

''நான் குடுத்த காசை என்ன பண்ணப்போறீங்க. சாப்பிட்டு செலவழிச்சிடாதீங்க சார். இன்னும் தள்ளி, நாலு கிலோமீட்டர் தள்ளி புறம்போக்கு நெலமா பாருங்க. அதை வளைச்சிப் போடுங்க. கவர்ன்மெண்டுக்குச் சொல்லி எவ்வளவு வாங்க முடியுமோ அத்தனையும் வாங்கிப்போடுங்க. இன்னும் நாலுவருஷம் பொறுத்து இது இன்னும் பெருசாகப் போகுது. மனைக்கு அந்தப் பக்கம் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ரோடுபோட சாங்ஷன் கொடுத்துட்டாங்க. ஸ்டேட் கவர்ன்மெண்ட் நெலம் வாங்கிக் கொடுக்கலாம். இன்னிக்கில்லனா ஒருநாள் அது நடந்தே தீரும். அந்தப்பக்கம் ரோடு வந்திருச்சின்னாக்கா இந்தப் பகுதிக்கு உள்ள வர்றது சுலபம். ரயில்வே ஸ்டேஷன்ல இருந்துதான் வரணும்னு அவசியம் இல்லை.

இந்த இடம் பள்ளம். அந்த இடம் மேடு.

அவ்ளோ தண்ணி தங்காது. இப்போ கூட மழை தேங்கின பகுதியில எல்லாம் கால்வாய்களை வெட்டி குளம்மாதிரி ஒரு எடத்துக்குக் கொண்டு போயிடலாம். ஏற்கெனவே பெருசா ஒரு குளம் இருக்கு. வெயில் நாள்ல வறண்டு போயிடும். மழைத் தண்ணிய அதுல தேக்கி வச்சோம்னாக்கா ஊருக்கு உபயோகமாக இருக்கும். இந்த அரசாங்கம் செய்யும்னு நாம உக்காந்துக் கிட்டிருக்க முடியாது.

நம்ம நகர்ல ஒரு அசோஸியேஷன் அமைச்சி கூட்டம் போட்டு ஆளுக்கு ஆயிரம் ரூபா போட்டு சிமெண்ட் குழாய் போட்டு குளத்துக்குள்ள சேர்த்துடணும். ஒண்ணுமில்ல, இந்த தெருவுல இருக்கிற தண்ணிய குளத்துக்குத் திருப்பிட்டம்னா போதும். ஊருக்குள்ள போறதுக்கு ரொம்ப வசதியாயிடும். அதுவும் தவிர ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி பெஞ்ச மழை இனிமே பெய்யும் அப்படீன்னு எனக்குத் தோணலை. அப்படியே பெஞ்சாலும் ஒரு பன்னண்டு வருஷம் கழிச்சுத்தான் பெய்யும். ரொம்ப நியாயத்துக்கு அடுத்த வருஷம் மழையே இருக்காதுன்னு சொல்றாங்க. சிட்டி நாறப் போவுது. சிட்டி தண்ணிக்கு கஷ்டப்பட்டா இந்தப்பக்கம் நிலம் வாங்கறதுக்கு ஆளுங்க அலைவாங்க. அதனாலதான் சொல்றேன். இப்போதைக்கு நிலம் விக்காதீங்க.''

அந்த வயதான இஞ்சினீயர் நிலம் வாங்கி வீடு கட்டுகிறபோது, அவர் வீடு வந்து வனிதாதேவியின் வீட்டில் தங்கியிருந்தது. அவருடைய மகனும் இஞ்சினீயர். தன்னுடைய பெயர் பழனிவேல் என்று அவன் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

எடுத்தவுடனேயே தன் வீட்டில் அவமானங்களைச் சொல்ல, எல்லோருக்கும் மனம் வருவதில்லை. அதேசமயம் அவமானங்கள் இல்லாத வீடு என்று எதுவுமே இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ ஒரு அவமானம் இருக்கத்தான் செய்யும். மெல்ல மெல்ல பழகப் பழக அந்த அவமானம் வெளியே வரும், சொல்லப்படும்.

வனிதாதேவியின் புருஷன் வெளியூரில் வேலை செய்கிறான். அவ்வப்போது வந்து போவான் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டாலும், மூன்றாம்நாள் வனிதாதேவியின் நிலை என்னதென்று அவர்களுக்குப் புரிந்துபோயிற்று.

பழனிவேல் வருத்தப்பட்டான். பழனிவேலுக்கு, தங்கள் வீட்டு அவமானம் தெரிந்து விட்டதற்காக அவர்கள் வருத்தப்பட்டார்கள். பழனிவேல் மெல்ல வாய்திறந்தான்.

"உங்க வீட்ல மட்டுந்தான் இப்படி ஒரு வேதனை இருக்கா, எங்க வீட்லயும் இருக்கு. எங்க அக்கா ஒரு நடிகரோட ஓடிப்போயிடுச்சி. ஓடிப்போன பிறகுதான் தெரிந்தது, அந்த நடிகருக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆயிருச்சின்னு. என்ன செய்யறது. நடிகருக்கு ரெண்டாந்தாரமா தனியா ஒரு வீட்ல இருக்கா. நடிகர் வந்து போயிக்கிட்டிருக்கார். கேட்டா ரொம்ப நல்லா இருக்கேன் அப்படீன்றா.

அவ நல்லா இல்லேன்றது எங்களுக்குத் தெரியும். விட்டுட்டு வந்துடும்மா அப்படீன்னா அவளுக்கு வர்றதுக்கு இஷ்டமில்ல.

தான் தப்புப் பண்ணிட்டோம். அந்த தப்புக்குத் தண்டனையா தனியாத்தான் இருக்கணும்னு அவ தீர்மானம் பண்ணிட்டிருக்கா. இதுல இன்னொரு அசிங்கம் இருக்குங்க.

அந்தாள் மூணாவதா இன்னொரு கல்யாணம் பண்ணிக் கிட்டான். அங்கதான் அவ ரொம்ப அவமானப்பட்டுட்டா. அங்கதான் அவ ரொம்ப உடஞ்சி போயிட்டா. அப்பவும் வந்திரு, வந்திருன்னு கெஞ்சினோம். வரலை.

ரெண்டாங் கல்யாணம் இருக்கும்போதாவது நான் வர்றது நியாயம். ரொம்ப நிச்சயமா என் வாழ்க்கை தோத்துட்ட பிறகு நான் உங்ககிட்ட ஏன் வரணும். வந்து உங்களுக்கு ஏன் தொந்தரவு கொடுக்கணும். என்னைப் பாக்கறபோதெல்லாம் உங்களுக்கு வேதனையும் வயித்தெரிச்சலும் இருக்கும். அந்தக் கஷ்டத்தை நான் ஏன் தரணும். அதனால சர்வ நிச்சயமா நான் அங்க வரமாட்டேன். அவர் எத்தன கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் நான் அவரவிட்டு நகரமாட்டேன். ஒரு நாள் இல்லேனா ஒருநாள் அந்நாள் நாந்தான் கதின்னு வருவாருல்ல. அப்ப வேண்ணா வர்றேன். அப்படி ஒரு கதி அந்தாளுக்கு வரணும்னு வேண்டிக் கங்க. அப்படீன்னு சொல்லிட்டு சிட்டில தனியாத்தான் இருக்கா.

வாரத்துக்கு ஒருநாள் வந்துட்டுப் போறாரு. ஏதோ சாப்பாட்டுக்குக் கொடுக்கறாரு. போதாதுக்கு நாங்க

கொடுத்துட்ருக்கோம். யார் நடிகர் தெரியுதா?'' அவன் பெயரைச் சொன்னவுடன் அவர்கள் அதிர்ந்து போனார்கள்.

''ரொம்ப நல்லவராச்சே. அவரப்பத்தி ஆகா ஓகோன்னு சொல்றாங்களே.''

''அவங்கெடக்கான்'' பழனிவேல் பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான்.

அந்த ஒரு வார்த்தையில், அந்த குடும்பத்தின் ஆத்திரம் மொத்தமும் வனிதாதேவியின் வீட்டிற்குத் தெரிந்தது.

வனிதாதேவியின் வீடு அந்த வீட்டை கருணையுடனும், நேசத்துடனும் நாம ரெண்டுபேரும் ஒரேமாதிரி துக்கம் உடையவர்கள் என்கிற அன்போடும் பழகத் துவங்கியது. பிள்ளையும் சிவில் என்ஜினீயர் என்பதால் அவர்கள் வியாபாரத்தை மிகத் தெளிவாகவும் சுறுசுறுப்பாகவும் கவனித்தார்கள். அடுக்குமாடிக் கட்டிடம்தான் நல்ல லாபம் என்பதைப் புரிந்துகொண்டு பத்திரிகையில் பெரிய விளம்பரம் கொடுத்து, அடுக்குமாடிக் கட்டிடத்திற்கு ஆசை காட்டினார்கள்.

அடுக்குமாடி கட்டிடத்திற்கு அட்வான்ஸ் வாங்கிய காசில் அவர்களுடைய வீட்டை இழைத்து இழைத்துக் கட்டினார்கள்.

''உங்க வீடும் ரொம்பப் பழசா இருக்கு. கொஞ்சம் மாத்திடலாமா.''

''இன்னொரு கிரவுண்ட் இருக்கு. நல்ல விலைக்குப் போச்சுன்னா அந்தக் காசை அப்படியே உங்க வீட்ல போடுங்க. நான் லாபம் பார்க்காத சல்லிசா செய்து தர்றேன்'' என்று பெரியவர் சொல்ல, அதை பழனிவேல் செயல்படுத்தினான்.

அண்ணன் தம்பி சண்டையில் நகரத்து வீட்டை பாகம் பிரித்துக்கொண்டு வெளியே வந்த ஒரு பெரிய ஆபீஸருக்கு அந்த நிலத்தை நல்ல விலைக்கு விற்று, அவரை கடன் வாங்கச் சொல்லி, பெரிய அளவில் கோட்டை போல சுற்றுப்புற சுவர் எழுப்பி நல்ல பங்களாவுக்கு அஸ்திவாரம் போட்டார்.

"இந்த ஆபீஸருக்கு சிட்டில நெறைய பேரைத் தெரியும். இவர் வீடு நல்லபடியா வந்திருச்சுன்னா எங்களுக்கு நிறைய காண்ட்ராக்ட் கிடைக்கும். எங்களுக்கு காண்ட்ராக்ட் கிடைக்கிற போதே உங்க நிலத்துக்கும் நல்லவிலை கிடைக்கும். அதனால வெறுமே சாதாரணமான வியாபாரமா இவர் வீட்டை கையாளாத ரொம்ப அக்கறையா செய்றோம்.

உங்கவீட்டை சுத்தி நல்லா தோட்டம் போட்டிருக்கீங்க. அதேமாதிரி நாங்க வீடு கட்டச்சொல்லவே அவர் வீட்டச் சுத்தி தோட்டம் போட்டா என்ன, சந்தோஷமா இருக்கும். கன்னுங் கெல்லாம் நெறைய இருக்கு. தரமுடியுமா" என்று அப்பாவிடம் கேட்க, அப்பா வனிதா தேவியைப் பார்க்க, வனிதாதேவி தானே வந்து தோட்டம் போட்டுத் தருகிறேன் என்று சொல்ல, அப்பா சில கணங்கள் யோசித்துவிட்டு, சரி உனக்கும் பொழுது போகணுமுல்ல செய். வெளியில ஒரு போர்டு போடு. நர்சரின்னு சொல்லி செடிகள், கன்றுகள் விற்கப்படும்னு போடு. இருக்கிற நிலைமையைப் பார்த்தா எல்லா வீட்லயும் செடி வைக்கணும்னு ஆசைப்படுவாங்க.

ஊர் பெருசாக பெருசாக இந்த வியாபாரமும் நல்லாத்தான் போகும்" என்று ஆதரவாகப் பேசினார்.

சைலேந்திரபாபு பல பேரை இந்த குடியிருப்புப் பகுதிக்கு நோட்டம் பார்க்க அனுப்பி, வனிதாதேவியின் வாழ்க்கையைத் தீர விசாரித்துவிட்டு அவன் திருமணம் செய்யத் தயாரானான்.

திருமணம் செய்துகொண்டான். அவன் திருமணம் செய்துகொண்ட செய்தி, ஒருவாரம் பொறுத்து வனிதா தேவியின் வீட்டிற்கு எட்டியது.

வனிதாதேவி வாய்விட்டு அழுதாள்.

"இது ரொம்ப அநியாயம்மா. அந்த சைலேந்திரபாபுவை சும்மாவிடக்கூடாது."

பழனிவேலும் அவன் அப்பாவும் ஆத்திரப்பட்டார்கள்.

வனிதாதேவியைப் பார்த்துப் பார்த்து துக்கப்பட்டார்கள்.

''எனக்கு அவரோட வாழறதில இஷ்டமில்ல. அதனால அவர்மேல எந்த கேஸும் போடவேண்டாம்.'' வனிதாதேவி அழுகையினூடே பேசினாள்.

''ஒண்ணாப் போயி வாழுன்னு யார் சொன்னாங்க. எதுக்காக நீ அங்க போயி வாழணும். அங்க வாழ வேண்டிய அவசியம் இல்ல. அதேசமயம் இத சாதாரணமா யாரும் கேட்க முடியாத ஒரு விஷயமா எடுத்துக்கக் கூடாது. எங்களால அந்த நடிகனை ஒண்ணும் பண்ண முடியல. போலீசுக்குப் போனபோது ரெண்டாந்தாரமுன்னு தெரிஞ்சிதான் வாக்கப்பட்டா. நான் அவகிட்ட பொய் சொல்லல. அப்படீன்னு சொல்லிட்டான். எங்கக்காவும் ஆமான்னு சொல்லிட்டா. எங்க மூஞ்சில கரிய பூசிட்டா. எக்கேடு கெட்டு ஒழின்னு வந்துட்டேன். இங்க அப்படி இல்லையே.

நீங்க குத்துக்கல்லு மாதிரி இருக்கச்சொல்ல, அவங்க கிட்ட பிறந்த குழந்தை இருக்கச் சொல்ல, எப்படி இன்னொரு கல்யாணம் அவன் பண்ணலாம். அதுவும், ஊரறிய பத்திரிகை போட்டு, விருந்து வச்சு கல்யாணம் பண்ணி இருக்கான்னா, எத்தினி திமிரு. எவ்ளோ நெஞ்சழுத்தம் இருக்கணும்.''

''வா போய் கேட்போம்'' அவர்கள் பெங்களூருக்குப் போனார்கள், போலீஸில் புகார் செய்தார்கள். சைலேந்திரபாபு மகாகெட்டிக்காரன். ஒரு விஷயத்தை ஒரு முறைக்கு நூறுமுறை யோசனை செய்கிறவன் என்பதை மறந்துபோய் செயல் பட்டார்கள்.

''தாலி கட்டினாரா, தாலி கட்றதுங்கிறது முக்கியமான விஷயம் இல்ல. ரொம்ப சந்தோஷம். உங்க மேரேஜ் ரிஜிஸ்டர் ஆகியிருக்கா. ஆகலேன்னா அத கல்யாணம்னு சொல்ல முடியாது.

சைலேந்திரபாபு என்ன சொல்றாரு. ராஜமுந்திரியில ஒரு மோசமான எடத்துல பார்த்தாராம். அந்த எடத்துல நீங்க பதினாறு

நாள் இருந்தீங்களாம். அந்த எடத்துல பார்த்த ஒரு பொண்ணுக்கு நான் எப்படி தாலி கட்டுவேன்னு கேக்கறாரு. நீங்க அங்க இருந்தது வாஸ்தவங்களா.''

வனிதாதேவி ''ஆம்'' என்று சொன்னாள்.

''அவுங்கல்லாம் விபச்சாரம் பண்றவங்களா?''

வனிதாதேவி ''ஆம்'' என்று சொன்னாள்.

''விபச்சாரம் பண்ற இடத்துல நீங்களும் இருந்தீங்களா?''

வனிதாதேவி, ஆமாம் என்று தலையாட்டினாள்.

''அப்புறம். உங்களுக்கும் அவருக்கும் கல்யாணம் நடந்ததுனு சொல்றீங்களே, அத நாங்க என்னான்னு எடுத்துக்கறது.''

''இவருதானே அங்க போய் குடித்தனம் வச்சாரு.''

''என்னம்மா உங்களை முத முதல்ல பார்த்தது அங்கேன்றாரு, நீங்க இப்படி சொல்றீங்களே? அந்த மாதிரி இடத்துலபோய் ஒரு பொண்ணு தங்கலாமா.

அங்க தங்கினது, அங்க இருக்கிற பொண்ணுங்களோட போட்டோ எடுத்துக்கிட்டது எல்லாம் இதுக்கு சாட்சியா இருக்கு. கொழந்தை பொறந்து ஒன்றை வருஷம் ஆச்சு. நீங்களும் வரலே. அவரும் ஏன் வரலேன்னு கேக்கலே. ஒரு லெட்டரும் போடல. எந்தவொரு சாட்சியும் இல்லாத அவரு உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டார்னு சொன்னா, நாங்க என்ன நடவடிக்கை எடுக்கிறது. உங்க பக்கம் ரொம்ப பலவீனமா இருக்கும்மா. கேஸு நிக்காது. இதே இந்த இடத்துலயே ஏதாவது காசு வாங்கிக்கிட்டு போயிடுங்க. எனக்குத் தெரியுது. உங்களை ஏமாத்தியிருக்கார்னு. ஆனால் உங்களுக்கு உதவி செய்ற மாதிரியான சூழ்நிலை உங்ககிட்ட இல்ல.''

போலீஸ் அவர்களிடம் பேசினார்கள். பழனிவேலுக்கு வனிதாதேவியின் பக்கத்து பலவீனங்கள் புரிந்தன.

எதிர்பக்க குடியிருப்பில் ஒருவர்கூட வனிதாதேவிக்கும் சைலேந்திர பாபுவுக்கும் காதல் இருந்தது, கல்யாணம் ஆயிற்று

என்று சொல்ல முன்வரவில்லை. வந்தாலும் அதை எளிதில் உடைத்துவிட முடியும் என்பது பழனிவேலுக்கும் அவன் அப்பாவுக்கும், ஏன் வனிதாதேவிக்கும் தெளிவாகத் தெரிந்தது.

''நான் அப்பவே சொன்னேனே வேண்டாம்னு. அவர் ரொம்ப கெட்டிக்காரர். எது செய்தாலும் தெளிவா செய்வார். நான் ஏமாந்துட்டேன். என்னாத்துக்கு அவரைப்போயி தொந்தரவு செய்யணும். அவரு இல்லாதது எனக்கு நிம்மதி. இந்தக் குழந்தை போதும். நான் பாட்டுக்கு என் வேலையை பார்த்திட்டிருக்கேன். விட்ருங்க.''

ஒரு லட்ச ரூபா சைலேந்திரபாபு தருவதாகச் சொல்ல, அவர்கள் விவாகரத்து கோர, ஒரு தொடர்புக்காக ஒரு லட்ச ரூபாய் கொடுப்பதாகவும் இனி எந்தத் தொடர்பும் கிடையாது என்றும், இருவரும் பரஸ்பரம் எழுதிக்கொடுத்து கையெழுத்திட்டு பேப்பரை எடுத்துக் கொண்டார்கள். குடியிருப்பு இடத்துக்கு வந்தார்கள்.

இரண்டு நாள் துக்கமாய் இருந்த வனிதாதேவி, சட்டென்று பிரகாசமானாள். அந்த புதிய தோட்டத்தில் மும்முரமாக இறங்கி வேலை செய்யத் துவங்கினாள்.

இரண்டு ஆட்களையும் மூன்று சிறுவர்களையும் வைத்து நீருற்றி மண்ணைப் பதப்படுத்தி உரம் வைத்து, கன்றுகளை நட்டு, கன்றுகளை இடம் மாற்றி வேலியோர செடிகளைப் பயிர்செய்து அழகாக்கினாள். இந்த வீடு முடியறபோது இந்த தோட்டம் பெரிய நந்தவனம் போல ஆயிடும் என்று பழனிவேல் சொல்ல, அவர் இன்னும் சிங்காரமாக வீட்டை அமைக்க ஆசைப்பட்டார். மற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து காண்பித்தார். அவர் அலுவலக நண்பர்கள் கூட்டம் கூட்டமாய் வந்திறங்கி நிலங்களைப் பார்த்தார்கள். நிலத்தின் விலை வேகமாய் உயர்ந்தது.

''வாங்கின வரைக்கும் எல்லா நெலத்தையும் கொஞ்சம் கொஞ்சமா நல்ல விலைக்கு வித்துட்டேன். இனிமே

விக்கிறதுக்கு ஒரு நாலுகிரவுண்டு தவிர வேறு ஒண்ணுமே இல்ல. அது பசங்களுக்குன்னு வச்சிருக்கேன். பொழப்பு எப்படி நடத்துறதுனு தெரியலே. இனி நெலம் வாங்கற மாதிரியும் இல்ல. கண்ணு முன்னாடி அஞ்சாயிரம் ரூபாய்க்கு வாங்கின நிலத்தை நீங்க சொன்னமாதிரி ஏழு லட்ச ரூபாய்னு சொல்றாங்க. எனக்கு மனசு வரல. வேற பொழப்புக்கு என்ன பண்றதுன்னு தெரியலே.''

''கட்டட சாமான் ஆரம்பியுங்க. உங்கக்கிட்டருந்து சாமான் வாங்கச்சொல்லி நம்ம கஸ்டமர்கிட்ட நான் சொல்றேன்'' - வனிதாதேவியின் மாமாவை பழனிவேல் உற்சாகப்படுத்தினார்.

தூத்துக்குடியிலேர்ந்து வந்திருக்கிற மூணு நாலு வியாபாரிகளும் தரமில்லாத விஷயங்கள்லாம் வச்சிருக்காங்க. அவங்களை நம்பி நான் எதுவும் வாங்கறதில்ல. காசு அதிக மானாலும் நல்ல பொருளா வாங்கி வைங்க. இதுக்கு முதல்கூட போடவேண்டாம். உங்க வீட்டுக்குள்ளேயே வலதுபக்கம் ஒரு கடை ஆரம்பியுங்க. மேல தகரம்போட்டு சுத்தி சுவர் எழுப்புங்க. கொஞ்சம் காசு கொடுத்து வாங்கிட்டு மிச்சத்தைக் கடனுக்கு வாங்குங்க. வித்துத் தர்றேன்னு சொல்லுங்க. கொண்டாந்து தானா இறக்குவான். சிமெண்ட்டு மட்டும் காசுபோட்டு வாங்க வேண்டியிருக்கும். இதுக்கு சம்மதம்னா சொல்லுங்க, நான் காசு தர்றேன்.''

பழனிவேல் உற்சாகமாகச் சொல்ல, அதை அவன் தகப்பனாரும் ஆமோதித்தார்.

அவர்கள் பல இடங்களில் கட்டிடங்கள் எழுப்ப வனிதாதேவியின் அப்பா உதவியாக இருந்தார். அவர்களைத் தேடி அடுக்குமாடி வீடுவாங்க ஆட்கள் வந்த போதும் அவர்களுடைய நல்ல குணங்களை அவர்களையும் சொல்லி விடாமல் தான் முன்னின்றுதான் இருபது வருடங்களாக அந்தக் குடியிருப்பில் இருப்பதாகவும், தான் இங்கு வந்தபோது சுற்றிலும் பொட்டல்காடாக இருந்ததாகவும் ஆரம்பித்து இவர்கள் வந்தபிறகு குடியிருப்பில் லக்ஷ்மிகரம் செழித்தோங்கி

இருப்பதையும் இவர்களிடம் கட்டடம் வாங்கிய அத்தனை பேரும் மிக நலமாக இருப்பதையும் விளம்பரப்படுத்தினார்.

ரியல் எஸ்டேட் வித்தை தெரிந்த அவருக்கு புகழ்ந்து பேசுவது எளிதாக வந்தது. அப்படி புகழ்ந்து பேசுவது அவர்களுக்குத் தேவையாக இருந்தது.

வித்தை செய்வதற்கு முன்பு, சிறு குழல் வாசித்தும் சிறுபறை அடித்தும் கூட்டம் சேர்ப்பது போல, கூட்டத்தை மகிழ்விப்பது போல வந்து விசாரிக்கின்றவர்களுக்கு அவர்கள் பற்றிய அறிமுகத்தை வனிதா தேவியின் மாமா திறம்பட செய்ய அவருக்கு உதவிசெய்ய இவர்கள் தீர்மானித்தார்கள்.

ஒரு சிறிய தொகை வாங்கிக்கொண்டு வனிதாதேவி அடுக்குமாடி வீட்டைச் சுற்றிலும் பவளமல்லிகள் நட்டாள். சரக்கொன்றை பதியம் வைத்தாள். குல்மொகர் கன்று நட்டாள். கட்டிடம் எழுப்புவதற்கும் குல்மொகர் பூப்பதற்கும் மிகச் சரியாக இருந்தது. வீட்டு வாசலில் செக்கச் செவேல் என்று இரண்டாள் உயரசெடி முளைத்து, இலைமுழுவதும் பூவாக இருப்பது பார்த்து பெண்மணிகள் மகிழ்ந்து போனார்கள்.

''வனிதா, அந்த ஒரு எட்டு பிளாட்டு தனி கட்டிடம் விலை படியமாட்டேங்குது. யாரோ அதை தப்பா தண்ணி தேங்குற எடம்னு செல்லிட்டாங்க. கட்டின விலைக்குக் கீழதான் விலை கேக்கறாங்களே தவிர, நல்ல விலைக்குக் கேக்க முடியல. கிட்டத்தட்ட எண்பது தொண்ணூறு ரூபா அதில் மாட்டிட்டு முழிக்குது. பெரிய மரங்களா அங்க நடமுடியுமா வனிதா.''

''உன் வீட்ல இருக்கிற சரக்கொன்றையை அங்க நட முடியுமா. நான் தப்பாக்கேட்டா மன்னிச்சுக்க வனிதா'' என்று பழனிவேல் கவலையோடு கேட்க, அப்படியே செய்யலாம் என்று சொல்லி, சரக்கொன்றையைச் சுற்றி இடைவிடாது தண்ணீர் ஊற்றி மண்ணை விலக்கி மெல்ல மெல்ல கொத்தி, வேர்கள் அறுபடாது இடுப்பு ஆழத்துக்கு இறங்கி அந்த சரக்கொன்றை மரக்கன்றை வேரோடு பிடுங்கி, அந்த வீட்டு வாசலில் ஆழ

நட்டு, உள்ளுக்குள் உரம் போட்டு, சுற்றி புற்கள் தழைகள் போட்டு, மண்போட்டு மரத்தை மூன்று பக்கமும் தாங்கு கட்டைகள் வைத்து நிறுத்தி, அவ்வப்போது தண்ணீர் ஊற்றி வளர முதல்வாரம் இலைகள் பட்டுப்போய், பிறகு மறுவாரம் மெல்ல துளிர்த்து, மூன்றாம்வாரம் பெரிய இலைகள் ஏற்பட்டு, நான்காவது வாரம் சரக்கொன்றை பூக்கத் துவங்கியது.

''இங்க வந்து சட்டமா உட்கார்ந்து இத்தனை வியாபாரம் பண்றோமே, சாமிக்கினு எதாவது பண்ண வேண்டாமா. நான் வந்த உடனேயே நினைச்சேன், ஏதோ ஒரு வேகத்துல நடந்துபோச்சு, இந்த வீடு இழுபட்டவுடனேயே எனக்குள்ள அதுதான் ஞாபகம் வந்தது.

ஒரு கிரவுண்டு நீங்க என்ன விலை சொல்றீங்களோ வாங்கிக்கிறேன். அங்க ஒரு புள்ளையார் கோயில் கட்டணும்'' பழனிவேலின் அப்பா வனிதாதேவியின் மாமாவிடம் கேட்க.

''என்னாங்க இருக்கிறதே நாலு கிரவுண்டு. அது இன்னும் விலை ஏறட்டும்னு உக்கார்ந்திருக்கேன். தடுக்குனு பிள்ளையார் சுழி போட்டீங்கன்னா நான் விலையைக் கூடவா வைக்க முடியும். ஏழு ரூபாங்கிறது. எட்டுரூபா ஆகாதா, பத்துரூபா ஆகாதான்னு பார்த்துட்ருக்கறபோது பிள்ளையார் கோயிலுக்குக் கொடுன்னு கேட்டு, நான் அதுக்கு விலைபேசினா எனக்கு மரியாதையா அல்லது அந்த நெலத்துக்கு மரியாதையா'' என்று வனிதா தேவியின் மாமா அலுத்துக்கொண்டார்.

''ஆமா... பசங்களுக்குனு சொன்னீங்கள்ல...''

''ஆமாங்க. சின்னப் பொண்ணுக்கு ஒரு கிரவுண்டு. பையனுக்கு ஒரு கிரவுண்டு, வனிதாதேவிக்கு ரெண்டு கிரவுண்டு. ஏன்னா அதுக்கு யாரும் துணை இல்ல பாருங்க.'' - என்று அவர் வேதனையோடு பேச, வனிதா தேவி அருகே வந்து நின்றாள்.

''எனக்கு ரெண்டு கிரவுண்டா மாமா'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா. ப்ளாட்டுக்குள்ள அந்தப் பக்கத்து ரெண்டு கிரவுண்டும் உனக்குத்தான்னு நெனச்சிருக்கேன்.''

''எப்ப மாமா தருவீங்க?'' அவள் ஆழமாய் அவரை பார்த்தபடி கேட்டாள்.

''ஏன் கண்ணு, அப்படி ஏன் திடீர்னு கேக்கறே''

''என் இரண்டு கிரவுண்டையும் பிள்ளையார் கோயிலுக்கு கொடுத்துடுங்களேன்.'' அங்கிருந்த அத்தனை பேரும் ஆடிப்போனார்கள்.

''சட்டுனு இப்படியெல்லாம் பேசாதம்மா'' வனிதா தேவியின் மாமா சீறினார்.

''இப்படி பேசிட்ட பிறகு பின்வாங்கக் கூடாது. நீங்க சொன்ன உடனேயே எனக்கு தோணிச்சு. ஒரு கிரவுண்டு பிள்ளையார் கோயிலுக்கு எப்படி மாமா போதும்? ரெண்டு கிரவுண்டு இருந்து ஒரு பிள்ளையார் கோயில் கட்டுனோம்னா பின்னாடி அது பெருசா சிவன் கோயிலா, பஜனை மடமா, பெருமாள் கோயிலா எதாவது பண்ணிக்கலாம். எதுவுமில்லாத ஒரு கிரவுண்டுல சுத்திக்கூட வரமுடியாதபடி எப்படி செய்யறது, நெறைய நிலம் வாங்கி நெறைய வித்து நல்லா வளர்ந்திருக்கோம். கடவுளுக்குன்னு கையகல நெலம் விட்டா ஒண்ணும் கொறஞ்சிட மாட்டோம்.''

''என்ன வாங்கி... நீதான் குப்பையா கெடக்கறீயே.''

''நல்லவேளை... நல்லபடியா இருக்கேன் மாமா. நான் அந்தாளோட போயிருந்தேன்னு வச்சுக்கங்க. உண்மையான குப்பையாயிருப்பேன். தனியா இருக்கேன்னு சொல்லுங்க மாமா. நான் குப்பையா இல்ல.'' வனிதாதேவி மிருதுவான குரலில் பேசினாள்.

அங்கே எல்லோரும் மனம் நெகிழ்ந்து உறைந்து போனார்கள். பழனிவேல் அதிகம் ஆடிப்போனான்.

''ஏங்க அந்த நெலத்து மதிப்பு தெரியுமா. பதினாலு லட்சரூபா நன்கொடை கொடுப்பீங்களா. அப்படி நன்கொடை

கொடுக்கிறதுக்கு நீங்க என்ன டாட்டாவா, பிர்லாவா, ஏதோ அரைகிரவுண்டு கால் கிரவுண்டு எழுதி வைங்க. எதுக்குங்க இவ்வளவு'' அவன் வேகமாய் மறுத்துப் பேசினான்.

''பதினாலு லட்சரூபா கொடுத்தா வாங்கினோம். இல்லியே. பதினாலாயிரங்கூட கொடுக்கலியே, அதுக்கும் கம்மியாதானே செலவாச்சு.

இத்தனை வருஷம் தரிசா இருந்தது. இன்னிக்கு என்னமோ மதிப்பேற்பட்டுப் போச்சு, அதுனால பதினாலு லட்சரூபான்றதா. நம்ம பொருத்தவரைக்கும் பதினாலாயிர ரூபாதாங்க விலை.''

''அவசரப்பட்டு டக்குனு பேசாதம்மா. நிதானமா யோசனை பண்ணவேண்டிய விஷயம்.''

பழனிவேல் அப்பா அவளைச் சமாதானப்படுத்த முயற்சித்தார்.

''இல்லீங்க. இதை நான் எனக்காகக்கூட செய்யலே. நான் நல்லா இல்ல. என் குழந்தைங்க இரண்டும் நல்லாருக்கட்டும். அப்படிங்கிறதுக்காகத்தான் எனக்குன்னு கொடுத்த பங்கை நான் பிள்ளையார் கோயிலுக்குக் கொடுக்கிறேன். நீங்க என்ன சொன்னீங்க. இங்க ஒரு பிள்ளையார் கோயில் கட்டணும்னு சொன்னீங்க இல்லையா. உங்களுக்குத் தேவையானது நிலம். நீங்க செய்யப்போறது கட்டடம். நாம ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்தாக்கா இந்தக் குடியிருப்புல ஒரு அற்புதமான பிள்ளையார் கோயில் வந்துராது.''

''இந்த இடத்துல நெலம்வித்து வாங்கி எவ்ளோ சம்பாதிச்சோம். எத்தனை சுகமா இருந்தோம். பதிலுக்கு நாம ஏதாவது இந்த இடத்துக்கு பண்ணவேண்டாமா. ஏழுலட்ச ரூபா கிரவுண்டு மதிப்பு பன்னெண்டு லட்ச ரூபா ஆகும்னு சொன்னியே, இப்ப சொல்றேன். இந்த புள்ளையார் கோயில் வந்துதுனா ரெண்டே வருஷத்துல பதினஞ்சு லட்சரூபா வந்துடும்'' பழனியின் அப்பா உரக்கச் சொன்னார். அடுத்தபடி

என்ன பேசுவதென்று தெரியாமல் எல்லோரும் மௌனமாக இருந்தார்கள்.

''வனிதா அப்படி தீர்மானம் பண்ணிச்சுன்னா நான் என்ன செய்யமுடியும். அது உள்ளுக்குள்ள ஏதோ ஒரு வேதனை புகுந்து பேச வைக்குது. தனக்கு இந்த நெலம் வேண்டாம் அப்படீன்னு சொல்ல வைக்குது. தன் கஷ்டம் தீரணும்னுகூட இதைச் செய்யல. எம் புள்ளைங்க தாம்பட்ட கஷ்டத்த படக்கூடாதுன்னு சொல்லுதே. அது குறுக்க நின்னு வாணாம்னு சொல்றதுக்கு எனக்கு என்ன யோக்யதை இருக்கு.''

''எம் மூத்த கொழந்ததான் நல்லா இல்ல. அடுத்தது பொண்ணும் புள்ளையும் நல்லாருக்க வேணாமா. நான் தடுக்கல சார். ஏழும், ஏழும் பதினாலு லட்சம் இருந்துட்டு போவுது சார். இந்தக் குடியிருப்புல பன்னண்டு பேர் தேர்ந்தெடுத்து ஒரு கமிட்டி ஃபாம் பண்ணி ஒரு சபை ஏற்படுத்தி, சபைக்கு இந்த நெலத்தை தானமா குடுத்துர்றேன் சார்'' வனிதாதேவியின் மாமா நெகிழ்ந்த குரலில் பேசினார்.

''அப்போ, என் சொல்படி நல்ல விமானத்தோட நாலுபக்க காம்பவுண்டோட ஒரு பிள்ளையார் கோயில் நான் கட்றேன். அதுக்கப்புறம் அது என்னவா வேண்ணா மாறிக்கட்டும். மாறும். நிச்சயமா மாறும். சின்ன பிள்ளையார் கோயில் அப்படியேவா இருந்துடும். ஜனங்க உள்ளுக்குள்ள வர ஆரம்பிச்சா கபகபன்னு பெரிசா கோயில் எழுப்பிடுவாங்க. கோயிலுக்கு மட்டும் ஜனங்க செய்றதுக்கு அஞ்சறதே இல்ல. ஆனா இப்பவே தீர்மானம் பண்ணிடுவோம்.

''நெலத்துக்கு சொந்தக்காரன் நீங்க, என்ன மாதிரியான கோயில் வரணும்னு நெனைக்கிறீங்களோ அதை ஒரு வார்த்தை எழுதிடுங்க. சிவன் கோயிலா, விஷ்ணு கோயிலா பின்னால பிரச்சனை வரக்கூடாது பாருங்க.''

''இங்க துர்க்கை கோயில் கட்டிடலாங்க. இந்த இடத்துல துர்க்கை கோயில் கட்டினாத்தான் மலையிலிருந்து வேகமா வர்ற

தண்ணிய அவ திசை திருப்பி அனுப்புவா. இப்படி ரொம்ப நாளா எனக்கு தோணிச்சுங்க. ரெண்டு மூணுதடவை இந்த இடத்த வெள்ளம் சூழ்ந்தபோது கூட நான் மகாகாளியதான் மனசுக்குள்ள வேண்டிக்கிட்டேன்'' வனிதாதேவியின் மாமா சொல்ல, அவர்கள் எல்லோரும் திகைப்போடு நின்றிருந்தார்கள்.

கடவுளே என்னமோ நாக்கு புரண்டு புரண்டு எல்லார் வாயிலயும் என்னென்னமோ செய்தி வந்து, இது எங்கெங்கயோ இழுத்துக்கிட்டு போவுது. நான் நெனைக்கிறேன், இங்கிருக்கிற யாரும் பேசல. கடவுள் பேசறாருன்னு நெனைக்கிறேன். நம்ம மீறி வார்த்தைகள் வந்து விழுதுனு நெனைக்கிறேன். இல்லேன்னா தடுக்குனு வனிதாதேவி வந்து பதினாலு லட்சரூபா நெலத்தை கோயிலுக்கு எழுதி வைன்னு சொல்லுமா. சிவன் கோயில், விஷ்ணு கோயில்னு சொல்லாம துர்க்கை கோயில்னு சொல்றீங்களே. எவ்ளோ பெரிய விஷயம் அது. ஆனா துர்க்கை கோயில் என்னால ஆகாதுப்பா. நான் பிள்ளையார் கோயில்தான் கட்டுவேன். நிலத்துச் சொந்தக்காரர் இங்கு பதினாறு கைகள் உள்ள துர்க்கையின் சிலை வைத்து வழிபடவேண்டும் என்று விரும்புகிறார். அடுத்து வரும் நிர்வாகிகள் இதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் அப்படீன்னு ஒரு வரி எழுதிர்றேன்.''

''இந்தாம்மா வனிதா, நீ ஒண்ணும்பேசாம இருக்கே. நெலம் வித்தது நீதானே. என்ன சிலை வெக்கணும்னு நீதான் சொல்லக்கூடாதா'' பழனிவேலின் அப்பா பேச, ''மாமா சொல்றதுதான் சரி. இந்த இடத்துல செம்பருத்தி ரெண்டு உள்ளங்கை அளவுக்குப் பூக்கும். ஹவாய் வெரைட்டின்னு ஒண்ணு கொண்டாந்தாங்க. இங்க பயிர் பண்ணி பெருசு பெருசா பூத்துக் குலுங்கறத பார்த்து அந்த பதியம் எடுத்துனுபோய் வேற இடத்துல போட்டாங்க. ஹவாய் தன் இடத்துல பூக்கறதவிட ரொம்பப் பெருசா இங்க பூக்குதுனு சொன்னாங்க.''

''இந்தப் பூமி லேசாக செம்மண் பூமி. இங்க செகப்புப் பூ நல்லா வரும். பூமியும் செம்மண்ணா இருந்து பூவும் செகப்பா பூத்தா அது காளி இடந்தானுங்களே.''

''எனக்குத் தெரியாதும்மா. நான் கட்டடக்காரன். இவ்வளவு விஷயங்கள் எனக்குத் தெரியாது.'' பழனிவேலின் அப்பா கைகூப்ப, பழனிவேல் அவளையே வினோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டு நாள் பொறுத்து வேறொரு கட்டிடம் சிக்கி அவள் ஆட்களை வைத்து தோட்ட வேலை பார்த்துக் கொண்டிருந்த போது, ''உனக்கு என்ன வயசு?'' என்று வனிதாவைக் கேட்டான்.

''இருபத்தஞ்சு வயசு. ஏன் கேட்கறீங்க?'' வனிதாதேவி புன்னகையோடு கேட்டாள்.

''உன் வீட்டுக்காரர் திரும்பி வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்குவார்னு நெனக்கிறியா.''

''நான் நெனைக்கல. வந்தாலும் நான் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்ல''

''என்?''

''வேறொரு பொண்ணக் கூப்பிட்டு கல்யாணம் பண்ணிக் கிட்ட பிறகு நா போயி அங்க என்னான்னு இருக்கிறது. என்ன அவரு பொண்டாட்டின்னு வச்சிக்கிட்டா, இப்ப கல்யாணம் பண்ண பொண்ணோட கதி என்னாகிறது. அந்தப் பொண்ணோட அவரு சந்தோஷமா இருக்கட்டும். எனக்கு அவரு தேவையில்லை.''

''சரி புருஷன் தேவையில்லை. வேறொரு கல்யாணம் பண்ணிக்கிறது.'' பழனிவேல் சற்று பதட்டமாகப் பேசினான்.

''என்னாச்சு உங்களுக்கு. திடீர்னு ஓடிவந்து எங்கிட்ட இன்னொரு கல்யாணம் பண்ணிக்கன்னு சொல்றீங்க.''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேக்கறதுக்குப் பயம். அதனால சுத்தி வளைச்சி பேசறேன்.'' பழனிவேல் பளிச்சென்று வார்த்தைகளால் அவளைத் தாக்கினான்.

அவள் திடுக்கிட்டாள். நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். தலை குனிந்து கொண்டாள். நகர்ந்துபோய் ''ஜாக்கிரதையா நடுப்பா. ஒடிச்சிடப்போற'' என்று வேலையாளை எச்சரித்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நகர்ந்து வேறுபக்கம் போனான். இரண்டு மணிநேரம் கழித்து மறுபடியும் அவள் எதிரே போய் மடக்கினான்.

''என்ன சொல்ற வனிதா. செடிய ஜாக்கிரதையா நடு ஒடச்சிறாதே அப்படீன்னா உனக்கு இஷ்டமில்லேன்னு சொல்றியா. எனக்கு அதப்பத்தி அக்கறை இல்ல. எனக்கு இஷ்டமிருக்கு. உன் மாமன் மகனும் மகளும் நல்லாருக்கணும்னு சொல்லிட்டு பதினாலு லெட்ச ரூபா பெறுமானமுள்ள ரெண்டு கிரவுண்ட் நெலத்தக் கொடுத்தியே. அதேமாதிரி நான் ஒண்ணு செய்யணும்னு நெனைச்சித்தான் உங்கிட்ட கேட்டேன். நீ நெலம் கொடுத்தே. நான் என்னையே கொடுக்கிறேன். நீ சாமிக்கு நெலம் கொடுக்கிறே. நான் உனக்கு இன்னொரு வாழ்வு கொடுக்கிறேன்.

கலைஞ்சு போன ஒரு பொண்ணுக்கு நாம வாழ்வு கொடுத்தா எனக்குப் பின்னாடி இருக்கிற என் குடும்பத்தவங்க நல்லா இருப்பாங்கன்னு நீ நெனக்கிறே.

எங்கேயோ ஓடிப்போய் ஒரு நடிகனுக்கு வைப்பாட்டியா வாரத்துக்கு ஒரு தடவை வாழ்ந்துவிட்டு இருக்காளே எங்கக்கா அவ நல்லா இருக்கணும்னு நெனச்சு, நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்.

நீ வயிறு குளிர்ந்தா, நீ மனசு குளிர்ந்தா உன்னுடைய வாழ்க்கை செம்பருத்திப் பூ மாதிரி, செடி மாதிரி பூத்துக் குலுங்குனா அந்தப் பொண்ணும் பூத்துக் குலுங்கும்னு நெனச்சி நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றேன்.

எத்தினி நெலம் வித்துட்டுப் போறோம். கடவுளுக்குனு ஒண்ணு பண்ணவேண்டாமா. அப்படீன்னு கேட்டே. எத்தனை மனுஷாள்கிட்ட இருந்து எத்தனை உதவி வாங்கியிருக்கோம்.

ஒரு மனுஷாளுக்கு நாம உதவி பண்ணவேண்டாமான்னு நான் நெனக்கிறேன். இது தப்பா.

நான் நல்லா வச்சிக்குவேன். உங்ககிட்ட பிரியமா நடந்துக்குவேன். இதுக்கு முன்னாடி உனக்கு புருஷனா இருந்தவன் உன்னை என்ன பண்ணானோ எனக்குத் தெரியாது. ஆனா ஒரு பொண்ண உள்ளங்கையில் வச்சு தாங்கணும்னு எங்கக்கா ஓடிப்போன பிறகு எனக்குத் தோணிச்சு.

பதினாறு வயசுல தோணின அந்த நினைப்பு இன்னமும் என்கிட்ட இருக்கு. என்னக்கண்டு பயப்படாம இருந்தா, உன்னை நா நல்லா வச்சுக்குவேன். நான் இப்படிப் பேசினேன்னு உங்க அப்பாகிட்டே போய் சொல்லு'' அவன் அவளை உற்றுப் பார்த்துவிட்டு வெளியேறினான். அவள் வீடு நோக்கிப் போனாள்.

இரண்டு வீடுகளும் ஒரு மாதத்துக்கு மேல் இந்த திருமணத்தின் சாதக பாதகங்களை திரும்பத் திரும்ப பேசின. பேசாத நேரங்களில் மிகத்தீவிரமாய் சிந்திந்தன. வனிதா தேவியின் மாமா படியேறி வீட்டிற்கு அவருடைய மனைவி யோடு வந்தார்.

''ரெண்டாங் கல்யாணத்துக்கு படியேறி பொண்ணுக்காக புள்ள கேட்கவரது நியாயம் இல்லீங்க. ஆனா அந்தப் புள்ள வாயத் திறந்து ஆவலோட கேட்டிருக்காங்கறதுனால ரொம்ப சந்தோஷமா ஆவலோட என் தமக்கை பொண்ணுக்கு ஒரு விடிமோட்சம் கெடச்சிரும்கிற நம்பிக்கையோட நான் வந்து நின்னு கேட்கறேன். எனக்கு முழு சம்மதங்க. நான் எதுனா செய்யணுமா. உங்களுக்கு சீரா செனத்தியா எதுனா பண்ணணுமா. எங்களுடைய பொண்ணும் பையனும் தனக்கிருக்கிற அந்த ரெண்டு கிரவுண்டையும் அக்கா பேருல எழுதிக் கொடுத்திடுங்க. அக்காவுக்கு அது சீரா போகட்டும் அப்படீன்னு சொன்னாங்க. நான் அழுதிட்டேன். நெலம் வாங்கறதுதான் ரொம்ப முக்கியம்னு கைல இருந்த காசெல்லாம் போட்டு நாலா பக்கமும் நெலம் வாங்கினேன். ஆனா என் சொத்து

நெலம் இல்லீங்க. எம் பசங்க. இப்பவோ எப்பவோ யாருக்கோ என்னமோ நல்லது பண்ணி இருக்கேன். எனக்கு மாணிக்கமா கொழந்தைங்க பொறந்திருக்கு.

வனிதாவோட நெலம் கோயிலுக்குப் போகட்டும். என் பெண்ணோட நெலமும் பையனோட நிலமும் அதே பதினாலு லட்சரூபா மதிப்பா பழனிவேல் பேருல எழுதித் தர்றேன். அவுங்க கல்யாணம் பண்ணி சந்தோஷமா இருக்கட்டும். உங்க அபிப்பிராயம் என்னன்னு கேக்கிறதுக்காக வந்தேன்'' கைகட்டி தரையில் உட்கார்ந்து பேசினார்.

''முதல்ல தரையிலேர்ந்து எழுந்து சோபாவில் உட்காருங்க. நீங்க பண்ற ட்ராமா எனக்குப் பிடிக்கல'' பழனிவேல் அதட்டினான். அவரைத் தூக்கி சோபாவில் உட்கார வைத்தான். அந்த ரெண்டு கிரவுண்டும் எனக்கு வேணும்'' என்று சொன்னான். அவன் வீடே அவனைத் திடுக்கிட்டுப் பார்த்தது.

பழனிவேல் ஏதோ ஆத்திரத்தால் பேசுகிறான் என்ற சந்தேகத்துடன் அவனை நோக்கியது. ''கிரவுண்ட் உங்களது, கட்டடம் என்னது. ஆயிரத்து நூறு ஸ்கொயர் ஃபீட்ல இந்தப் பக்கம் மூண்டுக்கா அந்தப் பக்கம் மூணடுக்கா ஒரு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடலாம். ரொம்ப நூல் பிடிச்சா மாதிரி எடதும், வலதும் அதிக இடைவெளி இல்லாது இருக்கும். இரண்டு கிரவுண்டு தாண்டி உங்க தோட்டம் ஒட்டியிருக்கிற பகுதியைக் கொடுத்தீங்கன்னாக்கா தோட்டத்தோட கூடிய அடுக்குமாடி வீடு கட்டிடலாம். அப்ப கூடுதலா விலை போகும்.

முதல் ஃப்ளோர் இந்தப்பக்கமும், அந்தப்பக்கமும் உங்க ரெண்டாவது பொண்ணுக்கும், பையனுக்கும் கொடுத்துடறேன். மத்தத வித்த செலவுபோக லாபத்தை ரெண்டா பங்கு பிரிச்சிடலாம்.

வனிதாவை எனக்கு கல்யாணம் பண்ண அடுத்த மாதம் இந்த வேலையை ஆரம்பிச்சிடலாம்'' பழனிவேல் உரக்கச் சொன்னான்.

''அவங்க வீட்டுப் பொம்பளைங்களுக்கு இதுபத்தி ஒண்ணும் அபிப்ராயம் இல்லியா. அவுங்க சரின்னு ஒத்துக் கிட்டாங்களா.'' வனிதாதேவியின் மாமி உரக்கக் குரல் கொடுத்தாள்.

''நான் என்னத்த சொல்றது. எங்க வீட்டுக்காரர் என்னை கல்யாணம் பண்ணிக்கிறபோது, நாங்க சந்து வீட்ல குடியிருந்தோம். நான் உயரமா இருக்கேன், அழகா இருக்கேன், நல்லா பேசறேன்னு ஆசைப்பட்டு, எங்க வீட்டுப் படியேறி கல்யாணம் கட்டிக்கறேன்னாரு. தெருவுல போறவன் வந்து! படியேறி பொண்ணு கேட்டா கொடுத்துற முடியுமா. நாங்க வேற ஜாதி, நீங்க வேறு ஜாதி, அப்படீன்னு எங்க அம்மாவும், அப்பாவும் சத்தம் போட்டாங்க.''

''கல்யாணம் பண்ணிக்காட்டி நான் விஷம் குடிச்சி செத்துடுவேன், வீட்டை விட்டு ஓடிப்போயிருவேன்னு அவரு எங்க அப்பாவ பயமுறுத்தினாரு. ஊர்ல இருக்கிறவங்க ஒண்ணா கூடி அவருக்கு நல்ல வேலை இந்தப் பொண்ணும் லட்சணமா இருக்கு. சேத்து வைங்கன்னு பெரிய மனுசாள் சொல்லி எங்க அப்பா அம்மா ஆசைக்கு எதிர்பதமா அவருக்கு கல்யாணம் பண்ணி வச்சாங்க. கல்யாணமான மூணாம் வருஷமே எல்லாரும் ஒண்ணா ஆயிட்டாலும் அன்னிக்கு தேதிக்கு எங்க அப்பாவும், அம்மாவும் என்ன நெனச்சங்களோ, என்ன சாபம் குடுத்தாங்களோ. நாம் பெத்த மொதப் பொண்ணு நான் ஓடணும்னு நெனச்ச மாதிரியே என்னை விட்டு ஓடிப் போயிட்டா.''

''எங்க அப்பா அம்மாவை நான் எப்படி ராத்தூக்கம் இல்லாம அடிச்சேனோ, அதேமாதிரி என்னை எம்பொண்ணு ராத்தூக்கம் இல்லாம அடிச்சா. இது நேராகறதுக்கு என் புள்ளை உங்க பொண்ணுக்கு வாழ்வு கொடுக்கறேன்றான். நான் அந்த வார்த்தையைக் கூட சொல்லமாட்டேன். வக்கணை இருக்கறவன் ஆசைப்பட்ட போது ஆசைப்பட்ட பொண்ண கல்யாணம் பண்ணிக்கலாம். வக்கணை இல்லாம ஆசைப்

படுறதுதான் தப்பு. எம்புள்ள உங்கபொண்ண நல்லா வச்சு காப்பாத்துவான். என்னிக்கு இவன் பொறந்து தலை தூக்குனானோ அன்னிலேர்ந்து இவருடைய தொழில் நல்லபடியா ஆச்சு. எப்ப இவன் படிச்சிட்டு ஒண்ணா கை கொடுத்தானோ, அன்னைக்கு மத்த எல்லாரையும் விட இவரு நல்லா சம்பாதிக்க ஆரம்பிச்சாரு.

இந்த இடத்துக்கு வந்து இந்த நெலத்த மிதிச்சி இங்க கட்டடம் கட்டறபோதுதான் சிட்டில இருக்கிற எல்லா இஞ்சினியர்களையும்விட நாங்க உயரமாக வந்தோம். இவன் பேச்சு கேக்காத சிட்டிலே இருந்திருந்தோம்னா இந்த உயரம் நாங்க வந்திருக்கவே முடியாது. எனக்கு உங்க வீட்டுப் பொண்ண கல்யாணம் பண்ணிக்கிறதுல எந்த ஆட்சேபனையும் கிடையாது.''

''அப்பப்போ வனிதாதேவியை குழந்தையோட வந்துட்டு போயிட்டிருக்கச் சொல்லுங்க.''

அவர்கள் கோயிலுக்கு கமிட்டி மெம்பர்கள் சேர்த்தார்கள். நல்ல வேலையில் உள்ளவர்கள், உயர்ந்த படிப்பு படித்தவர்கள், வளமான வாழ்க்கையைப் பற்றி நம்பிக்கை உள்ளவர்கள் அங்கு அலங்காரமாக வீடு கட்டிக்கொண்டு வாகனமும், வசதியுமாய் குடியேறியவர்கள் வேகமாக முன்வந்தார்கள். ரெண்டு கிரவுண்டு தர்றாளா. அந்தப் பொண்ணு கொடுத்ததுதான் ஆச்சரியமா இருக்கய்யா. விளையாட்டா எப்படி டக்குனு கொடுத்துது. மெல்ல மெல்ல காற்றில் பூவாசம் பரவுவதுபோல் இரவு நேரத்தில் பவளமல்லி மொட்டவிழ்ந்து அந்த வாசனை ஊர் முழுவதையும் வளைத்துக் கொள்வதுபோல், வனிதா தேவியின் வாழ்க்கை அவள் தோல்வி அவளைத் திருமணம் செய்துகொள்கிறேன் என்று பழனிவேல் சொன்ன வார்த்தை சகலருக்கும் பரவி, நிலமும் பொதுச் சொத்தாய் கோயிலுக் கென்று ஆர்ஜிதம் செய்யப்பட்டது.

பழனிவேலின் தந்தை வெகுவேகமாய் வாஸ்து சாஸ்திரப்படி பலரையும் கலந்து ஆலோசித்து நிவர்த்தி

ஹோமங்கள் செய்து, பித்ருக்களுக்கு ப்ரீதி செய்து அடிக்கல் நாட்டினார். மடமடவென்று கட்டிடம் எழுப்பினார்.

ஊர் ஒன்றுகூடி, நூறு இருநூறு என்று போட்டு ரெண்டு முழங்கை உயரத்திற்கு மிக லட்சணமான பிள்ளையாரை வலம்புரி விநாயகரை மகாபலிபுரத்திலிருந்து வாங்கி வந்தது. ஆனந்த விநாயகர் என்று பெயரிட்டது. பாலிலும் நெல்லிலும் விநாயகர் அமர்ந்திருந்தார். நல்ல நாளில் நல்ல நேரத்தில் கோயிலுக்குள் அமர்ந்து சாந்து பூசி இறுக்கமாய் நின்றார். வஸ்திரமும் மாலையும் அணிவித்து அந்தக் குடியிருப்பு பகுதியினர் கொண்டாடினார்கள். வருஷம் முழுவதும் சங்கட ஹர பூஜைக்கு ஆட்கள் நிறுவப்பட்டார்கள். அதற்கு மேலும் பூஜை செய்வதற்கு ஆட்கள் இருந்தார்கள். புதிதாய் வந்த ஒருவர் கும்பாபிஷேகத்திலிருந்து நாற்பத்தைந்து நாள் தினமும் நான் கணபதி ஹோமம் செய்கிறேன் என்று தானாகவே முன்வந்து ஹோம குண்டத்தைத் தொடர்ந்து எரியவைத்தார். நாற்பத்தைந்து நாட்கள் சிறுவர்களும் இளைஞர்களும் அந்த மனிதருக்குப் பின்னே அணிவகுத்து மூலமந்திரம் கற்றுக்கொண்டு ஹோமம் செய்தார்கள்.

அந்த மலையிலிருந்து நீர் குளத்திற்குப் போவதற்காக பெரிய கால்வாய் வெட்டப்பட்டு கால்வாய் மீது பாலம் அமைக்கப்பட்டது. கால்வாயின் கரைகள் கெட்டியாக்கப்பட்டன. நல்ல மழைக்கு தண்ணீர் தேங்கும். இரண்டு மூன்று நாட்கள்தான் நிற்கும். அந்த நீரை நிலம் உறிஞ்சிக் கொள்ளும். அப்படி உறிஞ்சிக்கொள்வது நல்லது. ஏழு நாள் எட்டுநாள் தண்ணீர் காடாக இந்த ஊர் இனி இருக்கவே இருக்காது. நீரை குளத்திற்குத் திருப்பி விட்டோம் என்று பொதுப்பணித்துறை அறிவித்தது.

தேர்தலில் வாக்குச் சேகரிப்பதற்காக அந்தப்பகுதி கட்சியினர் வரிந்து கட்டிக்கொண்டு வேலைசெய்தார்கள். மளிகைக்கடைகள் வந்தன. இருபத்து நான்கு மணி நேர ஆஸ்பத்திரி துவங்கப்பட்டது. பாலர் பள்ளிக்கூடங்கள் ஒன்றுக்கு

நான்கு திசைகளிலும் ஏற்பட்டன. ஜெனரல் ஸ்டோர்ஸும், மெடிக்கல் ஷாப்பும், லெண்டிங் லைப்ரரியும், ட்ரை க்ளீனரும், நல்ல முடிதிருத்துமிடமும் ஏற்பட்டன.

வனிதாதேவி இருக்குமிடம் முக்கியமான பிரதான சாலை ஆயிற்று. அவளுடைய தம்பி வளர்ந்து வாலிபனாய் நின்று வாசல் பக்கத்து காம்ப்பௌண்ட் சுவரை இடித்துவிட்டு அங்கு கடைகள் கட்டினான். கடைகள் வந்தவுடனேயே அந்த இடம் பிரகாசமாகப் போய் விட்டது.

வீடு மறைவாக இருந்தாலும் தோட்டத்தைப் பாழ் செய்யாது கடைகள் எழுப்பி, கடைகளுக்கு மேல் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டுக்கு இடம் ஒதுக்கி அதை அக்காள் கவனித்துக் கொள்ளும்படி செய்தான்.

பழனிவேல் திட்டமிட்ட அடுக்குமாடி கட்டிடம் முடியும் நேரத்தில் வனிதாதேவி பழனிவேல்ராஜன் திருமணம் நடைபெற்றது. அந்த விநாயகர் கோயிலிலேயே அவன் தாலி கட்டினான். ஊர் சுற்றி வந்து அவர்களை ஆசீர்வாதம் செய்தது, பரிசுகள் கொடுத்தது. இது ஓர் அற்புதமான வாழ்க்கையாக அமையட்டும் என்று ஆசீர்வதித்தது.

குழந்தை பிரபாகரன் தன் தாய் வனிதாதேவியின் இரண்டாவது திருமணத்தை, தன் தந்தை பழனிவேல் தாய்க்கு தாலி கட்டியதை மிக அருகிலே நின்று மகிழ்ச்சியோடு பார்த்தான். மடியில் உட்கார்ந்து இனிப்புகள் தின்றான்.

வனிதாதேவி, பழனிவேல் மூலம் அடுத்த வருஷமே ஒரு பெண்குழந்தைக்குத் தாயானாள். இதுபோதும் என்று ஆபரேஷன் செய்து கொண்டாள்.

தூய்மையான காற்று, சுத்தமான நீர், அருமையான உறவினர்கள், நல்ல நண்பர்கள், புதிய பள்ளிக்கூடங்கள் போட்டி போட்டுக்கொண்டு நன்கு பயிற்றுவிக்க ஒரு அற்புதமான சூழ்நிலையில் பிரபாகரன் வளர்ந்தான்.

நகரத்தை ஒட்டியும் அதே சமயம் நெரிசலில் இருந்து விலகியும் உள்ள அந்தக் குடியிருப்பு மக்கள், நகரத்து மக்களை விட ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். சுயமாய் சம்பாதித்து சொந்தமாய் வீடுகட்டி, முன்னேறிய குடும்பங்களிலெல்லாம் குழந்தைகளுக்கு ஊக்கம் கொடுத்து வளர்த்தார்கள். பையன்களும் பெண்களும் ஒன்றாகக் கலந்து பேசி தங்கள் நட்பை வளப்படுத்திக் கொண்டார்கள். அதைக் கொச்சைப் படுத்தாது கம்பீரமாய் எடுத்துக்கொண்டார்கள். ஆரோக்யமாய் வாழ்ந்தார்கள்.

சென்னை நகரத்தைவிட அதன் புறநகர்ப்பகுதி எல்லா வகையிலும் மிக மிகச் சிறப்பாக இருந்தது. கொசுத்தொல்லைக்கு அவ்வப்போது போராட வேண்டியிருந்தது. லெவல் க்ராஸிங் ஒரு தொல்லையாக இருந்தது. மறுபடியும் ஊர் கூடி மத்திய சர்க்காருக்கு எழுதி விண்ணப்பிக்க, தென்னக ரயில்வேக்கு மனு எழுதிப்போட, தண்டவாளத்திற்கு அடியே உறுதியான பாலம் கட்டப்பட்டு போக்குவரத்து சகஜமாக்கப்பட்டது. ஊர் இன்னும் அதிகம் வளர்ந்தது.

குத்துக் குத்தாய் கருவேலஞ் செடிகளும், கள்ளியும், எருக்கமும் பூத்த குடியிருப்புப் பகுதியா இது? முற்றிலும் மாறிப்போய் நாலா பக்கமும் தெருக்கள் கிளைவிட்டு இரண்டு வருடத்தில் அது மாறிப் போயிற்று. ஊர் மாறியது போலவே வனிதாதேவியும் மாறினாள்.

அன்பு செய்ய பழனிவேல் இருக்க, பழைய வாழ்க்கையை முற்றிலும் உதறிவிட்டு சகலமும் மறந்துவிட்டு, பழனிவேலுக்குத் துணையிருந்தாள். ரியல் எஸ்டேட் இனிமே பிரமாதமா இருக்காது. கொஞ்சம் டல்லடிக்கும். நாம் வேற ஒரு தொழிலுக்குப் போகணும் என்று பழனிவேல் சொல்ல, அவர்கள் யோசித்தார்கள்.

வனிதாதேவியின் மாமாவின் விருப்பப்படி பிள்ளையார் கோயிலில் துர்க்கை குடிவந்தாள். பெரிய ராஜகோபுரம் எழுப்பப்

பட்டது. கோயில் அகலமாக்கப்பட்டது. கருங்கல் தளம் போடப் பட்டது. மணிமண்டபம் எழுப்பப்பட்டது. பதினைந்து வருடத்தில் குடியிருப்புப் பகுதிபோல கோயில் சீரும் சிறப்புமாக வளர்ந்தது. நகரத்தில் உள்ளவர்கள் வேண்டுதலுக்காக இந்த குடியிருப்புப் பகுதிக்கு வந்து அம்மனைத் தரிசித்துவிட்டுப் போனார்கள். உன் எல்லையில் எனக்கு வீடு கொடம்மா என்று வேண்டிக்கொண்டு அந்த வேண்டுதல் பலித்து அவள் எல்லைக்குக் குடிவந்தார்கள்.

பழனிவேல் அந்தப் பகுதியில் தனிப்பட்ட தலைவராக விளங்கினான். அந்தப் பக்கத்து அரசியல்வாதிகள் பழனிவேலின் செல்வாக்கை உணர்ந்து, மக்கள் அவனுடைய பேச்சை செவிமடுப்பதை அறிந்து, தேர்தலின் போது அவனை அண்டி அவனுக்கு வேண்டியன செய்து ஓட்டுகள் பெற்றார்கள். பழனிவேல் தனக்கென்று எதுவும் எடுத்துக்கொள்ளாது, ஊரின் வளர்ச்சியை மனதில் வைத்து அரசியல்வாதிகளை உபயோகப்படுத்தி இன்னும் தெருக்களைச் செம்மையாக்கினான். மின் வசதியை அதிகமாக்கினான். வாசக சாலைகள் எல்லா பக்கமும் அமைத்தான். இப்போது மழை பெய்தால் ஒரு நாளும் ஊருக்குள் நீர் வருவதில்லை. மாறாய் மலையிலிருந்து ஒரு ஓடை பெருகி குளத்திற்குப் போகிறது. மழை நாட்களில் மக்கள் அந்த ஓடைக்கு அருகே போய் உட்கார்ந்து பனை ஓலைகளை கப்பல் செய்துவிட்டும், கல்லெறிந்தும் சில சமயம் நீந்திக் குளித்தும் மழையைக் கொண்டாடினார்கள். அந்த புறநகர் குடியிருப்பு மிக பலமாக வளர்ந்து வந்தது. வீடுகள் அதிகரிக்க நீர் உபயோகம் அதிகரித்தது.

சென்னை நகரம் நீருக்குத் தவிக்க, இங்கிருந்து கிணறுகளில் நீர் உறிஞ்சி லாரிகளில் ஏற்றி சென்னை நகரில் கொண்டுபோய் விற்றுவிட்டு வந்தார்கள். செடிகளுக்கு இந்த நீர் நன்றாக இருக்கிறது என்று சொல்லி பெரிய பங்களாக்களில் வாங்கினார்கள். இன்னும் வீடுகள் கட்டாத திறந்தவெளிப் பகுதியில் நிலத்தை குத்தகை எடுத்து காய்கறிகள் பயிர்செய்து

சென்னை நகருக்கு கொண்டுபோய் விற்றார்கள். கீரைப் பாத்திகள் அதிகம் போட்டார்கள். கீரைகள் நன்கு விளைந்தன, வெகுவேகமாய் விலை போயின. கீரைகள் விளையும் இடத்திற்கே வியாபாரிகள் வந்து கட்டுகளை எண்ணி வாங்கிக்கொண்டு போனார்கள்.

அந்த மலைமீது ஒரு கோயில் கட்டலாம் என்று இளைஞர் சங்கம் முடிவு செய்தது. மலைமீது கோயில் கட்டுவதில் ஊர் மிகவும் சந்தோஷப்பட்டது. இது ஒரு மேட்டர் போதும். இது சரியா செய்திட்டீங்கன்னா மொத்த மெட்ராஸும் ஞாயிற்றுக் கிழமையானா இங்கு வந்து நிற்கும். என்ன கோயில்னு மட்டும் தீர்மானம் பண்ணிக்கங்க.

மதம் மனிதர்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தாலும், வாழ்க்கை கலாச்சாரம் வேகமாக மாறிக் கொண்டிருந்தது. பதினைந்து வருடங்களுக்கு ஒருமுறை மாறிக் கொண்டிருந்த கலாச்சாரம், ஐந்து வருடத்திற்கு ஒருமுறை மாற ஆரம்பித்தது. வருடத்திற்கு வருடம் வெவ்வேறு முகம் காண்பிக்க ஆரம்பித்தது.

பெண்கள் மிக அழகாக விளங்கினார்கள். ஆண்கள் மிகத் திறமைசாலிகளாக தங்களை வளர்த்துக் கொண்டார்கள்.

மயிலாப்பூரிலிருந்தும், திருவல்லிக்கேணியிலிருந்தும், அடையாரிலிருந்தும் புறநகர் பகுதிக்குத் தனி வீடு, தோட்டத்தோடு கூடிய வீடு என்று வந்த அந்த உயர்மத்திய தரவர்க்க குழந்தைகள், அரசாங்க உத்தியோகம் தங்களுக்குக் கிடைக்காது என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்து அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவிற்கும் பயணமானார்கள். கும்பல், கும்பலாய் விமானம் ஏறினார்கள். உங்கள் மகளை நான் பார்த்துக்கொள்கிறேன், நாங்கள் நான்கு பேர் இருக்கிறோம். எங்களோடு அவளும் இருக்கட்டும் என்று பையன்கள் சொல்ல, அந்தப் பையன்களை நம்பி இளம் பெண்கள் அனுப்பப் பட்டார்கள்.

அமெரிக்க கலாசாரத்தின் பாதிப்பு அந்த புறநகர்ப் பகுதிக்கு மிக தெள்ளத் தெளிவாய் தெரிந்தது. தலைமுடியை ஒட்ட வெட்டிக் கொள்ளுதல், சூயிங்கம் மெல்லுதல், இடது காதில் தோடு போட்டுக் கொள்ளுதல் என்கிற ஆண்களின் தோற்றமும், இறுக்கமான பேண்ட்டும், தொளதொளவென்ற சட்டையும் விரித்த தலையுமாய் பெண்களின் தோற்றமும் மாறிக் கொண்டது. நுனியில முடிச்சு போட்டுட்டு போடி என்று பாட்டி சொல்ல, தலைலயும் முடிச்சு போட முடியாது, கழுத்தலயும் முடிச்சுப் போட்டுக் கொள்ள முடியாது என்று பேத்தி சொல்ல, அந்த வார்த்தைகள் வீட்டை தெருவைப் பாதித்தன.

புலம்புபவர் புலம்பிக் கொண்டிருக்க, போற்றுபவர் போற்றிக் கொண்டிருக்க, மாற்றங்கள் இடைவிடாது நடந்துகொண்டிருந்தன.

ஆமா சார் காது குத்திண்டிருக்கான். ஆனா ரெண்டாயிரம் டாலர் சம்பாதிக்கிறானே. ரெண்டாயிரம் டாலர்னா எவ்ளோ தெரியுமா, தொண்ணூறாயிர ரூபா. தொண்ணூறாயிர ரூபா ஒரு மாசம் அவனுக்கு சம்பளம். எனக்கு ரிட்டயர் ஆகிறபோது ஆறாயிரத்து எழுநூத்தி நாப்பது ரூபாதான் சம்பளம்.

அவன் காது குத்தியிருந்தா என்ன, மூக்கு குத்தியிருந்தா எனக்கென்ன சார். மாசம் ஐநூறு டாலர் அனுப்பறான், வீட்டை இம்ப்ரூவ் பண்ணிக்கத்தான். மேல எனக்கொரு போர்ஷன் கட்டிக்கொடுக்கும்படி கேக்கறான். கீழ் போர்ஷன் என் பொண்ணுக்கு. மேல் போர்ஷன் எம் பையனுக்கு. மொத்தமும் சலவைக்கல் போட்டு நல்ல பட்ஜெட்ல நன்னா வீடு கட்றேன். பசங்க நல்லா இருக்காங்கிறதவிட பெரிய சந்தோஷம் உலகத்துல வேற எதுவும் இல்ல சார்.

அமெரிக்காவுக்குப் போன ஆண்களும், பெண்களும் நெருக்கமாகப் பழகினர். கட்டிக் கட்டி பேசிக் கொள்கிறார்கள். கை கோர்த்துக் கொண்டு அலைந்தார்கள். அந்த புறநகர்ப் பகுதி முதலில் சிரித்தாலும், பிறகு சாதாரணமாக எடுத்துக்கொண்டது.

ஆனால், அமெரிக்காவுக்குப் போகாத மத்திய வயதுடைய ஆண்கள் இந்த ஆட்களைப் பார்த்துவிட்டு சற்று மிரண்டு போனார்கள்.

நாற்பது வயது ஆன பழனிவேல், இருபத்திரண்டு வயது பையன் இருபது வயதுப் பெண்ணை இறுக்கிக் கட்டிக்கொண்டு நலமா என்று விசாரிப்பதைப் பார்த்து விட்டு ஆடிப்போனான். அவர்கள் அமெரிக்க அனுபவங்கள் கேட்டு திகைத்துப் போனான். அந்தப் பெண்ணின் உடை நடைகளையும் அருகே வந்து பேசுவதையும், கைக்குலுக்குவதையும் உணர்ந்துவிட்டு பரவசமாகிப் போனான்.

என் கல்யாணம் என் விஷயம், அத எங்கப்பா ஏன் தீர்மானம் பண்ணனும். என் வீட்டுக்காக நான் லைஃப ஏன் தியாகம் பண்ணனும். ஜஸ்ட் எங்கப்பா எனக்காக செலவு பண்ணார். நான் அதை ஒண்ணுக்கு மூணு பங்கா திருப்பிக் கொடுத்துட்டேன். ஒரு மாச பீஸ் ஐநூறு ரூபா. நான் கெஞ்சிக் கெஞ்சி எங்கப்பாகிட்ட கேட்டு கம்ப்யூட்டர் கிளாஸ் போனேன். நவ் ஐயாம் பேயிங் ஃபைஹண்ரெட் டாலர்ஸ் பேக். ஐநூறு டாலர்னா எத்தன ரூபாய்னு உனக்குத் தெரியுமா. எங்கப்பாவே எங் கல்யாணத்தப் பத்தி கவலப்படல. நீ யார வேணா கல்யாணம் பண்ணிக்கடா அப்படீங்கறார். எங்கம்மா தான் நொய், நொய்ங்கறா. நான் முடியாதுனு சொல்லிட்டேன்.

ஊர்ல இருக்கிற பெண்களைவிட அமெரிக்கா போய்ட்டு வந்த பெண்கள் எனக்கு ஈசி சார். அவளுக்கு அங்க நிச்சயமா வேலை கிடைக்கும். அவளுக்கு ஒரு ஆயிரம் டாலர் கிடைச்சா ராஜபோகம் சார். பிட்ஸ்பர்க்ல வீடு வாங்கிடுவேன்.

ஆனால் இந்தத் தாக்குதல் எதுவும் வனிதாதேவியை ஒன்றும் செய்யவில்லை. யார் எங்கே போனால் என்ன, எப்படி உடுத்திக் கொண்டால் என்ன, என்ன பேசினால் என்ன? அவள் தன்னை கோயிலோடு ஐக்கியப்படுத்திக் கொண்டாள். கோயில் வெவ்வேறு விதமாய் கிளைவிட்டு மிகப்பெரிய ஆலமரமாய்

வளர்ந்தது. ஒவ்வொரு முறை கிளைவிடும்போதும் அவளை அழைத்து தனி மரியாதை செய்தார்கள். அவளைப் பற்றிப் பேசினார்கள்.

''அம்மையார் வனிதாதேவி அவர்கள் இல்லையென்றால், இந்தக் கோயில் இங்கு ஏற்பட்டிருக்காது. இன்னும் தள்ளிப்போயிருக்கும். குளங் குட்டை பக்கத்துல இருக்கும். ஊருக்கு வெளிய இருக்கும். இப்ப ஊருக்கு நடுவுல தனக்கு தன் மாமா சீதனமா குடுத்த ரெண்டு கிரவுண்ட், அப்படியே வாரி கோயிலுக்குக் கொடுத்தார்கள். அந்த இருபத்தி ஆறு வயசுல அவர்களுக்கு இருந்த அந்த மனமிருக்கிறதே அதை நினைக்கும் போது எனக்குத் திகைப்பாக இருக்கிறது. ஆனால் நண்பர்களே, அந்த அம்மையார் கோயிலுக்கு என்று வலம்புரி விநாயகருக் கென்று நிலத்தை எழுதி வைத்த அந்த நாளிலிருந்து சரியாக நாற்பத்தைந்தாவது நாள் அவர்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்புமுனை ஏற்பட்டு, வறண்டு கிடந்த அவர்களுடைய வாழ்க்கை சோலையாகப் பூத்துக் குலுங்கியது என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்ன ஏதுன்றது உங்களுக்கே தெரியும். இங்குள்ள கமிட்டி உறுப்பினர் களையெல்லாம் நான் கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான்.

அம்மையார் வனிதாதேவியார் அவர்களை மறந்துவிட்டு இந்தக் கோயிலில் ஒரு சின்ன விழாக்கூட கொண்டாடிடாதீங்க நல்லாருக்காது.

அன்னிக்குத் தேதிக்கு நெலத்தோட விலை ஏழு லட்ச ரூபா. ஏழும் ஏழும் பதினாலு லட்ச ரூபா ஒரே நாள்ல கொடுத்தாங்க. டாட்டா பிர்லா குடுப்பாங்களான்னு எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிஞ்சு எந்த சினிமா நட்சத்திரமும் தொழிலதிபரும் இவ்ளோ பெரிய டொனேஷன் பண்ணதே இல்ல. சினிமா நட்சத்திரத்துக்கு வருமானம் இருக்கு. தானம் பண்ணலாம். ஆனால் வெறும் செடிகள் நட்டு பேசிக்கொண்டிருந்த வனிதாதேவி அவர்கள், தோட்ட மண்ணெடுத்து குழைத்துக் கொண்டிருந்த வனிதாதேவி,

அவர்கள், சொற்பமான வருமானம் உடைய வனிதாதேவி அவர்கள், தன் தாய்மாமனால் தனக்கு சீதனமாகக் கொடுத்த இந்த இரண்டு கிரவுண்டு நெலத்த கோயிலுக்குக் கொண்டாந்து நீங்க வெச்சுக்குங்கன்னு கொடுத்தாங்கன்னா இதவிட பெரிய ஒரு உள்ளம் இந்த உலகத்தில் இருக்கிறதா என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

நம்முடைய புறநகர்ப் பகுதியிலே வளமாக வாழ்கின்ற இளைஞர்களை, யுவதிகளை நான் கேட்டுக்கொள்கிறேன். வனிதாதேவி அம்மா இந்த ரோட்ல நடந்து போனா நின்னு கையெடுத்து கும்பிட்டுப்போங்க. இன்னிக்கு இந்த ஊர் நல்லாயிருக்கிறதுக்குக் காரணம் இந்த வலம்புரி விநாயகர். இந்த வலம்புரி விநாயகர் இங்க இருக்கக் காரணம் வனிதாதேவி அம்மையார்.'' மேடையில் பேசியவர் உணர்ச்சிக் கொந்தளிப்பாகப் பேசினார். எல்லோரும் அமைதியாக அவரையே பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். வனிதாதேவி தலைகுனிந்து அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

''நீ அமெரிக்கா போ. ஆப்பிரிக்கா போ, லண்டன் போ, அதப்பத்தி கவலையே இல்ல. எங்க போனாலும் வனிதா தேவி அம்மையாரைப் பார்த்து அம்மா நான் இந்த ஊரைச் சேர்ந்தவன். நான் இன்ன காரணத்துக்காக இந்த ஊருக்குப் போறேன். உங்களுக்கு ஒரு நமஸ்காரம் அப்படீன்னு சொல்லிட்டுப் போங்க. அது அத்தனை நல்லது. அந்த அம்மா நல்லாயிருன்னு சொன்னா நல்லாயிருப்பீங்க. ஏன்னா அது கொடுத்துக் கொடுத்து பண்பட்ட ஓர் உள்ளம். அது வாயார வாழ்த்தியது என்றால், இங்குள்ள இளைஞர்கள், யுவதிகள் நிச்சயம் நன்றாக இருப்பார்கள். எனவே, இந்த ஊரார் அனைவரையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது வனிதாதேவி அம்மையாரைப் புறக்கணித்துவிட்டு இந்தக் கோயிலில் ஒரு சிறு விழாவும் செய்துவிடாதீர்கள்.''

''வனிதாதேவிக்கு ஹஸ்பெண்ட் பழனி இல்லை. முன்னாடி வேறொரு ஹஸ்பெண்ட் இருந்தாராம்.''

''ஒருத்தர் நல்லா இருந்தாக்கா, ஒருத்தர் வந்து வளமா இருந்தாக்கா, உடனே அசிங்கமா பேச ஆரம்பிச்சுடுவீங்களே. அந்தக் கதையெல்லாம் எங்களுக்குத் தெரியும். இப்ப வனிதாதேவியோட ஹஸ்பெண்ட் பழனி. தேவையில்லாது பேசாதீங்க.'' எடுத்தவரை வாயில் அடித்து அமுத்தினார்.

வனிதாதேவியை மட்டுமில்லாமல் பிரபாகரனையும் கொண்டாடினார்கள்.

''அம்மா உங்க மகன் பிரபாகர் பிளஸ்டூ பாஸ் பண்ணின பிறகு ரெண்டு வருஷம் கம்ப்யூட்டர் இங்க படிக்கட்டும்மா. பிறகு பேசாத அமெரிக்கா அனுப்பிச்சிடுங்கம்மா. இருபது வயசில அமெரிக்காவுக்கு வந்துடட்டும். நியூஜெர்சி, நியூயார்க், பஃபெல்லோ, இல்லினாய்ஸ், ஃபிலடெல்பியா, வாஷிங்டன் எல்லா இடத்துலயும் நம்ம பசங்கதான் இருக்காங்க. நாங்க ஒரு சர்வே எடுத்துப் பார்த்தோம். இந்த ஏரியாவுல இருந்து மட்டும் அறுபத்துநாலு பேர் வந்திருக்காங்க. மெட்ராஸில இருந்து நாநூத்தி எழுபத்தஞ்சுபேர் வந்திருக்காங்க. நாங்க இத்தனைக்கும் கிழக்குப் பகுதி மட்டுந்தான் கணக்குப் போட்டோம். மேற்குப் பகுதியில எங்க இருக்காங்க, நடுவுல எங்கருக்காங்க, ஐரோப்பாவுல யாரிருக்காங்க, எங்களுக்கு ஒண்ணுந் தெரியாது.

ரோட்ல நடந்து போயிட்ருந்தேன். ஒரு வேன்ல இருந்து 'கனாக் காணும் கண்கள் மெல்ல உறங்காத காதல் சொல்ல' பாட்டு, நின்னுட்டேன். உள்ள வேன்காரன் தூங்கறான். பக்கத்துல நின்னு பாட்ட கேட்டுட்டுப் போனாங்க. இன்னொருத்தர் நின்னாரு. பார்த்தா எல்லாமும் நம்ம பக்கத்து மூஞ்சியா தெரியுது. வேன் டிரைவர் கண்முழிக்கிற போது எட்டுப்பேரு. மூணுபாட்டு முடியிறதுக்குள்ள அந்த ஏரியால எட்டுப்பேர் நின்னு தமிழ்ப்பாட்டு கேட்டுட்டுப் போனாங்க. வேன் டிரைவர் சிலோன் தமிழர். எழுந்து என்னா ஏதுன்னு பதர்றாரு. ஒண்ணும் இல்ல தம்பி தமிழ்ப்பாட்டு கேட்டுட்டோம்.

நின்னுட்டோம். வேற ஒண்ணும் இல்லேன்னு சமாதானப் படுத்திட்டு நாங்க கலைஞ்சி போயிட்டோம்.

கோயிலுக்கு ஏதாவது பண்ணனும்னா சொல்லுங்கம்மா நான் பண்றேன்.

ஒண்ணுக்கு ரெண்டு வெள்ளிக் கலசம் இருக்கு. ஒரு கலசத்துக்கு தங்க முலாம் பூசலாம்னு இருக்கோம். மொத்தமும் பன்னண்டு பவுன் தங்கம் ஆகும். நீயே எல்லாத்தையும் தரவேணாம். கலெக்ட் பண்ணி குடுத்தாலும் சரி, ஏதோ கொஞ்சம் போல குடுத்தாலும் சரி. மெல்ல மெல்ல காசு கலெக்ட் பண்ணி ஒரு வெள்ளி கவசத்த தங்கக் கவசமா போடலாம்னு ஒரு நெனப்பிருக்கு.''

சொன்ன மூன்றாவது மாதம் நாலாபக்கத்திலிருந்தும் காசு வந்து தங்கக் கவசம் தயாரானது. நெனச்சதவிடஅதிகம் காசு சேர்ந்துட்டா நீலக்கல்லு வச்சி ஒரு கிரீடம், பச்சக்கல்லு வச்சி ஒருஆரம் பண்ணிடட்டுங்களா பூசாரி கேட்க, ரெண்டு முழங்கை உயர விநாயகர் தங்கக் கவசத்தில் ஜாஜ்வால்யமாக ஜொலித்தார்.

சென்னை நகரில் எந்தக் கோயிலிலும் பிள்ளையாருக்கு தங்கக் கவசம் இல்லை. அந்தப் புறநகர்ப் பகுதியில் மிக அழகாக தங்கக் கவசம் சாத்தப்பட்டது பற்றி எல்லாப் பத்திரிகையிலும் செய்தி வெளியானது. அந்த தங்கக் கவசம் பார்ப்பதற்கு வெள்ளிக்கிழமையன்று மிகப் பெரிய கூட்டம் சேர்ந்தது. சாலைகள் நடைப்பாதைக் கடைகளால் நிரம்பின. ரயில்வே ஸ்டேஷனுக்கும் கோயிலுக்கும் நடுவே நாற்பது சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடின. முப்பது ஆட்டோக்கள் பறந்தன. மக்கள் நெரிசலாய் போனார்கள்.

கோயில் நிர்வாகத்தை கமிட்டிகள் கவனித்துக் கொள்ள, வனிதாதேவி தன்னை வளர்த்துக்கொண்டாள். மந்திரதீக்ஷை எடுத்துக்கொண்டாள். ஜபம் செய்யக் கற்றுக் கொண்டாள். தியானம் பழகினாள். உணவு சுருக்கினாள். இறைவழிபாட்டிலும் தன்னை அறியவும் நேரம் அதிகம் ஒதுக்கினாள். அதேநேரம்

பழனியின் கம்ப்யூட்டர் சென்டரில் நிறைய பெண்கள் வேலைக்குச் சேர்ந்தார்கள். வேலைக்குச் சேர்ந்த ஒரு பெண்மணி முப்பத்து ரெண்டு வயதுவரை திருமணமாகாதவள். அவனுடைய கம்ப்யூட்டர் சென்டரில் முக்கியமான பதவி வகித்தாள். அவன் இல்லாதபோதும் அதைத் திறம்பட நடத்தினாள்.

அவன் அவள் திறமையைப் பார்த்து சம்பளம் அதிகம் போட்டுக் கொடுக்க, மிக்க நன்றியோடு இருந்தாள். வேறு எப்படியெல்லாம் விரிவுபடுத்தலாம் என்பதை விவரித்துச் சொன்னாள். அக்கம்பக்கம் புறநகர்ப் பகுதியிலிருந்தும் தாம்பரத்தில் இருந்தும்கூட பெண்களும் ஆண்களும் வந்து அங்கே படிக்கத் துவங்கினார்கள். அவர்கள் சொல்லிக் கொடுக்கும் முறையைப் பார்த்துவிட்டு, வியந்து வந்து காத்திருந்து கட்டணம் கட்டி ஆறுமாத படிப்பு படித்து விட்டுப் போனார்கள்.

அந்தப் பகுதியிலுள்ள மற்ற பையன்கள் உதவியால், அந்தப் படிப்புக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்தது. இன்னும் என்னென்ன தெரிந்துகொள்ள வேண்டும், என்ன விதமான படிப்பறிவு வேண்டும், என்னவிதமான அனுபவ அறிவு என்று பிரித்துக் காண்பித்தார்கள். இது அந்த இன்ஸ்டிடியூட்டை வளர்ப்பதற்கு உதவியாக இருந்தது.

இன்ஸ்டிடியூட்டை திறம்பட நடத்தி வளர்க்கின்ற விஜயலட்சுமியை பழனி காதலித்தான். கட்டிப்பிடித்து முத்தமிட்டு நன்றி சொன்னான். முதலில் பயந்துபோன விஜயலட்சுமி பிறகு கிளர்ந்துபோய் இதுவும் நல்லதுக்கு, இது காலூன்ற ஒரு நல்ல வழி என்று அவனை இறுகப் பிடித்துக்கொண்டாள். தன்னுடைய நன்றியைப் பல்வேறு விதமாகக் காட்டினாள். இவள் காதலிப்பது புறநகர்ப் பகுதியில் அத்தனை பேருக்கும் தெரிந்துவிட்டது. வனிதாதேவிக்கு கடைசியாகத் தெரிந்தது.

வனிதாதேவி ஆழ்ந்து யோசித்தாள். சற்றுநேரம் அழுதாள். பழனிக்கு அருகேபோய் நின்றுகொண்டாள். அவன் தலையைக் கோதினாள். "நீங்க பண்ணது பெரிய தப்புன்னு தோணல. நான் உங்களுக்கு சரியா இல்ல. என்னுடைய ஜாதகம் கோளாறான ஜாதகம். எந்த இடத்துலயும் என்னால கெட்டியா வேரூன்றி நிக்க முடியல. என்னுடைய வேர் வேற இடத்துல இருக்கு. நீங்க விஜயலட்சுமியோட இருந்திருங்க. என்னை விட்டுருங்க. பிரபாகரனை எங்கிட்ட கொடுத்திடுங்க. டைவர்ஸ் பண்ணிக்கு வோம்" என்று சொன்னாள்.

பழனி கெஞ்சினான். அழுதான். ஊர் முழுவதும் கொண்டாடுகின்ற உன்னை நான் எப்படி புறக்கணிப்பேன் என்று அரற்றினான்.

"அதான் நல்லது" வனிதாதேவி பிடிவாதமாக நின்றாள்.

ஊரிலுள்ள பெரிய மனிதர்களிடம் சொன்னாள்.

ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் அவனிடம் பேசி விடுதலை வாங்கிக் கொடுத்தார்கள். சட்டப்படி வழக்கு கோர்ட்டுக்கு வந்தது.

"என்னுடைய வழி ஆன்மீகமான வழி. அவருடைய வழி லௌகீகமான வழி. நாங்கள் இருவரும் சந்திக்கின்ற புள்ளி எதுவுமில்லை என்பதால், என் கணவர் வேறுபக்கம் திசை மாறியிருக்கிறார். இதைப் பொறுத்துக் கொண்டு அமைதியாகப் போவது என்பது எனக்கும் இழுக்கு. அவருக்கும் நல்லதல்ல. அந்தப் பெண்ணுக்கும் கெடுதல். எனவே எனக்கு விடுதலை கொடுத்து விட்டீர்களென்றால், நான் என்னுடைய ஆன்மீகமான வழியில் முன்னேறுவதற்கும், அவர்கள் சட்டப்படி இணை வதற்கும், அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் நல்லபடி வளர்வதற்கும் உதவியாக இருக்கும். எனவே, கோர்ட்டார் அவர்கள் பெரிய மனது பண்ணி..." என்று விண்ணப்பம் கொடுக்க, கோர்ட் மூன்றாவது ஹியரிங்கில் அவளுக்கு விடுதலை கொடுத்தது.

விடுதலை கிடைத்த மறுநாள் வெள்ளைதான் உடுத்துவது என அவள் தீர்மனித்தாள். கரையே போடாத வெறும் மல்துணியை உடுப்பாக்கிக் கொண்டாள். இடுப்புத் தெரியாமல் ஜாக்கெட் தைத்துக் கொண்டாள். நீளமுடியை கழுத்து வரை வெட்டிக் கொண்டாள். குங்குமத்தைப் பெரிதாக்கிக் கொண்டாள். கழுத்தில் மிகப் பெரிய ருத்ராட்சமும் துளசியும் போட்டுக் கொண்டாள். ஏழுநாள் வீட்டைவிட்டு வெளியே வராது ஜபதபங்கள் செய்து தன்னுடைய மனதை நிலைநிறுத்தி, எட்டாம் நாள் கோயிலுக்கு வந்தாள்.

ஊர் அவளைப் பார்த்து பயந்து விலகி கைகூப்பியது. தாயே... தாயே என்று அழைத்தது. ஆனால் செடிகள் விற்பதை, நர்சரி நடத்துவதை அப்போதும் வனிதாதேவி விடவில்லை. நீ எந்த ஊருக்கு வேணாலும் போ. ஆனா உங்க வீட்டு கொல்லைப்புறத்தில் ஒரு துளசிச் செடி வனிதாதேவி கையால வாங்கி ஒரு மாடத்துல வச்சு நட்டுவை. உங்க அம்மாவை, உங்க தம்பியை, தங்கையை, அண்ணாவை தண்ணீர் விடச் சொல்லு. உன்னை நெனச்சு நீ நட்ட துளசிச் செடிக்கு உங்கண்ணாவோ, தம்பியோ ஜலம்விட்டா நீ ஜெயிச்சே. அந்த மாதிரி ஒரு செடி வனிதாதேவியால தரமுடியும்.

அடுக்குமாடி வீட்ல இருந்தா செடி வெக்க முடியாதுன்னு இருக்கா. மனசிருந்தா வெக்கலாம். ரெண்டு ஜாண் எடத்துல மண்ண கொத்திட்டு விருக்ஷி வைக்கலாம். நந்தியாவட்டை வைக்கலாம். பன்னீர் புஷ்பம் வைக்கலாம். ஒன்றுமில்ல அருகம்புல்ல வளர்த்தா கூட போதும். ரெண்டு பிடி புள்ளையாருக்குப் போட்டா அதவிட புண்ணியம் உலகத்துல எதுவும் இல்ல. எந்தப் பலனும் எதிர்பார்க்காமல் அவளுக்காக பிரச்சாரம் செய்தார்கள்.

எம்பொண்ணு பதினோரு மாசமா வயித்து வலியால துடிச்சாங்க. ஆகா மென்ஸஸ் வரப்போறதே வலியில் துடிக்கப் போகுதுன்னு நாங்க பயப்படுவோம். போயி வனிதாதேவியிடம் சொன்னோம். அரசும், வேம்பும் சேர்த்து ஊர்ல ஏதாவது ஒரு

இடத்துல நட்டு தண்ணி ஊத்திட்டு வரணும். அதை ஜாக்கிரதையா ஒன்றரை வருஷம் பார்த்துக்கணும். ரெண்டும் ஒண்ணா சேர்ந்து கபகபன்னு ஒன்றரை வருஷத்துல பெரிய மரமா வளர்ந்துடும்னாங்க.

அத வச்ச மூணாவது மாசம் எம் பொண்ணுக்கு வலி இல்லை. ஆறாவது மாசம் சுத்தமா எல்லாவிதமான பிரச்சனையும் நின்னு போச்சு. அது பெரிய மரமா வரும் போது இத்தனை வலில துடிச்சது இவதானா அப்படின்னு கேக்கிறபடியா ஆயிடுச்சு. முகத்துல ஒரு பரு கிடையாது. முடி கொட்றது கிடையாது. கை, கால் கொடச்சல் வலி எதுவும் இல்ல. ரொம்ப ஆரோக்யமா கெட்டிக்காரியா என் குழந்தை வளர்ந்ததுக்கு காரணம் வனிதாதேவி. அந்த அரசும், வேம்பும் வச்சதுனால உண்டான பலன்.

யாரோ யாரிடமோ சொல்ல, அந்த ஊரில் பல்வேறு புறம்போக்கு நிலங்களில் இம்மாதிரியான மரங்கள் பயிரிடப் பட்டன. பாதுகாக்கப்பட்டன. பழனிவேலின் மனைவி மூன்றாம் மாதம் உண்டானாள். ஆனால் கர்ப்பம் கலைந்து உதிரப் போக்கால் பெரிதும் அவஸ்தைப்பட்டாள்.

''என்ன இருந்தாலும் அவ வயித்தெரிச்சல கொட்டிக் கிட்டோம் இல்ல. அவ என்னதான் சுதந்திரமா விட்டுக் கொடுத்தாலும் மனசு வலிக்கச் செய்துருக்கமில்ல. இது நல்லதுதான் உங்களுக்கு. போங்க, கால்ல விழுந்து அவள சமாதானப்படுத்துங்க.''

புதிய மாணவி அவனை எச்சரித்தாள். பழனி ஓடினான். மனைவியிடம் போய், அவள் எதிரே கை கூப்பி நின்றான்.

''எனக்கா, வயித்தெரிச்சலா யார் சொன்னா, என்ன கேடு இது. இந்த நேரம் நான் எதுக்கு எரிச்சல்பட. நீங்க சௌக்யமா இருக்கணும்னு தினமும் வேண்டிக்கிட்டிருக்கேன். எதுக்காக இப்படி ஒரு பயம். வா கிட்ட வா'' அவள் அந்தப் பெண்ணை அணைத்துக் கொண்டாள். தலை முழுவதும் தடவிவிட்டாள்.

உடம்பெல்லாம் நீவி விட்டாள். ''ஒரு ரெண்டு மாசம் பொறுத்துக்க. அமைதியா இரு. அறுபது நாள் விரதம்போல கோயிலுக்கு வந்து போயிட்டு இரு. அதுக்கப்புறம் எல்லாத்தையும் வச்சுக்க. இந்த தடவை நிச்சயம் தங்கும். அவசரப்படாதே, இத உம்புருஷன்கிட்ட சொல்லு. அவரையும் ஜாக்கிரதையா விரதம் இருக்கச்சொல்லு.'' அவள் மெல்லிய குரலில் உபதேசித்து அனுப்பினாள். அவள் சொன்னது போலவே கர்ப்பம் நாலு மாதம் கழித்து தங்கியது. மனைவியை சிறிதளவும் கூச்சம் இல்லாது, அவன் காலில் விழுந்து வணங்கினான். அவளும் அமைதியாக ஏற்றுக்கொண்டாள். ஒரு புருஷன், அவன் மனைவியை இறைவன் ஸ்தானத்தில் வைத்து வணங்கியதை ஊர் வியப்போடு பார்த்தது. என்னதான் விவாகரத்து செய்தாலும், அவர்கள் கணவன் மனைவியாக இருந்தவர்கள்தானே. இப்போது கணவன் அவளைத் தெய்வமாக நினைத்து வணங்குகிறான். தன்னுடைய நன்மைக்காக பூஜிக்கிறான் என்கிறபோது அதிசயமான விஷயம் அல்லவா.

இதை கதையாக எழுதுகிறேன் என்று ஒரு பெண் முன்னுக்கு வரச்ச... இது கெட்ட பழக்கம் என்று அவள் கண்டித்தாள்.

''எல்லா பெண்களுக்கும் புருஷன் தன் காலில் விழ வேண்டும் என்ற மமதை வந்துடும். இதுக்காக மூக்கைப் பிடித்துக்கொண்டு உக்கார்ந்துட்டிருக்கிறது, மந்திர ஜபம் பண்றது, பூஜை பண்றதும் விட்டுட்டு புருஷன் காலில் விழறதுக்காகவா பூஜை பண்றது. என்ன கேடு இது, யாரு என் காலில் விழுந்தாலும் நான் அங்கு இருக்கிறதில்லே''என்று மிருதுவாகச் சொன்னாள்.

பெண் விடுதலை என்பது ஆண்வந்து காலில் விழுவது அல்ல. பெண் விடுதலை என்பது அதிகாரம் செலுத்துவது அல்ல. அமைதியாய் இருப்பது. பெண் விரும்பியபோது கூடவும், வேண்டாதபோது விலகவும் கேட்கமுடியுமானால் அதுதான் மிகப்பெரிய விடுதலை. கூடல் விலகல் என்பதை நான் உடல்

பூர்வமாகச் சொல்லவில்லை. உளப்பூர்வமாக உங்கள்முன் வைக்கின்றேன்.

பெண்களைத் தனிமையில் இருக்கவிடுங்கள். பெண்களே தனிமையில் இருக்கப் பழகுங்கள். தனிமையில் இருக்கப் பழகினால் அடுத்தபடி என்ன செய்யவேண்டும் என்கிற அறிவு தெளிவாக இருக்கும். மற்றவர்கள் குழம்பித்தான் நிற்பார்கள். வேறொருவரை அண்டிக் கேட்பார்கள். நான் எப்போதும் தனிமையில் இருக்கிறேன் என்பதாலேயே உங்களுக்கு உங்களைப் பற்றிச் சொல்ல முடிகிறது.''

வனிதாதேவியின் பேச்சு காதுகுளிர குளுமையாய் இருந்தது. அவள் கண்களைப் பார்க்கப் பார்க்க பரவசம் கொடுத்தன. அவளுடன் அருகே இருப்பது பலபேருக்கும் ஓர் அமைதியைக் கொடுத்தது.

''அம்மா நீங்கள் துறவியா?'' வெளியூரிலிருந்து வந்த ஒரு பெரியவர் கைகூப்பிக் கேட்டார்.

வனிதாதேவி அவரைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தாள். ''அகந்தையைத் துறப்பதே துறவு. மற்றதெல்லாம் வெளி வேஷங்கள். முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று பதில் சொன்னாள்.

''எப்படி முயற்சிக்கிறீர்கள்?'' வேறொருவர் கை கூப்பிக் கேட்டார்.

''என் எண்ணம் உங்களை ஏதேனும் செய்யுமானால், உங்களைத் துன்புறுத்துமானால், உங்கள்மீது அதிகாரம் செலுத்துமானால் அது அகந்தை. என் எண்ணம் வெறும் எண்ணமாக இருந்தால் மற்றவர்கள் மீது எந்த ஆக்கிரமிப்பும் செய்யாமல் இருந்தால் அதை சுத்த அகந்தை என்று சொல்லலாம்.

நான் பேசுகிறேன் என்கிற எண்ணத்தோடு நான் இருப்பதால், என்னிடமிருந்து நான் என்ற அகந்தை போக வில்லை. ஆனால் அந்த நான் என்ற அகந்தை எவருக்கும் எந்தக் கணமும், எந்தத் தீங்கும் இழைக்கவில்லை. எவர்மீதும்

ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்யவில்லை. எனவே இது சுத்த அகந்தை. இந்த சுத்த அகந்தையால் நான் என்ற எண்ணமும் என்னைவிட்டுப் போகிறது என்று யோக சாத்திரம் கூறும். அதுதான் துறவு எனப்படுவது.''

''உங்களுக்கு மகன் இருக்கிறான். அவன் பள்ளி இறுதியில் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் உங்களோடு வளர்கிறான். இப்போது நீங்கள் எப்படி துறவியாக முடியும்?'' இன்னொருவர் அபத்தமாகக் கேட்டார்.

''எனக்கு ஒரு மகன் என்பது உனக்கு யார் சொன்னது. நான் என் மகனை மட்டுமே ஆதரித்து வருகின்றேன் என்று உங்களுக்கு எவர் சொன்னார்கள்?

என் குடும்பம் மிகப்பெரியது. பல கோடி மக்கள் அதில் இருக்கிறார்கள். துறவிக்கு உடம்பெல்லாம் கண். மனதெல்லாம் கை. எப்போதும் வாரிவாரிக் கொடுத்துக் கொண்டிருக்கிற வருக்கு மகன் இவன் என்ற பேதம் இல்லை. எல்லோரும் பிள்ளைகளே'' கோபப்படாமல் பதில் சொன்னாள். வந்தவர் வாயடைத்துப் போனார்.

''அம்மா என்னை சிறுவயதிலேயே உனக்குத் தெரியும். கிட்டத்தட்ட நீயும் நானும் ஒரே வயதுக்காரர்கள். ஆயினும் உனக்கு இந்த உன்னத நிலை வந்தது எப்படி? நான் இன்னும் சம்சார சேற்றில் உழல்கிறேன். இன்று காலை கூட அடுத்த வீட்டுக்காரருடன் சண்டை. மனைவி இறந்துபோக மகளைக் கண்டால் வெறுப்பு, மகன்மீது ஆத்திரம் என்று பல்வேறு விதமான உணர்ச்சிகளால் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கின்று சந்தோஷமான விஷயம் என்ன தெரியுமா?

பாகிஸ்தான் இந்தியாவிடம் கிரிக்கெட்டில் தோற்று விட்டது. இதுதான் நான் இன்று குதூகலிக்கும் விஷயம்.

இப்படி தோற்கவேண்டும் என்ற வேண்டுதலோடு இந்த கிரிக்கெட் விளையாட்டை ஒரு பதட்டத்தோடு கவனித்து வருவதுதான் என் நிலை.

உங்களுடைய அமைதியைப் பார்க்கும்போது எனக்கு அழுகை வருகிறது. எனக்கிந்த அமைதி வராதா? நான் செய்த தவறு என்ன? நான் செய்த உத்தமமான காரியம் என்ன?''

''இது ஜென்மாந்திர கருமம். முன்வினைப்பயன். ஒருநாள் ஏற்படுவதல்ல. பல ஜென்மங்கள் சிறிது சிறிதாய் சேர்த்து வைத்த சொத்து. ஒரு ஜென்மத்தில் முழுவதுமாய் உயிர் பெறுகிறது.

இப்படி ஏங்குகிறீர்களே, இது அடுத்த ஜென்மத்தில் பலன் தரும். உங்களை வெகு சீக்கிரத்தில் சத்சங்கத்தில் கொண்டு போய் சேர்க்கும்.

சத்சங்கம் என்பது என்ன?

நல்ல நண்பர்கள் கூட்டம். இந்தப் புறநகர்ப் பகுதியில் அப்படி ஒரு கூட்டம் அமைந்துவிட்டது. சென்னையில் நெரிசலில் சிக்கித் தவிப்பவர்கள், இந்த பெரிய நிலப்பகுதிக்கு வந்ததும் ஒரு விடுதலையை உணர்ந்தார்கள். வீடு பெரிதாக இருந்தது. தோட்டங்கள் இருந்தன. மழையை, வெயிலை நன்கு உணர முடிந்தது. இயற்கையோடு வாழ்க்கை நெருக்கமாக இருந்தது. சிறிய சந்து வீட்டின் மூச்சுத்திணறல் இல்லாமல் அகலமான கூடத்தில் நல்ல காற்றும் வெளிச்சமுமாய் வாழ, அந்த வாழ்க்கை நல்ல நண்பர்களைச் சேர வைத்தது. நல்ல நண்பர்கள் வேண்டுமென்று சகலருக்கும் ஆசை வர, இங்கே ஒரு நல்ல அடியார்கள் கூட்டம் ஏற்பட்டுவிட்டது.

நான் இந்தக் கோயிலுக்கு நிலம் கொடுக்கவில்லையெனில், என்னுடைய நிலை உயர்ந்திருக்காது. பழனிவேல் என்கிற நல்ல மனிதர் என்னை என் இஷ்டத்திற்கு வாழ்வதற்கு இடம் தரவில்லை எனில், எனக்கு இந்த அமைதி கிடைத்திருக்காது.

**சத்சங்கத்வே**

**நித் சங்கத்வம்**

**நித் சங்கத்வே**

**நிர்மோஹத்வம்**

**நிர்மோஹத்வே**

**நிச்சல தத்துவம்**

**நிச்சல தத்வே**

**ஜீவன் முக்திஹி''**

அவள் மிருதுவாகப் பாடினாள்.

வந்தவர் விம்மி விம்மி அழுதார்.

நல்லவர்கள் அருகாமை வேண்டுமென்று தெரிந்து விட்டால், நல்லவிதமாய் நடந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிந்துவிடும். இந்த இரண்டும் ஒன்றே. அவள் அவருக்கு உபதேசித்தாள். அவர் விழுந்து அவள் காலைப் பற்றிக்கொண்டு மேலும் கதறினார். சில வருடங்கள் நகர ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு விதத்தில் அவளுக்குக் கடன்பட்டுக் கொண்டிருந்தது.

வனிதாதேவியின் மாமன் மகளும் அவள் புருஷனும் அவளிடம் மிக மரியாதையாக இருந்தார்கள். வனிதாதேவியின் மாமன் மகனும் அவன் மனைவியும் அவளுக்கு என்ன வேண்டுமோ செய்யத் தயாராக இருந்தார்கள். இவர்கள் இரண்டு பேரின் அரவணைப்பில் பிரபாகரன் சந்தோஷமாக வளர்ந்தான்.

அம்மா மாதாஜியாகி இருப்பதால், அவனுக்கும் மரியாதை அளிக்கப்படுகிறது. ''உங்க அம்மா எல்லார் அம்மா மாதிரியும் இல்லாமல் இப்படி இருக்காங்களே. இது உனக்கு வருத்தமா இருக்கா இல்ல, சந்தோஷமா இருக்கா?'' திடீரென்று ஒருவர் வழியில் மடக்கி அவன் தோளில் கை வைத்துப் பேசினார். அப்போது அவன் ப்ளஸ்டூ பரீட்சை எழுதி முடித்திருந்தான்.

சிறிது நேரம் தயங்கி தெரியவில்லையே என்று பதில் சொன்னான்.

''அதெப்படி தெரியாம இருக்கும். உம் மனசில இருக்கிறத சொல்லமாட்டேட இல்ல.'' அவர் அவனை வற்புறுத்தி பேச வைத்தார்.

அவன் மெல்ல கையை விலக்கிவிட்டு கோயிலுக்குப் போனான். உள்ளே உட்கார்ந்து பலரோடு பேசிக்கொண்டிருந்த அம்மாவை உற்றுப் பார்த்தான். அம்மா திரும்பி அவனைப் பார்த்தாள்.

''போ. போய் எங்கயாவது உட்காந்துக்கோ.'' அம்மா அவனைப் பார்த்தவுடன் புன்சிரிப்போடு சொன்னாள். அவள் பக்கத்தில் அழைக்கவில்லை. மெல்ல கோயிலை விட்டு வெளியே வந்தான்.

மலையிலிருந்து வரும் சிற்றோடைக்குப் போனான். அங்கு நடப்பட்ட அரசமரமும், வேப்ப மரமும் கலந்த பெரிய மரத்தடிக்குப் போய் சாய்ந்து கொண்டான்.

'இப்படி ஒரு அம்மா இருந்தால் அது சந்தோஷமா, துக்கமா' யோசிக்க ஆரம்பித்தான்.

அம்மா கற்றுத் தருகிறேன் என்று சொல்லவில்லை. போ, போய் யோசி, நீயாக கற்றுக்கொள் என்று சொல்கிறார். இப்படிச் சுதந்திரத்தை இந்த புறநகர்ப் பகுதியில் எந்த அம்மாவாவது கொடுத்திருக்கிறாளா. அம்மா அன்பு செய்வது குறையவில்லை. அதேசமயம் சுதந்திரத்தையும் பறிக்கவில்லை. இப்படியொரு அம்மா பாக்கியத்தில் மிகப்பெரிய பாக்கியம்.

சரி, இப்படிப்பட்ட அம்மாவை நீ எப்படி உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறாய். இவளிடமிருந்து என்ன கற்றுக் கொண்டிருக்கிறாய். மனம் தொடர்ந்து பேசியது.

எதுவும் கற்றுக்கொள்ளவில்லை. அம்மாவிடம் போய் கைகூப்பி மக்கள் கேட்பதுபோல நாமும் கேட்கவேண்டும், எனக்கு ஏதேனும் கற்றுக்கொடு என்று அம்மாவிடம் நமஸ்கரித்து யாசிக்க வேண்டும் நினைத்துக்கொண்டான்.

எழுந்து கோயிலுக்கு வந்தான்.

அம்மா இப்போது தனிமையில் உட்கார்ந்து ஜபமாலை உருட்டிக் கொண்டிருந்தாள். அருகே போய் உட்கார்ந்து கொண்டாள்.

''இப்போதைக்கு கம்ப்யூட்டர் கத்துக்க. காலேஜ்ல இங்கிலீஷ் கத்துக்க. தனியா ஒரு வாத்தியார் வச்சு தமிழ் படி. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம், கம்பராமாயணம் அந்த மாதிரி நிறைய விஷயங்கள் படி. இன்றைக்கு ஆரம்பிச்சு தொடர்ந்து படித்துக்கொண்டே இரு. நான் போறபோது உனக்கு சின்னதா ஒரு விஷயம் சொல்லிட்டுப் போறேன். கவலைப் படாதே.''

அம்மா சொன்னது திடுக்கிட வைத்தது. அம்மா அவனை ஏறிட்டுப் பார்த்தபோது, அவள் இயலாமை அவனுக்குத் தெரிந்தது.

மரியாதையாக வணங்கி நகர்ந்துவிட்டான்.

அம்மா சொல்படி கல்லூரியில் சேர்ந்தான். அப்பாவின் இன்ஸ்டிடியூட்டில் கம்ப்யூட்டர் கற்றுக் கொண்டான். அப்பாவின் மனைவி அவன்மீது தனிக் கவனம் செலுத்தினாள். அவன் முகத்தைப் பற்றிக்கொண்டு என் பிள்ளை என்று பெருமையோடு சொல்லிக்கொண்டாள். இருபத்தைந்து வயது பையனுக்கு முப்பத்தைந்து வயது அம்மா இருப்பது கேட்கும்போது விநோதமாக இருந்தது.

அவனுடைய புத்திக் கூர்மையும் ஆங்கில அறிவும் அவளை வியக்க வைத்தன. ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதற்கு அவள் சொல்லிக் கொடுத்தாள். நிறைய புத்தகங்கள் எடுத்துக்கொடுத்து எப்படிப் படிக்க வேண்டும், எப்போது படிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தாள். அந்த இன்ஸ்டிடியூட்டில் அவன் சொந்த அம்மாவின் படம் பெரிதாய் மாட்டப்பட்டு, தினந்தோறும் அதற்கு மலர்மாலை அணிவிக்கப் பட்டு வந்தது. அந்த இடத்தில் அவன் அம்மா தெய்வமாக உலவி நிற்கிறாள் என்று நம்பப்பட்டது.

அந்தப் பெண்மணி அழகான ஆண்குழந்தை பெற்றாள். அவன் பார்க்கப் போனபோது, அவள் பிரபாகரனின் கையைப் பற்றிக் கொண்டாள்.

''முப்பத்தஞ்சு வயசுக்குமேல் எனக்கொரு குழந்தை பொறந்திருக்கு. அதுவும் பையன். பொண்ணா இருந்தா இருபது வயசுல எவன் கைலயாவது புடிச்சிக் குடுத்துட்டு எனக்குத் தெரியாதுன்னு ஒதுங்கிடலாம். பையன்கிறதுனால ஒரு முப்பது வருஷத்துக்கு மேல அற்புதமா நிக்கலாம். ஆனா என்னால நிக்கமுடியுமா. எனக்கு உடம்புல அவ்ளோ சக்தி இருக்குமா. அத்தனை நாள் நான் உசுரோட இருப்பனா தெரியலை. உனக்கு நான் ஹெல்ப் பண்ணமாதிரி, உனக்கு நான் சொல்லிக் கொடுத்த மாதிரி, இவனுக்கு நீ சொல்லிக் கொடுக்கணும். சொல்லிக் கொடுப்பேன்னு சத்தியம் பண்ணு'' அவள் அவன் கையைப் பிடித்துக்கொண்டு பேசினாள். அவள் கண்களில் நீர் வழிந்தது.

''இவன் என்தம்பிமா. நான் இவனைப் பாத்துக்கறேன். கவலையே படாதீங்க.'' ஆறுதல் சொன்னான்.

தனக்கு தம்பி பிறந்ததை அம்மாவிடம் சொல்வதற்கு ஓடிவந்தான்.

அம்மா வேறொரு வீட்டில் உட்கார்ந்திருந்தாள். கோயிலுக்குப் போகவில்லையா என்று கேட்டான். பிள்ளை பிறந்த தீட்டல்லவா. எனக்கு ரத்த பந்தமுண்டு. அதனால்தான் இந்த வீட்டிலிருக்கேன். பிறகு போவேன் என்று சொன்னாள். அவன் தம்பியை அங்கிருந்தபடியே மனதார ஆசீர்வதித்தாள்.

''உனக்கு பொறுப்பு அதிகமா இருக்கு. அவனையும் நீதான் பார்த்துக்கணும்'' என்று புன்னகையோடு சொன்னாள்.

''அவனையும்னா என்ன அர்த்தம்?'' அவன் அம்மாவின் அருகில் உட்கார்ந்து கேட்டான். ''என்ன நீ பாத்துக்கறே இல்லையா'' என்று அவள் கேட்க அவன் விழித்தான்.

''பிரபாகரன்னு ஒரு புள்ள இருக்கிறதுனாலதான் எனக்கொரு மரியாதை. நீ எனக்கு இல்லையெனில், இந்த ஊர் எனக்கு பெரிய மரியாதையை கொடுத்திருக்காது. எனக்கு

மகனாகப் பிறந்து நீ தத்தாரியாக அலைந்திருந்தாலும் எனக்கு மரியாதையே இருக்காது.

அம்மா துறவி என்று வந்து கோயிலில் உட்கார்ந் திருக்கிறாள். பிள்ளை குடித்துவிட்டு ரோட்டில் நடந்து போய்க்கொண்டிருக்கிறான் என்று ஊர் என்னை ஏசும். என்னை யாரும் ஏசும்படியா செய்யாமல் மிக ஒழுக்கமாகவும் நல்லவனாகவும், பண்பாளனாகவும் நீ வளர்ந்திருக்கிறாயே... இதற்காக நான் இறைவனுக்கும் உனக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

எவ்வளவு பொறுப்புடனிருக்கிறாய். எத்தனை பொறுப்போடு உன் தம்பியைப் போய் பார்த்துவிட்டு சித்திக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்திருக்கிறாய். உன்னைப் பார்க்கிற போது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. உனக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

உனக்கு இதுதவிர இன்னொரு பொறுப்பும் இருக்கு.

''என்னம்மா?'' அவன் நெருங்கி, அவள் கைகளைப் பிடித்துக்கொண்டான்.

''என்னைக் கரையேற்ற வேண்டாமா, அந்தப் பொறுப்பும் உன்னிடம் இருக்கிறது.''

''உன்னைக் கரையேற்றுவது என்றால் என்னம்மா?'' அவன் புரியாமல் கேட்டான்.

''நான் இறக்கும்போது எனக்கு அருகில் இருக்க வேண்டும். என்னை சரியாக அடக்கம் செய்ய வேண்டும்.'' அவன் திகைத்தான்.

பேச முற்பட்டபோது அவள் அடக்கினாள். ''இன்றி லிருந்து சரியாக நான்கு வருடம் நீ இன்னும் கவனமாக இருக்க வேண்டும். இன்னும் நிறைய கற்றுக் கொள்ளவேண்டும். ஆன்மிகம் பற்றிய கடினமான புத்தகங்கள் பல இருக்கின்றன.

அவைகளைப் பாடம் கேட்கவேண்டும். உன்னுடைய வாழ்க்கை வேறு திசையை நோக்கி நகரப்போகிறது.

நீ அமெரிக்காவுக்குப் போகிற காது வளையப் பையன் அல்ல. வெறும் சட்டை மட்டும் போட்டுக் கொண்டு பேண்ட்டோடு தலையை விரித்துத் திரியும் பெண்களை நீ திருமணம் செய்துகொள்ள வேண்டாம். உனக்குத் திருமணம் ஆகாமலேயேகூட போகலாம். நீ என் பரம்பரைக்கு ஒரு பையனாகப் பிறந்துவிட்டாய். நீ தனித்துப் போவதில் எந்தத் தவறும் வராது. எனவே அதற்கு உன்னைத் தயாராக்கிக் கொள். நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள். நான் சொல்கிற ஊர்களுக்கெல்லாம் அவ்வப்போது போய் வந்து, அங்கே தனியாக இருக்கப் பழகிக்கொள். நான் சொல்கிறவர்களை யெல்லாம் போய் பார்.'' அவள், அவனை தனி அக்கறையோடு அன்று முதல் நடத்தத் துவங்கினாள்.

அம்மா அவனுக்கு குருவானாள். அவன் அம்மாவின் குருத் தன்மையைப் புரிந்துகொண்டான். அந்த குருவுக்கு அடிபணிந்து கைகூப்பி பலவும் கற்றுக்கொண்டான்.

''கோவிலூருக்குப் போ. அங்கே ஒரு மடாதிபதி இருப்பார். அவர் கூட பேசி அவரை இங்கே கூட்டிக்கிட்டு வா.'' நான்கு வருடங்கள் முடியப்போகின்ற நேரத்தில் அவனுக்கு கட்டளை இட்டாள்.

'அவர் வருவாராம்மா?'' அவன் சந்தேகத்தோடு கேட்டான்.

''வருவார்'' அவனுக்கு மறுபடியும் உத்தரவாதம் தந்தாள்.

''இங்க வந்து அவர் என்னம்மா பண்ணணும்?''

''என்னை அடக்கம் பண்ணணும். குழிவெட்டி உள்ளே உப்பும், மஞ்சளும், விபூதியும், வாசனைப் பொடிகளும் போட்டு என்னை பையில் கட்டி உள்ளே இறக்கி, மறுபடியும் இவைகளைக் கொண்டு மூடிவிட வேண்டும். என் மீது பெரிய

பாறைக் கற்களை அடுக்கி வைக்கவேண்டும். அதை அங்கிருந்து ஒரு பனிரெண்டடி தள்ளி ஒரு வேப்பங்கன்று முளைத்து வரும். அந்த வேப்பங்கன்றைச் சுற்றி வேலியிட்டு பாதுகாத்து வர வேண்டும். அது நல்ல மரமான பிறகு, அந்த இடத்தை சுவர் எழுப்பி ஒரு சமாதி ஆலயமாக ஆக்கவேண்டும். சூலாயுதம்போல நடுகல் நட்டு, அதற்கு கழுத்திலே ஒரு வெள்ளிக் கம்பியை மாலையாகப் போட்டுவிட வேண்டும். கம்பியும் கம்பியில் கோர்க்கப்பட வேண்டிய ருத்ராக்ஷமும் நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். அவ்வப்போது சூட்சுமமாக உனக்குத் தெரியும். என்னை இவ்விதம் அமைதியாக குழிக்குள் இறக்குகின்ற வேலை உனக்கு. நீ இப்போது கோவிலூருக்குக் கிளம்பு'' என்று துரிதப்படுத்தினாள்.

வெளியே மழை அடித்துப் பெய்துகொண்டிருந்தது. மலை முழுவதும் மழை தாக்கி அந்த ஒரு ஓடை மட்டுமல்லாது, வேறு சில ஓடைகளும் நிரம்பி ஊரைச் சுற்றி வந்தன. ஊரில் எல்லா நிலங்களும் சொத சொதவென்று நனைந்து கிடந்தது. கணுக்கால் தண்ணி இருந்தது. அவன் அதில் நடந்து ரயிலேறி தெற்குப் பக்கம்போய் கோவிலூர் தேடினான். இறங்கி நடந்தான்.

**தி**ண்ணையில் படுத்துக்கொண்டிருந்த அவனை மடத்துக்குள்ளிருந்த குரு வெளியே வந்து முதுகு தட்டி எழுப்பினார்.

''அப்பா நான் கிளம்பத் தயாராக இருக்கிறேன்.

எப்பொழுது மழை நின்று பளிச்சென்று வெயில் அடிக்கிறதோ, சூரியனின் முகம் தகதகத்துத் தெரிகிறதோ, அப்போது நாம் பயணம் ஆரம்பித்துவிடுவோம். நாம் போய் சேர்வதற்கும், உன் அன்னை அமைதியாக உட்காருவதற்கும் சரியாக இருக்கும்.''

''உங்களுக்கு எப்படித் தெரிந்தது. இதற்காக வந்திருக்கிறேன் என்று யார் சொன்னார்கள்?''

''எங்களைப் போன்றவர்களுக்கு சில செய்திகள் சொல்லப்படும். நீ வந்தவுடனேயே எனக்கு ஏதோ உத்தரவு இருக்கிறது என்று தெரிந்துவிட்டது. இதுமாதிரியான விஷயங்களை நான் இதற்கு முன்னரும் செய்திருக்கிறேன். எனவே கவலைப்பட ஒன்றுமில்லை.''

அவர் ஒரு ஓலைச் சுவடியை எடுத்து படிக்கத் துவங்கினார். சூரியன் தகதகவென்று நீரில் பிரகாசித்த போதும் அவனும் அந்த கோவிலூர் மடத்துக் குருவும் கிளம்பினார்கள். அவன் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கினான். அவரை படுக்கவைத்தான். தாம்பரத்தில் போய் இறங்கி அங்கிருந்து கார் பிடித்து அவர்கள் புறநகர்ப் பகுதிக்குப் போனார்கள்.

அம்மா அந்தக் காலையில் சுற்றி ஆட்கள் அமர்ந்திருக்க சிரித்து பேசிக் கொண்டிருந்தாள். சுற்றியுள்ளவர் எவருக்கும் அவள் எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. எல்லோரும் போனபின் அவனை அருகே அழைத்து உட்கார வைத்துக்கொண்டாள். அவன் தலையைத் தடவினாள். ''சந்தோஷம், இன்று இரவு தூக்கத்திலேயே என் பிராணன் போய்விடும். நீ எனக்கருகே உட்கார்ந்து கொள். இன்று இரவு தூங்காதே. தூங்கினால் கெட்ட கனவுகள் வரும். அந்தக் கனவுகள் வாழ்க்கை முழுவதும் உன்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும். இப்போதிலிருந்து என்னைக் கவனித்துக் கொள். அப்போது உனக்குள் ஏற்படும் சில அனுபவங்கள் உன்னை நல்ல நிலைக்குக் கொண்டுபோகும். நீ அழ வேண்டாம். பதறவேண்டாம். துக்கப்பட்டதுபோல் நடிக்க வேண்டாம். மிகச் சாதாரணமாக தெருவிலிருக்கின்ற ஒரு நாய் இறந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்று நினைப்பாயோ, அந்த அளவு துக்கத்தோடு, அந்தளவு எண்ணத்தோடு நீ செயல்பட வேண்டும். நீ என்ன செய்யவேண்டும் என்பதை கோவிலூர் மடத்து அதிபதி சொல்லித் தருவார். அதைச் செய்'' என்று சொன்னாள்.

கோவிலூர் மடாதிபதி அருகே வந்ததும் காலைத் தொட்டு வணங்கப்போக, அவர் குனிந்து அவள் காலைத் தொடப்போக, இரண்டு பேரும் விலகி நின்று கொண்டார்கள்.

''நான் முந்தியா, நீங்க முந்தியா என்று ஒரு கேள்வி எழுந்தது. நீங்கள் முந்திக் கொண்டீர்கள். சந்தோஷம் நல்லபடியாக நடத்தி வைப்பேன், கவலையே வேண்டாம்.''

''வேம்பு தலைதூக்கும் வரை இருந்து பார்த்துவிட்டு பிறகு ஊருக்குப் போகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார்.

அம்மா அவரது வணக்கத்திற்கு ஆசீர்வதித்தாள். மிகப்பெரிய பிரகாசமாக புன்னகை செய்தாள். அம்மாவின் தம்பி மனைவி அம்மாவுக்கு குழம்பு சாதம் பிசைந்து வர, அதை கிண்ணத்தில் வாங்கி முதல் கவளம் உருட்டி பிரபாகரனுக்கு ஊட்டினாள். பிறகு தான் சாப்பிட்டாள். சில பருக்கைகளை அதில் மீதி வைத்துவிட்டு நீ எடுத்துக்கொள் என்று தம்பியின் மனைவியிடம் சொன்னாள்.

தம்பியின் மனைவி அதை எடுத்துக் கொண்டவுடன் அவளைப் பார்த்து ஆனந்தமாய் ஆசீர்வதித்தாள். கை கழுவிக் கொண்டாள். முகம் துடைத்துக் கொண்டாள். வேறு புடவை உடுத்திக் கொண்டாள். நெற்றிக்கு இட்டுக் கொண்டாள். அவனுக்கருகே உட்கார்ந்து கொண்டு அவன் விரல்களைப் பற்றிக் கொண்டாள்.

''உனக்கு நான்கு விஷயங்கள் சொல்லித் தருகிறேன் கேள்.'' அடிக்குரலில் அவனுக்கு மட்டும் கேட்கும்படி பேச ஆரம்பித்தாள்.

'விவேகம், ஒழுங்கு, நிதானம், அமைதி. இந்த நான்கு விஷயங்களும் உனக்கு வரவேண்டும். இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. உண்மையில் நீ யார்? எங்கிருந்து உனக்கு உணர்வுகள் தோன்றுகின்றன. உன்னின் உண்மையான இருப்பு எது என்பதை நீ பகுத்து அறிவதுதான் விவேகம். இடையறாது

இந்தக் கேள்வியைக் கேட்டு, இதற்கு உண்டான பதிலைக் கண்டுபிடிப்பது தான் விவேகம். இதற்கு ஒரு தடயம் தெரிய ஆரம்பிக்கும். அந்தத் தடயம் தெரிய ஆரம்பிக்கிறபோது, வாழ்க்கையில் ஒரு ஒழுங்குமுறை வந்துவிட வேண்டும். ஒழுங்கு என்பது ஒழுக்கத்தோடு சம்பந்தப்பட்டது. பிறருடைய பொருளுக்கு ஆசைப்படாமை, பிறர் மனையை விழையாமை, கோள் சொல்லாமை, கோபப்படாமை, பொறாமைப் படாமை, வார்த்தைகளில் தடிமன் இல்லாமை போன்றவைகளும், காலையில் எழுந்திருத்தல், குறைவாகச் சாப்பிடுதல், குறைவாகத் தூங்குதல், அதிக நேரம் மௌனமாக இருத்தல் என்கிற ஒழுக்கங்கள் இதில் முக்கியம்.

இந்த ஒழுங்கு ஏற்பட உள்ளே ஒரு நிதானம் ஏற்படும். இந்த நிதானத்தினுடைய சந்தோஷம் சொல்லிமாளாது. உள்ளுக்குள்ளே படபடப்பு ஏதுமின்றி, எந்த நேரமும் எது நடந்தாலும் அமைதியாகப் பார்த்து ரசிக்க வேண்டும். உன்னை நீயே பார்த்துக் கொண்டு இந்த உலக காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கலாம். இந்த நிதானம் முதிரும்போது உனக்குள் ஒரு பேரமைதி படரும். அந்தப் பேரமைதியின் தடங்களே கடவுள் உன்னிடம் நுழைந்திருக்கிறார் என்பதற்கு அர்த்தம். பிறகு உன்னை அவர் பார்த்துக் கொள்வார். நீ செய்வது எதுவும் நீ செய்வதாக இல்லாமல் அவர் செய்வதாகும். அப்போது உன் வாழ்க்கை வேறு. உன் வார்த்தைகளும் வேறு.

மறுபடியும் சொல்கிறேன். விவேகம் என்பது நீ யார் என்பதைப் பகுத்தறிவது. ஒழுங்கு என்பது உன்னைச் சுற்றியுள்ளவர்கள் மீது எந்தக் காழ்ப்பும் இன்றி, எந்தக் கள்ளமும் இன்றி ஒழுக்கமாக வாழ்வது. நிதானம் என்பது இந்த ஒழுக்கத்தோடு கூடிய வாழ்க்கையை உலகத்தாருடன் நீ நடந்து கொள்வதை உற்று இடைவிடாமல் பார்த்துக் கொண்டிருப்பது. தினசரி விஷயங்களில் உன்னை நீ எப்படி ஈடுபடுத்துகிறாய், எவ்விதம் நடந்து கொள்கிறாய் என்று கவனித்து வரவேண்டும்.

இப்படி கவனிக்க, கவனிக்க உனக்குள் ஒரு அமைதி படரும். எப்பொழுது இந்த ஒழுங்கு உனக்குள் வந்துவிட்டதோ அப்பொழுது நிதானம் தானாக வரும். நிதானத்துடன், ஒழுங்குடன் நோக்கும்போது திடீரென்று அந்தத் தருணத்தில் உள்ளுக்குள்ளே அமைதி என்ற காற்று வரும். காற்று நுழையலாம். நுழையாமலும் போகலாம். ஆனால் உருக்கத்தோடு, நிதானத்தோடு அதற்காக காத்துக் கொண்டிரு. அந்தக் காற்று நுழைந்துவிட்டால் நீ வேறு மனிதன், வேறு விஷயம், வேறு மார்க்கம்.

முற்றிலும் அன்புமயமாக மாறிவிட உன்னால் முடியும். எவர்மீதும் எந்தக் காரணம் கொண்டும் கோபம் இல்லாமல் இருப்பதற்கு உனக்குத் தெரிந்துவிடும். அப்போது நீ, நான் என்ற பேதம் இல்லாமல் போய்விடுவதை வெகுளிதில் காணலாம். அப்போது எல்லா கைகளும் உன் கைகள். எல்லார் வாழ்க்கையும் உன் வாழ்க்கை. அப்போது நீ அழுவதும், சிரிப்பதும் உனக்காக அல்ல என்பது புரிந்து போய்விடும். இதைவிட உன்னதமான ஒரு இடம் இந்த உலகத்தில் வேறெதுவும் இல்லை. இந்த இடத்தில் அமரவே இங்குள்ள அத்தனை பேரும் முயற்சி செய்கிறார்கள். உனக்குக் கிடைக்க காத்திருக்கிறது.''

அம்மா சிறிது நேரம் அவன் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தாள். அவன் அவள் முதுகை வருடிக் கொடுத்தான். தலையைக் கோதிக் கொடுத்தான். பிறகு எழுந்து அமர்ந்து அவன் தோளிலே தலை சாய்த்துக்கொண்டு அவனை வலப்புறம் வைத்துக்கொண்டாள். அவன் கைகளைக் கோர்த்துக் கொண்டாள்.

''உன் அப்பா வருவார். தொடவேண்டாம் என்று சொல்லிவிடு. உன்னையும் குருவையும் தவிர, இன்னும் ஒரு மூன்றுபேர் மட்டுமே என்னைத் தொடலாம். யார் என்பதை அந்த நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறேன். காலையில் பார்த்துக்கொள். தகவல் அனுப்பு. மற்றபடி உட்கார்ந்த நிலையில்

நான் இருப்பதற்கு குருவுக்கு உதவிசெய். நான் வரட்டுமா'' கையை உயர்த்தி அவன் முகத்தைத் தாங்கினாள். மெள்ள இடது கையும், வலது கையும் கன்னத்திற்கு அருகே வைத்து ஒருக்களித்துப் படுத்துக்கொண்டாள். தூங்கிப்போனாள். அவன் அமைதியாகக் காத்திருந்தான். விடியும் நேரத்தில் சட்டென்று ஓர் அசைவு அவள் உடம்பில் தெரிந்தது. அவன் திடுக்கிட்டு நெஞ்சில் கைவைத்துப் பார்த்தான். துடிப்பு லேசாக இருந்தது. மூச்சு மெல்லிதாய் வந்து கொண்டிருந்தது.

அவன் குருவை எழுப்ப நகர்ந்தபோது, ''உட்கார்'' என்ற சத்தம் தெளிவாகக் கேட்டது. ஆனால், அது அம்மா உச்சரிக்க வில்லை என்பது புரிந்தது.

''அமைதியாய் என்னைக் கவனித்துக் கொண்டிரு.'' குரல் இரண்டாம் முறையும் கேட்டது. அவன் அமைதியாய் அவளையே கவனித்துக் கொண்டிருந்தான். அவள் ஓர் உன்னதத்தை நெருங்கினாள். உள்ளுக்குள் புகுந்தாள். திரும்பி அவனுக்குள் அமர்ந்தாள். சட்டென்று தன்னைப் பெண்ணாக உணர்ந்தான். அவன் வயிறு கனத்தது. மார்புகள் கனத்தன. வாயும், மூக்கும், கண்ணும் வேறு விதமாய் போக, அடிவயிற்றில் புதுவிதமான உணர்ச்சி ஏற்பட்டது. உடம்பில் ஒரு குழைவும் மிருதுத் தன்மையும் விளைந்தன.

திடீரென தான் பெண்ணானதை அவன் உணர்ந்தான். 'தன்னுடைய வலிமை மிக்க ஆண்மை சக்தி எங்கே?' என்று தேட முற்பட்டான்.

எல்லாம் ஒன்றுதான். ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் மௌனம் ஒன்றுதான். பெண்ணை இப்படி அனுபவித்தது உண்டா. ஆண் பெண்ணாய் மாறுவதுதான் பெண்ணை அனுபவிப்பது. ஆணாக மாறுவதுதான் பெண் ஆணை அனுபவிப்பது. அருகே இருக்கின்ற ஒரு ஜீவனை

முற்றிலுமாய் புரிந்து கொள்ளாமல் வேறு எதைப் புரிந்து கொண்டாலென்ன, புரியாமல் போனாலென்ன.

''இதுதான் பெண். பெண்ணினுடைய இருப்பு இப்படித்தான். பெண்ணினுடைய இருப்பு இப்படித்தான் என்று தெரிந்தபிறகு, பெண்மனது தெரிய வந்துவிடுகிறது. எனவே, ஆண் - பெண் என்ற பேதம் அற்றுப் போகிறது. நீ ஆணாகவும் இருக்கிறாய். பெண்ணையும் புரிந்திருக்கிறாய். எனவே, நீ சகலமும் மேம்பட்டவன். இங்கிருந்து உன் பாடம் துவங்குகிறது. நீ ஆணும் அல்ல. பெண்ணும் அல்ல. இந்த நிலை ஓர் அற்புதம். இந்த இடத்திலிருந்து நீ என்னைக் கவனித்துக்கொள்'' அவள் தெளிவாய் குரலெடுத்துப் பேசினாள்.

சட்டென்று அந்த இடத்தில் ஓர் இருட்டு வந்தது. அவன் நகர்ந்து வெளியே போகவேண்டுமென்று அது சொல்ல, அவன் மெல்ல தாயின் தலையைக் கோதிக் கொடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டான். எழுந்தான். வாசல் கதவைத் திறந்தான். திண்ணையில் தோட்டத்தில் கட்டில்போட்டு படுத்திருந்த குரு எழுந்து உட்கார்ந்தார். "என்ன முடிந்து விட்டதா?" என்று கேட்டார்.

அவன் அவரைப் பார்த்தான்.

''ஆமாம். ஆரம்பித்தும் விட்டது'' பதில் சொன்னான்.

சூரியன் மெல்ல எழும்ப, லேசாய் மிக லேசாய் மழைத் தூறல்கள் விழத் துவங்கின.

குரு வேகமாய் உள்ளே போனார். ஊருக்கு செய்தி சொல்லுவதற்காக, அவன் வெளியே போனான்.

தெருவில் இறங்கி நடந்தான்.

அந்த ஊரில் எல்லார் வீட்டு வாசலிலும் ஒரு பூந்தோட்டம் இருந்தது. அந்தப் பூந்தோட்டங்கள் அம்மாவின் பெயரைச் சொல்லின.

முற்றும்


பாலகுமாரன்
இனிய
யட்சிணி